சக்தி

ர்வதாரி பொங்கல் மலர்

உயர்தரமான

ஸின், ஆப்டோன், கலர்
பிளாக்குகளுக்கும் அழகாக
போட்டோ எடுப்பதற்கும்

போன்: 84167

கிளேன் & பெரெல்
30, மௌண்ட் ரோடு, :: சென்னை

HARDAYAL
EXCLUSIVE SAREES
45 RATTAN BAZAAR,. MADRAS, 3.



நாடுகளின் ஐசுவரியம் நெ. 3. சீனா

சீனாவின் செல்வமும் சிறப்பும் கி. பி ஏழு, எட்டு, ஒன்பதாவது நூற்றாண்டுகளில் மகோன்னத நிலைமையை அடைந்திருந்தது சீனா அப்பொழுது ஒற்றுமையாகவும் பலம் பெற்றுமிருந்தது. அந்நாட்டு மக்கள் சந்தோஷ வாழ்க்கை நடத்தினர். கலாசாரத்திலும், சிற்பத்திலும், கலைகளிலும், மதபக்தி, வேதாந்த விஷயங்களிலும் வெகுவாக முன்னேறியிருந்தது அந்நாடு. காகிதம் தயாரிப்பதும் மர எழுத்துக்களால் அச்சிடுவதும் முக்கிய கைத்தொழில்களாயிருந்தன. வியாபாரம் செழித்தது டீ புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது: பட்டு மிகுதியாக உற்பத்தி செய்யப்பட்டது. கலை, கைத்தொழில் திறமையின் முன்னணியில் நின்றனர் சீன மக்கள்

இன்று சீரும், சிறப்பும், பலமுமிக்க இந்தியா நிர்மாணிக்கப்படுகிறது. ஆனால் ஒரு நாட்டை நிர்மாணிக்க பணம் தேவை. நீங்களும் சிக்கன வாழ்க்கை நடத்தி சேமிப்பையெல்லாம் பலவித சர்க்கார் பத்திரங்களில் முதலிடுவதன் மூலம் இப்புனித பணியில் உதவி புரியலாம். நாடுகளின் ஐசுவரியம் அவற்றின் மக்கள் தங்களுடைய சேமிப்புகளை சிறந்த வழியில் முதலிடுவதின் மூலம்தான் பெருகுகிறது என்பதை ஞாபகத்தில் வையுங்கள். உங்களுக்கும் உதவி செய்து கொண்டவர்களாவீர்கள். சிறந்த வழியில் முதலிட்ட உங்கள் சேமிப்புகள் நல்ல வட்டி பெறுவதுடன் உங்களுடைய குழந்தைகளுடைய படிப்புக்கும் வயது காலத்தில் உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் சுக வாழ்வும் அளிக்க உங்களுடைய மூலதனம் காக்கப்படுகிறது.

விவேகத்துடன் முதலிட்டு உங்கள் சேமிப்பைச் சேர்த்து வையுங்கள்.

நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகளில் முதலீடு செய்யுங்கள். உரிய காலத்தில் முறையே 3%, 3 1/2%, 4 1/6% வட்டி தரக்கூடிய ஐந்து, ஏழு, பன்னிரண்டு வருஷ செலாவணியுள்ள ஸர்ட்டிபிகேட்டுகள் கிடைக்கும்.

மற்ற சர்க்கார் பத்திரங்கள், தபாலாபீஸ் ஸேவிங்ஸ் பாங்க் டிபாஸிட்கள், இன்ஷூரன்ஸ், கோவாபரேடிவ் ஸொஸைடி முதலியவைகளில் முதலிடுங்கள்.

நாளைக்காக இன்றே சேமியுங்கள்

உங்கள் சேமிப்பையெல்லாம் சிறந்த முறையில் முதலிடுங்கள்

இந்திய சர்க்காரின் நிதி மந்திரி இலாகாவால் வெளியிடப்பட்டது.

AC915TM

சூரியா டைமண்ட்ஸ்

எங்களிடம் ஒரிஜினல் ரெங்கூன் கமலங்கள்,
எல்லாவித கலர் ஸ்டோன்ஸ் கிடைக்கும்.

நாங்கள் வெளியிட்டுள்ள 1949-ம் வருஷ நூதன மாடல்
நகை கேட்லாக் எல்லா ஊர்களிலும் கிடைக்கும். விலை ரூ. 4.

M. V. L. & CO.,
Big Bazaar Street, TIRUCHIRAPALLY

Proprietors:
G. RADHAKRISHNA CHETTY - M.V. LAKSHMINARASIMHA CHETTY

தோட்டம் போடுகிறீர்களா?

அப்படியானால்:

ஸ்ரீ மு. அருணாசலம் எழுதிய
தோட்ட வரிசை நூல்கள் உங்க
ளிடம் இருக்கின்றனவா?

காய்கறித் தோட்டம்	5	0	0
பழத் தோட்டம்	10	0	0
வாழைத் தோட்டம்	1	12	0

சக்தி காரியாலயம், சென்னை 14

தற்கால கட்டிட நிர்மாணம்

விடு கட்டுதல்.

உணவுக்கும் உடைக்கும் அடுத்தபடியாக மனிதவாழ்க்கைக்கு மிகவும் இன்றிய
மையாதது இருப்பிடம். இன்று மனிதனை எதிர்நோக்கியிருக்கும் குடியிருப்புப்
பிரச்னையின் முக்கியத்தையும், அதை நிவர்த்திக்க எடுக்கவேண்டிய உடனடி
யான நடவடிக்கையின் அவசரத்தையும் யாரும் அலட்சியம் செய்யமுடியாது.
நிம்மதியும் சந்தோஷமுமான வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை மனதிற்
குகந்த நல்ல பிளானில் சுகாதார முறையில் உள்ள வாழ்க்கை வசதிகள். அ
துவே சகல ஜனங்களுக்கும் ஸௌக்கியத்தை அளித்து, அவர்களை நிம்மதியா
ன சந்தோஷ வாழ்வை அடையச்செய்கிறது.

கான்கிரீட் பணக்காரர்களுக்கு மட்டுமல்ல. வெகுகாலம் இருத்தல், சிக்க
னம், நம் இஷ்டம் போல் உபயோகிக்கப்படும் தன்மை, நெருப்பால் பாதிக்கப்
படாமை, சுத்தம், முதலான அதன் இயற்கைக்குணங்களால் அது எல்லாருக்
கும் வீடுகட்ட மிகவும் சிக்கனமான சாதனம்.

கான்கிரீட் கட்டிடநிர்மாணத்தில் கான்கிரீட்டின் முழுபலன்களை அடைவதற்கு
"கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா" 9, மவுண்ட் ரோட், தபால்
பெட்டி 312, மதராஸ். டெக்னிகல் அதிகாரிகளின் உதவி எப்பொழுதும்
கிடைக்கும்.

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லி.
டிஸ்டரிபூடேர்ஸ் போர்
தி அஸோஸியேடெட் ஸிமெண்ட் கம்பனீஸ் லி.

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

o

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற் றது:

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

o

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

இந்த மாறுதலடையும் யுகத்தில்...

யந்திரீக விவசாயம்

தற்சமயம் இந்தியாவில் விவசாயம் கிரமமாக இயந்திரங்களின் உதவியால் செய்யப்பட்டு வருகிறது. புராதன கலப்பைகளுக்கு பதிலாக, டிராக்டர்களும் மற்றும் நவீன இயந்திர கருவிகளும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

நிலத்தின் விளைவுத் தன்மையை அதிகரிக்க, எருவு தயாரிக்கும் ஆலைகளும், நீர்பாசன திட்டங்களும் பெரும்பாலும் சாதகமானவை. விவசாயத்திற்கு தேவையான இயந்திர சாதனங்களை அளிப்பதில், எஃகு இன்றியமையாதது.

ஒரு டிராக்டர் உழுவதை பண்டித நேரு பார்வையிடுகிறார்.

டாடா எஃகு

தி டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்:

23B, நேதாஜி சுபாஷ் ரோடு,

கல்கத்தா.

T.N. 1711

மங்களகரமான
பொங்கல் வாழ்த்துக்கள்!
கண்ணுக்கு அழகு
கருத்துக்கு விருந்து!
மாடர்ன் தியேட்டர்ஸ்....
ஆதித்தன் கனவு
பாட்டு:
பாபநாசம் சிவன்
சங்கீதம்:
ஜி. ராமநாதன்....
ஸினேரியோ:
எம். எல். டாண்டன்
டைரக்ஷன்: T.R. சுந்தரம் B.A.B.Sc.(LEEDS)
○ பஸ்மாசுரமோஹினி நடனம்
○ அன்னம்-சுட்லை காமிக்
○ வளைசல் விநோத நடிப்பு
இன்னும் பல அரிய காக்ஷிகள்
மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்
சேலம் & மதுரை



நவீன வீடு, ஆபீஸுக்குத் தேவையான

எஃகு சாமான்கள்

பத்திரமானவை, உபயோகமுள்ளவை, அழகானவை. எஃகு சாமான்கள் தயாரிப்பதில் பெயர் பெற்ற அஜாக்ஸ் கம்பெனியார் பலவகையான எஃகு சாமான்களை திட்டமிட்டு தயாரிப்பதில் விசேஷ அனுபவம் பெற்றிருக்கிறார்கள். பூரா பத்திரமளிக்க அஜாக்ஸ் இரும்புப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. தீ, திருடர்களிடமிருந்து காக்க அவைகளை நம்பலாம்.

Ajax

அஜாக்ஸ் ப்ராடக்ட்ஸ் லிட்.

106, அரமனைக்காரத் தெரு, சென்னை.

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: முருகப்பா & சன்ஸ்.

சக்தி வெளியீடுகள்

இனி நாம் செய்ய வேண்டுவது யாது? — டால்ஸ்டாய்

உழைப்பவனுக்குத்தான் உணவு உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்னும் அரிய சித்தாந்தம். ரூ. 3 0 0

அபேதவாதம் — ராஜாஜி

பொது உடமைத் தத்துவத்தை இந்திய முறையில் ராஜாஜி விளக்கி இருக்கிறார். ரூ. 1 0 0

அறிஞர் மார்க்ஸ் — ஆர். ராமனுதன்

உலகத்தை உய்விக்கத்தோன்றிய மகான் மார்க்ஸின் கொள்கையும் வரலாறும் ரூ. 1 8 0

ஏசுநாதர் போதனை — ஜே. ஸி. குமரப்பா

ஏசுபெருமான் இந்த உலகத்தில் அவதரித்ததின் தத்துவம் யாது? அவருடைய போதனையால் மக்கள் அடையக்கூடிய பயன்களையும் விளக்குகிறது இந்நூல். மகாத்மாவின் அருமையான முன்னுரையும் இருக்கிறது. ரூ. 1 8 0

ரத்தக் களரி — நேதாஜி

இந்திய தேசிய ராணுவத்தினருக்கு அவ்வப்பொழுது பேசிய பிரசங்கங்களின் தொகுப்பு உக்ரமிக்க பேச்சுக்கள் சக்தி மோஹன் மொழி பெயர்த்தது. ரூ. 1 8 0

சூரிய நமஸ்காரம் — டி. வி. திருவேதி

சூரிய நமஸ்கார முறைகள், மந்திரங்கள், நியமங்கள் இவைகளால் ஏற்படும் நன்மைகள் அடங்கியிருக்கின்றன. ரூ. 1 0 0

பாரதியார் சரித்திரம் — செல்லம்மா பாரதி

மகாகவி பாரதியாரைப் பற்றி அவருடைய மனைவி சொல்லும் வரலாறு. ரூ. 2 0 0

சக்தி காரியாலயம், சென்னை 14

சக்தி வெளியீடுகள்

செல்வம் — க. சந்தானம்

பொருளாதாரத்தைப் பற்றிய நூல். பாமரரும் புரிந்து கொள்ளக்கூடியவாறு எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற புத்தகம் 1 8 0

லெனின் பிறந்தார் — ஆர். ராமனுதன்

ருஷ்யாவின் தந்தை லெனின் வரலாறுதான் இந்த நூல். இந்த நூலைப் படிப்பதால் ருஷ்யப்புரட்சி சரித்திரத்தையும் கூடவே படிப்பது போல இருக்கும் 3 8 0

உலோகங்களும் நாமும் — மு. அருணசலம்

உலோகமும் நாமும், உலோக உலகம், உலோகத்தாது, உலோகங்கள் கிடைக்கும் விதம், இரும்பு, மற்ற முக்கிய உலோகங்கள், உலோகத் தொழில் பற்றிய அரிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன ரூ. 5 0 0

உணவுப் பஞ்சம் — மு. அருணசலம்

உணவுப் பஞ்சம் ஏன் ஏற்பட்டது? உணவுப் பஞ்சத்தைத் தடுப்பது எப்படி? உணவுப் பஞ்சமே இனி வாாதபடி எப்படிச் செய்வது என்பது பற்றிய புத்தகம். ரூ. 1 0 0

ஐந்தாவது சுதந்திரம் — ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

இதில் பதினுன்கு கட்டுரைகள் இருக்கின்றன. சமூகத்தில் ஊறிக் கிடக்கும் ஊழல்களைப் பாரபட்சமின்றிக் கண்டிக்கும் கட்டுரைகள், நம்மவரோடு உலகத்தவரை ஒப்பிட்டு நோக்கும் கட்டுரைகள், நாட்டின் முற்போக்கு பற்றிய கட்டுரைகள், தெரியாத விஷயத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் கட்டுரைகள் இதில் அடக்கம். நமது அருமைத் தேசபக்தர் காலஞ் சென்ற சத்தியமூர்த்தியின் மகள்தான் இதன் ஆசிரியர் ஸ்ரீமதி லக்ஷ்மி. ரூ. 1 8 0

சக்தி காரியாலயம், சென்னை 14

பார்லிக்கஞ்சியை இம்முறையில் தயாரித்தால் நேரமும் சிரமமும் குறையும்

ஐந்தே நிமிஷத்தில் ருசியும் இன்மையும் மிகுந்த பார்லிக்கஞ்சி சாப்பிடலாம். இரண்டு டீஸ்பூன் நிறைய பியூரிடி பார்லியை எடுத்து சிறிது ஜலத்தில் பசையாகக்கரைத்து, பின் இரண்டு டம்ளர் ஜலம் விட்டு ஐந்தே நிமிஷங்களுக்கு கொதிக்கவைக்கவும். இது உபயோகிப்பதற்கு வெகு சிக்கனமானது. ஏனெனில் அரிசிப்பார்லியைப்போல் எட்டு மடங்கு அதிக புஷ்டியுள்ளது.

பியூரிடி பார்லி கருகுருப்பூட்டும் சீதள பிரதேசங்களில் விளையும் புஷ்டி மிகுந்த தானியங்களை யரைந்து தயாரிக்கப்படுகிறது. நுண்ணிய பட்டினல் சலிக்கப்பட்டு சுகாதார முறைப்படி தகர டப்பாக்களில் அடைத்து முத்திரையிடப்பட்டிருக்கிறது.

பியூரிடி
இந்தியன் பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், 20/1, சிட்லா ரோடு, கல்கத்தா

தென்னிந்தியாவிற்கு ஏஜெண்டுகள் :

பாரி அண்ட் கோ., லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 12, சென்னை.

மார்கோ சோப்

அதி சிலாக்கியமான வேம்பின் சத்தில் தயாரிக்கப்பட்டது. தோல் சம்மந்தமான வியாதிகளைப் போக்கி ஆரோக்கியத்தையும் அழகையும் கொடுக்கிறது.

A CALCUTTA CHEMICAL Product

CCS/4849

மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல- இது நல்லது !
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
BY CADBURYS
ALISTS IN FOOD
S FOR 100 YEARS
முக்கியமாக குழந்தைகளுக்கு
போர்ன்-வீடாவிலுள்ள கால்ஷியமும் விடமின்களும், வளரும் குழந்தைகளுக்கு வலுவான எலும்புகளும், கெட்டியான சதையும் வளர உதவுகின்றன. பெரியவர்களுக்கு நிம்மதியான ஆழ்ந்த உறக்க மளித்து ஜீவ சக்தி ததும்பச் செய்கின்றன.
காட்பரீஸ்
போர்ன்-வீடா
கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.
காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

கேளுங்கள்!!

ஸ்டார் ஆப் இந்தியா
பென்ஸில்களுக்கு

மதராஸ் பென்ஸில் பாக்டரி

உயர்தர அச்சு வேலைகளுக்கும்
லித்தோ பிரிண்டிங்குக்கும்

ஹோ & கம்பெனி

எல்லாவிதமான உயர்தர
ஸ்டேஷனரி சாமான்களுக்கு

வி. பெருமாள் செட்டி & சன்ஸ்

நெ. 5, ஸ்டிஞ்சர்ஸ் தெருவு

சென்னை—1

எல்லோருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள் !

கண்ணைக் கவரும்
அழகான

பட்டுச்
சேலைகளுக்கு

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில்
மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி. ரெங்கய்யர் ஸன்ஸ்

கை நெசவு பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு :: கும்பகோணம்
கிளை : 20, லெக்ஷிமிபுரம் 2-வது தெரு, மதுரை.

குறிப்பு : இன்னும் எம்மிடம் கிடைப்பவை :—
கெட்டிச்சாய கைத்தறி நூல் சேலைகள், ஜரிகை
துப்பட்டாக்கள், வேஷ்டிகள் வகையரா

ரம்மியமும்
மேன்மையும் வாய்ந்த

★ பெங்களூர்
★ காஞ்சீவரம்
★ கும்பகோணம்

பட்டுப்
புடவைகள்

விதவிதமான டிஸைன்களில்
ஏராளமாக ஸ்டாக்கிலிருக்கின்றன !
விலை சரசம் !!... வாங்கி மகிழுங்கள் !!!

ரெங்கமூர்த்தி கம்பெனி,

பட்டுச் சேலை வியாபாரம்
கெருடலாயத் தெரு :: கும்பகோணம்
பிராஞ்சுகள் :
மெ. மெ. தெரு, காரைக்குடி & நாட்டரசன் கோட்டை

பொருள் அடக்கம்

மலர் 15 : இதழ் 10

○

பொங்கல் பண்டிகை	...	தலையங்கம்	1
மோகினி	...	கவிமணி தே. வி.	2
சகோதரனும் சகோதரியும்	...	மஞ்சேரி எஸ். ஈச்வரன்	3
பொங்கலும் பெண்களும்	...	லக்ஷ்மி அம்மாள்	9
உவமக் கதைகளில்...	...	பி. ஸ்ரீ.	13
சிறு குழந்தைகளுக்கு...	...	எஸ். வையாபுரிப்பிள்ளை	17
வால்டேரின் நாடகம்	...	சுத்தானந்த பாரதியார்	22
கைதி	...	"நாணல்"	25
வித்வான்களின் அனுபவம்	...	டி. என். ராஜரத்னம்	27
வல்லான் வகுத்ததே......	...	வெ. சாமிநாத சர்மா	31
நாகரிகம் எது?	...	பொ. திருகூடசுந்தரம்	40
போவோம் வா	...	"கலைவாணன்"	43
கல்வி என்றால் என்ன?	...	மு. அருணாசலம்	45
அத்தான் சண்முகம்	...	ப. ஸ்ரீனிவாஸன்	50
தமிழர் பண்பாடு	...	கே. எம். கே. அப்துல்காதிர்	57
ஐந்தொகை	...	"துறைவன்"	63
வதந்திகளை நம்பாதீர்கள்!	...	வி. கே. சி. நடராஜன்	66
கலாரஸனை	...	தொ. மு. பா. தொண்டைமான்	75
அரிசி	...	கே. ஏ. அப்பாஸ்	80
நடை	...	ஆ. முத்துசிவன்	89
ஒரு நாள் புரட்சி	...	எம். வி. வெங்கட்ராம்	95
கொங்குநாட்டிலே பொங்கல்	...	சி. ந. வைத்தீஸ்வரன்	108

அட்டைப் படம் : கே. முத்துராமலிங்கம், கரூர்

✻

சர்வதாரி சக்தி தை

படம்: ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்.

பொன்னிறமுண்டு; பொலிவுண்டு; கண்டுனைப்
போற்ற இனிய வடிவமுண்டு.
என்ன அரிய வரம்பெற இன்னும் நீ
இத்தவம் செய்வது பூமகளே? —கவிமணி தே. வி

சர்வதாரி
மலர் 15

சக்தி

தை
இதழ் 10

மெய்ப் பொருள் காண்பது அறிவு

○

பொங்கல் பண்டிகை

பொங்கல் பண்டிகை பாடுபடும் விவசாயப் பெருமக்களின் பண்டிகை. அறுவடை செய்து புதுத் தானியங்களை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்த சந்தோஷத்தினால் கொண்டாடப்படும் பண்டிகை இது. ஆனால், பொங்கல் பண்டிகையைக் கொண்டாட யார் பரிபூரண உரிமை பெற்றிருக்கிறார்களோ, அவர்கள் கொண்டாடுவதற்கில்லாமல், பிறர் அப் பண்டிகையைக் கொண்டாடும் விசித்திரத்தை இன்று நாம் காண்கிறோம். நகரவாசிகளும், நிலத்தை எட்டிப் பார்க்காத நிலச் சுவான்தார்களும், விவசாயத் தொழிலைப்பற்றிக் கனவிலும் நினைத்துப் பார்த்திராத கூட்டத்தினரும் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவதும், வாழ்த்துக்கள் பரிமாறிக் கொள்ளுவதும், 'பால் பொங்கியதா ?' என்று விசாரித்துக் கொள்ளுவதும் கேலிக் கூத்தாகவே இருக்கின்றன. பால் பொங்க வேண்டிய இடம் விவசாயிகளின் முற்றம்; அங்கு பால் பொங்கினால்தான் பிற இடங்களிலும் பால் பொங்கும்.

இந்தியா விவசாய நாடு; விவசாய பலத்தில் உயிர் வாழும் நாடு; விவசாயிகள் கிராமங்களில்தான் வசிக்கிறார்கள். ஆகவே, இன்று நம் பார்வை கிராமத்தை நோக்கித் திரும்ப வேண்டும். நம் தந்தை மகாத்மா காந்தி இதைத்தான் தம் வாழ்நாளெல்லாம் வற்புறுத்தி வந்தார். விவசாயிகளின் நிலை உயர்ந்தால்தான் நாடு உயரும் என்பது வெளிப்படை. இதை நம் பிரதமர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரும் அடிக்கடி மக்களுக்குக் கூறிவருகிறார். அதனால் தேசத்தின் கவனத்தை கிராமத்தின் மீதும், விவசாயிகளின் மீதும் பரிபூரணமாகத் திருப்பவேண்டும். அர்த்தமில்லாமல் "உற்பத்தியைப் பெருக்குங்கள்" என்று விவசாயிகளுக்கு ஞானோபதேசம் செய்வதில் பயன் இல்லை. உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய வசதிகளை விவசாயிகளுக்குச் செய்து கொடுக்க வேண்டும். அதிலும் முழு முதல் வசதி என்னவென்றால் நிலத்தில் இறங்கி உழைப்பவனுக்கு நிலத்தை சொந்தமாக்குவதுதான். இந்த அடிப்படை உண்மையை இன்று எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம். விவசாயிகளின் பண்டிகையாகிய இந்தப் பொங்கல் தினத்தன்று, விவசாயிகளின் நலனையும், விவசாயத்தின் நலனையும் அதன் மூலம் தேசத்தின் நலனையும் பற்றிச் சிந்தித்து நல்வழி காண்பதே நம் கடமையாகும்.

✻

மோகினி

○

கவிமணி தே. வி.

பல்லவி

புத்திதடு மாறுதே யடா—இவளொரு
பூலோக ரம்பையே யடா

அனுபல்லவி

சித்தி ரத்திற் கண்டதில்லை
சிற்பச் சிலையி லில்லை
புத்தகத்தும் இவ்வழகைப்
புலவர் புனைந்த தில்லை (புத்தி)

சரணம்

மங்கையர்மா ணிக்க மிவளை—மணந்திட
மாதவம் செய்தாரு மெவரோ
தங்க வடிவழகி
தரள நகையழகி
திங்கள் முகத்தழகி
செகத்தி லிவள்போலுண்டோ (புத்தி)

சகோதரனும் சகோதரியும்

○

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

குறிப்பு:—இந்த நாடகம், ரிக் வேத சம்ஹிதை ஆறாவது, ஏழாவது அஷ்டகங்களில் உள்ள ஒரு சூக்தத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

—கதாசிரியர்

முன்னுரை

காலமும் கணக்கும் நீத்த யுகாரம்ப காலத்திலே எங்கும் கும்மிருட்டு சூழ்ந்து, இரவு பகல் என்ற பேதங்களும், மரணம் சிரஞ்சீவித்துவம் என்ற பேதங்களும் அற்றிருந்தன; அப்போது மூலதத்துவத்தில் முளைத்தெழுந்து, தன்னில்தானே பூரணம் பெற்றுஇயங்கிய பிரமன்பிரபஞ்சத்திலே தாதுக்களை,செடி கொடிகளை, உயிர்ப்பிராணிகளை, கடவுளர்களை, முனிபுங்கவர்களைப் படைத்தான்; கடவுளரைப் படைத்தபின், பிரமன், பூமியில் அக்கினியையும், விண்ணில் வாயுவையும், நட்சத்திர மண்டலங்களில் சூரியனையும் சிருஷ்டித்தான்.

சஞ்சனு என்ற பேரழகியை சூரியன் மணந்தான். அவள் சகல லோகங்களுக்கும் சிற்பியானவிஸ்வகர்மனின் புத்திரி. கலைகளுக்கு அவனே அரசன்; எண்ணற்ற தொழில் சாஸ்திரங்களைக் கண்டு பிடித்தவனும், கடவுளின் ஜோதி மிக்க ஆபரணாதிகளைச் செய்தவனும், சொர்க்க லோகத்தின் ரதங்களை உருவாக்கிக் கட்டி முடித்தவனும் அவனே.

சூரியனைக் கலந்த சஞ்சனு இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். ஒன்று ஆண் குழந்தை; மற்றது பெண். ஆணுக்கு யமன் என்றும் பெண்ணுக்கு யமி என்றும் பெயர்.

யமனும் யமியும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தனர். தங்கள் பிறந்த இடத்தை தவிர உலகத்தைப்பற்றி அவர்களுக்கு எதுவுமே தெரியாது. அவர்களுடைய பிதாவின் ஜோதி வெள்ளத்தில் குளித்தெழுந்த காளிந்த பர்வதத்தின் சாரலில்,இருவரும் ஓடியாடித் திரிந்தார்கள்: அநேக வேடிக்கையான விளையாட்டுக்களை யெல்லாம் விளையாடினார்கள். கூழாங் கற்களில் குதித்து, 'களகள' என்று கிளுகிளுத்து வளைந்து வளைந்து செல்லும் ஓடைகளைத் தாண்டுவார்கள்; சிரிப்பார்கள்; 'ஊய்' என்று கத்துவார்கள்; தங்களுடைய குரல் எதிரொலி செய்து தூரத்தே போய் மாய்வதைக் கூர்ந்து கேட்பார்கள். பிறகு ஒரு பூஞ்செடியின் பக்கத்தில் வந்து நின்று அதில் பெரிதாகப் பூத்துக் குலுங்கும் ஒரு மலர்க் கொத்தைப் பிடுங்குவார்கள். அம்மலர்களின் நிறம் வண்ணாத்திப் பூச்சிகளின் மேனி வர்ணத்தில்

கலந்தும், அவற்றின் மணம் காட்டுப்புறத்தின் பூண்டுகளின் வாசத்தில் கலந்தும் பரிமளித்துக் கொண்டிருக்கும். அப்புறம் அகல விரிந்து பரவிய ஒரு மரக்கிளையின் கீழ் வந்து நின்று, கீழே உதிர்ந்து கிடக்கும் பழங்களைப் பொறுக்குவார்கள்; அவற்றில் பறவைகளால் கொத்தப்பட்ட செந்நிறமான பழங்களை, குஷியாகக் கத்திக்கொண்டே தூர எறிவார்கள்.

யமியின் உடைகள் மிகமிக மிருதுவாக, சிருஷ்டியின் உதயம் போல இருந்தன; அவளுடைய கிரீடம், தொங்கட்டான்கள், அட்டிகைகள், தண்டைகள், கடக கங்கணங்கள், தண்டைகள், தோள் வங்கிகள், ஒட்டியாணம் முதலிய ஆபரணங்கள், அப்பா! என்ன அழகு! அதை வார்த்தையால் வர்ணிக்கத்தான் இயலுமா? அந்த நகைகளெல்லாம் பலவித வைர வைடூரியங்கள் பதிக்கப்பட்டிருந்ததால் மின்னி ஒளி கக்கியது; அவற்றில் அழகு அழகான பூவேலை செய்யப்பட்டிருந்தது. இந்த அலங்கார பூஷிதை சூரியனுக்குக் குழந்தை; கலாவல்லவனாகிய விஸ்வகர்மனின் பேத்தி. பிறகு கேட்க வேண்டுமா! யமனோ பச்சை நிற மேனியன்; அவனுடைய உடை சாதிச் சிவப்பைப்போல் செக்கச் செவேல் என்றிருந்தது.

குழந்தைகள் விளையாடின. விளையாடிக் கொண்டே ஓடித் திரியும் போது யமி தன் கரத்தால் தன் சகோதரனுடைய கழுத்தைச்சுற்றுவாள்; அல்லது அவன் கையோடு கையைக் கோத்துக்கொள்ளுவாள். திடீரென்று அவனைப் பற்றி அணைத்துக் கொண்டு, புன்னகை செய்வாள்; அவன் கழுத்தருகே தன் உதடுகளைக் கொண்டு வருவாள்; பிறகு தன் தலையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு திடீரென்று, ஆனால், இலேசாகச் சிரிப்பாள். இப்படிப்பட்ட சமயங்களில் யமனுக்கு ஒரு அதிசயமான அரிப்புணர்ச்சி ஏற்படும்; ஆகவே வெட்கத்துடன், யமியைப் பின்னே தள்ளுவான்; பிறகு நாணத்தால் கவிழ்ந்த அவளுடைய முகத்தைப் பார்த்து ஒரேயடியாகச் சிரிப்பான்; அவளும் சிரிப்பாள்.

இளமைப் பிராயக்
குழந்தைகள்—ஆடி
இன்பத்துடன் வளர்
நாளிலே—ஆண்டு
'மளமள'வென்று
வளர்ந்தவே—அன்னார்
வயதினைப் போலோர்
உணர்ச்சியும்—நாளும்
தழலினைப் போன்று
வளர்ந்ததை—பெற்ற
தந்தையும் தாயும்
அறிவரோ?—அன்றி
வளமை அறிந்திடா
மாந்தர்போல்—இந்த
மாயத்தையும்
அறியார் கொலோ?

வாலிபம் பெற்றான்
யமன் அவன்—உடல்
வன்மை முறுக்கேறி
நின்றனன்—சுவைப்
பாலின் மொழியினள்
பெண் யமி—கன்னிப்
பருவப் பசுமையைப்
பெற்றனள்—தக்க
காலமும் நேரமும்
சேரவே—ரத்தம்
காட்டுவெறியில்
கொதித்ததாம்—மீறும்

வாலைப் பிராயத்
துணர்ச்சியும்—வேட்கை
மாய்த்திட ஓர் வழி
பார்த்ததே

இடைக் காட்சி

யமி: நண்ப...

யமன்: என்ன?

யமி: நான் கடல்போல் விரிந்த பாலைவனத்தைக் கடந்து வந்து விட்டேன். இப்போது என் நண்பனை நட்புறவு கொள்ளுவதற்காக அழைக்கிறேன். என் கருப்பைக்குப் பாக்கியம் கிட்டுமாக! உன்னைத் தந்தை என்று அழைக்க எனக்கு ஒரு மகன் பிறப்பானாக! நம் அருமந்தப் புத்திரபாக்கியம் சகல சௌபாக்கியங்களும் பெற்றுத் திகழ்வானாக!

யமன்: இந்தமாதிரி நீ பேசுவதின் அர்த்தம் என்ன?

யமி: சொல்லவேண்டுமா?

யமன்: சொல்லு.

யமி: ஆசைதான்.

யமன்: இந்த நட்புக்கு நான் ஆசைப்படவில்லை. சரீரம் வேறு வேறாக இருந்தாலும் நாமிருவரும் ஒரு கொடியில் பூத்தவர்கள். மிக உயர்ந்த பதவியில் வீற்றிருக்கும் கடவுளர்கள் நம்மைப் பார்ப்பார்கள்; பார்த்தால் இந்தக் காரியத்தை அங்கீகரிக்கமாட்டார்கள். அவர்கள் தூரத்தே யிருந்து பார்த்தாலும், நாம் இருவரும் இருப்பதைப்போல அவ்வளவு அருகாமையில் இருக்கிறார்கள்.

யமி: கடவுளர்கள்! அவர்கள் என்னைப் பார்க்கிறார்கள்; நான் பேசுவதைக் கேட்கிறார்கள். இதனால் நான் சந்தோஷப்படுகிறேன். நம்மைப்போலக் கடவுளரும் இப்படிப்பட்ட சங்கமத்தில் பெருமகிழ்ச்சி கொள்ளுகின்றனர். மனித வர்க்கத்துக்குத்தான் இது மறுக்கப்பட்டுள்ளது. சகல ஜீவ ராசிகளையும் சிருஷ்டித்து, எல்லாவற்றிற்கும் தந்தையாக இருக்கும் சிருஷ்டி காத்தா (பிரமன்) தம் மகளிடத்தில் (சரஸ்வதி) எப்படி நடந்து கொண்டார் என்பதை கடவுளர் நன்கு அறிவர். நம்மை யாருமே தடுக்கவில்லை. ஆகவே, என் மனத்துடன் உன் மனமும் இசையட்டும்! வா, வந்து என் சரீரத்தைத் துய்ப்பாயாக!

யமன்: கடவுளர் செய்ததை நான் ஏன் செய்ய வேண்டுமாம்? நாம்,ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.

யமி: உனக்கு துவஸ்த்ரீயைத் தெரியுமா?

யமன்: தெரியும்.

யமி: அவர், அந்தச் சிருஷ்டி கர்த்தர்,ஒரே கருப்பையில்நம்மைப் படைக்கும்போதே கணவனும் மனைவியுமாகப் படைத்துவிட்டார். அவர் எழுதியதை அழித்து எழுத யாராலும் முடியாது. என் தெரியுமா? நம்முடைய இந்தக் கலப்பைப்பற்றி மண்ணுலகும் விண்ணுலகும் நன்கு அறியும்.

யமன்: ஒரே கருப்பையில் படைக்கும்போதா? கருத்தரிக்கத் தொடங்கியபோது நடந்ததைப் பற்றி யாருக்கு என்ன தெரியும்? உருவற்ற பரவெளியிலிருந்து உயிர் வாழ்க்கைதோன்றியதும், உள்ளனவற்றிற்கும் அல்லனவற்றிற்கும்

உறவுஏற்பட்டமுதல்நாளின்உதயம் தோன்றியதும் எப்போது என்று யாருக்குத் தெரியும்? இதைப் பார்த்தவர்கள் யார்? அந்த உண்மையை இங்கே விண்டு விளக்கிச் சொன்னவர்களும் யார்? பகல், இரவுகள் என்றபுரட்சிகள் இத்தனை என்று எண்ணில் அடங்கா. போக்கிரித்தனமாகப்பேசுகிறவளே,மனிதர்களைப் பற்றி ஏதோ பொய்யாக இட்டுக்கட்டிச் சொன்னயே, அது என்ன?

யமி: என்ன, என்மேல் கோபம் வந்துவிட்டதா? நண்பா, உன் கோபத்தை அடக்கு. யமனுடைய அதி மென்மையும், வெப்பமும் மிக்க புருஷ தத்துவம் என்னை நோக்கி,யமியை நோக்கி, வருகிறது; யமியின் மேனியை அத் தத்துவம் அங்கியைப் போல் போர்த்தி விட்டது. அவளுடைய சரீரத்தின் ரத்தம் முழுவதிலும் அது பிரவகித்து ஓடுகிறது; அது வெது வெதுப்பாக அவளுடைய எலும்புக் குருத்துக்குள் எல்லாம் பிரவேசித்து விட்டது. அது அவளைச் சுடுகிறது; ஒரே சயனத்தில் அவனேடு சயனிக்கும்படி அவளைத் தூண்டி அனுப்புகிறது. இதோ உன்னிடம் நெருங்கி நெருங்கி வருகிறேன். மனைவி கணவனிடம் தன் சரீரத்தை ஒப்படைப்பது போல, என் சரீரத்தை உன்னிடம் ஒப்படைத்து விடுகிறேன். காதலனே, ஒரு வண்டியில் பூட்டப்பெற்ற இரண்டு சக்கரங்களைப் போல், நாமும் ஒருமித்து நடக்க அருள் புரிவாயாக!

யமன்: சீ, சீ, மானம் கெட்டவளே! நாசகாரி! கடவுளரின் ஒற்றர்கள் இடைவிடாமல் சதா காலமும் உலகங்க ளெங்கும் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இமையா நாட்டம் பெற்றவர்கள்; அவர்கள் காதுகளையும் தீட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு எவனையாவது போய்ப் பிடித்து, அவனுடன் கூடி வாழ்க்கை நடத்து—ஒரு வண்டியில் பூட்டப்பெற்ற இரண்டு சக்கரங்களைப் போல ஒருமித்து.

யமி: யமனே! நீ மகா கொடூரமானவன். நீ ஒரு கடவுளாக இருந்தும் உனக்கு இத்தனை கொடூர புத்தியா? இரவும் பகலும் எல்லோரும் உனக்கு நைவேத்தியம் சாத்தி உன்னைக் கும்பிடட்டும்! உன் மீது என்றென்றைக்கும் சூரியனின் அருள் நோக்கு விழட்டும்! ஆனால், அந்தக் காலத்தை யெல்லாம் எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் நீ மறந்து விட்டாய்? காளிந்த பர்வதத்தின் மரம் அடர்ந்த சாரலில் நாம் கைகோத்த வண்ணம் நடந்து சென்று, கனிகளைப் பொறுக்கி, மலர்களைக்கொய்து, நாள் போக்கிய காலத்தை நீ எப்படி மறந்தாய்?... காலெல்லாம் புண்ணுக நீ கிடந்தாயே, அன்று உனக்காகக் கண்ணீர் விட்டு அழுதது யார்?* உனக்குச் சிசுருஷை செய்தது யார்? இதை யெல்லாம் நீ எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட்டாய்? அடியே யமி! நீயாவது உன் சகோதரனுடைய விஸ்வாச காதகத்தைப் பொறுத்துக் கொள்.

யமன்:..........

யமி: நான் அழுவதைத் திரும்பவும் பார்க்கவேண்டு மென்பது உன் ஆசையா?

* ஒரு சமயம் யமனுக்கு அவனுடைய சிற்றன்னையாகிய சாயா என்பவளின் சாபத்தால் காலெல்லாம் புண்ணுகிவிட்டது.

யமன்: ஏன்? நீ அழும்படியாக அப்படி நான் உனக்கு என்ன செய்துவிட்டேன்?

யமி: இதைவிட வேறு என்ன செய்ய வேண்டும்? ஆசாபங்கத்தினால் நம்பிக்கை இழந்து அனுதையாக நிற்கும் ஒருத்திக்கு இதைவிடவேறு என்ன........

யமன்: போதும்... தயவுசெய்து நிறுத்து. அப்படி யெல்லாம் தப்பர்த்தம் செய்து கொள்ளாதே. உணர்ச்சி வெறி அறிவையும் குருடாக்கிவிடும். நான் உன்னிடத்தில் கொடுமையாக நடந்து கொள்ளுகிறேன் என்று நீ நினைக்கிறாய்? நன்றாக ஆழ்ந்து யோசித்துப் பார். பிறகு உனக்குத் தெரியும், தரும விரோதமான கருமத்தை இச்சிப்பது எவ்வளவு தப்பு என்பது. ஒரு காலம் வரப்போகிறது. அப்போது சகோதரிகள், சகோதரன் அல்லாத ஒருவனைக் கணவனுக வரிக்கப் போகிறார்கள். ஆகவே, ஏ புண்ணியவதியே, என்னை விட்டு விட்டு வேறொருவனைத் தேடி அடைவாயாக! உன் மென் தோள் துயிலினை அவனுக்குக் கொடு.

யமி: ஐயோ! ஐயோ! தன் சகோதரியைக் கணவன் இல்லாமல் தத்தளிக்க விடுபவனும் ஒரு சகோதரனு? தன் சகோதரனை மனைவி இல்லாமல் தத்தளிக்க விடுபவளும் சகோதரியா? ஆசையின் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்ட நான், சக்தி இழந்திருக்கிறேன்; முழந்தாளிட்டு உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்; செல்வச் சீமானுகிய நீ இந்த ஏழையின் ஒரு கோரிக்கையை மட்டும் பூர்த்தி செய்துவிடு; விரைவில் நம் ஈருடலும் ஒருடல் ஆவதற்கு அருள் செய்.

யமன்: அது சாத்தியமில்லை.

யமி: கொஞ்சம் சாவதானமாக யோசித்துப் பார். ஈவிரக்கமின்றி நடந்து கொள்ளாதே. நான் உதித்த கருப்பையிலே, நம் இருவர் இதயமும் ஒன்றுகத் துடித்தன; நம் இருவர் காதுகளும் ஒன்று போல் கேட்டன; கன்னத்தோடு கன்னம் ஒட்டி, கையோடு கை கோத்து, ஏதோ இரண்டு மெல்லிய கொடிகள் பின்னிக் கிடந்ததுபோல, நீ என் கணவனுகவும், நான் உன் மனைவியாகவும் ஒன்றுகக் கிடந்தோம்........பிறகு நம் குழந்தைப் பருவத்தில்.......

யமன்: உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன், தயவுசெய்து இப்படிப் பேசாதே. சதை உணர்ச்சியுடன் தன் சகோதரியை நெருங்குகிறவன் மகா பாவி. ஆகவே, என்னை விட்டுவிட்டு, வேறொருவனுடன் கூடிக் களிப்பாயாக! புண்ணியவதியே! உன் சகோதரனுக்கு இப்படிப்பட்ட ஆசை கிடையவே கிடையாது.

யமி: அந்தோ! ஏ யமா! நீ மகா கோழை! மகா கோழை! ஆனுலும் உன் கண்களில் லேசாக ஓர் ஒளி பிரகாசிக்கிறது; உன் கைகள் படபடக்கின்றன. உண்மையில் நீ காதல் கொண்டவனே! உன் இதயம் யாரோ ஒரு பெண்ணின் மேல் கவிந்திருக்கிறது. ஆனல் அந்தப் பெண் நான் அல்ல; அடிமரத்தைக் கொடி சுற்றுவதுபோல, உன்னை அந்தப் பெண் தழுவுகிறாள்.

யமன்: விரைவில் ஒரு துணைவனைத் தேடு; தேடி அவனுடைய அன்பைச் சம்பாதித்துக் கொள்; அவன் உன்னுடைய அன்பை

நாடும்படியாகச் செய்; யமி! அடி மரத்தைக் கொடி சுற்றுவதுபோல நீ அவனைத் தழுவு.

யமி: உனக்கு இரக்கம் என்பதே கிடையாதா?

யமன்: உங்களுடைய கூட்டுக் களியில் சகல சம்பத்துக்களும் விளையட்டும்!

யமி: ஐயோ! என் மன ஆழத்தில் கட்டித் தெளிந்து கிடக்கும் கண்ணீரே! வெளியே வந்து கொட்டு! அழு! கண்ணீர் உடைப் பெடுத்து ஓடும்படியாக அழு! என் கண்களே! எந்நேரமும் அகல விழித்திருங்கள்! யமன், காதலைக் காலின் கீழ் போட்டு மிதித்து நசுக்கிவிட்டான். இனி அந்தக் காதல் புன்னகை செய்யாது; யமி இனி புன்னகை செய்யமாட்டாள் ......

பின்னுரை

அதே வேண்டுதலான நிலையிலேயே முழந்தாளிட்ட வண்ணம் ஆடாமல் அசையாமல் இருந்தாள் யமி. காதல் இனி புன்னகை செய்யாது; யமியும் இனி புன்னகை செய்யமாட்டாள்—இந்தப் பிரலாபம் சன்னம் சன்னமாகத் தேய்ந்து மடிந்தது; என்றென்றைக்கும் அவளுடைய தடம் பதியாமல் இருக்கப்போகும் இடத்தில், தடம் தெரியாமல் மடிந்து மறைந்தது. அவளுடைய கடைக் கண்களில் முத்துக்கள் போல் கண்ணீர் பொங்கி வழிந்தது; விம்மி விம்மி கண்ணீர் பொங்கி வழிந்தது. அவளைச் சுற்றிலும் திரைபோல் பனிப் படலம் போர்த்தியது; புதர்கள், புல், பாறைகள்,மரங்கள்—எல்லாம் மங்கி உருவழிந்தன. செதுக்கி வைத்த சிலையைப்போல யமி முழந்தாளிட்ட வண்ணமே இருந்தாள். அவளுடைய புலன்கள் பார்வையையும் கேள்வியையும் இழந்தன. உலகம் மங்கி ஊமையாகிவிட்டது.

பின்னும் அப்படியே சிலையாகச் சமைந்து நின்றாள்; சிறிது சிறிதாக அவள் மேனி வனப்பும், சதையும், ரத்தமும், எலும்பும் கரைந்தன; கரைந்து பிரவகித்து ஓடின; காளிந்த பர்வதத்தில் ஒரு சிறு நூல்போல ஆரம்பித்து, போகப் போக விரிவடைந்து அகன்றதோர் ஆறாக ஓடின.

சூரியன் அஸ்தமித்தான்; ஒரு மெல்லிய சுடரொளி முளைத்தது; நிச்சலனமான அந்த ஆற்றின் மௌனத்தை எல்லையற்ற சோகமும் எல்லையற்ற அழகும் கொண்ட ஒரு சக்தி சற்றே குலைத்தது.

யமி, யமுனை நதியாக மாறிவிட்டாள்.



படம்: எஸ். பாலசுந்தரம், ஈரோடு

அன்னம் ஊட்டிய தெய்வமணிக் கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம் —பாரதியார்

படம்: பி. ரங்கநாதன், சென்னை

பொங்கல் மலர்

பொங்கலும் பெண்களும்

ஃ

லக்ஷ்மி அம்மாள்

தமிழர்களுக்குச் சிறப்பாக உரிய பண்டிகைகளில் பொங்கல்—புது நாள் மிகவும் முக்கியமானது.

> உழவுக்கும் தொழிலுக்கும்
> வந்தனை செய்வோம்

என்கிருரே பாரதியார், அந்த வந்தனைத் திருநாளே பொங்கல் பண்டிகை. தக்ஷிணாயனம் போய்ச் சூரியன் மகர ராசியில் பிரவேசித்து உத்தராயனம் ஆரம்பமாகும் தை மாதம் முதல் தேதியன்று சூரியனைப் பூஜித்துப் பொங்கல் இடுகிருர்கள். சூரியன் அருளால் நாம் நல்ல விளைவு பெற்றிருக்கிருேம், புதுவாழ்வு பெறப்போகிருேம் என்ற நினைவுடன் கொண்டாடும் நன்றி விழா, தை மாதப் பிறப்பன்று கொண்டாடும் இந்தச் சூரிய பூஜை. இந்தத் தினத்தை 'மகா சங்கராந்தி' என்றும் சொல்லுவதுண்டு.

இதற்கு அடுத்த தினம் மாட்டுப் பொங்கல் இடுகிருர்கள். மகா சங்கராந்தியில் விவசாயிகள் தங்கள் க்ஷேமம் கருதிப் பொங்கல் இடுவதுபோல் மாட்டுப் பொங்கலில் மாடுகளின் க்ஷேமம் கருதிப் பொங்கல் இடுகிருர்கள். பொங்கலன்று புதிதாக அறுத்துக் குத்திய அரிசியைப் புதுப்பானையில் பொங்குகிருர்கள். அன்று பானையில் பால் பொங்கும்போது 'பொங்கலோ பொங்கல்' என்று மகிழ்ச்சியுடன் கூவுகிருர்கள். மாட்டுப் பொங்கலன்று மாடுகளை ஓட்டி விடும்போதும் 'பொங்கலோ பொங்கல்' என்று மகிழ்ச்சி—ஆரவாரம் செய்கிருர்கள்.

பொங்கல் — புதுநாளில் பால் பொங்குவதுபோல் புது வருஷத்தில் புது வாழ்வும் பாக்கியமும் பொங்கிவரும் என்பது பொது மக்களின் நம்பிக்கை. வெளியிடங்களுக்குப் போயிருக்கிறவர்களெல்லாம் கூடுமானல் தைப் பொங்கலுக்குள்ளே தங்கள் சொந்த வீட்டுக்குத் திரும்பி வந்து இந்தப் புதுநாள் விழாவில் கருத்தொருமித்துக் கலந்து கொள்வார்கள். அன்று பால் பொங்கக் கரும்பு தின்று களிப்பது பாக்கியத்தோடு வாழ்வின் இனிமைக்கும் ஓர் அறிகுறி. பால் பொங்குவது போல் உள்ளமும் பொங்கி வழிகிறது, விவசாயிகளான நம் தமிழ் மக்களுக்கு இந்தத் தமிழ் விழா விலே. ஆம், இது தமிழ் நாட்டிலே விளைந்த விவசாய நாகரிகத்தின் அதி முக்கியமான பண்டிகை. 'கங்கா ஸ்நானம் ஆச்சா?' என்று தீபாவளியில் கேட்பதுபோல், 'பால் பொங்கியாச்சா?' என்று விசாரிப்பது இந்த விழாவின் சிறப்பியல்பு.

பழைய ஆண்டின் இறுதிநாள்—அதாவது, தக்ஷிணாயனத்தின் கடைசிநாள்—இந்திர விழாவாகக் கொண்டாடப்பெற்றது. பழைய

காலத்தில் இந்திரனை மழைக் கடவுளாக வழிபட்டார்கள். தமிழ் மக்களில் மலை நிலவாசிகள் (குறிஞ்சி நில மக்கள்) முருகனையும், காடுகளில் மாடு மேய்த்து வாழ்ந்த மக்கள் (முல்லை நில மக்கள்) கண்ணனையும், கடற்கரைவாசிகள் (நெய்தல் நில மக்கள்) சமுத்திர ராஜனுகிய வருணனையும் வழிபட்டதுபோல், மருத நில மக்களான விவசாயிகள் இந்திரனையும் வழிபட்டு வந்தார்கள். இந்த மழைக் கடவுள் உரிய காலத்திலே மேகங்களைத் தோற்றுவித்து மழை பெய்வித்துச் செய்யும் உதவிக்காக ஆண்டுக் கடைசி நாளில் மகிழ்ச்சியோடு நன்றி செலுத்துகிருர்கள். இந்த நன்றி விழாவை 'இந்திர விழா' என்றும் 'போகி பண்டிகை' என்றும் கொண்டாடுகிருர்கள். இந்திர விழாவைச் சோழ மன்னர்கள் தங்கள் தலைநகரமாகிய காவிரிப்பூம் பட்டினத்திலே சித்திரை மாதம் கொண்டாடினுர்கள் என்று சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது.

இந்திர விழாவாகிய போகி பண்டிகை, சூரிய விழாவாகிய தைப் பொங்கல், மாட்டுப் பொங்கல் ஆகிய இந்த மூன்று தினங்களும் மகிழ்ச்சிக்கும் புது விருந்திற்கும் உரிய தினங்கள். பழைய ஆண்டுடன் பழைய கவலைகளும் போய் விட, புது ஆண்டிற்கு உரிய புதிய தீர்மானங்கள் செய்வதற்கு உரிய தினங்கள் இம்மூன்று தினங்களும் என்று சொல்லலாம். இந்த விழாக்களில் இந்திர விழாவைக் காட்டிலும் சூரிய விழாவுக்கே பிரதானம் ஏற்பட்டதால், இதையே பொங்கல்—புதுநாள் என்று கொண்டாடுகிருர்கள்.

நமது நாகரிகம் சாராம்சத்தில் விவசாய நாகரிகம்தான்; கிராம நாகரிகம்தான். மாட்டுப் பொங்கலையும் பொங்கல் விழாவின் ஒரு முக்கிய அம்சம் ஆக்கிக் கொண்டது நமது விவசாய நாகரிகம். விவசாயிகள் மாடுகளை முக்கியமான செல்வமாக மதிப்பார்களல்லவா? 'மாடு' என்ற தமிழ்ச் சொல்லுக்கே பழைய காலத்தில் செல்வம் என்ற பொருளும் உண்டு. பசுச்செல்வம், எருமைச்செல்வம் ஆகியவற்றை மலட்டுச் செல்வமாகிய பொன்னைக்காட்டிலும் விசேஷமாக மதித்தார்கள் பழைய விவசாயிகள். 'குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்' என்றும்,

> ஏற்ற கலங்கள்
> எதிர் பொங்கி மீ தளிப்ப
> மாற்ருதே பால்சொரியும்
> வள்ளற் பெரும் பசுக்கள்

என்றும் ஆண்டாள் பசுச் செல்வத்தைப் பாடுவதுடன்,

> கனைத்திளங் கற்றெருமை
> கன்றுக்கு இரங்கி
> நினைத்து முலைவழியே
> நின்று பால்சோர
> நனைத்தில்லம் சேருக்கும்
> நற்செல்வன்

என்று எருமைச் செல்வத்தையும் மகிழ்ச்சியுடன் பாடியிருக்கிருள் தம் 'திருப்பாவை'யில். திருப்பாவை மாதமாகிய மார்கழியில் இப்படிப் போற்றும் மாடுகளுக்குத் தை பிறந்ததும் மாட்டுப் பொங்கல் கொண்டாடுகிருர்கள். 'பால் பொங்கியாச்சா?' என்ற கேள்வியிலேயே மாட்டுச் செல்வத்திற்கு உரிய மாண்பு புலனுகிறதல்லவா?

இந்த விவசாயத் திருவிழாவில் பெண்கள் விசேஷ மகிழ்ச்சி கொள்

வது இயல்புதான். ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்குப் பண்டிகைகள் பொதுவாகவே அதிக மகிழ்ச்சி அளிப்பதுண்டு. பொங்கலோ பெரும்பாலும் பெண்களின் மகிழ்ச்சி விழாவாகத்தான் கொண்டாடப்படுகிறது. உதாரணமாக, எவ்வளவு கரும்பு தின்றாலும் விருந்து உண்டாலும் ஆண்களுக்குப் பெண்களைப்போல் மகிழ்ச்சி பெறத் தெரியாது என்றே தோன்றுகிறது.

சேலைகள் நூறு வர்ணம்—பல
சித்திரத் தொழில்வகை
சேர்ந்தனவாய்
சாலவும் பொன் இழைத்தே—...
....
கோலநற் பட்டுக்களின்—வகை
கூறுவதோ? எண்ணில்
ஏறுவதோ?

என்று பாரதியார் பாடியிருக்கிறாரே, அந்தமாதிரி ஆடைகளையெல்லாம் அணிந்து கொண்டது போல் ஏழைப் பெண்ணும் புதிய ஆடை புனைந்ததும் மகிழ்ந்து போகிறாள்.

மணமாகிவிட்ட தன் பெண்ணுக்குப் 'பொங்கல் வரிசை' என்ற பரிசுகள் கொடுப்பதிலே தான் தாய்க்கு உண்டாகும் மகிழ்ச்சி தந்தைக்கு உண்டா? 'இவ்வளவு செலவு செய்கிறோமே' என்ற எண்ணம் தந்தையின் மகிழ்ச்சியையும் குறைத்து விடுகிறது. 'பொங்கல் படி' என்று வேலைக்காரன் முதலானவர்களுக்கு இனம் கொடுப்பதிலும் வீட்டின் எஜமானிக்கு உள்ள மகிழ்ச்சி விசேஷமானதுதான். வேலைக்காரர்களுக்கு இந்தப் பரிசு ஒன்று நூறாக விளையவேண்டும் என்று வாழ்த்திக் கொடுக்கிறாள் நல்ல பண்புள்ள வீட்டுத் தலைவி.

'பொங்கல்' என்ற தமிழ்ச் சொல்லின் பொருளை உள்ளவாறு தெரிந்துகொள்ள வேண்டுமானால், தமிழ்ப் பண்பாடுகளை இன்றும் பரிபாலித்து வரும் பெண்மணிகளின் மனநிலையை அறிந்து கொள்ளவேண்டும். 'பொங்கல்' என்றால் 'பொங்குதல்—அதாவது உள்ளம் பொங்குதல்' 'வேட்கை பூண்டு பொங்கினர்' என்ற தமிழ்க் கவிஞர் வாக்கிலே பொங்கலின் பழம் பெரும் பொருளைக் காணலாம். விருப்பத்தால், உற்சாகத்தால், உள்ளம் பொங்கினார்கள், என்பது மேலே சொன்ன கவிஞர் வாக்கின் பொருள். 'வேட்கை' என்றால் சாதாரண விருப்பம் அன்று. 'காதல், மணவிருப்பம்' என்ற பொருள் புதைந்து கிடக்கிறது, வேட்கை என்ற சொல்லிலே. 'பொங்குதல்' என்ற சொல்லுக்கோ 'நுரைத்து எழுதல், செழித்தல், உயர்தல், ஒலித்தல்' என்றெல்லாம் பொருள் உண்டு. பாலோ, தோசை மாவோ நுரைத்து எழுந்து பொங்குவது போல உள்ளம் துள்ளியெழுந்து பொங்குவதையும், இப்பெரு மகிழ்ச்சி ஆரவாரமாக வெளிப்படுவதையும் 'பொங்கல்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறோம். பொங்கல் — பண்டிகையில் இவ்வளவு சந்தோஷமும் பெண்களிடம் தானே காணப்படுகிறது?

'மகிழ்ச்சியால் மிகுதல் மேலோங்குதல், பூரித்தல்' என்ற பொருள்களுடன் 'கொந்தளிக்கும் பெருமகிழ்ச்சி' என்ற பொருளும் 'பொங்கல்' என்ற சொல்லுக்கு

உண்டு. பால் காய்ந்து கொதித்துப் பொங்குவதுபோல் அநியாயத்தைக் கண்டு காய்ந்து கொதித்துப் பொங்கும் கோபமிகுதியையும், கர்வமிகுதியையும்கூடப் 'பொங்கல்' என்ற சொல் குறிக்கும் எனலாம். ஆகவே மகிழ்ச்சிப் பொங்கல்போல் 'கர்வப் பொங்கல்' 'கோபப் பொங்கல்' முதலியனவும் உண்டு. இவற்றில் மகிழ்ச்சிப் பொங்கலே பொங்கல் விழாவின் உட்பொருள். எனினும் அதர்மம் கண்டு பாய்ந்து கொதித்துப் பொங்கும் தர்மாவேசத்தையும் வீராவேசத்தையும் கோபாவேசமாக மயங்கித் தள்ளி விடலாகாது. வளர்ச்சியின் தூண்டுகோலாகிய மகிழ்ச்சி தர்மாவேசத்திற்கும் தூண்டுகோலாக அமையவேண்டியது அவசியம்தான்.

உண்மையான மகிழ்ச்சி தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் அவசியமானவை என்று நம் முன்னோர் நன்குணர்ந்துகொண்டனர் என்பதற்குப் பொங்கல் பண்டிகை போன்ற விழாக்களும் சான்று தருகின்றன. பெண்கள் தைப் பொங்கலன்று சித்திர விசித்திரங்களான கோலங்கள் போடுவதைப் பாருங்கள். சில பிரதேசங்களில் ஆடல் பாடல்களும் இந்தப் பண்டிகையின் ஓர் அம்சமாகக் காணப்படுகின்றன. கிராமங்களில் மாட்டுப் பொங்கலன்று மாடுகளை மகிழ்ச்சியுடன் ஓட்டி விளையாடும் பாமர விளையாட்டுக்களைத்தான் பாருங்கள். இவையெல்லாம் பொருளற்ற வீணான பொழுது போக்கல்ல. ராஜாஜி சொல்லுகிறபடி, 'விலையற்ற சமுதாயச் செல்வம் இவை'. இத்தகைய பண்டிகைகளாலும் பொழுதுபோக்குகளாலும் நம் முன்னோர் தங்கள் வாழ்க்கையை வறண்டயர்ந்து போகாமல் வளமுறச் செய்து கொண்டார்கள்.

'பொங்கல்' என்றால் சாராம்சத்திலே வாழ்வின் மகிழ்ச்சிப் பொங்கலும் அழகுப் பொங்கலும் தான். பழைய காலத்தில் பொங்கல் ஒரு குடும்ப விழா மட்டுமன்று. கிராமத்தையும் ஒரு பெருங் குடும்பமாகக்கொண்டு கிராமவாசிகள் 'உன் வீட்டில் பால பொங்கியதா? அவள் வீட்டில் பால் பொங்கியதா?' என்று உற்சாகமாக ஒருவரையொருவர் வினவி மகிழ்ந்ததுண்டு.

'கிராமங்களே உண்மைத் தமிழ் நாடு' என்ற உணர்ச்சியுடன் கிராமவாசிகளுக்கும் சுதந்திரப் புது வாழ்வும் பெருவாழ்வும் அளிக்கக் கூடிய பொருளாதாரத் திட்டத்தையும் வாழ்க்கைத் திட்டத்தையும் குறித்துச் சிந்திக்க வேண்டும். பொங்கல் புதுநாளில் தமிழர்கள் எல்லாரும் தங்கள் புதுமைப் பெருவாழ்வு குறித்துச் சிந்தனை செய்து பார்க்க வேண்டியது அவசியமாகும். இந்தத் துறையில் பெரும்பணி நம் தமிழ்ப் பெண்களை எதிர்நோக்குகிறது என்பது என் அபிப்பிராயம்.

உவமக் கதைகளில் உலகப் பிரசினை

○

பி. ஸ்ரீ.

இவ்வாண்டுக் கிறிஸ்மஸ்ஸும் 'சமாதானம், நல்லெண்ணம்' என்ற வார்த்தைகளை உதடுகளில் உச்சரித்துக்கொண்டே வந்து போயிருக்கிறது. கிறிஸ்து பெருமானே 'விதை விதைப்பவன்' என்ற ஓர் உவமக் கதையில் 'விதைத்த விதைகளெல்லாம் முளைப்பதில்லை' என்று ஒப்புக் கொள்கிறார். 'விதைப்பவன் வயலில் விதைக்கப் புறப்பட்டான். விதைத்துக்கொண்டே போகும் போது சில விதைகள் வரப்பில் விழுந்தன. அந்த வழியே நடந்த ஜனங்கள் சிற்சில விதைகளை மிதித்து விட்டார்கள். வானத்தில் பறந்துகொண்டிருந்த பறவைகள் பாக்கி விதைகளைத் தின்றுவிட்டன. விதைத்த சில விதைகள் கற்பாறை மீது விழுந்து விட்டன. முள்ளுச் செடிகள் நிறைந்த இடத்திலும் சில விதைகள் விழுந்தன. நல்ல நிலத்திலும் விதைகள் விழுந்து முளைத்தன. காதுள்ளவன் இதைக் கேட்கக் கடவன் என்றார் கிறிஸ்து நாதர்.' சென்ற 19 நூற்றாண்டுகளாக இப்பெருமானின் உபதேச மணிகள் பக்தி யில்லாத எத்தனை மனப்பாறைகளில் விழுந்து வீணாகி யிருக்கின்றன! மண் மூடிய சில பாறைகளில் உடனே முளை எடுத்த போதிலும் ஆழம் இன்மையால், ஈரம் இன்மையால், இவை உலர்ந்து போய்விட்டன. முள்ளுச் செடிகளுக் கிடையே முளைத்தெழுந்த வித்தின் பயிர், உடன் வளர்ந்த முள்ளுச் செடிகளால் நெருக்குண்டு மாய்ந்தன. போர்வெறி உள்ளவர்கள், நிறவெறி கொண்டவர்கள், இனத் திமிர் பிடித்தவர்கள் ஆகியவர்களிடையே கிறிஸ்து தர்மம் பட்டபாடு இது. இவர்களெல்லாம் கேட்டும் கேட்டிலர்!

எனினும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் நல்ல நிலத்தில் விழுந்த விதை போல் சில இதயங்களில் கிறிஸ்து தர்மம் வளர்ந்தோங்கி, ஒன்றுக்குப் பத்து, இருபது, ஐம்பது, நூறு மடங்கு என்று கூடப் பலன் தந்திருக்கிறது. உண்மையான பக்தர்கள் 'சுவிசேஷமாய்'க் கேட்ட உபதேசங்களைச் சிந்தித்துத் தெளிந்து தமதாக்கிக் கொண்டு லோகோபகாரிகளாக வளர்ந்திருக்கிறார்கள். இவர்களுடைய இதய வரம்பில் விழுந்த விதைகளைக் கூடச் சாத்தானோ, அவனுடைய பரிவாரமோ மிதித்துப் பாழாக்க முடியாது; பறந்து வந்து கொத்திப் போகவும் முடியாது. இத்தகைய கிறிஸ்தவ பக்த மணிகளுக்குச் சமீப காலத்தில் தலைசிறந்த இலக்கியமாக விளங்கியவர்கள் திருவாளர்கள் ஆண்ட்ரூஸ், ரோமென் ரோலெண்ட் முதலானோர். பூஜ்யர் (ரெவரெண்ட்) ஹோம்ஸ் போன்றவர்கள் இன்றைய சூழ்நிலையிலும் கிறிஸ்து பெருமானின் உபதேச விதைகளைக் கண்ணீரால்—நெஞ்சிலுள்ள உதி

ரத்தால்—வளர்த்து வருகின்றூர்கள் என்று கருதலாம்.

வேறொரு உவமக் கதை: 'ஒருவன் விதைக்கிறான். விதைத்து முடிந்த பின் இரவில் உறங்குகிறான்; பகலில் விழித்திருக்கிறான். வயலிலே முதலில் முளை வருகிறது; பின் கதிர் வருகிறது. அதன்பின் கதிரில் மணி தோன்றுகிறது. மணி முற்றினபின் அறுப்புக் காலம் வருகிறது. அப்பொழுது விதைத்தவன் அறுப்பான். இது போல் இருக்கிறது கடவுளரசு.' விதைக்குத் தகுந்த விளைவு—என்பது சட்டம். மனிதர் காலத்தால் செய்வன செய்து பலனைக் குறித்துக் கவலைப்படாமல் நம்பிக்கையுடனும் பொறுமையுடனும் காத்திருக்க வேண்டும். காலம் பார்த்து விதைத்த விதை, காலமும் வேளையும் வர விளைவு தரும் என்பது கிறிஸ்து பெருமானின் உபதேசம். இதைத்தான் நம்மவர் 'விதியின் நியமம்' என்கிறார்கள். 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்ற சாதாரணத் தமிழ்ப் பழமொழியும் கிறிஸ்து பெருமான் சுட்டிக் காட்டிய 'விதி' என்ற சூட்சும இயற்கை-நியதியைத்தான் புதை பொருளாகக் கொண்டிருக்கிறது.

இந்த விதி தனி மனிதனுக்கு மட்டும் உரியதன்று, ஒரு நாட்டுக்கும் உரியது. பல நூற்றாண்டுகளாக ஹரிஜனங்களுக்கு இழைத்த கொடுமை என்ற விதை படிப்படியாக வளர்ந்து வந்திருப்பதைச் சரித்திரக் கண்ணாடி மூலமாகக் கண்டுகொள்ளலாம். 'உயர்' வகுப்பினரால் ஒடுக்கப்பெற்ற ஹரிஜனங்களில் பலர் 'அல்லா'வின் ஜனங்களாகிவிட்டார்கள்; கிறிஸ்து-ஜனங்களும் ஆனார்கள். அதனால் இந்துமதம் பலவீனம் அடைந்தது; இந்தியாவின் அரசியல்-பிரசினைகளும் சிக்கலாயின. இந்தத் 'தேசிய விதி'யை மதியால் ஒழுங்கு செய்து விபரீத விளைவுகளைப் போக்கி நல்விளைவு பெறவேண்டுமென்று, மகாத்மா காந்தி என்ன பாடு பட்டிருக்கிறார்! 'ஹரிஜன முன்னேற்றம்' என்ற விதை தூவி ஒற்றுமைப் பயிரை வளர விட்ட மகான், முளை வரக் கண்டு, கதிர் வரக் கண்டு, கதிரில் மணி வரக் கண்டு, சுதந்திர தானியத்தைக் களஞ்சியத்திலும் கண்டு, மறைந்தார்.

இனி இந்தத் தானியத்தைத் தக்க வழியில் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவுக்கும் உலகத்திற்கும் நன்மையும் சமாதானமும் கிடைக்கச் செய்வது நமது கடமையாகும். நமக்குச் சுதந்திர தானியம் விளைவித்த வயல் சாதாரண வயல் அன்று. இந்த வயலில் அரும் பெரும் புதையலும் கிடைக்கும் என்பது மகாத்மாவின் அபிப்பிராயம்.

புதையல்—கதை

'ஒரு கிராமத்திலே எளிய மனிதன் ஒருவன் மற்றவர்களுடைய வயல்களில் கூலிவேலை செய்து கஷ்ட ஜீவனம் செய்து வந்தான். கல்லும் முள்ளும் நிரம்பித் தரிசாய்க் கிடந்த ஒரு காட்டு நிலத்தைப் பண்படுத்தும் கூலி வேலையில் இவன் ஒருநாள் ஈடுபட்டு மண் வெட்டிகொண்டு அங்கும் இங்கும் வெட்டித் திருத்திக்கொண்

பு.ருந்தான். ஏதோ ஒன்றில் மண் வெட்டி திடீரென்று தாக்க, 'கல்லின் சத்தமும் இல்லை'வேரின் சத்தமும் இல்லை' என்று குனிந்து பார்த்தான். அங்கே என்ன இருந்தது தெரியுமா? ஒரு புதையல்—எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் புதைக்கப்பட் டிருந்த ஒரு பெரும் பொக்கிஷம். அந்த ஏழை அதிசயம் அடைந்தான், ஆனந்தம் அடைந்தான். ஆனல் நிலம் இவனுடைய தில்லையே, என் செய்வான்? புதையல்மேல் மண்ணைக் கொட்டி மறைத்து விட்டுத் தன் வீட்டிற்குப் போனன். இந்த நிலத்தை எப்படியாவது விலைக்கு வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்ற தீர்மானத்துடன் போனன். தனக்குக் கிடைத்த கூலியில் தான் அதுவரை மிச்சப்படுத்தி வைத்திருந்த பணமெல்லாம் போதாது என்று கண்டு, தன் வீட்டிலிருந்த சாமான்களை யெல்லாம் விற்றுப் பணமாக்கிக் குறித்த நிலத்தை வாங்கிக் கொண்டான்' என்று பொருள்படப் பேசியிருக்கிறார் கிறிஸ்து பெருமான்.

'பரலோக ராஜ்யம் நிலத்தில் மறைந்திருக்கும் புதையல் போன்றது. அது தெரிந்த ஆனந்தத்திலே ஒருவன் தனக்கு உரிய உடைமைகளை யெல்லாம் விற்றுக் குறித்த நிலத்தை உரிமையாக்கிக் கொள்கிறன்' என்றார் ஏசுநாதர். இந்த உவமம் காந்தியடிகளின் 'ராமராஜ்ய'த்திற்கும் பொருந்துவதுதான். இந்தியாவில் கிராம ராஜ்யமாகவும், உலகத்திற் கெல்லாம் தர்ம ராஜ்யமாகவும் பரிணமிக்கத் தக்க ராமராஜ்யத்திற்காக எத்தகைய தியாகம் செய்யவும் பின்னிடார் உண்மையான தேசபக்தர் என்பது காந்தியடிகளின் சித்தாந்தம்.

'ஒரே உலகம், ஒரே குலம், ஒரே கடவுள்' என்ற லட்சியம் தான் காந்தியடிகளின் ராமராஜ்யத்திலே. சத்தியமும் அஹிம்ஸையும் இல்லாமல் எந்த நாடும் நீடித்த சமாதானம் பெற முடியாது. இன்றுள்ள ஐ. நா. சபையில் ராஜதந்திரிகள் புத்திக் கூர்மையுடன், ஆனல் நெஞ்சிலே சத்திய மில்லாமல் ஹிம்ஸை யுணர்வுடன், அரசியல்-சதுரங்கம் ஆடக் காண்கிறோம். இச் சபை உலகப் பஞ்சாயத்தாக நிலைக்கக் கூடும் என்று நம்ப இடம் இல்லை. இந்தோனேஷியாவில் நீதி செலுத்திக் குடியரசுக் கட்சியை நிலைநிறுத்தும் சக்தியுற்ற ஐ. நா. சபை உலகத்தில் எப்படிச் சமாதான தேவியைப் பிரதிஷ்டை செய்துவிடப் போகிறது? ஆகவே, சத்தியத்தையும் அஹிம்ஸா தர்மத்தையும் விரதமாகக் கொண்ட ஓர் உலகப் பஞ்சாயத்து உருவாகும் போதுதான், உலக சமாதானம் உள்ளபடி நிலைபெற இயலும்.

நீதிபதியும் கைம்பெண்ணும்

எனினும் சத்தியத்திற்கு அஞ்சாத, ஏழை நாடுகளை மதியாத, இந்த ஐ. நா. சபையிலும் நாடுகள் நீதி வேண்டிச் சோர்வில்லாமல் விண்ணப்பம் செய்து கொண்டேயிருக்க வேண்டியதுதான். 'நீதிபதியும் கைம்பெண்ணும்' என்ற உவமக் கதையில் ஏசு பெருமான் காட்டும் வழி இன்றும் பல நாடுகளின் கவனத்திற்கு உரியதுதான்.

கிறிஸ்து சொன்னர்: 'ஓர் ஊரில் ஒரு நீதிபதி. மனிதரை

மதியாதவன்; ஆண்டவனை அஞ்சாதவன். அந்த ஊரிலுள்ள ஒரு கைம்பெண் நீதிபதியிடம் வந்து, 'எனக்கு ஒருவன் அநியாயம் செய்தான்; விசாரித்து நீதி செய்ய வேண்டும்' என்று விண்ணப்பஞ் செய்து கொண்டாள். நீதிபதி கவனிக்கவில்லை. மறுபடியும் கைம்பெண் விண்ணப்பித்தாள். நீதிபதி சும்மா இருந்துவிட்டார். பெண் அடிக்கடி விண்ணப்பித்துக் கொண்டாள். 'சும்மா சும்மா வந்து அலட்டுகிறாளே, விசாரித்து நீதி செலுத்த வேண்டியதுதான்; இல்லாவிட்டால் என்னைச் சும்மா இருக்க விடமாட்டாள்' என்று கடைசியாகத் தீர்மானித்தார் நீதிபதி. இந்தக் கதையிலுள்ள அநீதமான நீதிபதியிடம் கைம்பெண் விண்ணப்பித்து விண்ணப்பித்துக் கடைசியாக நீதி பெற்றது போல் நாடுகளும் ஐ. நா. சபையில் சோர்வின்றி விண்ணப்பித்து நியாயம் பெற முயலவேண்டும்.

பரிபூர்ண சாஸ்திரியார்

விணணப்பித்துக்கொள்ளும் நாடுகளும் இயன்றவரையில் நீதி-நேர்மை உணர்வுடன் கருத்து-வேற்றுமைகளைச் சமரசப் படுத்திக்கொள்ள முயலவேண்டும்; குற்றங் குறைகளைத் தைரியமாக ஒப்புக்கொள்ளவேண்டும். கிறிஸ்து பெருமானின் உவமக்கதை யொன்றில் சாஸ்திரி ஒருவர் நடந்து கொண்டது போல் ஒவ்வொரு நாடும் நடந்து கொண்டால், ஐ. நா. சபைதான் என்ன செய்யமுடியும்?

அந்தக் கதை வருமாறு: 'ஒரு நாள் இருவர் கோயிலுக்குப் போனார்கள். இவர்களில் ஒருவரான சாஸ்திரி, கோயிலில் மூலஸ்தானத்திற்குச் சமீபத்திலே போய் நின்று "நான் மற்றவர்களைப் போல் இல்லை. ஆண்டவனே, களவு மாய்மாலம் முதலான பாவங்களை நான் செய்தறியேன். விரதங்கள் அனுஷ்டிக்கத் தயங்குவதில்லை. இப்படி உத்தமனாக நான் இருப்பதற்குக் கடவுளே, உனக்கு நன்றி பாராட்டுகிறேன்!" என்றார். மற்றவனோ வெளி வாசலுக்கு அருகில் நின்று, "ஆண்டவனே, இந்தப் பாவிக்கு இரங்குவாய்" என்றான். இவன் பாவ மன்னிப்புப் பெற்றான். சாஸ்திரியார் வந்தது போலவே மீண்டார்.' கிறிஸ்து நாதர் சொன்ன கதைகளில் இதுதான் மிகச் சிறிய கதையாம். இந்தக் கதையிலுள்ள பரிபூர்ண சாஸ்திரியாரின் குரல் கேட்கிற தல்லவா, டச்சுக்காரரும் ஸர். ஸாபருல்லா கான் முதலானவர்களும் ஐ. நா. சபையில் பேசும் போது?

* * *

கிறிஸ்மஸ் விழாவை ஒட்டிக் கிறிஸ்து வேதபாராயணம் செய்ய முயன்றேன். பாராயணம் ஒழுங்காக நடைபெறா விட்டாலும் கிறிஸ்து பெருமானின் பொருளாழமுள்ள ஐந்து உவமக் கதைகள் கண்ணுக்குப் புலனாயின. காலநிலைக்கு இசைந்த பொருளும் என் அகக் கண்ணுக்குப் புலனாயிற்று. வாசக நேயர்களுக்குக் கிறிஸ்மஸ் வெகுமதியாகக் கிறிஸ்து பரமாத்மாவின் இந்தப் பஞ்ச ரத்தினங்களையும் உவகையுடன் கொடுக்கிறேன்.

சிறு குழந்தைகளுக்குச் செய்யுட் பாடங்கள்

○

எஸ். வையாபுரிப் பிள்ளை

சில காலத்திற்கு முன்வரை தமிழ்ச் செய்யுட்கள் என்றால் நம்மிற்பலருக்கும் பெரும் பயந்தான். கல்வி வல்லவர்கள் கூட அவற்றைத் தாமே கற்றுப் பயன் பெறுவதில்லை. பிறர் வாசித்துக் கேட்டலே போதும் என்ற கொள்கையுடையரா யிருந்தனர். பள்ளி மாணவர் தமிழையும் தமிழ்ச் செய்யுட்களையும் பயத்துடனும் இகழ்ச்சியுடனும் நோக்கி வந்தனர். பி. ஏ. பட்டம் பெற்று ஓர் உயர்ந்த உத்தியோகத்தி லிருந்து ஓய்வு பெற்றவர் ஒருவர், 'பெருங்கதை' என்ற காவியம் வசனத்திலுள்ள ஒரு பெரிய கதையாகும் என்று எண்ணினர். கம்ப ராமாயணம் வசன நூலென்று கருதியிருந்தனர்; செய்யுளிலிருப்பதைக் கண்டு வியப்படைந்தனர். இவர் பி. ஏ. யில் தமிழ்ப் பாடம் எடுத்துக் கொண்டவராம்! இப்படியாக இருந்தது செய்யுள் பற்றிய அச்சமும் அறியாமையும். இப்பொழுது தான் அச்சம் படிப்படியாக நீங்கி வருகின்றது. செய்யுட்களையும் ஒருவாறு கற்றுவிடலாம் என்று துணிவு ஏற்பட்டு வருகிறது.

இங்கிலையில் கல்வித் துறையிலே பலபல சீர்திருத்தங்கள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன. முதல் பாரத்திலிருந்தே மாணவர்கள் திருக்குறளைக் கற்கவேண்டும் என்று கருதி கல்வி யிலாகாவி லிருந்து உத்தரவு பிறந்திருக்கிறது. இந் நீதி நூலைப் பாடமாகக் கற்பது ஒருபுற மிருக்கட்டும். பொதுப் படச் செய்யுட் பாடங்களை இள மாணவர்கள் கற்க வேண்டியது அவசியந்தானா? நமது சிறுவர் சிறுமியர்களுக்குச் செய்யுட் பாடங்கள் வைத்து அவர்களைத் துன்புறுத்துதல் தகுதியா? இக் கேள்விகளுக்கு ஆராய்ந்து விடை காணுவது இன்றியமையாததாகும்.

கவிதை உணரப்பட வேண்டியதொன்று. அதனைக் குறித்து விவாதம் செய்தல் பயனற்ற தொழிலாகும். நமது அறிவினைக் காட்டிலும் உணர்ச்சியையே அது குறித்துச் செல்லுகிறது. அதன் இயல்புகளை வரையறுக்க முயன்ற லக்ஷணங்களெல்லாம் திருப்திகரமானவை யல்ல. கவிதையைக் கற்று அனுபவித்தவன் ஒருவன் எவ்வாறு தான் அதனால் இன்பமும் பயனும் பெற்றுள்ளான் என்று விளக்க முயல்வானானால், தனது நோக்கத்தை நிறைவேற்றும் வழி இன்னது என்பதை அவன் தெரிந்து கொள்ளுதல் அருமை. எனவே, கவிதையைக் கற்பித்தல் மிகக் கடினமான காரி

யம் என்று பொதுப்படக் கூற லாம்.

நமது பள்ளிக் கூடங்களில் கவிதைகள் எவ்வாறு கற்பிக்கப் படுகின்றன என்பதை நாம் சிறிது நோக்குவோம். அது பற்றித் தோன்றும் கருத்துக்களை வெளி யிடுவது மிகவும் அவசியமாகும். ஒவ்வொரு வகுப்பிலும் இத்தனை செய்யுட்கள் மனனம் செய்யப்படு தல் வேண்டும் என்று குறித்திருக் கிறார்கள். இது ஒரு நல்ல முறையே யாகும். ஆனால் **மனனம்** செய் தற்குரிய பாடலின் அளவு சுருக்க மாகவே இருத்தல் கூடும். மேல் வகுப்புக்களில் அந்த அளவு சுருங்கியிருந்த போதிலும், மன னஞ் செய்யாது பொதுப்பட வாசித்தற்குரிய செய்யுளின் அளவு மிகுதியாக இருத்தல் வேண்டும். பெரும்பாலும் ஆண்டு முடிவில் நிகழும் பரீட்சைகளுக்குச் சற்று முன்பு தான் மாணவர்கள் செய் யுட்களைக் கற்பார்கள். மற்றக் காலங்களில் அவற்றைக் குறித்துக் கவலையே கொள்வதில்லை. ஆண்டு முழுவதிலும் செய்யுட் பாடங் களைக் கற்பதாய் இருந்தாலும் ஒரே செய்யுட் பகுதியை அவர்கள் திரும்பத் திரும்பக் கற்கிறார்கள். இதனால் அவர்களுக்கு அருவருப்பு உண்டாகி, செய்யு ளென்றாலே தொடவும் மறுக்கிறார்கள். எப்படி நோக்கினாலும் செய்யுட் பாடம் வகுத்ததன் பயன் முற்றுப் பெறா மலே போய்விடுகிறது. ஆதலால், ஆண்டு முழுவதிலும் இச்செய்யுட் பாடங்கள் முறையாக நிகழ்தல் வேண்டும். ஒரு பாடத்தை நன்கு கற்ற பின்புதான் அடுத்த பாடத் திற்குச் செல்லுதல் வேண்டும். பழம் பாடங்களைப் போற்றுதலும் அவசியமாகும். குழந்தைகளு டைய மனத்தைக் கவரும்படியான முறையில் இப் பாடங்கள் அமை தல் வேண்டும். கிளிப் பிள்ளை களைப் போல் பாடங்களைத் திருப் பித் திருப்பி ஒப்பிப்பதனால் பயன் யாதும் இல்லை. கண்டவற்றை யெல்லாம் மனனம் செய்யும்படி குழந்தைகளை வற்புறுத்துதல் கூடாது. மேற்கூறிய முறையில் கடினமான இச் செய்யுட் பாடம் நடைபெற்றால் தான், பயனுண்டா கும்.

செய்யுட் பாடங்களைக் கற்பத னால் விளையும் பயன்களை இனி நோக்குவோம். முதலாவது பாவனா சக்தியை அவை வளரச் செய்கின்றன. ஞாபக சக்தியை அவை விருத்தி செய்கின்றன என் பதை ஒருவரும் மறுக்க மாட்டார் கள். இவை இரண்டோடு சிந்தனா சக்தியும் (Reflection) இப் பாடங்களால் வளர்கின்றது. நமது குழந்தைகள் பல பொருள்களையும் பற்றிச் சிந்தித்தல் அவசியம். சிந் தித்தல் என்றால் பாவனா சக்தியும் உடன் நிகழ்வதே யாகும். சிந் தித்தலோடு நிகழுகின்ற பாவனா சக்தி தவிர, தனிப்பட்ட நிலையிலே யும் இப் பாவனா சக்தி நேராக வளர்ச்சியுறச் செய்தல் இன்றி யமையாததாம். அழகுணர்ச்சி யோடு கூடிய பாவனா சக்தியில் நம் குழந்தைகள் பயிற்சி பெறுவதா னால் அவர்கள் வளர்ந்த பிற்பாடு எத்தனையோ வகையான கெடுதி களினின்றும் விடுதி பெறுவார்கள். அவர்களுடைய நேரம் ஒரு பொழு தும் வீணாகக் கழியாது. கிராமாந் திரப் பிரதேசங்களில் உல்லாஸப்

பிரயாணம் செய்வதிலும் சித்திர சாலை, காட்சிச் சாலை முதலியவற்றிற்குச் செல்வதிலும், சங்கீதக் கச்சேரிகளை அனுபவிப்பதிலும் அவர்கள் நேரம் இனிதாய்க் கழியும். எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல நூல்களைக் கற்று அனுபவிப்பதில் அவர்களது அருமையான காலம் பயன் படுவதாகும். அவர்கள் நோயினாலும், வலி முதலியவற்றினாலும் துன்புறும்பொழுது, பாவனா சக்தியின் உதவியால் அவற்றினின்றும் தப்பி கற்பனையுலகில் சஞ்சரித்துத் துன்பத்தைப் போக்கிக் கொள்வார்கள். ஜேம்ஸ் ரஸ்ஸல் லவல் என்பவர் சாகுந்தறுவாயில் இருந்தார். அவரிடம் ஒருவர் சென்று, அவரது மனநிலை எப்படியிருக்கிறது என்று கேட்டனர். தமக்குச் சரீர உபாதை ஒன்றும் இல்லை என்றும், ராப் ராய் (Rob Roy) என்ற கதையின் நிகழ்ச்சிகளில் தாம் ஆழ்ந்து ஈடுபட்டு வருகிறாரென்றும் அவர் கூறினாராம். ராப் ராய் முதலிய கதைகள் போலவே, கவிதையும் துன்பத்தை மறக்கச் செய்கின்றது. ஒரு கற்பனை யுலகத்தில் நாம் சஞ்சரித்து மகிழும்படியாக நம்மைச் செலுத்துகின்றது.

ஆகவே குழந்தைகள் செய்யுட் பாடத்தைக் கற்பதனால் விளையும் முதற்பயன் அவர்களுடைய பாவனாசக்தி வளர்ச்சியுறுவதாகும். இரண்டாவது பயன் பாவனா சக்தியோடு தொடர்ந்து பிணைந்து செல்லும் சிந்தனா சக்தியும் அதனால் வளர்ச்சி எய்துகிறது. குழந்தைகள் தாங்களே விஷயங்களைச் சிந்தித்தற்குரிய அவசியங்கள் பல நேரிடும். ஆசிரியர் கூறியவற்றின் பொருளைச் சிந்திக்கும் அவசியங்களும் பல நேரிடும். இவ்வாறாக அவர்களுடைய சிந்தனா சக்தியும் அறிவாற்றலும் செய்யுட் பாடங்களால் உரம் பெறுவதற்கு இடமுண்டு. மூன்றாவதாக ஒரு பயனும் உண்டு. கவிதைகள் நமது அறிவையும் உணர்ச்சியையும் மாத்திரம் வளர்ப்பன என்று கருதுதல் கூடாது. நல்ல நீதிகளையும் சிறந்த வாழ்க்கை நெறிகளையும் அவை குழந்தைகளுக்குப் புகட்டுகின்றன. இயற்கையையும் அதனை இயற்றிய தெய்வத்தையும் அன்போடு போற்றும்படியாகச் செய்கின்றன. நாட்டுப்பற்றை உண்டாக்குகின்றன. தைரியம், அகமலர்ச்சி, சுயநலமின்மை, நியாய உணர்ச்சி, விடா முயற்சி முதலிய அருங் குணங்களைச் சிறுகுழந்தைகளுக்கு அவை உணர்த்துகின்றன. குழந்தைப் பருவத்திலேயே செய்யுட்களை கற்று இன்புறும் பழக்கம் ஏற்பட்டால், பிற்காலங்களில் அவர்களை வாழ்விற்குத் தகுதியுடையவராக அவை செய்தல் உறுதி. இங்கே குறித்த விளைவுகளை நோக்கினால் செய்யுட் பாடம் குழந்தைகளுக்கு அவசியம் என்பதை எளிதில் உணரலாம்.

மேலே குறித்த பயன்களைத் தர வேண்டுமானால், குழந்தைகள் கற்கும் செய்யுட்கள் எத்தன்மையனவாய் இருத்தல் வேண்டும்? முதலாவது செய்யுட் பாட விஷயம் குழந்தைகளுடைய அனுபவத்திற்கு அப்பாற்பட்டதாயிருத்தல் கூடாது. உதாரணமாக, மிக அழகான கவிதைகள் காதலைப் பற்றியனவாயுள்ளன. ஆனால், காதல் விஷயங்கள் குழந்தைகளின் மன

நிலையைக் கடந்தவை. ஆகவே, காதல்பற்றிய பாடல்களை பாடங்களில் சேர்த்தல் தக்கதன்று. இன்னுமொன்று, பல அழகிய செய்யுட்கள் வாழ்வு துன்ப மய்மாயுள்ளது என்பதையே பொருளாகக் கொண்டுள்ளன. இதன் உண்மையை வயது முதிர்ந்தவர்கள் உணர்வார்கள். ஆனால், குழந்தைகள் உணரவே முடியாது. உணர முடியாததும் ஒரு நன்மையேயாகும். வாழ்வில் இன்பவுணர்ச்சியும் உத்ஸாகமும் தரக்கூடிய பாடல்களே அவர்களுக்கு வேண்டும். எனவே துக்கம் பற்றிய பாடல்களும் பள்ளிப் பாடப் புத்தகங்களினின்றும் நீக்கத் தக்கனவே.

இரண்டாவதாக, செய்யுளின் மொழியும் நடையும் எளிமையாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். வாக்கிய அமைப்புக் குழப்பமின்றி நேர்படச் செல்வதாயிருத்தல் வேண்டும். வழக்கொழிந்த சொற்களும் திசைச் சொற்களும் கொடுந் தமிழ்ச் சொற்களும் திருத்தமற்ற சொற்களும் விரவாத பாடல்களே குழந்தைகளுக்கு ஏற்றன. ஆனால், ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது. பொருள் விளங்காமல் போனாலும் தனிப்பட்ட ஓசையின் இனிமையிலும் அழகிலும், செய்யுளோசையின் நயத்திலும் குழந்தைகள் ஈடுபடுவார்கள். தென்னாட்டில் பலருக்கு வடமொழியுணர்ச்சி கிடையாது என்றாலும் வடமொழிச் சுலோகங்களையும் காதம்பரியின் உரைநடையையும் கேட்டு அவற்றின் ஓசை நயத்தில் ஈடுபடுவோர் பலருண்டு. குழந்தைப் பருவத்தில் பொருள் விளங்காமல் போனாலும் அழகான உயரிய கவிதைகள்மீது அவர்களுக்கு அன்பு ஏற்படும். அக்கவிதைகள் அவர்களது உள்ளத்திலே புகுந்து தாழ்ந்து படிந்துவிடும். அவர்கள் பெரியவர்களான பிற்பாடு, ஓசை இனிமை மட்டும் கருதி அவர்கள் முன்பு கற்ற பாடல்கள் பொருட்பொலிவோடு அவர்கள் வாழ்க்கையில் இன்பம் விளைத்து ஒளி தந்து நிலவும்.

மூன்றாவதாகச் செய்யுட் பாடங்களின்மீது குழந்தைகளுக்கு அவாவுண்டாகும்படி செய்தல் வேண்டும். இது அழகான கதைப் பாட்டுக்களினாலேதான் இயலும். சரித்திர நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடல்கள் மிகப் பல வேண்டும். சரித்திரம் பற்றிய 'நாவல்களையும்' 'பாடல்களையும்' தொடர்புபடுத்திக் குழந்தைகளைக் கற்கும்படி செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்தால் சரித்திரப் பாடத்தைக் குழந்தைகள் மிகவும் விரும்பிக் கற்பார்கள். இப்பாடல்களேயன்றி கடல், மலை, நாட்டுவளம் முதலிய இயற்கை வளங்களைக் குறித்து வரும் பாடல்களையும் பறவை விலங்கினம் முதலியனபற்றி வரும் பாடல்களையும் குழந்தைகள் விரும்புவர். இவற்றையும் பாடங்களில் பயன்படுத்துதல் வேண்டும். நான்காவதாக, குழந்தைகளின் மன்நிலைக்குத் தக்கபடி அவர்கள் பாடி மகிழ்தற்கு உரியனவாய் அவர்களின்பொருட்டு இயற்றிய பாடல்களே பாட புத்தகங்களில் இடம் பெறுதல் வேண்டும். இப்படி அவர்களுக்கு உரியவையன்றி, அவர்களைப்பற்றி யெழுதிய பாடல்கள் இடம் பெறத் தகாதவை.

கல்பனா

"கல்பனா ஸோப்"

கல்பனா ஸோப்பைத் தொடர்ந்து உபயோகிப்பதால் சருமத்திற்கு மெருகு அளிப்பதுடன் புத்துணர்ச்சியையும் கொடுக்கிறது. அழகைப் பாதுகாத்து வளர்க்கிறது.

"கல்பனா ஸ்நோ"

சருமத்தைப் பிரகாசமாகவும், மிருதுவாகவும், களங்கமற்றதாகவும் பாதுகாத்தால் தான் நம் முகத்தின் அழகைக் காப்பாற்றிக் கொள்ளலாம். இதற்கு மிகவும் உயர்ந்த சாதனம் **கல்பனா ஸ்நோதான்.**

தயாரிப்பவர்கள் :

முரளி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

சென்னை

கல்பனா என்றால் உயர்தரம்

ஆஸ்த்மாவை குணப்படுத்துவது ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

சக்தி

மாதப் பத்திரிகை

○

தனிப் பிரதி 'தபால்'	0	8
ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0
2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0	9
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0
2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0	10
ஒரு வருஷம்	8	0
ஆறு மாதம்	4	8
2 வருஷம்	15	0

சக்தி காரியாலயம்
சென்னை 14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத்தொகை அனுப்பவேண்டும்

பிள்ளைத் தமிழ்ப் பாடல்களால் குழந்தைகளை மகிழ்விக்க முடியுமா?

இறுதியாகக் கூற வேண்டுவது மேற்கூறிய அனைத்திலும் மிக முக்கியமானதாகும். செய்யுட் பாடங்கள் உண்மையிலே பயன் பட வேண்டுமாயின் அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியரும் செய்யுட் களைப் பேராவல் கொண்டு கற்றவ ராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவர் தாம் பெற்ற இன்பத்தையும் ஊக்கத்தையும் குழந்தைகளுக்கும் ஊட்டவல்லவ ராவர். செய்யுட்களின் நயத்தை உணர்ந்து அவர் இன்புறுமல், அவற்றைத் திவசமந்திரம் ஓதுவது போல் சொல்லிக் கொண்டு, இங்கு மங்குமாகச் சில சொற்களுக்குப் பொருளையும் விளக்கிக் கொண்டு செய்யுட் பாடங்களை அவர் நடத்து வாராயின், குழந்தைகள் செய்யுட் பாடங்களைச் சிறிதும் கவனிக்க மாட்டார்கள். அவர்களுக்குச் செய்யுட்களின்மீது அவா எழுவதற்குப் பதிலாக அருவருப்புத் தான் உண்டாகும். கற்பிக்கும் ஆசிரியர் மாணவர்களின் ஆவலைத் தூண்டினல் மட்டும் போதாது. செய்யுட்களின் நயத்தை அவர்கள் சுவைத்தறியும்படியாகவும் செய்தல் வேண்டும். அழகானது இது, சர்தாரணமானது இது என்று பகுத்தறியும்படியாக மாணவர் களுக்குப் போதித்தல் வேண்டும். செய்யுட்களைச் சுவைத்து அறிந்தால்தான் சிறந்த கவிதையை உண்மையாக மதிப்பிட முடியும். இதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டெனத் தோன்றுகிறது. உயர்ந்த தரத்திலுள்ள செய்யுட்களைத் திரும்பத் திரும்பக் கற்றல்தான் அவ்வழி. இவ்வாறு கற்றால் அச் செய்யுட்கள் நமது ஆன்மாவிலேயே ஊறி நின்று மற்றச் செய்யுட்களை ஒப்பிட்டு மதித்தற்குக் கட்டளையாக உதவும். குழந்தைப் பருவத்திலே இப் பயிற்சியைப் பெறுதல், பெரும் பயன் விளைப்பதாகும்.

வால்டேரின் நாடகம்

○

சுத்தானந்த பாரதியார்

உலக இலக்கியங்களில் நாவலும் நாடகமும் நிரம்பியது பிரெஞ்சு இலக்கியம். நாடகத்திற்கென்றே பிரெஞ்சில் சிறந்த பத்திரிகைகள் உண்டு. மோலியர் முதல் ரோஸ் லாந்து வரையில் ஆயிரக்கணக்கான நாடகங்கள் பிரெஞ்சு இலக்கியத்தில் உள்ளன. பெரும்பாலும் சரித்திர சமுதாய நாடகங்களே. இந்த நாடகச் சோலையில் **வால்டேரின்** நாடகங்களுக்குச் சிறப்பான இடம் உண்டு.

பதினெட்டாம் நூற்றூண்டின் பேராசிரியர் **வால்டேர்**, உலகின் சிறந்த புரட்சிப் புலவன்; அவன் பேஞ பதினூறுவயதில் ஆடத் தொடங்கியது. அவன் சொல்லோவியம் இலக்கிய மதிப்புடன் நெஞ்சில் வேகும் உரிமைக்கனலையும்கொண்டு, படிப்பவர் உள்ளத்தில் தீயைப்போல் பற்றும் சக்தியுள்ளது. வால்டேர் தந்தை ஒரு நோட்டரி கத்தோலிகர்; மகனை ஜசூட் பாதிரிமார் பள்ளியில் படிக்கவைத்தார். பையன் பைபிள் படித்தபோதே கிண்டல் புராணத்தில் கிளம்பினன். தனக்கென ஒரு **இளம்புரட்சிக்காரர்** கூட்டத்தையும் சேர்த்தான். இந்தக் கூட்ட நண்பர் பலர், இறுதிமட்டும் அவனுடனிருந்து அவன் எண்ணங்களைப் பரப்பினர். கல்லூரியை விட்டதுமே வால்டேர் தனது லட்சியவாழ்க்கையில் முனைந்தான். தனது நாடு மதவெறியர், மண்வெறியர். பணத்திமிர் பிடித்த பிரபுக்கள், குலாமிகள், ஏழைகளை நசுக்கும் சூழ்ச்சிக்காரர் முதலியவர்களின் கொடுமையால் வருந்துவதைக் கண்டான். கண்டதை நாடகங்களில் புகுத்தித் தனது பேஞப்புரட்சியைத் தொடங்கினன்.

பிரெஞ்சில் **மோலியர்** நகைச்சுவை நாடகம் எழுதினர். **ராஸின்** காளிதாஸநடையில் அரிய இலக்கிய நாடகங்களை எழுதினர். **கொர்நெல்** வீரக்கனல் பொழியும் சரித்திரநாடகங்கள் எழுதினர். **வால்டேர்** அரசியல் புரட்சிக்காகவே உணர்ச்சிபெற்ற நாடகங்கள் எழுதினன். இந்த நாடகங்கள் பணமூட்டைகளின் சினத்தீயைத் தூண்டின; மதப்பித்தரின் எரிச்சலைக்கிளப்பின; மன்னன் கோபாவேசப்புயலை எழுப்பின. வால்டேர் ஷேக்ஸ்பியரின் உன்னதமான நாடகங்களைப்படித்தவன். இங்கிலாந்தில் சுற்றி ஜான்ஸன், போப், ஸ்விப்ட், காங்க்ரேவ், பீடர்பரோ பிரபு போன்ற மேதாவிகளின் நட்புறவைக்கொண்டவன். இந்த உறவால் அவனது நடை மிக நயம் பெற்றது. வேறெந்த பிரெஞ்சாசிரியருக்கும் இல்லாத உரம் பெற்ற நடை வால்டேரின் நடை. அவன் எழுதிய நாடகங்களில் லேபூர்பியே, லாண்டீ கிடோன்,

ஜாயிர், மேரோப், ஒதீப் புருடஸ் முதலியவை முதன்மையானவை. இந்த நாடகங்களில் அவன் அக்காலத்தீமைகளைக்காட்டி சமுதாயம் அடியுடன் மாறி, ஒரு புரட்சி யுண்டாகவேண்டும் என்கிருன். இப்படி அரியநாடகம் எழுதியதன் பலன் என்ன? பணமூட்டைகளையே வால்பிடித்துப்பிழைத்த அடிமைத்தாதரும் காக்காய்பிடிக்கிக்கவிகளும் வால்டேரைக் கண்டபடி தூற்றினர். அரசாங்கம் அவனை நாடுகடத்தியது. பிறகு பஸ்தீல் சிறையில் அடைத்தது. இதுகாறும் வால்டேர் என்ருல் அதிகப்பிரசங்கி, ஆழந்தெரியாமல் காலைவிட்டு விழிக்கும் புரட்சி வெறியன் என்றே நாடு நினைத்தது.

வால்டேர் பஸ்தீல் சிறையில் இருந்து தன்னுடைய நண்பரைத் தூண்டினன். "நண்பர்காள், இந்த பஸ்தீல் சிறை என் உடலைப் பிடித்துவைத்திருக்கிறது. என் உயிரில் துடிக்கும் சுதந்தரக்கனல் பஸ்தீலை உடைத்து, சுயேச்சாதிகாரவெறியைத் தூக்கிலேற்றிக் கட்டுகளை உடைத்தெறிந்து, விடுதலை முழக்கம் செய்கிறது. இந்தக் கனல் உங்கள் உள்ளத்தில் துடிக்கட்டும். நாடகமேடையிலிருந்து இக்கனல் பொது ஜனங்களின் உள்ளத்தில் பற்றச் செய்யுங்கள்" என்று எழுதினன். வால்டேரின் கடிதங்கள் சக்திபெற்ற உரிமைப் பட்டயங்களாகும். சுமார் ஆயிரம் கடிதங்கள் நமக்குக்கிடைக்கின்றன.

நண்பர் கலையை அரங்கேற்றிக் காலப்போக்கை மாற்ற முயன்றனர். **ஒதீபன் (Oedipe)** என்ற நாடகம் அரங்கேறியது 1719-ம் ஆண்டு. ஐரோப்பிய இலக்கியங்களில் ஒதீபன் தனிச்சிறப்புடையது. கிரேக்க நாடகாசிரியர் ஸோபோகிளன் முதலில் ஒதீபன் நாடகம் எழுதி நாட்டில் இலக்கிய மறுமலர்ச்சி யுண்டாக்கினன். சேனகன் அதைப்பின்பற்றி ஒதீபநாடகம் எழுதினன். அவனைவிட **கொர்நெல்** பிரெஞ்சில் உணர்ச்சி ததும்ப ஒதீபன் எழுதினன்; எல்லாம் இலக்கியமதிப்புடையவை. ஆனல் **வால்டேர் எழுதிய ஒதீபன்** தேசியமதிப்புடன் விளங்கியது. **கதை** சாதாரணமே: **லையோ** தேப் நாட்டரசன்; அவன் அரசி **ஜோகாஸ்து**. அவர்களுக்கு ஐந்து மக்கள்; கடைக்குட்டியே **ஒதீபன்**. இந்தப்பிள்ளை அப்பனைக்கொன்று அம்மையைப் பெண்டாளுவான் என்று சோதிடர் சொல்லவே, லையோ பிள்ளையை சிதெரன் மலைமேல் விட்டுவிட்டான். அங்கே இடையர் பிள்ளையை வளர்த்து, கொரிந்து அரசனிடம் கொடுத்தனர். அரசன் ஒதீபனைச் செல்லமாக வளர்க்கிருன். ஆனல் வாலிப ஒதீபனுக்கு அரசமாளிகையின் சுகபோகங்கள் பிடிக்கவில்லை. தன் பெற்ருேர் யார் என்று தேடிச் செல்கிருன். எதிரே ஒரு செல்வன் வருகிருன். அவன் சுகபோகமே வாழ்வு என்கிருன். ஒதீபன் அவனை மறுத்து பொதுநலமே வாழ்வு என்கிருன். வாய்ச்சண்டை கைச்சண்டையாகி, வாலிபன் செல்வனைத் தலைகீழே தூக்கியடித்துக்கொல்லுகிருன். செல்வன் தன் சரித்திரத்தைச் சொல்லி தன்னை லையோ என்று விளக்கவே ஒதீபன் "அப்பா" என்று அவன் மேல் விழுந்து அழுகிருன். மகன்

கண்ணீர் தகப்பன் மார்பில் ஓடுகிறது. ஓதிபன் மனம் வெறுத்துத் துறவிபோல் திரிகிறான். லேயோவுக்குப் பிறகு கிரியோன் தேப் நாட்டை யாளுகிறான். அவன் லேயோ மனைவி ஜோகாஸ்தைப் பிரியமுடன் பாதுகாக்கிறான்.

இக்காலம் அந்நாட்டில் ஸ்பிங்ஸ் (Sphinx) என்ற கேள்விப்பேய் அலைகிறது. அது நரசிங்கம்; உடல் சிங்கம், தலை நரம். அது வழிப்போக்கர்களைக் கேள்வி கேட்கும். சரியானபதிற்சொல்லாவிட்டால் பிடித்துக்கடித்து உண்டுதீர்க்கும். அரசன் கிரியோன் இந்தப் பேயை அடக்குவோருக்கு அரசும் அழகான ஒரு பெண்ணும் தருவதாகப் பறைசாற்றுகிறான். பேயிடம் செல்ல எல்லாரும் அஞ்சுகிறார்கள்.

ஓதிபன் ஒருநாள் அந்த நரசிங்கத்தின் முன் தைரியமாக நிற்கிறான். நரசிங்கம் கேள்வி போடுகிறது: "காலையில் நாலுகால், மதியம் இரண்டுகால், மாலையில் மூன்று கால் உள்ள பிராணி யார் சொல்?''

ஓதிபன்: இது தெரியாதா? மனிதனே. காலையான குழந்தைப்பருவத்தில் கைகால்களால் தவழ்கிறான். இளமையில் இரண்டு காலால் நிமிர்ந்து நடக்கிறான். முதுமையில் கோல்பிடித்து (மூன்றால்) கூனி நடக்கிறான்.

நரசிம்மம் திகைத்து, "ஓதிபா நீ வென்றாய்; நான் தோற்றேன்'' என்று கடலில் விழுந்தது. இதைக் கேட்ட கிரியோன் ஓதிபனுக்கு அரசும் தந்து, ஜோகாஸ்தையும் தருகிறான். அடையாளம் தெரியாமல் ஜோகாஸ்தும் தன் மகனுடன் சல்லாபம் செய்கிறாள். ஒருநாள் அவள் தாய், தான் பிள்ளை என்பது தெரிகிறது. தாய் தற்கொலையாகிறாள்: மகன் ஓதிபன் அரசு செல்வமெல்லாம் பொது ஜனங்களுக்கே தந்து தன் கண்களைப்பிடுங்கியெறிந்து பாதேசியாகிறான்.

இந்த நாடகத்தில் வால்டேர் காலத்திமைகளையெல்லாம் காட்டி யதேச்சாதிகாரத்தின் வெறிகளைக் கண்டித்து அடக்குமுறைகளை மீறிப் பொதுஜனங்கள் உரிமையை நாட்டத் தூண்டுகிறான். சுமார் நாற்பதுதடவை இதை அரங்கேற்றினர் நண்பர்.

இந்த நாடகம் எழுதியவன் யார் யார் என்று ஜனங்கள் வினவினார்கள். அந்தப்பேர்வழி தான் பஸ்திலில் வாடும் வால்டேர் என்று அறிந்ததும், பாரிஸில் பரபரப்பு எழுந்தது. அதைக்கண்ட லூயி சட்டென்று வால்டேரை விடுதலை செய்துவிட்டான் —பயம்!

நண்பர் வால்டேருக்கு விருந்து வைத்தனர். அந்த விடுதலை விருந்தில் பொதுஜனங்கள் அஞ்சும் பஸ்திலைக்கண்டித்து நண்பர் பேசினர். வால்டேர். "பஸ்தில் நாளையே அடிசாய்ந்து மண்ணாகப் போகிறது'' என்றான்.

வால்டேர் சொல் பலித்தது. 14-7-1789-ல், இந்தச் சிறைநரகம் வீரசுதந்தர வெள்ளந்தாக்கி இடிந்து பொடிந்து மண்மேவிப் போனது. இன்று அதைப்படத்திலேதான் காணமுடியும். வால்டேரின் நாடகம், சட்டுரை, கவிதை, கடித இலக்கியங்களே ஆவேசப்படுத்தி கட்டவிழ்த்து முடியரசை முடித்து பிரான்ஸிற்குக் குடியாசளித்தது.

கைதி

o

"நாணல்"

மோட்டருகிலே சிறிய ஜன்னல் அதிலே—ஒளி
மூண்டது மறைந்தது பின்மூண்டசைந்தது
வீட்டும் இருட்சிறையில் வெந்த புழுவாய்—உயிர்
வீறிழந் தொடிந்த கைதிமேல் விழுந்தது.

கையும் உயரவில்லை விலங்கிருந்தது—கைதி
காலும் அசையவில்லை பூட்டிருந்தது
மெய்யும் புரளவில்லை புண்ணிருந்தது—ஆயின்
மேலுயர்ந்து விழிஒளியின் வாசல்கண்டது.

காலை அங்கு பொன்னொளியைத் தூவிஆர்த்தது—உச்சிக்
கதிர்நுழைந்து சிறைஇருளின் ஆழம்பார்த்தது
நீலநிற வானில்ஊர்ந் திருண்டமேகமும்—கைதி
நிலையினைக் கண்டே கவன்று தீ உகுத்தது.

மாலைவந்து பிறையினோடு எட்டிப்பார்த்தது—பின்பு
மாயக்கண் சிமிட்டி வான மீன் நடித்தது
ஓலமிட்டுப் பாய்ந்துசென்ற காற்றின்பிடரியும்—ஜன்னல்
ஓரத்தில் விழுந்துதுள்ளிச் சிலிர்த்துலைந்தது

பல்லியொன்று மேல்விழுந்து பாய்ந்துசென்றது—சிலந்தி
பட்டறையை விட்டவனைப் பார்க்கவந்தது
மெல்லமெல்லத் தேய்ந்துகாலம் கணக்கிறந்தது—அவன்
மேனியும் தளர்ந்துநரை மேவிஓய்ந்தது.

கண்கள்மட்டும் வானிலே நிலைத்து நின்றன — அவன்
கரணம்யாவும் எல்லையற்ற வெளியில் ஆழ்ந்தன
புண்ணிறைந்த உடல் சிறையில் புழுங்கிவீழினும்- அண்டப்
பொய்கையினில் உள்ளம்மட்டும் பூத்தெழுந்தது.

* * *

வெளியிலே சுதந்திரப் பெருமையில் நிமிர்ந்து
வேண்டிய வாறெலாம் திரிந்த
களிநகர் மாந்தர் சாலையை, கடையை,
சாக்கடை விளிம்பினை, விளக்கின்
ஒளிபுகாச் சந்தை ஊளையை, பணத்தின்
உரத்தினைக் கருதியே சென்றார்
தளிர்விடும் இரவின் தாரகை மறைத்துத்
தழைத்த கார் முகிற்புகை காணார்.

ஒருகணப் பொழுதில் அடர்த்தது பெருமழை;
உருமொலி வெடித்தது; ககனத்
திரையினில் ஊழிப் பேயென ஆடித்
திரிந்தது மின்னல்; வெஞ்சிறையின்
இருளிலே கைதி விழியினை உயர்த்தி
இதயத்து விடுதலை கண்டான்;
தெருவிலோ சுதந்திர மாந்தர்தம் காலடிச்
சேற்றிலே கண்ணொடு விரைந்தார்.

வித்வான்களின் அனுபவம்

○

டி. என். ராஜரத்னம்

நாதஸ்வர உலகிலேயே சங்கீதத்தில் சகல வித அந்தஸ்தும் பொருந்தியிருந்தவர் ஸ்ரீமான் திருமருகல், நடேச நாதஸ்வரக்காரர். அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தில் மகா மேதையாக இருந்து வந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மகா சன்னிதானமவர்கள் தமது ஆதீன வித்துவானாக ஸ்ரீ நடேசம்பிள்ளையை நியமித்திருந்தார்கள். அக் காலத்தில் ஆதீனத்தில் வித்துவானாகயிருந்தவர்கள், ஸ்ரீ மஹா வைத்தியனாதையர், திருக்கோடிக்காவல் பிடில் ஸ்ரீ கிருஷ்ணையர், புல்லாங்குழல் ஸ்ரீ சரப சாஸ்திரிகள் முதலிய பல வித்வான்களும் இருந்து வந்தனர். தென்னாட்டில் சங்கீத வித்வ சிரேஷ்டர்சளாலும், தமிழ் வித்துவான்களாலும் புகழப்பட்டு வந்தவர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மகா சன்னிதானமவர்கள் தான். அதே காலத்தில் நாதஸ்வர வித்துவான்களாயிருந்த, செம்மனார்கோவில் ஸ்ரீ ராமசாமிப்பிள்ளை, மன்னார்குடி ஸ்ரீ சின்னபக்கிரி நாதஸ்வரக்காரர் மேதாவிகளாகயிருந்தனர். ஸ்ரீ நடேச நாதஸ்வரக்காரர் என் தாய்மாமன்; நான் அவருக்கு சுவீகார குமாரனுமாவேன். எனது மாமனார் இறக்கும் பொழுது எனக்கு வயது மூன்று. இதனால் அன்னாருடைய வாத்தியத்தைக் கேட்க முடியாமல் போயிற்று. அப்பொழுது இருந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சன்னிதானமவர்கள், திருக்கோடிக்காவல் ஸ்ரீ பிடில், கிருஷ்ணையரவர்களிடம் எனக்கு சிக்ஷை பயில்விக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். எனது எட்டாவது வயதில் கோனேரிராஜபுரம் ஸ்ரீ வைத்தியனாதையர் அவர்களிடமும் சிக்ஷை பயின்றேன். ஒன்பது வயது முதல் பல மேடைகளிலும் வாய்ப்பாட்டுக் கச்சேரிகளும் செய்து வந்தேன். எனது குரு கிருஷ்ணையர் எனது மாமனாரின் வாத்தியத்தைப் பற்றி "நாதம் நிறைந்து, ராகத்தின் ஜீவ சுரங்கள் ததும்ப, அனாயாசமாய் மழை பொழிவதுபோல் திரிஸ்தாயிகளிலும் ஜனங்கள் மெய்மறக்கும் படி ஆற்றல் நிறைந்த கமகங்களுடனும் வாசிப்பார்" என அடிக்கடி என்னிடம் சொல்வதுண்டு. மோன நிலையில் அனுபவிக்கும் இன்பத்தை நாடும்படி மனதைச் செய்யும் நாதஸ்வரம் அதுதான் என்று சொல்லுவார். ஸ்ரீ நடேசநாதஸ்வரக்காரர், ஸ்ரீ மஹாவைத்தியனாதையர், ஸ்ரீ திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர், புல்லாங்குழல் சரப சாஸ்திரிகள் இந் நால்வரும் தென்னாட்டில் நடக்கும் எந்த வைபவங்களுக்கும் சேர்ந்தே வரவழைக்கப்படுவார்களாம். சங்கீதத்தின் பாணியில் இந் நால்வருடைய வழியும் ஒன்றாகவேயிருக்குமாம். அக்காலத்தில் உள்ள பணம் படைத்த பெருச்சாளிகள் மேற்கண்டவர்களுக்கு ஒரு ஞாப

கச் சின்னம்கூட இல்லாமல் செய்து விட்டார்கள். ஆனால் எங்கள் ஆதீன கர்த்தரால் கர்நாடக சங்கீத உலகத்திற்கு எங்களைப் போலுள்ள வித்துவான்களை உண்டாக்கிக் கொடுக்க முடிந்தது. சின்னப் பக்கிரி நாதஸ்வரக்காரர் வாத்தியம் நன்றாகக் கேட்டிருக்கிறேன். நல்ல சாதகம், முயற்சி, வேகமான பிர்க்காக்கள், இடைவிடா உழைப்பு முதலியன அன்னார் வாத்தியத்தில் விளங்கும். ஆனால் ராகங்களின் ஜீவ சுரங்களான, மெய்மறக்கும் படியான, கமகங்களை எதிர்பார்க்க முடியாது. ஆனால் எல்லோரும் மதிப்புக் கொடுக்கக் கூடிய வாத்தியந்தான். செம்மனார் கோவில் ஸ்ரீ இராமசாமிப் பிள்ளையவர்களோடு நான் பல தடவை வாசித்திருக்கிறேன். அப்போது எனக்கு வயது பதிமூன்று. அவர் இராகங்களை சுருக்கமாகவே வாசிப்பார். அதுவும் அழகாயிருக்கும். அவர் அக்காலத்தில் பல்லவி ராமஸ்வாமி பிள்ளை யென்று பெயர் வாங்கியவர். மதுரை ஸ்ரீ பொன்னுசாமி பிள்ளை சங்கீதத்தில் நல்ல ஆராய்ச்சி யுள்ளவர். பலவித கற்பனைகளையும், மெய் சிலிர்க்கும்படியான அரிய வேலைப்பாடுகளையும் அவரிடம் காணமுடியாது. ஆனால் அவருடைய நாதஸ்வர கானம் ஸ்ருதி சுத்தத்துடன் கூடியதாகவே யிருக்கும். அவர் "பூர்வீக சங்கீத உண்மை" என்னும் புத்தகத்தை 1930-ம் வருடம் வெளியிட்டிருக்கிறார். எனது குழந்தைப் பருவத்திலிருந்து நாதஸ்வரத்தை நாபிக்கமலத்திலிருந்து வரும் பிர்க்காக்களையும், கமகங்களையும் கொண்ட சாதகங்களை பயிற்சி செய்து கொண்டு வருகிறேன். எவ்வளவு அபாரமான சங்கதிகளை வாசித்தாலும் ஸ்ருதி சுத்தமாகக் கையாளவே முயல்கிறேன்.

நாதஸ்வர வாத்தியத்திற்கு வாய்ப் பாட்டு ஞானம் ரொம்பவும் அவசியம். சங்கீதத்தில் எல்லாம் கஷ்டந்தான். இருந்தாலும் நாதஸ்வரத்தைப் போல் கஷ்டம் பாக்கி எதுவுமல்ல. கர்நாடக சங்கீதம் கெட்டுப்போகாமலிருப்பதற்கு காரணம் நாதஸ்வரமேதான். என் வாழ்நாள் பூராவும் இன்னும் நாதஸ்வரத்தில் எப்படி, எப்படி வாசிக்கலாம் என்னும் உண்மையை என் மனதிற்கு திருப்திகரமாயும், தெளிவாகவும், லோகோபகாரமாகவும் இருப்பதற்கு பாடுபட முயல்கிறேன். ராகங்களை வந்தது வாராமல் வர்ஜா வர்ஜிய கிரமங்களோடு துரித காலமாகவும் அலை அலையாகவும் வாசிக்கவே யாவரும் முயல வேண்டும். சிலர் தெரியாமல் இது நாதஸ்வர வழி, இது வாய்ப்பாட்டு வழியென்று சொல்லித்திரிகின்றனர். எந்தப் பாட்டும், எந்த வாத்தியமும் நாதஸ்வர வழியிலில்லாமல் வேறு வழியிலில்லை. வேறு வழி உண்டென்று கூறினால் அது வீட்டிற்குள் இருக்கும் வழிதான். கச்சேரி செய்யும் வித்வான்கள் பாடும்பொழுது யார் வழி, யாரை நினைத்துக் கொண்டு அவர்கள் பாடுகிறார்கள் என்று பிரமாணரூபத்துடன் கேட்டால் பதில் சொல்லுவார்கள். தற்காலத்தில் நாதஸ்வரக் கலை மாணவர்களிடையே குன்றியிருப்பதற்குக் காரணம் அஸ்திவார பலமில்லாத சிக்ஷையும், அகார சாதகமில்லாத வாழ்க்கையும் அக்கிரமத்திலடங்கிய சினிமாப் பாட்டுக்களும், மகுடி

கோயமுத்தூரில்

★ நவ நாகரீக
ஜவுளி தினுசுகள்

ரெடிமேட் உடைகள்

வாங்குவதற்கு சிறந்த இடம்

கீதா ஸ்டோர்ஸ் லிட்.,

அவனுசி ரோடு :: கோயமுத்தூர்

நவீன கைத்தறி ஆடைகள்

★

மொத்தமாகவும்
சில்லரையிலும்
கிடைக்குமிடம்

★

ராஜாஜி வேர் ஹவுஸ்

ராஜ வீதி :: கோயமுத்தூர்

மிட்டாய்!

உங்கள் குழந்தைகளுக்கு மிட்டாய் பிடிக்கிறது. மிட்டாய்க்காக உங்களுடன் வம்பு செய்கிறது. மிட்டாய் உடம்புக்குக் கேடு செய்தாலும் குழந்தையிடம் உள்ள வாஞ்சையால் மிட்டாய் வாங்கிக் கொடுக்கிறீர்கள். மிட்டாய் கேட்டு வம்பு செய்யும் குழந்தைக்கு 'அணில்' வாங்கிக் கொடுங்கள். வம்பு நின்றுவிடும். வாரத்தில் ஓரணுதான் செலவாகும்.

அறிவு, குழந்தைப் பருவத்தில்தான் வளர்வதற்காகத் துடிக்கும். வளர்வதற்குத் துடிக்கும் அறிவை 'அணில்' வளர்க்கும்.

அணில், பத்திரிகைக் கடைகளில் கிடைக்கும். அப்படிக் கிடைக்காவிட்டால் ரூபாய் மூன்று, சக்தி காரியாலயம், சென்னை **14.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

களும் உண்டானதுதான் காரணம். ஆனால் இனி முன்னுக்கு வரும் யுவர்கள் ஆபாசமான பாட்டுக் களையோ, மகுடியையோ கையாள மாட்டார்கள். அப்படிப் பட்டவர் களை உண்மையான சங்கீத உலகம் விரும்பாது என்பதை அவர்கள் அறிந்ததே. ஸ்ரீமதி வீணை தனம் மாள் அவர்களை அடிக்கடி திருவா வடுதுறைக்கு அழைத்து என தில்லத்தில் அவர்களின் வீணையை வாசிக்கச் சொல்லி நான் நாதஸ் வரத்தைவாசித்துக் கொண்டு அவர் களிடமிருந்து வருகிற அபரி மித மான ஜார் கமகங்களையும், பிடிகளை யும், நான் கிரகித்துக் கொண்டு நாதஸ்வரத்தில் வாசித்துக் கொள் வேன். ஸ்ரீ தனம்மாள் என்னிடம் சொல்லுவார்கள்: "தம்பி, ஒரு அரை மணி நேரம் வர்ண ஜாலங்கள் நிறைந்த வான வீதியிலிருந்து நக்ஷ திரங்களாலான பிர்க்காக்களை நீங் கள் கொட்டுகிறீர்களே! என் வாத் தியத்திலிருந்து நீங்கள் என்ன எதிர் பார்க்கப்போகிறீர்கள்?" நான்கோப மூண்டு "உங்களுடைய வழிகளைக் கேட்டு வாசிக்க எனக்கு ஞான மில்லை யென்பது தானே உங்கள பிப்பிராயம்" என்று கேட்பேன். பிறகு சமாதானம் சொல்லி அவர் களை வாசிப்பார்கள். சுருங்கச் சொன்னால் எனது கடைசியான குரு ஸ்ரீமதி வீணை தனம்மாள் அவர்கள்தான். தற்காலத்தில் நாதஸ்வரங்கள் ஜோடி ஜோடியாக வாசிப்பதும், தவுல்காரர்கள் ஜோடி யாக வாசிப்பதும், ரசிகர்களை பாலை வனத்தில் கொண்டுபோய் விடுகின்றது. தவுல்காரர்கள் எப்பொழுதும் ஒரே நாதஸ் வரக்காரரிடத்தில் இருந்து வாசித் தால் தான். ஒட்டுதலாக வாசிக்க முடியும். ஸ்பெஷல் தவுல் என்று சொல்லி ஒரு மட்டமான வழியை பின்பற்றி பல நாதஸ்வரக் காரரிட மும் போவது என்றால் அது தவுல் வாசிப்பதையே தொழிலாகக் கொண்டவர்களுக்கு கெடுதியே. இனி கச்சேரிக்குப்போகும் நாதஸ் வர வித்துவான்கள் அவரவர் களிடமிருந்து ஒத்திகையாக வாசிக் கும் தவுல்காரர்களையே அழைத் துப் போகவேண்டும். முன்பின் னறியாத பக்க வாத்தியக் காரர்களு டன் வாசிப்பதோ, பாடுவதோ கூடாது. ரேடியோவில் பாடும் வித்துவான்கள் அநேகமாக ஸ்ருதி யில் சேராமலிருப்பது என்ன வென்பதை கவனிக்கக்கூடவில்லை. ரேடியோவுக்குப் போய்விட்டால் மட்டிலும் புகழடைந்துவிட முடி யாது. சில பாட்டுக்காரர்கள் கீர்த் தனைகளில் வருகிற அநுபல்லவி, சரணம் இவைகளை சுரப்படுத்திக் கொண்டு ராகத்தை ஜீவசுரத்துடன் பாடுவதாகவும் நினைத்துக் கொண்டு செக்குபோல் சுற்றிச் சுற்றி வரு கின்றனர். இதை விட்டொழித்து பூரண ஞானத்துடன் பாட முயல வேண்டும். மற்றும் பலர் ஸ்ருதி பேதம் செய்து பாடுவதும், வாசிப்பதும் வெறும் கேலிக் கூத்தே. ஒரு ராகத்தை ஸ்ருதி பேதம் செய்தால் வேறு ராக மாக மாறுவதை சபையோர் பார்க் கிறார்கள். மற்றொருவரிடம், "என்னப்பா ராகம் மாறுகிறதே என்கிறார்." அல்லது "சார் இப்போது ஸ்ருதி பேதம் செய் கிறார்" என்பார். நமக்கு ஆராய்ச்சியில்லாத சாதாரண இசை ராகங்களையே விச்ராந்தியாகப் பாடவோ, வாசிக்கவோ நேர மில்லாதிருக்கும் பொழுது ஸ்ருதி

பேதம் செய்ய ஏன் கற்பனை செல்கிறதோ, தெரியவில்லை. ஆதியில் நம் நாட்டிலிருந்த கண்ணியமான சங்கீதத்தைக் காணோம். காலஞ்சென்ற ஸ்ரீ வெங்கடமஹி ஆதியில் 32 கர்த்தாவென்றிருந்த ராகங்களை பலவித அபசுரக் களஞ்சியங்களைச் சேர்த்து 72 கர்த்தா என்று கூறி வித்வான்களுக்கும், மாணவர்களுக்கும் குழப்பத்தையும், பூசல்களையும் விளைவித்தார். ஸ்ரீ வெங்கடமஹி வீணை முதலிய வாத்யங்களிலிருந்து சதுர்ச்ருதி ரிஷபஸ்தானத்தில் சுத்த காந்தாரமென்றும் சாதாரண காந்தார ஸ்தானத்தில் ஷட்சுருதி ரிஷபமென்றும், சதுர்ச்ருதி தைவத ஸ்தானத்தில் சுத்த நிஷாதமென்றும், கைசகி நிஷாத ஸ்தானத்தில் ஷட்சுருதி தைவதமென்றும் கூறி, சுத்த காந்தாரம், ஷட்சுருதி ரிஷபம், சுத்த நிஷாதம், ஷட்சுருதி தைவதம் ஆகிய இந்நான்கு பெயர்களை கற்பித்து 72 என்று புரட்டு செய்திருந்ததை ஸ்ரீ நாதஸ்வரம் பொன்னுசாமி பிள்ளை முதலிய வித்வான்களும், நானும் 32 தான் கர்த்தா ராகங்கள் என்று கண்டு தெளிவுற்றோம். இந்தியாவில் அதிலும் தென்னாட்டில் நாதமயமாய் கலப்படமில்லாத கர்நாடக சங்கீதம் மக்களிடையே தழைத்தோங்க வேண்டும். உரிய பயன் அறம், பொருள், இன்பம், வீடு என நான்காகும். அக நெறியும், புறநெறியும் சங்கீதக் கலையனுபவ மறிந்த சங்கீத ஞானிகளுக்கே விளங்கும். நாதத்தினால் ஸ்ருதியும், ஸ்ருதியினால் ஷட்ஜமம் முதலிய சுரங்களும், அப்படிப்பட்ட சுரங்களால் ராகங்களும், ராகத்தால் கீதமும், கீத வாத்தியங்களும், நாதத்துடனும், சுரத்துடனும் உற்பத்தி யாவதால் நாதசுரமென்று, உலகில் கோவில் உண்டான நாள்முதல் நாதஸ்வரமிருந்து கலையை வளர்த்து வருகிறது. தற்போது திருவாவடுதுறையில் அமைந்து இருக்கும் 20-வது பட்டமாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மகா சந்நிதானம் சங்கீதத்திற்கும், தமிழிற்கும் அளவு கடந்த செல்வத்தைச் செலவிட்டு என் கடன் பணி செய்து கிடப்பதே என்னும் முதுமொழிப்படி கலையை விருத்தி செய்து வருகின்றார்கள்.

வல்லான் வகுத்ததே வாய்க்கால்

○

வெ. சாமிநாத சர்மா

முஸோலினி, அபிஸீனியாவை ஆக்கிரமித்துக் கொண்டான். ஹிட்லர், செக்கோஸ்லோவேகியாவைக் கைப்பற்றிக் கொண்டான். சீனாவை, 'முழங்கால் முறிய அடிக்க' வேண்டுமென்று முனைந்து நின்றது ஜப்பான். என்ன அநியாயம் என்று அப்பொழுது திகைத்து நின்றவர் நம்மிலே பலர். ஏனென்றால், நம்முடைய நாகரிகத்திற்கு, நம்முடைய பரம்பரைக்கு இந்த ஆக்கிரமிப்புச் செயல்கள் முற்றிலும் முரண்பட்டவை. இந்தியா எப்பொழுதுமே அறிவுக்காக அன்பைத் துறந்து விடவில்லை; அதிகார பலத்தைக் கொண்டு தன்னலத்தைப் பெருக்கிக் கொள்ளவில்லை. தனது உரிமையை எப்படிப் புனிதமாக போற்றியதோ அப்படியே பிறருடைய உரிமைக்கும் மதிப்புக் கொடுத்தது. இந்த மதிப்புக் கொடுக்குந் தன்மையை இடைக்காலத்தில் சிறிது அதிகமாக, அளவுக்கு மீறி வளர்த்துக் கொண்டு விட்டதனால் பிறருக்கு ஆட்படும்படியாக நேரிட்டது. ஆனால் அது வேறு கதை. இந்தியாவின் லட்சியம் என்னவாயிருக்கிறதென்பதையே நாம் இங்கு கவனிக்க வேண்டும். அந்த லட்சியந்தான், தன்னைப்போல் பிறரைக் கருதவேண்டுமென்பது. இன்றைய சுதந்திர இந்தியாவும் இந்த லட்சியத்தைப் பிரதானமாகக் கொண்டே அந்நிய நாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த லட்சியத்தைக் கைவிடாத வரையில் இந்தியாவுக்கு அழிவே கிடையாது.

ஆனால் இந்த லட்சியத்தைக் கடைப்பிடிப்பது மிகவும் கடினம். இதற்கு முதற் படியாக நமது நோக்குநிலை சரியானபடி அமைதல் வேண்டும். ஆசையை அடக்கியாண்டால் தான் இந்த நோக்குநிலை சரியாக அமைதல் சாத்தியம். ஆசையை, அதிலும் முதலாவதான மண்ணாசையை அடக்கியாள்வதென்பது லேசான காரியமா? சிரமந்தான். ஆனால் அப்படி அடக்கியாளாதவர்கள் அதற்கு அடிமைப் பட்டுக் கடைசியில் அதனாலேயே அழிக்கப் பட்டும் விடுகிறார்கள். இவர்கள் நிகழ் காலத்தில் கிடைக்கிற அற்ப சொற்பமான நன்மையைத்தான் பெரிதாகக் கருதுகிறார்களே தவிர, நிரந்தர வாழ்வைக் கருதுவதில்லை. தங்களுக்குத் தற்காலிகமாகக் கிடைத்திருக்கும் ஆயுத சக்தியும் அதிகார சக்தியும் நீடித்திருக்கக் கூடியனவல்ல, ஒரு சில தலைமுறைகளுக்குள்ளேயே மறைந்து போகக்கூடியன என்பதை அறிவதில்லை. அதற்கு மாறாக, இவ்விரண்டுக்கும் எல்லையே கிடையாதென்று நினைக்கிறார்கள். இந்த இரண்டு சக்திகளாகிய இரண்டு கண்களினாலேயே நீதி, சீலம், வீரம் முதலியவற்றைப்

பார்க்கிறார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்பதே இவர்களுடைய நியதியா யிருக்கிறது.

உலக சரித்திரத்தைப் புரட்டினோமானால், இந்த நியதியைக் கடைப்பிடித்த ஏகாதிபத்தியங்கள் அனைத்தும் அழிந்து பட்டதைக் காண்கிறோம். கிரேக்க ஏகாதிபத்தியத்தை எடுத்துக் கொள்வோம். கிரேக்க நாகரிகம் உலகத்திற்கு, முக்கியமாக மேலை நாட்டிற்கு எத்தனையோ விதமான நன்கொடைகளை அளித்திருக்கிறது. இதன் பொருட்டு இன்றளவும் மேலை நாடு அதற்கு நன்றி செலுத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் கிரேக்க ஏகாதிபத்தியம் எத்தனை ராஜ்யங்களின் உரிமையைப் பறிமுதல் செய்திருக்கிறது? எத்தனை பேரை துக்கக் கண்ணீர் விடச் செய்திருக்கிறது? இந்தத் துக்கக் கண்ணீரிலேதான் அதன் ஏகாதிபத்திய வாழ்வு கரைந்து போய்விட்டது. இப்படிக் கரைந்து போவதற்குக் காரணமா யிருந்த ஒரு சம்பவத்தை, எத்தனையோ சம்பவங்களில் ஒன்றை, சுதந்திரமா யிருந்த ஒரு சிறு ராஜ்யம் அநியாயமாக அழிக்கப் பட்டதை இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம். இதைப் பார்த்த பிறகு, முஸோலினி, ஹிட்லர் முதலியோரின் ஆக்கிரமிப்புச் செயல்கள் புதியனவல்ல என்பது புலனாகும்.

மத்தியதரைக் கடலின் கீழ்க் கோடியில், அதாவது கிரீஸுக்குத் தென் கிழக்கில், மெலோஸ் என்ற ஒரு சிறு தீவு இருக்கிறது. கிரேக்க நாகரிகத்திற்கு முந்தியிருந்த நாகரிகம் இங்கே தான் பிறந்த தென்று சொல்வார்கள். இரும்பு கண்டுபிடிக்கப் படாத காலத்தில் இந்தத் தீவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கறுப்புக் கண்ணாடி போன்ற ஒரு வகைக் கல்லிலிருந்து தான் எகிப்தில் கத்தி, ஈட்டி முதலியவை தயாரிக்கப் பெற்றன என்று தெரிகிறது. கி. மு. ஐந்தாவது நூற்றாண்டின் இடைக் காலத்தில், ஏறக்குறைய இரண்டாயிரத்து நானூறு வருஷங்களுக்கு முந்தி, இந்தத் தீவு, பொருள்வளம் நிறைந்து, புராதனப் பெருமையுடன் கூடிய ஒரு சுதந்திர ராஜ்யமாக இருந்தது.

இந்தக் காலத்தில், அதாவது மேற்சொன்ன கி. மு. ஐந்தாவது நூற்றாண்டின் இடைக் காலத்தில், கிரீஸின் சக்தி வாய்ந்த ராஜ்யங்களாகிய ஆத்தென்ஸுக்கும் ஸ்பார்ட்டாவுக்கும் மகத்தானதொரு யுத்தம் மூண்டது. கி.மு. 431-ம் வருஷத்திலிருந்து 404-ம் வருஷம்வரை இருபத்தேழு வருஷ காலம் நடைபெற்ற இந்தப் போருக்கு 'பெலொப்பொனேசியப் போர்' என்று பெயர். கிரீஸிலுள்ள மற்ற ராஜ்யங்களில் சில ஆத்தென்ஸ் கட்சியிலும், சில ஸ்பார்ட்டா கட்சியிலும் சேர்ந்து கொண்டன. மேற் சொன்ன மெலோஸ் ராஜ்யம், எந்தக் கட்சியிலும் சேராமல் ஒதுங்கி யிருந்தது. ஆத்தென்ஸுக்கு இது பிடிக்கவில்லை. தன் கட்சியில் சேர்ந்து தனக்கு ஆதீனப்பட்டிருக்குமாறு இதனைக் கேட்டது. ஆனால் இது—மெலோஸ்—மறுத்துவிட்டது. என்ன தைரியம்! ஏகாதிபத்திய ஆத்தென்ஸ்

பாப்பாலால் & கோ.,

ராட்டன் பஜார்,
சென்னை 3.
போன்: 2696

1910-ல் நிறுவப்பட்டது.

நவரத்தின வியாபாரிகள், சிறந்த கல் நகைகள் சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளி சாமான்கள்

தயாரிப்பவர்கள்

•

அழகு நிறைந்த ஆபரணங்களைச் செய்வதற்கு நுண்ணிய அறிவும், சிரத்தை மிகுந்த கைவேலைத் திறனும் இன்றியமையாதவை.

பாப்பாலாலின் வைர நகைகளும், தங்க நகைகளும், சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளி சாமான்களும், மேலே கண்டதுபோல் சிரத்தையுடன் நிர்மாணிக்கப்படுகின்றன. இவற்றின் உண்மையை நிதர்சனமாகக் காணலாம். இவற்றைத் தாங்கள் தாராளமாகப் பார்வையிடலாம். வாங்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை.

எங்களுடைய ஷோ ரூம்களுக்கு விஜயம் செய்யும்படி உங்களை அழைக்கிறோம்.

இந்த சந்தர்ப்பத்தில் எமது சந்தோஷமான பொங்கல் நல் வாழ்த்துக்களையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பட்டு

என்றால் மிருதுவாயுள்ளது

அது மைசூர் பட்டானால் ச்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு, மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகானதாகும்.

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு   கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK 11 TM

(ESTD: 1907)

எமது

பொங்கல்

வாழ்த்துக்கள்

★

தி இந்தியன் பாங்க் லிட்.,

தலைமை ஆபீஸ்: இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்.
நார்த் பீச் ரோடு... மதராஸ்.

N.P.B.

இதைச் சகிக்குமா? மெலோஸ் மீது பாய்ந்தது, சுமார் மூவாயிரத் தைந்நூறு பேர் கொண்ட ஒரு படையுடன்.

படைத் தலைவர்களாகச் சென்ற வர் இருவர். இவர்கள், படையைத் தீவின் ஒரு பகுதியில் இறக்கி நிறுத்திக் கொண்டு, யுத்த நடவடிக்கைகள் துவங்குவதற்கு முன்னர், பணிந்து போய்விடுமாறு மெலோஸ் அரசாங்கத்திற்கு ஒரு தூதுகோஷ்டியை அனுப்பினர். இந்தத் தூது கோஷ்டியினரை மெலோஸ் அரசாங்க அதிகாரிகள், முறைப்படி ஜனசபை முன்னர் கொண்டுவந்து நிறுத்தாமல், தாங்களே இவர்களுடன் சமாசம் பேச ஆரம்பித்தனர். ஆத்தீனியத் தூதர்களுக்கு இது வருத்தந்தான். ஆயினும் படைத் தலைவர்களின் விருப்பத்தை அனுசரித்து, மெலோஸ் அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் தொடங்கினர். இரு சார்பினருக்கும் நடைபெற்ற சம்பாஷணையை நேரில் கேட்டது போல் வருணித்திருக்கிறுன், பிரபல கிரேக்க சரித்திராசிரியனுன துஸிடிபிஸ். சம்பாஷணையின் சாரத்தைக் கவனிப்போம்.

ஆத்தென்ஸ் பிரதிநிதிகள்: ஜனசபை முன்னர் எங்களைப் பேச வைத்தால், அழகாகவும் ஆதாரங்களுடனும் பேசிவிடுவோம். எங்கள் பேச்சில் ஜனசபை மயங்கிப் போய்விடும். பிறகு எதிர் வாதஞ் செய்ய முடியாது என்பதற்காகத் தானே உங்கள் முன்னிலையில் எங்களைப் பேச வைத்திருக்கிறீர்கள்? நிரம்ப சரி. அப்படியானுல் நீங்களும், எங்களிடமிருந்து எதிர் பார்ப்பதைப் போலவே நடந்து கொள்ள வேண்டும். நீங்களும் நீண்ட பிரசங்கங்கள் செய்யக் கூடாது. நாங்கள் கூறுவதில் எதை எதை நீங்கள் ஆட்சேபிக்கிறீர்களோ அதை அதை மட்டும் ஒவ்வொன்ருக எடுத்துக் கொண்டு பரிசீலனை செய்வோம். சம்மதந்தானே உங்களுக்கு இந்த ஏற்பாடு?

மெலோஸ் பிரதிநிதிகள்: நாமிருதரப்பினரும் நமது கட்சி நியாயங்களை ஒருவருக்கொருவர் எடுத்துச் சொல்லிக் கொள்ள வேண்டுமென்று நீங்கள் கூறுவதில் எங்களுக்கு ஆட்சேபமே இல்லை. ஆனுல் நீங்கள் கூறுவதற்கு நேர்முரணுயிருக்கிறதே, நீங்கள் யுத்த முஸ்தீப்புகளுடன் வந்திருப்பது? உங்கள் கட்சியைப்பற்றி நீங்களே தீர்ப்புச் சொல்ல வந்திருப்பதுபோலல்லவோ இருக்கிறது? ஒன்று, உங்களுடைய கட்சியில் நியாயமிருக்கிறதென்று நீங்கள் நிரூபித்துக் காட்டினுல், உங்களுக்கு நாங்கள் அடிமைகளாக வேண்டும்; அல்லது எங்களுடைய கட்சியில் நியாயமிருக்கிறதென்று நாங்கள் நிரூபித்துக் காட்டினுல் எங்கள்மீது யுத்தம் தொடுப்பீர்கள்; இதுதானே நீங்கள் யுத்த ஏற்பாடுகளுடன் வந்திருப்பதன் அர்த்தம்?

ஆ. பி: உள்ள நிலைமையை வைத்துக் கொண்டு பேச வேண்டும்; உங்கள் ராஜ்யத்தின் க்ஷேமத்தைக் கருத வேண்டும். இவைகளை விடுத்து, எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதைப் பற்றி ஊகமாகப் பேசிக்கொண்டிருப்பதானுல் நாங்கள் சம்பாஷணையை நிறுத்திக் கொண்டு திரும்பிப் போய்விடுகிறேம்.

மெ. பி: எங்களைப்போன்ற நிலைமையிலுள்ளவர்கள், சமரசமாகப் போக வேண்டுமென்பதற்காக, பல வழியில் எண்ணுவதும் பேசுவதும் சகஜமேயாம். ஆனால் நீங்கள் கூறுவதுபோல் நாங்கள் எங்கள் ராஜ்யத்தின் க்ஷேமத்தைக் கருத வேண்டியவர்களா யிருக்கிறபடியால், உங்கள் நோக்கப்படியே வாதம் நடக்கட்டும்.

ஆ. பி: அப்படியானால் சரி. முதலில் ஸ்பஷ்டமாகச் சொல்லி விடுகிறோம். பாரசீகர்களை நாங்கள் வெற்றி கொண்டுவிட்டோம், அதனால் நாங்கள் ஏகாதிபத்யத்திற்குத் தகுதியுடையவர்கள் என்றோ, அல்லது நீங்கள் எங்களுக்குத் தவறு இழைத்திருக்கிறீர்கள், ஆகவே நாங்கள் உங்கள்மீது படையெடுத்திருக்கிறோம் என்றோ, இப்படியெல்லாம் நாங்கள் பசப்பிப்பேசத் தயாராயில்லை. இவைபற்றி நாங்கள் எவ்வளவு நேரம் பேசினாலும், எவ்வளவு அழகாகப் பேசினாலும் நீங்கள் நம்பப்போவதில்லை. அப்படியே நீங்களும், 'நாங்கள் ஸ்பார்ட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாயினும், ஸ்பார்ட்டா கட்சியில் சேரவில்லை, ஆத்தீனியர்களாகிய உங்களுக்கு எவ்வித தீங்கும் இழைக்கவில்லை' என்று இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம். இருதரப்பிலும் மனம்விட்டுப் பேசுவோம். அனுஷ்டான சாத்தியமான ஒரு முடிவுக்கு வருவோம். சம பலமுள்ள இரண்டு கட்சியினருக்குள்ளேதான் நீதி, நியாயம் எல்லாம். பலமுள்ளவர்கள், தங்கள் விருப்பப்படி எதையும் செய்தல் கூடும், பலமற்றவர்கள் பணிந்துதான் போக வேண்டும் என்பதை உலக அனுபவமுள்ள நீங்களும் அறிவீர்கள்; நாங்களும் அறிவோம்.

மெ பி: நீதியைப் புறக்கணித்துவிட்டு, சுயநலம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு நீங்கள் பேசுகிறீர்கள். சரி, அப்படியே, அதே நிலையிலிருந்தே நாங்களும் பேசுகிறோம். எல்லோருக்கும் நன்மை பயப்பதான ஒரு பொது நியதியை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறோம். அந்த நியதி என்னவென்றால், ஆபத்திலே அகப்பட்டுக் கொண்டவர்களை நியாயமாகவும் நேர்மையுடனும் நடத்த வேண்டும். அவர்கள் இணங்கிப் போகக்கூடிய முறையில் பேசினால், அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடாத சாதகங்களையும் கிடைக்கச் செய்ய வேண்டும். இந்த நியதியை அனுசரித்து நீங்கள் நடப்பீர்களாயின், உங்களுக்கும் நல்லது; எல்லோருக்கும் நல்லது. ஏனென்றால், நீங்கள் விழுந்துபடுவீர்களாயின், அதாவது உங்கள் ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடையுமாயின், அப்பொழுது உங்களுக்கு மகத்தானதொரு தண்டனை கிடைக்கும். அஃது உலகத்திற்கு ஒரு பாடமாகவும் இருக்கும்.

ஆ. பி: எங்களுடைய ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடையும்படி நேரிடின், அதற்காக நாங்கள் பயப்படவில்லை. ஸ்பார்ட்டா எங்களுக்கு நேரான சத்துருவாயிருந்தபோதிலும், அதையோ அதைப்போன்ற மற்றோர் ஏகாதிபத்தியத்தையோ நாங்கள் பெரிய ஆபத்தாகக் கருதவில்லை. ஆபத்தெல்லாம் ஆட்பட்டிருக்கும் ஜனங்

களிடத்திலிருந்துதான். இவர்கள், தாங்களாகவே ஆள்வோரைத் தாக்கி வெற்றி பெறல் கூடும். ஆனால் இந்த ஆபத்தை யெல்லாம் சமாளிப்பது உங்கள் பொறுப்பு. இப்பொழுது நாங்கள் இங்கே வந்திருப்பது, எங்களுடைய ஏகாதிபத்தியத்தின் நலத்தை முன்னிட்டுத்தான் என்பதை பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கிறோம்; அதே சமயத்தில் எங்கள் ராஜ்யத்தின் க்ஷேமத்திலும் அக்கரையுடையவர்களாயிருக்கிறோம். எங்களுடைய பிரஜைகளாகி விடுங்கள்; உங்களுக்கு எவ்விதத் தொந்தரவும் இராது. எங்களுடைய நன்மைக்காகவும், உங்களுடைய நன்மைக்காகவும் உங்களைக் காப்பாற்றிக் கொடுக்கிறோம்.

மெ. பி: நீங்கள் எங்களுக்கு எஜமானர்களாயிருந்து ஆள்வது உங்களுக்கு நன்மையாயிருக்கலாம். ஆனால் உங்களுக்கு நாங்கள் அடிமைப்பட்டு வாழ்வது எங்களுக்கு எப்படி நன்மையாயிருக்கும்?

ஆ. பி: பெருந் துன்பங்களை அனுபவிப்பதற்கு முந்தியே பணிந்து போய்விடுவது உங்களுக்குச் சாதகம். எங்களுக்கும் உங்களை அழிக்காமலிருப்பது லாபம்.

மெ. பி: இந்த (பெலொப்பொனேசிய) யுத்தத்தில் எந்தக் கட்சியிலும் சேராமல் ஒதுங்கியிருந்து கொள்கிறோம்; அதே சமயத்தில், உங்களுடைய சத்துருக்களாயிருப்பதற்குப் பதிலாக உங்களுடைய சிநேகிதர்களாயிருக்கிறோம். இந்தமாதிரியான ஓர் ஏற்பாட்டிற்கு நீங்கள் ஒப்புக் கொள்ளமாட்டீர்களா?

ஆ. பி: முடியாது. உங்களுடைய நட்பைக் காட்டிலும் உங்களுடைய பகைமையினால் எங்களுக்கு அதிக பாதகம் ஏற்படாது. உங்களுடன் நட்புக் கொள்வது எங்களுடைய பலவீனத்தை எடுத்துக் காட்டுவதாகுமென்றும், அப்படியே உங்களுடன் பகைமை கொள்வது எங்களுடைய பலத்தை எடுத்துக் காட்டுவதாகுமென்றும் எங்களுக்கு ஆட்பட்டிருக்கிறவர்கள் கருதுவார்கள்.

மெ. பி: உங்களுக்கு ஆட்பட்டிருக்கிறவர்கள் இப்படித்தானா கருதுவார்கள்? உங்களுடன் எவ்வித சம்பந்தமும் கொள்ளாத ராஜ்யத்தினரென்றும், உங்களுடைய செல்வாக்குக்குட்பட்டிருக்கும்குடியேற்ற நாடுகளின் ஜனங்களென்றும் வித்தியாசப்படுத்திப் பார்க்க மாட்டார்களா?

ஆ. பி: ஒரு நாட்டுக்குள்ள உரிமை மற்றொரு நாட்டுக்கும் உண்டு என்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் ஒரு நாடு உரிமையுடன் இருக்கிறதென்று சொன்னால் அது வலுவுடையதாயிருக்கிற காரணத்தினால்தானென்றும், அதனாலேயே அதனைத் தாக்க நாங்கள் பயப்படுகிறோமென்றும் கருதுகிறார்கள். மற்றும், உங்களை அடிமைப்படுத்துவதனால், எங்களுடைய ஏகாதிபத்தியம் விசாலமடைவது ஒரு புறமிருக்க, எங்களுக்குப் பாதுகாப்பும் ஏற்படும். தவிர, நீங்கள் ஒரு தீவினர்; மற்றவர்களைக்காட்டிலும் பலங்குறைந்தவர்கள்; இதனால், கடலாதிக்கம் பெற்றுள்ள எங்களுக்கு ஆட்பட்டவர்களாகவே இருக்க வேண்டும்.

மெ. பி: நாங்கள் நடுநிலைமையுடன் இருப்பதால் உங்களுடைய பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படுமா என்ற நியாயத்தை விடுத்து, உங்களுடையநலத்திற்கு நாங்கள் பணிய வேண்டுமென்று நீங்கள் கூறுவதால், நாங்களும் எங்களுடைய நலத்தை எடுத்துச் சொல்லி உங்களுடைய மனதை மாற்ற விரும்புகிறோம். எங்களை இப்பொழுது தாக்கி ஆட்கொள்வீர்களானால், நடுநிலைமையுடனிருக்கும் மற்ற ராஜ்யங்களையும் விரோதித்துக் கொண்டவர் களாவீர்களல்லவா? தாங்களும் இப்படி ஒரு நாள் தாக்கப்படலாமென்று அவை யோசிக்குமில்லையா? உங்களுடைய இந்த நடவடிக்கையினால், ஏற்கனவே உங்களுக்கு விரோதிகளாயுள்ளவர்களின் விரோதம் இன்னும் அதிகப்படும்; நண்பர்களாயுள்ளவர்களும், தங்களுடைய விருப்பத்திற்கு மாறாக உங்களுடைய விரோதிகளாவார்கள்.

ஆ. பி: அப்படியில்லை; தரைப் பக்க ராஜ்யங்களைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை. ஏனென்றால் அவை சுதந்திரமுடையவை; எங்களுக்கு விரோதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது பற்றி நிதானிக்கும். எங்களுடைய ஏகாதிபத்தியத்திற்குட்படாத உங்களைப்போன்ற தீவு ராஜ்யங்கள், எங்களுடைய ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கும் ராஜ்யங்கள், இவைகளைக் கண்டுதான் நாங்கள் சிறிது யோசிக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், இவை முன்பின் யோசியாமல் திடீரென்று ஒரு நடவடிக்கை எடுத்துக் கொண்டு, அதன் விளைவாகத் தாங்களும் ஆபத்திலே சிக்கிக் கொள்ளும்; எங்களையும் சிக்க வைக்கும்.

மெ. பி: உங்களுடைய ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்திக் கொள்ளவும், அந்த ஏகாதிபத்தியத்திற்குட்பட்டிருக்கும் ஜனங்களை விடுதலை பெறுமலிருக்கச் செய்யவும், நீங்கள் இவ்வளவு தூரம் செல்லத் தயாராயிருப்பதால், சுதந்திரமாயுள்ள நாங்கள் உங்களுக்குப் பணிந்து போவதற்கு முன்னர் அந்தச் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள எல்லா வகையிலும் முயற்சி செய்வோம். அப்படிச் செய்யாமலிருப்போமானால், எங்களுக்கு அது கேவலம்; எங்களுடைய கோழைத்தனத்தையும் அது காட்டும்.

ஆ. பி: வேண்டாம்; ஆர அமர யோசியுங்கள். எல்லா வகையிலும் சமமாயுள்ள இருவர், தங்களுடைய வீரத்தைக் காட்ட போடும் போட்டியல்ல இது. உங்களுடைய உயிர் வாழ்க்கையைப் பொறுத்த விஷயம் இது. உங்களைக் காட்டிலும் வலுவுள்ளவருடன் போராடாமல் உங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய விஷயம் இது.

மெ. பி: இருக்கலாம். ஆனால், யுத்தத்தில் அதிருஷ்டமானது படை பலமுள்ளவர்கள் பக்கமே இருக்குமென்று சொல்ல முடியாதல்லவா? அதிருஷ்டமானது பட்சபாதமற்றது. எளிதிலே நாங்கள் பணிந்து விடுவோமாயின் எங்களுடைய நிலைமை மோசமாகிவிடுமென்பது நிச்சயம். எதிர்த்துப் போராடினால், நிற்கின்ற நிலையிலே நிற்போம் என்ற ஒரு நம்பிக்கையாவது இருக்கிறதல்லவா?

ஆ. பி: நம்பிக்கை யென்பது, ஆபத்திலே ஆறுதல் அளிக்கக் கூடியது. சக்தி வாய்ந்தவர்கள் தான் அதனைப் பின்பற்றலாம். அதனால் அவர்களுக்கு நஷ்ட முண்டானாலும் அழிவு உண்டா காது. ஆனால் அது—நம்பிக்கை— பெரிய ஊதாரி. அதனிடத்தில் தங்களுடைய சர்வத்தையும் ஒப் படைக்கிறவர்கள், அதனுடைய நிஜ ஸ்வரூபத்தை, தாங்கள் அழிந்துபோன பிறகு தான் பார்க் கிறார்கள். உங்கள் விஷயத்தில் இது நேரிடவேண்டாம். நீங்கள் பலவீனர்கள். உங்களுடைய எதிர் கால வாழ்வு, தராசு முனையிலே நிற்கிறது. சாதாரண ஜனங்கள், மனித முயற்சிகளின் மூலம் தங்க ளைக் காப்பாற்றிக் கொள்வதை விடுத்து, எப்படிக் கண் காணாத வற்றின் மீது, அதாவது குறி கேட்டல் முதலியவற்றின் மீது நம்பிக்கை வைக்கிறார்களோ, அவற் றினால் ஏமாற்ற மடைந்து கடைசி யில் அழிந்து போகிறார்களோ அப்படி நீங்கள் நடந்து கொள்ள வேண்டாம்.

மெ. பி: உங்களையும் அதிருஷ் டத்தையும் எதிர்த்துப் போராடு வதனால் ஏற்படக்கூடிய சங்கடங் களை நாங்கள் உணர்கிறோம். ஆனால் தெய்வங்கள், உங்களுக்கு நல்ல விதமான அதிருஷ்டத்தை அளிக்குமானால் அது போல் எங்க ளுக்கும் அளிக்கட்டும். ஏனெனில் எங்களுடைய கட்சியில் நியாய மிருக்கிறது. உங்களுடைய கட் சியோ அநியாயமானது. நாங்கள் பலக்குறை வுடையவர்கள்தான். ஆனால் அதற்குப் பதில், அந்தப் பலக் குறைவை நிறைவு செய்ய, ஸ்பார்ட்டாவின் உதவியை எதிர் பார்க்கிறோம். ஒரே இனத்தினர், இனத்தின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அவர்கள் எங்களுக்கு உதவி செய்யக் கட மைப்பட் டிருக்கிறார்கள். எனவே நாங்கள் கொண்டிருக்கும் நம் பிக்கை சரியானதல்ல என்று சொல்ல முடியாது.

ஆ. பி: தெய்வ கடாட்சம் உங் களுக்கு என்று சொன்னால் அஃது எங்களுக்குந்தான் உண்டு. தெய் வங்களைப் பற்றி ஜனங்கள் என் னென்ன விதமான நம்பிக்கைகள் கொண்டிருக்கிறார்களோ அந்த நம் பிக்கைகளுக்கும், ஜனங்களின் நடைமுறைகளுக்கும் விரோதமாக நாங்கள் பேசவுமில்லை; நடக்கவு மில்லை. இயற்கை விதியை அனு சரித்து, தெய்வங்களிலோ மனிதர் களிலோ பலசாலிகளாயுள்ளவர்கள் தான் ஆள்கிறார்கள். இந்த விதியை நாங்கள் முதன் முதலாகச் சிருஷ் டிக்கவில்லை; இதன்படி முதன் முதலாக நாங்கள் நடக்கவுமில்லை. எங்களுக்கு முந்தியே இந்த விதி இருந்திருக்கிறது; எங்களுக்குப் பிந்தியும் இருக்கப் போகிறது. எங்களைப் போல் நீங்கள் பலசாலி களாயிருந்தால், நாங்கள் நடந்து கொள்வதைப் போல்தான் நடந்து கொள்வீர்கள். ஸ்பார்ட்டாவின் உதவியை எதிர் பார்க்கிறீர்களே, பாவம்! உங்களுடைய கபடமின் மைக்காக உங்களைப் பாராட்டு கிறோம். ஆனால் நீங்கள் அப்படி எதிர் பார்ப்பது தவறு. இந்தத் தவறுக்காக உங்களை நாங்கள் பாராட்ட முடியாது. ஸ்பார்ட் டர்கள், தங்களுடைய ராஜ்யம், அந்த ராஜ்யத்தின் சட்ட திட்டங்

கள் இவைகளைப் பொறுத்த விஷயமாயிருந்தால், எது தங்களுக்கு நலந்தரத் தக்கதோ அதுதான் நியாயமானது, எது தங்களுக்கு உசிதமானதோ அதுதான் கண்ணியமானது என்கிறபடி நடந்து கொள்வார்கள். இப்படிப்பட்டவர்களிடமிருந்து உங்களுக்கு உதவி கிடைக்காது.

மெ. பி: ஸ்பார்ட்டர்களின் உதவி கிடைக்காது என்பதற்கு நீங்கள் என்ன காரணங் கூறுகிறீர்களோ அதே காரணத்திற்காகவே அவர்களுடைய உதவியை நாங்கள் எதிர் பார்க்கிறோம். அவர்களுடைய நலத்தை முன்னிட்டு, அவர்களுடைய குடியேற்ற நாட்டு ஜனங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டார்களல்லவா? அப்படிக் காட்டிக் கொடுத்தால், அஃது அவர்கள் சத்துருக்களுக்கு உதவி செய்தது போலாகும். மற்றும், கிரேக்கர்கள் அவர்களிடம் வைத்திருக்கும் நம்பிக்கையும் போய்விடும்.

ஆ. பி: சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி நடந்து கொண்டால் தான் க்ஷேமமாயிருக்க முடியும்; நியாயமாகவும் கண்ணியத்துடனும் நடந்து கொள்வது ஆபத்தான பாதையில் செல்வதாகும். இதை நீங்கள் இன்னும் உணரவில்லை போலிருக்கிறது. ஆபத்தென்றால் அதில் தலையிட்டுக் கொள்ளவே மாட்டார்கள் ஸ்பார்ட்டர்கள்.

மெ. பி: எங்கள் விஷயத்தில் அவர்கள் ஆபத்தைப் பொருட்படுத்த மாட்டார்கள் என்பதே எங்களுடைய அபிப்பிராயம். ஏனென்றால், அவர்களுடைய ராஜ்யத்திற்குச் சமீபமாகவே நாங்கள் இருக்கிறோம். இதனால் எங்களுக்கு உதவி செய்வது அவர்களுக்குக் கஷ்டமல்ல. தவிர, அவர்களும் நாங்களும் ஒரே இனத்தினர். இதனால் மற்றவர்களைக் காட்டிலும் எங்களிடத்தில் அவர்கள் அதிக நம்பிக்கை வைத்தல் கூடும்.

ஆ. பி: வாஸ்தவம். ஆனால், சாதாரணமாக உதவி செய்கிறவர்கள், உதவி கோருகிறவர்களுடைய நலத்தை நாடாமல், தங்களுடைய அதிகார மேன்மையையே நாடுகிறார்கள். யார் செய்வார்களோ செய்ய மாட்டார்களோ, ஸ்பார்ட்டர்கள் நிச்சயமாக இப்படிச் செய்வார்கள். அவர்களுக்குத் தங்களுடைய சொந்த சக்தியிலே நம்பிக்கை குறைவு. இதனால் பக்கபலமாகப் பல ராஜ்யத்தினர் சேர்ந்தால் தான், அண்டை அயலாரைத் தாக்குவார்கள். கடலாதிக்கம் உங்கள் வசம் இருக்கிறபோது எங்களைக் கடந்து வந்து ஒரு தீவுக்கு அதாவது உங்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள்.

மெ. பி: வேறு யாரையாவது உதவிக்கு அனுப்பலா மல்லவா? ஏஜியன் கடல் மிகவும் விசாலமானது. அதன் எஜமானர்களென்று சொல்லிக் கொள்ளும் உங்களுக்குக் கூட, அதில் வரும் சத்துருக்களின் கப்பல்களைக் கைப்பற்றுவது கடினம். அதே சத்துருக்களின் கப்பல்களுக்கு, உங்களை ஏமாற்றிவிட்டுச் செல்வது சுலபம். அவர்கள்—ஸ்பார்ட்டர்கள்—கடல் வழியாக வந்து எங்களுக்கு உதவி செய்யா விட்டாலும், உங்கள் ராஜ்யத்தையும் உங்களுடன் நேசமாயிருக்கும் ராஜ்யங்களையும் தாக்குவார்கள். அப்பொழுது, நீங்கள், உங்கள் ராஜ்யத்தினுடைய

வும், உங்கள் நேச ராஜ்யங்களினுடையவும் பாதுகாப்புக்காகச் சண்டை போட நேரிடும்.

ஆ. பி: ஆத்தீனியர்கள் முற்றுகையிடத் தொடங்கி விட்டால், பிறகு எந்த சத்துருவுக்கும் பயந்து அதனைக் கைவிடமாட்டார்கள். இதைப் போகப்போக அனுபவத்தினால் தெரிந்துகொள்வீர்கள். எங்களுடைய ராஜ்யத்தின் க்ஷேமம் எங்களுக்குப் பெரிது என்று முதலில் கூறினீர்கள். ஆனால் உங்கள் பேச்சிலிருந்து அந்த க்ஷேமத்தை நீங்கள் நாடுவதாகத் தெரியவில்லை. உங்களுடைய பலமெல்லாம் உங்களுடைய எதிர்கால நம்பிக்கையிலே இருக்கிறது. எங்களுடைய படைபலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உங்களுடைய படைபலம் மிகக் குறைவானது. இதைக் கொண்டு நீங்கள் வெற்றி காண முடியாது. நாங்கள் இந்தச் சம்பாஷணையிலிருந்து விலகிக்கொண்ட பிறகு, உங்களுக்குள்ளேயே கலந்தாலோசித்து, அனுஷ்டான சாத்தியமான ஒரு முடிவுக்கு வாருங்கள். பணிந்து போவது கண்ணியக் குறைவு என்று கருதி ஆபத்திலே சிக்கிக்கொள்ள வேண்டாம். அழிவு நிச்சயம் என்று தெரிந்திருந்தும், சிலர் இந்த கண்ணியம் என்ற வார்த்தையின் அழகிலே மயங்கிப் போய்விடுகிறார்கள். நீங்கள் புத்திசாலிகளாயிருந்தால் அழிவை வருவித்துக் கொள்ள வேண்டாம். ராஜ்யங்களிலே மிகப் பெரிய ராஜ்யமாகிய ஆத்தென்ஸ், தனக்குக் கப்பஞ் செலுத்தும் ஒரு ராஜ்யமாக இருக்குமாறு உங்களைக் கேட்கிறது. இதற்கு இணங்குவீர்களானால், உங்கள் ராஜ்யத்தை நீங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். உங்களுடைய க்ஷேமத்தை நாடுகிறீர்களா? அல்லது எங்களுடன் யுத்தத்திற்குத் தயாராயிருக்கிறீர்களா? ஒரு முடிவுக்கு வாருங்கள். ஆனால் கேடு பயக்கும் முடிவுக்கு வரவேண்டாம். யார் சமமானவர்களிடத்தில் தலை குனியாமலிருக்கிறார்களோ, மேலோரிடத்தில் சரியானபடி நடந்துகொள்கிறார்களோ, கீழோரை நியாயமாக நடத்துகிறார்களோ அவர்களே உலகத்தில் வெற்றியடைகிறார்கள். ஆதலின், நாங்கள் இங்கிருந்து விலகிச் சென்ற பிறகு, நன்றாக ஆலோசித்துப் பாருங்கள். உங்களுக்கு ஒரு ராஜ்யந்தான் இருக்கிறது, அது வாழ்வதோ அழிவதோ, நீங்கள் இப்பொழுது செய்யும் ஒரு முடிவில்தான் இருக்கிறது என்பது உங்கள் ஞாபகத்திலிருக்கட்டும்.

சம்பாஷணை முடிந்தது. ஆனால் சமரசப் பேச்சு முறிந்தது. மெலோஸ், ஆத்தீனியர்களுக்கு அடிபணிய மறுத்துவிட்டார்கள். உடனே ஆத்தீனியப் படை மெலோஸ் தீவினைச் சூழ்ந்து கொண்டு முற்றுகையிட்டது. மெலோஸ் வாசிகள் என்ன செய்வார்கள்? சிறிது காலம் சமாளித்துப் பார்த்தார்கள். முடியவில்லை. சரணடைந்து விட்டார்கள். சரணடைந்தவர்களை என்னசெய்தார்கள், ஆத்தீனியர்கள்? வயது வந்த ஆண்களையெல்லாம் கொன்றுவிட்டார்கள்; பெண்களையும் குழந்தைகளையும் அடிமைகளாக விற்றுவிட்டார்கள். எவ்வளவு கிடைத்தாலும் பசியடங்கப் பெறாத ஏகாதிபத்திய தேவதைக்கு இரையாகிவிட்டது மெலோஸ் தீவு.

நாகரிகம் எது?

பொ. திருகூடசுந்தரம்

நான் வேலை பார்க்கும் காரியாலயத்துக்கு ஒருவருஷகாலமாக மின்சார ரயில் வண்டியில் போகிறேன். ஆரம்பத்தில் இரண்டாவது வகுப்பு வண்டியில் போவதா அல்லது மூன்ருவது வகுப்பு வண்டியில் போவதா என்று சிந்தித்தேன். அப்பொழுது என்னுடைய நண்பர் ஒருவர் "மூன்ருவது வண்டியில் போனுல் பண லாபமுண்டு. ஆனுல் இரண்டாவது வண்டியில் போனுல்தான் உடையும் அழுக்காது, மூக்கையும் பிடிக்க வேண்டாம்'' என்று யோசனை கூறினுர். அவருடைய யோசனைப் படியே நான் இரண்டாவது வகுப்பு வண்டியிலே பிரயாணம் செய்து வந்தேன். அவர் கூறியபடி இரண்டாவது வண்டியில் பிரயாணம் செய்பவர்கள் எல்லோரும் படித்தவர்கள். நாகரிகமாக உடை அணிபவர்கள். அழுக்கைக் காண முடியாது. நாற்றமும் கிடையாது. நறுமணங் கூடக் கமழ்வதுண்டு. சம்பாஷணை தேவ பாஷையாகிய ஆங்கிலத்திலேயே நடைபெறும். அழகான உடை அணிந்து வரும் பெண்களைக் கண்டதும் எழுந்து நின்று அவர்களை உட்காரும்படி வேண்டிக் கொள்வார்கள். யாரேனும் நாட்டுப்புறத்து மக்கள் தப்பித் தவறி இரண்டாவது வண்டியில் ஏறிவிட்டால் உடனே அவர்களை ஆங்கிலத்தில் திட்டுவார்கள்; ஒதுங்கி நில் என்று அதட்டுவார்கள்; அடுத்த ஸ்டேஷனில் இறக்கிவிடுவார்கள். நாகரிக புருஷர்களானபடியால் வண்டியில் ஏறியதும் சிகரெட்டும் பற்றவைத்துக் கடவுள் தரும் காற்றைப் புகை மயமாக்கிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் படித்தவர்கள். அதனுல் சட்ட விதிகள் எல்லாம் நன்ருக அறிந்தவர்கள். அதனுல் யாரேனும் புகைக்கு ஆற்ருது அதை வேண்டாம் என்று கேட்டுக் கொண்டால் உடனே சட்டம் பேச ஆரம்பித்து விடுவார்கள். அவர்களுடைய சட்ட ஞானத்துக்கு முன்னுல் யாருடைய தர்ம நியாயமும் தலை சாய்க்காமல் இருக்க முடியாது. சில சமயங்களில் யாரேனும் மூன்ருவது வகுப்பு டிக்கட் வாங்கிக் கொண்டு வண்டி புறப்படும் நேரத்தில் அவசரமாய் இரண்டாவது வகுப்பு வண்டியில் கால் வைத்து விட்டால், அவரிடம் இது இரண்டாவது வகுப்பு வண்டி என்று கோபமாய்க் கூறுவார்கள். அடுத்த ஸ்டேஷனில் இறங்காவிட்டால் அதிகாரியைக் கூப்பிட்டுச் சட்ட வரம்பைப் பாதுகாத்து விடுவார்கள். இத்தனைப் பிரதாபங்கள் உடையதாயிருந்தபோதிலும் இரண்டாவது வகுப்பு வண்டி ஒன்று மட்டுமே கோக்கப்படுவதால் அதில் அநேகமாக எப்பொதும் கூட்டமாகவே இருக்கும். நிற்கக்கூட இடமிராது.

அதனால் நான் சிலகாலம் அதில் பிரயாணம் செய்தபின் மூன்றாவது வகுப்பு வண்டியும் எப்படி யிருக்கிறது என்று பார்ப்போம் என்று எண்ணி அதில் பிரயாணம் செய்ய ஆரம்பித்தேன். அதில் சென்றால் என் நண்பர் கூறியபடி ஆடை அழுக்காகத்தான் செய்யும். அநேகமாக அதில் பிரயாணம் செய்கிறவர்கள் அனைவரும் ஏழைத்தொழிலாளர்கள்தான். தொழில் செய்து வருவதால் அவர்களிடம் நறுமணம் காண முடியாது. செண்டுக்கும் பவுடருக்கும் அவர்கள் எங்கு போவார்கள் ?

மூன்றாவது வண்டியில் செல்லத் தொடங்கியதும் நாங்கள் கண்ட ஒரு முக்கியமான வித்தியாசம் இது வன்று; நான் கண்ட வித்யாசத்தை என் நண்பரும் கூறவில்லை. இரண்டாவது வகுப்பு வண்டியில் ஒவ்வொரு ஸீட்டிலும் இரண்டு பேர் தான் உட்கார்ந்திருப்பார்கள். ஆனால் மூன்றாவது வகுப்பு வண்டியிலோ மூன்றுபேருக்குக்குறைந்து எந்த ஸீட்டிலும் காண முடியாது. எனக்கு உடனே சந்தேகம் தோன்றியது. இந்த வித்தியாசத்துக்குக் காரணம் யாது? ஏன் ரயில்வேக் கம்பெனியார் இரண்டாவது வகுப்பு ஸீட்டை நீளம் குறைந்ததாக ஏற்படுத்தி யிருக்கிறார்கள்? அதிகப் பணம் வாங்கும் வண்டியில் அல்லவோ அதிக நீளமான ஸீட்டுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று எண்ணலானேன்.

என் பக்கத்திலிருந்த நண்பர் ஒருவரிடம் இதை மெதுவாகக் கேட்டேன். அவர் என் ஐயத்தைச் செவிமடுத்ததும் குலுங்கக் குலுங்க நகைத்தார். எனக்கு விஷயம் ஒன்றும் விளங்கவில்லை. "என்ன தவறுதலாகக் கேட்டுவிட்டேன், இப்படிச் சிரிக்கிறீர்?" என்று கேட்டேன்.

"வேறு தவறு ஒன்றுமில்லை. உமக்கு வயதானபடியால் கண் பார்வை குறைவோ என்று தான் நினைக்கிறேன். இந்த வண்டி ஸீட்டும் அந்த வண்டி ஸீட்டும் ஒரே நீளம்தான்" என்று கூறினார்.

"ஒரே நீளம் என்று கூறுகிறீரே, அப்படியானால் அங்கே இரண்டு பேர் மட்டுந்தானே உட்காருகிறார்கள்? இங்கே பாரும், எந்த ஸீட்டிலும் இரண்டு பேருக்குப் பதிலாக மூன்று பேர் உட்கார்ந்திருக்கிறார்கள்" என்று நான் சொன்னேன்.

"அதை எண்ணியா இப்படி கோபம் கொண்டீர்? அதற்குக் காரணம் விளங்க வில்லையா? இரண்டு வண்டியிலும் ஸீட்டின் நீளம் ஒரே அளவுதான். ஸீட்டில் உட்காருபவர்கள் மனத்தின் நீளத்தில்தான் வித்தியாசம். மூன்றாவது வண்டியில் பிரயாணம் செய்யும் மக்களுடைய மனம் விரிவானது, இரண்டாவது வண்டியில் பிரயாணம் செய்பவர்களுடைய மனம் குறுகியது" என்று நண்பர் விளக்கிக் கூறினார்.

இதைக் கேட்டுக் கொண்டு எதிர் ஸீட்டில் உட்கார்ந்திருந்தவர் "அது மட்டுமா? அந்த இரண்டாவது வண்டியில் போகிறவர்கள் கூட இந்த வண்டிக்கு வந்துவிட்டால் இங்குள்ளவர்களைப் போலவே மாறி விடுகிறார்கள். அவர்களுடைய மனமும் விரிவடைந்து விடுகிறது. அங்கே இரண்டு பேர் உட்கார்ந்திருக்கும் ஸீட்டில் யாரேனும் உட்கார வந்தால் சட்டம்

பேச ஆரம்பிப்பவர்கள்கூட இங்கே வந்து விட்டால் அந்த மாதிரிச் சட்டம் பேசுவதில்லை. அநேகர் பிறர் கேட்காமல் தாமாகவே கூட இடந் தந்துவிடுவார்கள்'' என்று அவர் கூறினர்.

அப்பொழுது அதைக் கேட்கக் கேட்க எனக்கு எத்தனையோ உண்மைகள் புதிது புதிதாகப் புலனாயின. ஏழைகளுடன் சேர்ந்தால் தான் இரக்க குணம் உண்டாகும். மனம் விரிவடையும். தாராள புத்தி ஏற்படும். ஏழைகள் உடை அழுக்கடைந்தவைதான். நாற்றமும் வீசத்தான் செய்கிறது. பேச்சும் 'அநாகரிகமாக' தாய்மொழி தான். ஆனல் அவர்களுடைய மனத்திலோ மாசுமில்லை; மறுவுமில்லை. மனித குணம் நிறைந்திருக்கிறது. இரண்டாவது வகுப்பு வண்டி மக்களுடைய மனம்தான் அழுக்கும் முடைநாற்றமும் உடையது. ஆங்கிலச் சுயநலக் கல்வி கற்றதின் பயன்தான் இது. ஆடை அலங்காரத்தை நாகரிகம் என்று கருதப் பழகிவிட்டார்கள். நமது தமிழ் மக்களும் கண்ணோட்டம் என்னும் உண்மை நாகரிகத்தை மறந்து விட்டார்கள்.

குப்பைகூளங்களை அப்புறப்படுத்தி வீடுவாசல்களைத் தூய்மை செய்வதே பொங்கல் விழாவின் பிரதான நோக்கமாதலால் புறத்தேயுள்ள அழுக்கை நீக்கி மணங் கமழச் செய்வது போலவே அகத்தேயுள்ள மாசுகளையும் அகற்றி அருள் விளக்கை ஏற்றி வைக்குமாறு வாசகர்களை வேண்டிக்கொள்ள வேண்டும் என்று எண்ணியே என்னுடைய இந்த மின்சார ரயில் அனுபவத்தை எழுதலானேன்.



போவோம் வா

○

"கலைவாணன்"

எண்ணத் தலைமகளே! என்னருமைக் காதலியே!
கண்ணை மணியினைநாம் காதலுடன் பெற்றெடுத்த
வண்ணக் கவிமகவை வானறியாப் பெருந்தனத்தை
மண்ணுக்கிரை யாக்கி மாய்த்திடவோ எண்ணிவிட்டாய்?

உடைத்தெழுந்தமுட்டைவிட்டு உயரப் பறப்பதற்கு
புடைத்திரண்டு சிறகுயர்த்திப் பொங்கிஎழும் கவிப்புள்ளை
கடைத்தெருவின் மத்தியிலோர் கண்ணாடிக் கூண்டினுக்குள்
அடைத்துவைத்து விலைகூறி அங்காடி யாக்குவதோ?

சிலையறியா துட்புகுந்து சிரந்தாழ்த்திக் கரங்குவிக்கும்
நிலையறியா மாந்தர்குலம் நேர்மையுடன் நம்கவிதைக்
கலையறிவைக் கண்டுணர்ந்து கைநீட்டி வழங்குதற்கு
விலையறியார் என்றறிந்தும் வீணாய் முயலுவதேன்?

மீனினத்தைப் பற்றிவந்து மேதினியில் விலைகூறில்
ஊனிடத்தில் பற்றுடையார் உண்ணுதற்கு வாங்கிடலாம்
வானிடத்து வெள்ளிமணி வழிநடையில் விலைகூறில்
நானிலத்துச் சந்தையிலே நம்மிடத்தில் வாங்குவர் யார்?

முன்னாளில் இந்நாட்டை மூவேந்தர் ஆண்டிருந்த
அந்நாளில் நாமிருந்தால் அரசவையின் மத்தியிலே
மன்னாதி மன்னரெலாம் மனங்கனிந்து கைகுவிக்கத்
தன்னாசைத் தீரும்வரைத் தண்டமிழில் பாடிடலாம்.

கொண்டல்முழ வொலிக்கும் கோகிலங்கள் பின்னிசைக்கும்
கண்டுமயில் சிறைவிரித்துக் களிப்புடனே நின்றாடும்
வண்டினங்கள் யாழெடுக்கும் வாய்க்கால்கள் எதிரொலிக்கும்
பண்டெனிலோ நம்பெருமைப் பாரறிந்து சிரம்தாழ்த்தும்.

அம்புவியின் மத்தியிலே ஆண்டுபல முன்னிருந்தால்
கம்பனைப்போல் கவிக்குரலைக் காற்றினிலே நாமொலிக்கப்
பம்பரம்போல் கேட்டநிலம் பரவசத்தி லேசுழலும்
வம்பறியா அன்னாளில் வரத்தவறி இன்றுவந்தோம்.

வாழ்நாளை விட்டுவிட்டு வல்வினையின் ஆட்சியில் இப்
பாழ்நாளி லேபிறந்தோம். பண்பறியார் முன்னர் தமிழ்
தாழ்நாளில் கவிபாடித் தாரணியில் புகழ் பெறவோ?
கீழ்நாட்டுப் பெருமையெலாங் கெட்டதை நீ அறியாயோ?

குடைந்தொதுக்கிலே கிடக்கும் குப்பைகளைக் கிண்டிவிட்டு
உடைந்துதிர்ந்த கண்ணாடி ஒளிசிதறக் கண்டதனைக்
சுடைந்தெடுத்த வைரமெனக் கருதிமிக ஆசையுடன்
அடைந்துமன மகிழ்ந்திடநாம் அறியாத பிள்ளைகளா!

கற்பனையின் சிப்பியினுள் கண்டெடுத்த கவிமுத்தை
அற்பப் பணத்துக்கும் அறிவிலிகள் புகழுக்கும்
விற்பதுவோ - பாவமிது வேண்டா மடிகண்ணே!
கற்பூர வாசனையைக் கர்த்தபம் உணர்ந்திடுமோ?

பழிபுரியும் பிரசுரகர் பணக்காரர் முன்கெஞ்சி
மொழியறியா விமரிசகர் முத்திரைக்குக் கைநீட்டி
விழியிருந்தும் காணாத வீணர்பால் விலைகூறி
இழிவிடையே வாழ்வதிலும் இறந்தொழிதல் மேலன்றோ

வாங்கிச் சுவைத்திருகக வகையறியாப் புல்லியர்கை
ஓங்கிப்புரண் டுருளும் உலகத்துச் சந்தையிலே
தீங்கவிதைத் தேன்விற்கத் தேவையில்லை, ஆகையினால்
வங்கித் தயங்காதே இப்படியே போவோம் வா!

✲



படம் : ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

... ... —நெல்

வயலில் உழுது வரும் மாடு

... ... —இவை

ஆதரிக்க வேணுமடி பாப்பா —பாரதியார்

படம்: ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

ஞாலம் நிழல் கொள்ள,
நாற்கடலின் தண்மை பெற
ஓலையது பின்னும்
ஒண் கரங்கள் வாழியவே!

கல்வி என்றால் என்ன?

○

மு. அருணாசலம்

வளர்ச்சி என்று ஒரே வார்த்தையில் இதற்கு விடை கூறலாம். உடல், உள்ளம், உயிர் என்ற மூன்றின் திறத்திலும் அமைந்துள்ள ஆற்றல்களுக்கு இயற்கையான, அழகான, ஒத்த, பூரண வளர்ச்சி அளிப்பதே கல்வி. ஒவ்வொரு குழந்தையிடமும் இவ் வாற்றல்கள் ஒவ்வோரளவில் அமைந்துள்ளன. இவற்றை எந்த எல்லை வரையில் அபிவிருத்தி யடையச் செய்வது சாத்தியமோ அது வரையில் தூண்டிவிட்டு, வளரச் செய்து பயிற்றுவதே உபாத்தியாயன் செய்யத்தக்க வேலை. பண்புகளின் ஒருமித்த பூரண வளர்ச்சி பெற்ற மனிதனைத் தோற்றுவிப்பதே ஆசிரியன் வேலை. இம்மனிதன் சிறந்த நல்லொழுக்கமும் குணச் சிறப்பும் உடையவனா யிருப்பான்; கூர்மையான புத்தியுடையவனா யிருப்பான்; வலிமை பொருந்திய உடல் படைத்திருப்பான்.

இதற்கான கல்வித் திட்டத்தில் பரீட்சை என்பது வந்தால், அது இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதா யிருக்கும்; பரீட்சையே நோக்கமா யிராது.

கல்வி என்பது போதிப்பது மாத்திர மன்று. உபயோகமுள்ள அல்லது உபயோகமற்ற பல விஷயங்களைப் புகட்டுவதால் வளர்ச்சி ஏற்படுவ தில்லை. புகட்டுவதால் ஞாபக சக்தி ஒன்றுதான் எல்லோரிடமும் வளர முடியும். கல்வி என்பது உடலின் பயிற்சி, புத்தியின் பயிற்சி, ஒழுக்கப் பயிற்சி என மூன்று பிரிவாக உள்ளது. இம் மூன்றில் புத்தியின் பயிற்சியில் மூன்று பிரிவுகள் உள்ளன. இவை கவர்ந்து நோக்குந் திறன், இதிலிருந்து வரும் பகுத்தறியுந் திறன், இதன் மூலம் அமையும் ஞாபகத் திறன் என்பன. இதை யுணரும்போது, புகட்டுவது என்பது கல்வியில் எத்துணை அற்பமான பயன் தருகிறது என்பது விளங்கும்.

உடம்பையும் உயிரையும் பரீட்சை தேறுவதற் கென்று பயிற்ற முடியாது. இது போலவே, உள்ளத்தை மட்டும் பரீட்சை தேறுவதற் கென்று பயிற்றுவது கேடான காரியம். பரீட்சை அறையில் கேள்வித் தாளுக்குத் திறமையாக விடை எழுதத் தயாரிக்கிற வேலை பயனற்றது. இதற்குப் பதிலாக, உலகவாழ்க்கை அல்லது சமூக வாழ்க்கை என்ற பெரிய பரீட்சை அறையில் எழும் பிரசினைகளாகிய கேள்விகளுக்குத் தைரியமாக விடைகாணும் திறமையை வளர்ப்பது எவ்வளவோ மேலான பயிற்சி. விடை எழுதத் தெரிந்தால், உலகவாழ்க்கை வாழத் தெரியும் என்று அர்த்தமாகாது.

பரீட்சைக்குத் தயாரிப்பு முறை என்றால், பொதுவாக குருட்டுப்

பாடம், பொட்டைநெட்டுருத் தான் வழி. இதில் சிறுவன் சுய புத்தி இழக்கிருன்; பிறர் கண்ட முடிவை ஆராய்ச்சி யின்றி, அப் படியே ஒப்புக்கொள்ளப் பழகு கிருன். உடற் பண்புகளும், ஒழுக் கப் பண்புகளும் இதில் கேடடை கின்றன; கேடில்லா விட்டாலும், வளர்ச்சி பெறுவதில்லை. ஆனல் உண்மையான கல்வி அவன் பயில் வானனல், அவன் நடத்தை கெளர வமா யிருக்கும். மனவுறுதி, தன் னம்பிக்கை என்ற இயல்புகள் அவ னிடம் வளர்ச்சி பெற்றிருக்கும். அவன் உடல் ஆரோக்கியமும் வலிமையும் திறமையும் பெற்றிருக் கும். அவன் புத்தியும், கூர்ந்து கவனித்து, விவேகத்தோடு ஆராய்ந்து, உறுதியான முடிவு செய்ய வல்லதாய் அமையும்.

இந்திய நாட்டில் வளர்ச்சியை அளக்கும் கருவியே பரீட்சை என்ற கருத்து அடியோடு மறைந்து, பரீட்சையே முடிவான நோக்கம் என்ற கருத்து, பாட சாலைகளெங்கும் நிலைபெற்று விட்டது. கணக்கற்ற பரீட்சைகள். இவற்றிற்குத் தயாரிக்கும் தொழிற் சாலைகளாகப் பாடசாலைகள் யாவும் ஆகிவிட்டன. புத்தியை மட்டும் அளவுக்கு மிஞ்சி வளர்க்க முயன் றது காரணமாக, மற்ற உடலும், உயிரும் பற்றிய திறன்கள் நசித்து விட்டன. இதனல்தான் பாட சாலையில் படித்து வெளிப்படும் பிள்ளைகளும், பெண்களும் உடல் வலிமையிழந்து, ஆரோக்கியமற்று, உற்சாகமற்று, நடைப் பிணங்களாக வாழ்க்கையில் ஈடுபடுகிருர்கள்.

ஆனல் உண்மையில் நம் நாட்டுக் குழந்தைகள் இயற்கையில் இப்படி இல்லை. குழந்தையிடம் புத்திக் கூர்மை அதிகமாய் இருக்கிறது. சுறுசுறுப்பு, கூர்ந்து நோக்கும் திறன் முதலியன அதிகமாய் உள் ளன. வாழ்க்கையிலும், சூழ்நிலை யிலும் கவனமும் ஆர்வமும் அதி கம். அன்பும் எழுச்சியும் உள்ளன. ஆனல் பள்ளிக்கூடம் போன மாத் திரத்தில் மந்த புத்தி, உற்சாக மின்மை, சோம்பல், வலியின்மை ஆகிய கேடுகள்வந்து குடிகொள்ளு கின்றன. இதற்குக் காரணம், சமூக நிலை, இயற்கைச் சூழ்நிலை என்று பலர் சொல்வார்கள். இது சிறிதளவு உண்மையே. ஆனல் அதிகம் எது உண்மை என்ருல், இக்கேடுகள் பயிற்சியின் கோளாற் ருல் விளைந்தவை என்பதே.

உபாத்தியாயர் ஒரு கூலிபோலத் தம்மை எண்ணி உழைக்கிருர். பிள்ளை ஒவ்வொன்றும் ஒரு கூடை. அக் கூடையில் மண்வெட்டியால் களிமண்ணை வெட்டிப் போட்டு நிரப்புவதே தம் கடமை என்று அவர் எண்ணி இருக்கிருர். இது பெரிதும் தப்பானது.

பாடசாலை ஒரு நந்தவனம். உபாத் தியாயர் நந்தவனத்தைப் பராம ரிக்கும் தோட்டக்காரன். பிள்ளைக ளெல்லாம் அங்குள்ள சிறு செடி கள். ஒவ்வொரு சிறு செடி யும், விலை மதிப்பற்ற ஒரு தனி உயிர். எவ்வளவு அழகும் மண மும் பொருந்திய மலர்கள் காலக் கிரமத்தில் இச் சிறு செடியில் மல ரும். இனிய சுவை பொருந்திய கனிகள் கனிந்து விழும். எப் போது? உபாத்தியாயர் உரிய காலம் வரை அன்புடனும் அறி வுடனும் நீர்பாய்ச்சிக் களை எடுத்து

எரு விட்டுப் பேணி வந்தால்தான்; மண்வெட்டிக் கொட்டினாலல்ல.

புத்தகங்களில் எழுதி வைத்துள்ளவற்றைக் கரைத்துக் குடித்து விட்டு, பிள்ளைகளிடம் போய் ஒப்புவிப்பது, எந்த மந்த புத்தியுடைய உபாத்தியாயரும் செய்யக் கூடியதே. கிரமமான உபாத்தியாயர் நோக்கம் இதுவாகாது. "இப் பிள்ளைகளைப் பார்க்கும் பொறுப்பு என்னுடையது. சிறந்த குடிகளாக, சமூக ஊழியராக, பெற்றோராக, தொழில் வினைஞராக, சுருங்கச் சொன்னால் சிறந்த மனிதராக — இவர்களை ஆக்குவதே என் வேலை. நல்லொழுக்கமும், ஆரோக்கியமும், திறமையும், பொருந்தியவுடன் கூர்மையான புத்தி இவர்களிடம் அமையும்படி நான் செய்வேன். பரீட்சைகூட எனக்கு இந்த நோக்கம் நிறைவேறுவதற்கான கருவிதான்" என்று அவர் எண்ண வேண்டும்.

பள்ளிக்கூடத்தில் பெறுகிற அறிவு ஒருவனுக்கு வாழ்க்கையில் விலைமதிக்க முடியாத பெருஞ் செல்வம். ஆதலால் இவ்வரவை வாழ்க்கையை நோக்கமாய்க் கொண்டு சம்பாதிக்க வேண்டும்; பரீட்சையை நோக்கமாய்க் கொண்டு சம்பாதித்தால் அத்தனையும் வீண். நோக்கும் திறன், விவேகம், ஞாபகத் திறன் என்பன ஒருவனுக்குப் பள்ளிப் படிப்பில் வந்தால் வாழ்க்கையில் பேருதவியா யிருக்கும். ஆனால் இன்று படிப்பில் வருவது கணக்கில் சில யூக்லிட் கருத்துக்களும், சரித்திரத்தில் சில சண்டைகளும், பூகோளத்தில் சில நதிகளும் அதன் நீளமும், சில ரசாயனக் கணக்குகளும், இலக்கியத்தில் சில பாட்டுக்களும், பதவுரையும், வினை முடிபுகளுந்தான்.

உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளே முதன்மை என்று கருதவேண்டும். பரீட்சையில் எழுதிய விடைத் தாளில் போட்ட மார்க்கைக் காட்டாமல், "நான் கற்பித்த மாணவர்கள்" என்று தம் பிள்ளைகளைக் காட்டுவதில் பெருமை கொள்ளவேண்டும். "நூற்றுக்கு நூறு பாஸ்" என்று சொல்வதைவிட, பிள்ளைகள் மூன்று திறனும் பெற்று வளர்ந்திருந்தால் எவ்வளவோ சிறப்பு. இதுவே உண்மை வளர்ச்சி. நெட்டுருப் பண்ணி, பரீட்சையில் ஒப்புவித்து மார்க்கு வாங்குகிற பையன், தனக்குக் கற்பிக்காத ஒரு சாமானிய விஷயம் கேட்டால், "என் ஸிலபஸில் இல்லை" என்று சொல்வான்; பரீட்சையில் இப்படிக் கேட்டாலோ, பெருங் கிளர்ச்சி. ஆனால் கூர்ந்து நோக்கியும், சிந்தித்தும் பழகிய பையன் நியாயமான எந்தக் கேள்விக்கும் விடை தருவான். பாடத்தில் உள்ளது, இல்லாதது என்ற பேச்சு இல்லை. சுயபுத்தி, தன்னம்பிக்கை என்ற திறன்கள் இவனிடம் வளர்ந்திருக்கும். இரண்டு பேரிலும் யாரை நாம் விரும்புவோம்?

இலக்கியங்களைப் பையன் பள்ளிக்கூடத்தில் பயில்கிறான். பிற்கால வாழ்க்கையில் இவை எப்படிப் பயன்படுகின்றன என்றால், பயனில்லை என்றுதான் சொல்வோம். ஆனால் இலக்கியப் படிப்பால் ஒவ்வொரு பிள்ளைக்கும் வரும் மொழித் திறமை, கலை உணர்ச்சி, தன் சமூகப் பண்பாட்

டில் தோய்வு ஆகிய சிறந்த பண்புகள் வேறெவற்றிலும் வருதற்கில்லை. ஆகையால் இலக்கியப் படிப்பு ஒவ்வொருவருக்கும் தரும் பயிற்சிதான் பிரதானமாய்க் கருத வேண்டும். ஓரளவுக்கு இதுவே மற்றெல்லாப் பாடங்களுக்கும் பொருந்தும்.

படிப்பும் வாழ்க்கையும் சேர்ந்து ஒருவனுக்கு பண்பாடு தருகின்றன. பாடங்களைக் கிரமமாய்க் கிரகிப்பதுதான் பண்பாட்டுக்கு வித்து. பாடம் போய்விடும், மறந்து போகும்; அவசியமில்லாமல் நீங்கும். ஆனால் அதனடியாக வந்த உடலின் பயிற்சியும், உள்ளத்தின் பயிற்சியும் போகாமல் நிற்கும்; இவையே பயிற்சி தரும். பையன் தான் ஒன்றைச் செய்கிறான். அதைக் குறித்து சிந்தித்தும், ஆராய்ந்தும் ஒரு முடிவுக்கு வருகிறான். உபாத்தியாயர் ஒன்று சொல்கிறார். புத்தகத்திலும் படிக்கிறான். இவைகளனைத்தினாலும் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட பயிற்சியே பண்பாடாகும். இப் பண்பாடு பாடசாலையில் விளைய வேண்டும். இது மாணவனுக்குச் சிறந்த மனோதிடத்தையும், பலத்தையும் அளிக்கவல்லது. மற்றப்படி தான் செய்யாமல், அறியாமல், படித்து நெட்டுருச் செய்து பரீட்சையில் எழுதி மார்க் வாங்குவது இப் பண்பாடும் தராது, பலமும் தராது.

தவிர, இவ்வித சுய முயற்சியால் வரும் படிப்பு குறைவாயிருந்தாலும் குற்றமில்லை. படிப்பினால் இவனுக்கு வரவேண்டிய பண்பு வளர்ச்சி வந்திருக்குமானால், நெட்டுருப்பண்ணியது மறந்து போய விட்டதால், வளர்ச்சியும் போய் விடாது. "ஒரு புத்தகத்தைப் படித்து முடித்தும் பின் மறந்து போய் விடடால், என்ன மிச்சமிருக்குமோ அதுதான் பண்பாடு" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். சிறுவன் எதை எவ்வளவு கற்றான் என்று கணக்கிடுவது கல்வியல்ல; எப்படிக் கற்றான் என்பதுதான் கல்வி. மூளை நிரம்பத் திணித்துவிட்டதால் கல்வியாகிவிடாது; ஏனெனில் இவற்றைப் பையன் கற்ற சீக்கிரத்தில் மறந்தும் போகிறான். அவன் அறிவுடன் இவை ஒட்டுவதில்லை. மற்றப்படி தானே சோதித்தும் செய்தும் கூர்ந்து ஆராய்ந்து உணர்ந்தானானால், இது ஒருபோதும் அவன் மனத்தை விட்டு அகல்வதில்லை.

உடல் வலிமை, ஒழுக்கம் சம்பந்தமாகப் பரீட்சைகள் இல்லை. ஆனால் இவைகளே பாடசாலை வாழ்க்கையில் பிரதானமானவை. இவை வளம் பெறாத விடத்து, பரீட்சையில் மார்க்கு என்பது வெறும் கல்விக் கேலிதான். மனோபலம், சுயபுத்தி, சுய முயற்சி, ஆராய்ச்சி ஆகிய உயர்ந்த மனிதப் பண்புகள் அங்கு அஸ்தமித்துப் போயிருக்கும்.

முடிவாகச் சொல்வதானால் சிறுவன் பள்ளிக்கூடம் படிக்கவருவது, தெரிந்து கொள்வதற்காக அல்ல; தபால் மூலமும், கிராமபோன் மூலமும் ஆசிரியர் இல்லாமல் அவன் தெரிந்து கொள்ள முடியும். பள்ளிக்கூடத்தில் அவன் தெரிவதை விட செய்து பழகுவதும், வாழ்வ

அஞ்சலி தேவியின்
சருமம்
லக்ஸ் டாய்லட்
சோப்பை உபயோகப்
படுத்துவதால் மிருது
வாகவும்
மென்மையாகவும்
இருக்கிறது.
"லக்ஸ் டாய்லட் சோப் என்னுடைய தவறாமல் அழகு படுத்தும் முறை" என்று அழகிய அஞ்சலி தேவி சொல்கிறார். "அதனுடைய வெண்ணிறம் கொண்ட நுரை என்னுடைய சருமத்தை மிருது வாகவும் தூய்மையாகவும் சுத்தம் செய்கின்றது. மென்மையான சருமத்தை விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் நான் செய்வது போல லக்ஸ் டாய்லட் சோப்பினால் சுத்தம் செய்துகொள்ள வேண்டும்."
LUX
LUX
TOILET SOAP
லக்ஸ் டாய்லட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!
LTS. 189-50 TM

அரசியல் நூல்கள், வரலாறுகள்

ஆசியாவின் அறை கூவல்	பல்குனன்	0	12	0
மீண்ட இந்தியா	என். ஆர். பத்மநாபன்	0	14	0
1944 முதல் இன்று வரை	ந. ராமரத்னம்	1	4	0
சோவியத் அரசாங்கம்	எஸ். ஷண்முகம்	1	8	0
சைனா எங்கே போகிறது	ஆர். ராமநாதன்	1	12	0
மகாத்மாவின் மணிமொழிகள்	என். ஆர். பத்மநாபன்	0	8	0
புகழ்ச் செல்வர்	தி. ஜ. ர.	3	0	0
புரட்சித் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண்	கே. ராஜகோபாலன்	3	0	0

தபால் செலவு தனி

கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம், திருச்சிராப்பள்ளி ஜில்லா

வாழ்க்கையில் புதிய ஒளி

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

சந்தோஷமும் ஆரோக்கியமும் நிரம்பிய குடும்பத்தின் அழகே அலாதியானதுதான். ஜீவாம்ருதம் தேக புஷ்டியையும் வீர்ய விருத்தியையும் அளிப்பது. ஆண், பெண் இருபாலரும் சாப்பிடக்கூடியது. இது நரம்புகளை வலுப்படுத்தி, வாழ்க்கையில் புதிய இன்பத்தைத் தரவல்லது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் மதராஸ் 17

தும் முக்கியமாக இருக்கவேண்டும். "பையனுக்கு என்ன தெரியும்." என்ற கேள்வி பயனற்ற கேள்வி. "பையன் என்ன செய்வான்? பையன் எப்படி வாழ்வான் அல்லது வாழ்கிறான்?" என்ற கேள்விகளே உண்மைக் கல்வியை அளக்கும் கேள்விகள். திறமை பொருந்த புத்தி கூர்மையோடு, ஒன்றைச் செய்யும் ஆற்றலை அவனிடம் பெருக்கவேண்டும். நேர்மையாக தன்னம்பிக்கையோடு அன்பும், சத்யமும் பூண்டு வாழ அவனைப் பழக்கவேண்டும். கண்ணை நன்றாய் உபயோகிக்க, கை கால்களால் எதையும் நன்றாய்ச் செய்ய, அறிவு கொண்டு விவேகத்துடன் ஒன்றை நன்றாய்க் கூர்ந்தறிந்து சிந்திக்க, ஒழுக்கம் விளங்கும் வாழ்க்கை நடத்த அவனைப் பயிற்றுவதே உண்மைக் கல்வி.

அத்தான் சண்முகம்

○

ப. ஸ்ரீனிவாஸன்

காலை ஏழு மணிக்குச் சாப்பிட்ட "பழையதும் சுண்டக் கீரையும்" செமித்து, பசி அடி வயிற்றில் சுட்ட பிறகு, மதியம் ஒரு மணிக்கு மளிகைக்கடை பழனியாண்டியா பிள்ளை சுடுசோறு உண்பதற்காக வீட்டுக்குத் திரும்பினார்.

உடம்பைக் கழுவி பட்டை பட்டையாகத் திருநீறு பூசிக்கொண்டார். அவரது ஒடுங்கிய, கறுப்புத் தேகத்தில் விபூதி பிரமாதமாகப் பளிச்சிட்டது. தினசரி மூன்று முறை திருநீறு அணிவது அவருக்கு யந்திரப் பழக்கம்.

அவரது மனைவி கீரையை முதலாவதாக இலையில் பரிமாறினாள். அடுத்தாற்போல் உருளைக்கிழங்கு வறுவலும், பொரித்த அப்பளமும் படைக்கப்பட்டன.

பாம்பு படமெடுப்பது போல் பழனியாண்டி சட்டென்று தலையை உயர்த்தி ஏறிட்டுப்பார்த்தார். "ஏட்டி, இண்ணைக்கு என்ன ராசவிருந்தா வந்திரிச்சு! கீரை ஒண்ணே கறியைக் காத்துக்கிட்டுப் போகுமேடி! ஹூம்! என் தலையை மொட்டையடிக்க நீ ஒருத்தி வந்திருக்கே!" என்று சொல்லி தமது அப்பளக் குடுமியை அவர் இடது கையால் தட்டிக்கொடுத்தார்.

"ச்சூ! ஒரு நாளாவது சும்மா சாப்பிடுங்களேன். இன்னம் உங்க அத்தான் வேறெ வரப்போருரு இங்கிகே. அவர் எப்படி உங்க கீரைக் கட்டையைத், திண்ணுக்கிட்டு கெடப்பாரோ!" என்று தேவயானை சொன்னாள்.

"ஏட்டி, அது மறந்தே போச்சே!" என்று சொல்லி பழனியாண்டி நிமிர்ந்து உட்கார்ந்தார். "கடைக்குப் போயாச்சுன்னு வேறெ நெனைப்பே வரமாட்டேங்கே! இண்ணிக்கு சாயந்திர ரயிலுக்கு அவனும் வந்திருவான்....... அத்தான் ஒரு மைனர் பேர்வழி! எவ்வளவு சம்பாதிச்சாலும் அவன் கையிலே காலணு நிக்காது. என்ன செலவு, என்ன செலவு, அசாத்தியச் செலவு!......அவன் இந்தச் சாப்பாட்டையெல்லாம் சீந்தமாட்டான். எல்லாம் வகைதொகையாத்தான் இருக்கணும். அவனுக்கு என்ன செய்து போட்டாலும் எனக்கு இந்தக் கீரையே போதும் ஆத்தா!" என்றார் அவர். அத்தான் சண்முகத்தின் பெயரைச் சொன்னாலே அவரது பட்டுச் சட்டையும், சவ்வாதுப் பொட்டும், சிரித்த முகமும் பழனியாண்டியின் கண் முன் வந்து நின்றன.

சண்முகத்தைப் பழனியாண்டி சந்தித்து பதினாறு வருஷம் இருக்கும். சண்முகம் பெரும்பாலும் கொளும்பிலேயே இருந்ததால் அவர்கள் அடிக்கடி பார்த்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் சிறு வயதில் இருவரும் ஒரே வீட்டில் வளர்ந்தவர்கள். பழனியாண்

டியை வியாபாரத் துறையில் ஈடுபடுத்தியது சண்முகம்தான். அதற்குப்பின் பழனியாண்டி எவ்வளவோ முன்னுக்கு வந்துவிட்டார். இப்போது பழனியாண்டிக்கு வயது நாற்பத்தாறு; அதற்கு ஒரு வயது இளையவர் சண்முகம்.

சண்முகத்தை தேவயானை இரண்டு முறைதான் பார்த்ததுண்டு. ஆனல் அவருடைய எடுப்பான தோற்றமும் கலகலப்பான பேச்சும் அவள் மனதில் பசுமையாக இருந்தன.

சாப்பிட்டு முடிந்து பழனியாண்டி, கை கழுவச் சென்ருர். "இந்தாங்க! அத்தான் வந்த பிறகும் எங்கிட்ட நீங்க எப்போதும் போல சீறிக்கிட்டு இருக்காதிங்க. அவர் சிரிச்சுத் துப்புவாரு!" என்று தேவயானை புத்திமதி கூறினள்.

"கடிஞ்சு பேச இடங்கொடுக்காமல் நீ தானே நடந்துக்கிடணும்," என்று பழனியாண்டி நயமாகப் பதிலுரைத்தார்.

"அத்தான் வந்தாலும் இருக்கட்டும்னு அரைக்கட்டு வெத்திலை வாங்கி வச்சிருக்கேன். நீங்களும் போட்டுக்கிடுதிகளா?" என்று தேவயானை கேட்டாள்.

"அரைக் கட்டா! ஏட்டி, அத்தானை ஆட்டுக்கிடாயிண்ணு நினைச்சியா! எனக்கு வெத்திலை கித்திலை ஒண்ணும் வேண்டாம். வயத்த வலிக்க ஆரம்பிச்சிடுச்சு. கடைக்குப்போனதும் சோடா உப்பை அள்ளி வாயிலே போட்டு தண்ணியை ஊத்திட்டுத்தான் மறு சோலி!" என்ருர் பழனியாண்டி.

"உங்க உடம்புக் கென்ன! நித்தம் ஒரு சீக்கு! டாக்டர் காட்டி ஏதாவது ஒசந்த மருந்தா வாங்கிக் குடிக்கவும் உங்களுக்கு மனசு வரமாட்டேங்கு!" என்று தேவயானை அனுதாபத்துடன் சொன்னள்.

"ஏட்டி, மச்சிலைச் சுத்தம் பண்ணச் சொல்லு. அத்தான் படுக்க இருக்க வைக்க சௌகரியமாயிருக்கும். சாயந்திரம் கோயிலுக்குப் போயிட்டு நான் வீட்டுப் பக்கம் வாரேன். அவனை இருக்கச் சொல்லு!" என்று கூறிவிட்டுச் சிட்டுக்கறைத்துண்டை எடுத்து மேலே போட்டுக் கொண்டு அவர் கடைக்குப் புறப்பட்டார்.

தேவயானை மாடிக்குச் சென்று பெருக்கிச் சுத்தப்படுத்தினள். கலியாணக் கட்டிலில் அப்பியிருந்த அழுக்கை ஈரத்துணியால் நன்ருகத் துடைத்தாள்.

பிறகு அவளும் சாப்பிட்டு விட்டுக் கூடத்தில் போய் சற்று படுத்துக் கொண்டாள். அந்தப் பெரிய வீட்டில் அவளையும் கணவரையும் தவிர வேறு யாருமே இல்லை. பழனியாண்டியும் பெரும்பாலான நேரத்தைக் கடையிலேயே கழித்துவிடுவார். கலியாணமாகி பதினேழு வருஷமாகியிருந்தும் அவர்களுக்கு ஒரு குழந்தை கூடப் பிறக்கவில்லை. அவளுக்கு "மலட்டுச் சதை" வைத்திருப்பதாக அல்லசல்காரர் கசுபிசு வென்று பேசிக்கொள்வதுண்டு. ஒரு முறை சேதுவுக்குப் போய்வரலாம் என்று அவள் எவ்வளவோ கேட்டுக் கொண்டும், பழனியாண்டி புறப்படவேயில்லை. நன்ருக வியாபாரம் நடத்தி, ஏராளமாகப் பணம்

சேர்த்து, சிக்கனமாகச் செலவு செய்வதில் மாத்திரமே அவர் சிரத்தை கொண்டிருந்தார்.

தனிமையின் மத்தியில் பல வருஷங்களாக உழைத்து வந்த தேவயானைக்கு புது மனிதர் சண்முகத்தின் வருகை ஆறுதலாயிருந்தது.

மாலை ஆறு மணிக்கு "ஜல் ஜல்" என்று குதிரை வண்டியில் வந்து அத்தான் இறங்கினர். அவர் அணிந்திருந்த பட்டுக்கறை வேஷ்டியும், சரிகை அங்கவஸ்திரமும், மஸ்லின் சட்டையும் ஒளி வீசின. வழுக்கையும் நரையும் விழுந்திருந்த போதிலும் கிராப்புத் தலைக்குத் தைலம் தடவி ஒழுங்காக வாரி விட்டிருந்தார்.

டிரங்குப் பெட்டியை வீட்டுக்குள் கொண்டுவைத்துவிட்டு வந்து நின்ற வண்டிக்காரனிடம் அவர் ஒரு ரூபாய் நோட்டை வீசினர்.

"வாங்க! அவுக கடைக்குப் போயிருக்காக! இப்போ வந்திடுவாக!" என்று தேவயானை சொன்னாள். அவளுடைய குரல் நடுங்கியது.

"சுகமாயிருக்கிகளா அம்மா! சீக்குச் செடியில்லாமல் அத்தான் சுகமாயிருக்காரா?" என்று சண்முகம் கேட்டார். தேவயானை முன்னைவிட வெளுத்திருப்பதாக அவருக்குத் தோன்றியது.

வெள்ளித் தட்டில் பலகாரமும் காப்பியும் கொண்டுவந்து அவள் வைத்தாள்.

சட்டையைக் கழற்றியபின், கை கால்களைக் கழுவிவிட்டு அவர் வந்தார். பலகாரத்தைச் சாப்பிட்டவாறே குசலப் பிரச்னங்களை அவர் விசாரித்தார். கதவு மறைவில் நின்று தேவயானை அடக்கமாகப் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

இதற்குள் பழனியாண்டியும் வந்துவிட்டார். "வா, சண்முகம்! சௌகரியமாயிருக்கையா! உடம்பிலே முன்னை மாதிரி வலுவைக் காணோமே!" என்று அவர் விசாரித்தார்.

"அவ்வளவுதான்! அக்கரைக்கும் இக்கரைக்கும் அலைஞ்சிட்டேன் இல்லையா? உன் உடம்பு என்ன அண்ணைக்குப் பாத்தாப்பிலேயே இருக்கு பழனி!" என்றார் சண்முகம்.

பழனியாண்டிக்கும் தேவயானை பலகாரம் கொண்டு வந்தாள். ஆனல் அவர் அதைத் தொட மறுத்துவிட்டார். இரவு ஒன்பது மணிக்கு வழக்கப்படி நீராகாரம் சாப்பிட்டால்தான் உடம்புக்கு ஒத்து வரும் என்று அவர் சொன்னார்.

"நம்ம வார்த்தைக்கு நீ இணங்கி வருவாயாண்ணு எனக்குச் சந்தேகம் தான். நல்ல காலமாய் வந்து சேர்ந்தாய் அப்பா! என்னவோ, உன் கையாலே ஆரம்பிச்ச கடையப்பா இது. இவ்வளவு காலம் ஒண்டியா ஓட்டிப்புட்டேன். இப்போ உடம்பும் அவ்வளவு சரியாக இல்லை. வேலைக்காரன்களும் ரொம்ப மோசம் பண்ணரான்கள். நம்ம ஆளாய் நீ கூடமாட இருந்தால் நல்லாயிருக்கும். நீயும் இத்தனை வயசுக்குப் பிறகு மறுபடியும் கொளும்புக்குப் போகிறது எனக்குப் பிடிக்கலே. நம்ம வீட்டிலே சாப்பிட்டுக்கிட்டு கடைக்குப் போய் வந்துக்கிட்டு இருந்தாயிண்ணு எனக்கு உதவியாயிருக்

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி	ரூ. 10,00,000

சென்னை நகரத்தில் ஆபீஸ்கள் :—

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோட், தியாகராயநகர், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி.

கிளைகள் :

அம்பாசமுத்திரம்	மாயவரம்	தென்காசி
ஆம்பூர்	மதுரை	திருநெல்வேலி டவுன்
அனகாபள்ளி	மருதேரு	திருநெல்வேலி ஜங்ஷன்
சிதம்பரம்	நாகப்பட்டினம்	திருச்சிராப்பள்ளி
சித்தூர் (கொச்சி)	பாலக்காடு	தூத்துக்குடி
கடலூர் ஒ. டி.	பரமக்குடி	வேதாரணியம்
கடலூர் என். டி.	புதுக்கோட்டை	வேலூர்
ஈரோடு	ராமநாதபுரம்	விஜயபுரம்
காஞ்சீபுரம்	சீர்காழி	விழுப்புரம்
காரைக்குடி	தாடபள்ளிகூடம்	விருதுநகர்
கும்பகோணம்	தஞ்சாவூர்	விஜயநகரம்

பிக்ஸட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

ஒரு வருஷத்துக்கு	—	$2\frac{3}{4}\%$ வருஷ விகிதம்
இரண்டு வருஷங்களுக்கு	—	3% வருஷ விகிதம்

சேவிங்ஸ் பாங்க் டிபாசிட்டுகள்

தினசரி நிலுவை ரூ. 5-ம் அதன் பெருக்குத் தொகைக்குமாக, ரூ. 10,000/- வரைக்கும், வட்டி விகிதம் வருஷத்துக்கு $2\frac{1}{4}\%$; வாரந்தோறும் செக்கு மூலம் ரூ. 250/- வாங்கிக்கொள்ளலாம்.

மாதவாரி டிபாசிட்டுகள்

மாதந்தோறும் ரூ. 1 அல்லது அதன் பெருக்குத் தொகையை 47 அல்லது 90 மாதங்கள் செலுத்தலாம்.

காஷ் சர்ட்டிபிகேட்டுகள்

3 அல்லது 5 வருஷ காஷ் சர்ட்டிபிகேட்டுகள் கிடைக்கும்.

கடன்களும் அட்வான்சுகளும்

பொன், வெள்ளி, சர்க்கார் கடன் பத்திரங்கள், அங்கீகரித்த ஷேர்கள், செக்யூரிடிகள், வியாபாரச் சரக்குகளின்மேல் கொடுக்கப்படும்.

எஸ். என். என். சங்கரலிங்க ஐயர்
மானேஜிங் டைரெக்டர்.

வாசனை.
காரம். உணவில்
விருப்பம் ஆரோ
க்கியம் இவை
களுக்கு உத்தர
வாதம்

வி.எச்.ஆர்.
பெருங்காயம்

கிடைக்குமிடம்:-
வர்ஜிவன் தாஸ்
ஹீர்ஜி & கோ.
194, கோவிந்தப்பநாய்க்
கன் தெரு, சென்னை
மற்ற ஆபீஸ்கள்:-
பம்பாய் - கும்பகோணம் - மதுரை

கேசரியின்

மூன்று பிரசித்த மருந்துகள்

★

லோத்ரா

கர்ப்பாசய நிவாரணி

மலடு, சங்காதோஷம், கில்வாயு, தூக்கமின்மை, ஆஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி, முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்த சோகை, அஜீரணம், மலச் சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அர்க்கா

சிறந்த ஜுர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்டு, மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். ஈரல் குலைக்கட்டிகளும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்

கேசரி குடீரம் லிட்,

ராயப்பேட்டை, மதராஸ் 14.

கும். சம்பளம் செலவுகளுக்கு ஏதோ போட்டு எடுத்துக்கிடலாம்,'' என்று பழனியாண்டி மளமள வென்று பேசினர்.

"அதுக்கென்ன அத்தான்! நான் ஒத்தைக் கட்டை! எங்கே யிருந்தா என்ன! உன்கூட இருக்க எனக்கென்ன கசப்பா!'' என்று சண்முகம் கூறினர்.

சண்முகத்தை அழைத்துக் கொண்டு தமது கடைக்குப் பழனியாண்டி சென்ருர். பல வருஷங்களுக்கு முன் ஒரு எட்டடிக் குச்சிலுக்குள் முடங்கிக்கிடந்த பல சரக்குக் கடை இப்போது மூன்று கடை அளவுக்கு விரிந்திருப்பதைக் கண்டு சண்முகம் ஆச்சரியப்பட்டார். வந்தவர்களிடமெல்லாம், "இவுகதான் நம்ம அத்தான்! சிலோனிலே இருந்தாக. இனிமே இங்கேயே இருப்பாக'' என்று பழனியாண்டி பெருமையுடன் சொன்னர். சண்முகத்திடம் எல்லோரும் மரியாதையுடனும் பிரியத்துடனும் அளவளாவினர். கணக்குப் பிள்ளையும் கடைப் பையன்களும் சண்முகத்தைப் பார்த்து விடுதலைப் பெருமூச்சு விட்டனர்.

கடையை அடைத்துவிட்டு பழனியாண்டியும் சண்முகமும் வீட்டுக்கு வந்தபோது மணி பத்தாகிவிட்டது. பலவகைக் காய்கறிகளுடன் சண்முகத்திற்கு தேவயானை சுடச்சுட சாப்பாடு பரிமாறினுள். பழனியாண்டி நீராகாரமே சாப்பிட்டார்.

வெற்றிலை போட்டுக்கொண்ட பின் சண்முகம் மாடிக்குப் படுக்கச் சென்ருர். அவர் படுக்கை கொண்டு வராததால், உத்திரத்தில் கட்டித் தூக்கியிருந்த இரண்டு மெத்தைகளில் ஒன்றைப் பழனியாண்டி இறக்கி, மஞ்சள் கடம்புக் கட்டிலில் விரித்துக் கொடுத்தார்.

வீட்டிற்குள் தேவயானை படுத்துக்கொண்டாள். பழனியாண்டி, வாசல்திண்ணையிலிருந்தநார்க்கட்டிலுக்குப் போய்விட்டார். படுத்தபடியே நிலுவைகள் சம்பந்தமாக வழக்கமாகச் சிந்திக்கும் அவர் அன்று அவ்விதம் செய்யவில்லை. சண்முகத்தின் வருகையால் பெற்ற உற்சாகத்துடன் அவர் சீக்கிரமாகவே உறங்கிவிட்டார்.

குளித்து, பழனியாண்டி அதிகாலையில் எழுந்து "பழையதும் சுண்டக்கீரையும்'' சாப்பிட்டுவிட்டுக் கடைக்குப் புறப்பட்டார்.

சண்முகம் எட்டு மணிக்குத்தான் எழுந்திருந்தார். வெந்நீரில் ஸ்நானம் செய்து விட்டு தோசையும் காப்பியும் சாப்பிட்டார். அவர் கடைக்குப் போனபோது மணி பத்தாகிவிட்டது.

அன்று மத்தியானமும் பல வகைக் கறிகளுடன் தேவயானை சமைத்திருந்தாள். ஒன்றிரண்டு நாட்கள் இதையெல்லாம் அனுமதிக்க வேண்டியது தான் என்று எண்ணி பழனியாண்டி தம்மைச் சமாதானப் படுத்திக் கொண்டார்.

காலையில் பலகாரம், காப்பி; மதியம் ஒரு மணிக்கு அறுசுவை உண்டி; மாலையில் கணக்காக நாலரை மணிக்கு டிபன்; இரவிலும் சுடுசோறு என்பதைச் சண்முகம் வழக்கமாகக் கொண்டதுதான் பழனியாண்டியின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

கறிவகைகள் விஷயத்தில் கொஞ்சம் நிதானமாய் நடந்து கொள்ளுமாறு தேவயானையிடம் அவர்

சொல்லிப் பார்த்தார். அவ் வார்த்தை அவளது செவியிலே ஏறவில்லை.

சண்முகத்திற்கு வண்ணான் கூலி அம்பட்டன் செலவே மாதத்திற்கு பதினைந்து ரூபாய் வரை ஆயிற்று. இது பழனியாண்டிக்கு ரஸிக்க வில்லை. அவர் கோடி வெளுப்புக் குப் பிறகு தம் துணிகளை வண்ணானிடம் போட்டதே இல்லை. க்ஷவரமோ மாதம் ஒரு முறை தான்.

கடையில் சண்முகம் உட்கார்ந்த பின் வியாபாரம் சற்று அதிகரித் தது பழனியாண்டிக்கு ஆறுதல ளித்தது. "பட்டறைப் பலகையில் உட்கார அம்சமான ஆள் அத் தான் சண்முகந்தான்" என்று அவர் மனசு கூறியது. கணக்குப் பிள்ளை நத்தை வேகத்தில் மாதக் கணக்காக எழுதும் கணக்குகளை சண்முகம் நாலைந்து தினங்களுக் குள் வரைந்து தள்ளி விட்டார். ஆனால் பிச்சைக்காரர்கள் எல்லோ ருக்கும் அவர் கைகூசாமல் கால ணாக்களை எடுத்துப் போட்டது தான் பழனியாண்டிக்குப் பிடிக்க வில்லை. "தருமம் தலைகாக்கும் அப் பனே! யாருக்குச் சேர்த்து வைக் கப் போகிறோம்!" என்று அவர் சொன்னதைக் கேட்டு பழனி யாண்டி நடுங்கினார்.

பழனியாண்டி இல்லாத சமயத் தில் கடைக்குப் போனால் சாமான் கள் கணிசமாயிருக்கும் என்று வாடிக்கைக் காரர்கள் பேசிக்கொள் வதாக அவரிடம் கணக்குப் பிள்ளை ஒருநாள் சொல்லி வைத்தார். உடனே பழனியாண்டியின் நாடி தளர்ந்து விட்டது. "அங்கேயானால் வீட்டைப் பிடுங்கி விறகாய் எரிக் கிறான். கடையையும் காலி பண் ணிடுவான் போலிருக்கே! முருகா, இவனைக் கூட்டி வந்து ஏன் ஊன்றி னேன்!" என்று அவர் தனிமை யில் சொல்லி அங்கலாய்த்தார்.

ஆனால் சண்முகத்தின் எதிரில் நின்று கண்டித்துப் பேச பழனி யாண்டியால் இயலவில்லை. இந்த அசக்தியின் காரணமும் அவருக் குப் புலப்படவில்லை.

பல ஆண்டுகளாகப் பழனி யாண்டி பெட்டியில் பூட்டி வைத் திருந்த கல்யாணப் பட்டுகளை ஒரு நாள் சண்முகம் அணிந்து கொண்டு கடைக்கு வந்துவிட்டார். "உள்ளே இருந்தால் செல்லரித்துக் தானே போகும்! உடுத்திக் கிழியேன்!" என்று அவள் தாராளமாகச் சொன் னது கண்டு பழனியாண்டி பேச் சற்றுப் போனார்.

பழனியாண்டி தமது கோபத்தை யெல்லாம் தேவயானை மீது செலுத் தினார். ஆனால் அவளோ ஒன்றுக்கு ஒன்பது பதில் சொன்னாள். போதா ததற்கு சண்முகம் தலையிட்டு பழனி யாண்டிக்குப் பாதகமாக மத்யஸ் தம் பேசலானார்.

இன்னொரு நாள் இருநூறு ரூபாய்க்கு பழனியாண்டி கணக்கில் சண்முகம் ஜவுளி தினுசுகளை வாங் கிக் கொண்டு வந்தார். பழனியாண் டிக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட் டது. அவருக்கும் இரண்டு பட்டுக் கறை வேஷ்டியும் அங்கவஸ்திரங் களும் வாங்கி வந்திருப்பதாகச் சண்முகம் சொன்னதும் அவரது வயிறு எரிந்தது. பல மணி நேர மாக அவர் முணு முணுத்துக் கொண்டேயிருந்தார். ஜவுளிகளைத் திரும்பிப் பார்க்கக்கூட மறுத்து விட்டார். அந்தத் துணி மணிகள்

மிகவும் நேர்த்தியாக இருப்பதாகத் தேவயானை சொன்னாள்.

கடைக்கு ஒழுங்காய் வருவதையும் சண்முகம் மறந்து விட்டார். உடம்பு தள்ளாமையாக இருப்பதாகவும் ஓய்வு வேண்டும் என்று அவர் சொன்னார். மத்தியானம் சாப்பிடப் போனால் சூரிய அஸ்தமனத்திற்குப் பின் தான் அவர் கடைப் பக்கம் எட்டிப் பார்க்கலானார்.

சினிமாப் பார்க்க வருமாறு ஒரு நாள் மாலையில் பழனியாண்டியை சண்முகம் அழைத்தார். "என் ஆயுசிலே இதுவரை பயாஸ்கோப் பார்க்காமல் கழிச்சிட்டேன். குறைப் பொழுதையும் அப்படியே கழிச்சுக்கிடுவேன். நீ வேணுமானால் போ!'' என்று பழனியாண்டி சொன்னார். சண்முகம் தாம் மாத்திரம் போகாமல் தேவயானையையும் கூட்டிக் கொண்டு போய்ச் சினிமாக் காட்டி விட்டு வந்தார்.

இதனால் பழனியாண்டி மிகவும் ஆத்திர மடைந்தார். மறுநாள் கடைக்குப்போன பிறகும் அவருக்குப் பொங்கிப் பொங்கி வந்தது. பல மாதங்களாகக் கரைந்து கொண்டு வந்த அவர் உடம்பு அன்று ரொம்பவும் சோர்ந்து விட்டது. வேறு இடம் பார்த்துக் கொள்ளுமாறு சண்முகத்திடம் சொல்லிவிட வேண்டியதுதான் என்ற துடிப்புடன், பிற்பகல் மூன்று மணிக்கு அவர் வீட்டுக்கு ஓடி வந்தார். வாசல் கதவு உள்ளே பூட்டியிருந்தது. படபடவென்று கதவைத் தட்டிக் கூப்பாடு போட்டார்.

"இருங்க, இந்தா வாரேன்!'' என்று சொல்லிக் கொண்டு தேவயானை மாடியிலிருந்து இறங்கி வந்தாள். அவளைத் தொடர்ந்து சண்முகமும் வந்தார்.

பழனியாண்டி பல்லை நெற நெற வென்று கடித்தார்.

"என்னப்பா கடையை எப்படி விட்டிட்டு வந்தாய்!'' என்று சண்முகம் குறும்புச் சிரிப்புடன் கேட்டதும் பழனியாண்டியின் கோபம் வருத்தமாக மாறியது.

"அப்பா, சண்முகம்! ஏதோ இத்தனை நாள் நீ இருந்ததுக்கு வந்தனம். இனி வேறு இடம் பாத்துக்கோ அப்பா! உனக்கும் நமக்கும் சரிப்படாது'' என்று அவர் பரிதாபகரமாகச் சொன்னார்.

"ஓ! இந்த நிமிஷமே நான் புறப்பட்டாச்சு! உன்கூட மணிசன் இருப்பானா!'' என்று சொல்லி விட்டு சண்முகம் மாடியில் ஏறினார்.

"அத்தான் கொஞ்சம் இருங்க! நானும் புறப்படுதேன்!'' என்று சொல்லி தேவயானை வீட்டிற்குள் திரும்பினாள்.

"ஹா! தேவயானை, என்ன சொன்னாய்!'' என்று பழனியாண்டி அலறினார்.

"இங்கேயே கட்டிப் போட்டாப்பிலே இருக்க எனக்குப் பிடிக்கலே! அத்தான் கூட இப்படி நாலெடத்துக்குப் போயிட்டு வாரேன். நீங்க வீட்டைப் பார்த்துக்கிட்டு இருங்க'' என்று தேவயானை நிதானமாகக் கூறினாள்.

"முருகா! முருகா!'' என்று சொல்லி சுவரோடு சுவராய் பழனியாண்டி சாய்ந்து விட்டார். தாம் திடீரென அனாதையாகி விட்டதாக அவருக்குத் தோன்றியது. உலகில்

தாம் இத்தனை வருஷம் வாழ்ந்து வந்திருப்பதாக அவரால் நம்பவே முடியவில்லை.

சுவரில் சாய்ந்தபடியே பித்துப் பிடித்தாற்போல் அவர் நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தார். மாடியில் சண்முகமும், தாழ்வாரத்தில் தேவயானையும் மூட்டை கட்டிக் கொண்டிருந்தனர்.

பழனியாண்டி சட்டென்று நிமிர்ந்து நின்று, "சண்முகம்! தேவயானே!" என்று உரக்கக் கூப்பிட்டார். அவர்கள் இருவரும் அங்கு வந்து சேர்ந்தனர்.

இரும்புப் பெட்டியைப் பழனியாண்டி திறந்து சண்முகத்திற்குக் காண்பித்தார். "அப்பா இதில் இரண்டாயிரம் ரூபாயை மாத்திரம் நான் எடுத்துக் கொள்கிறேன். இன்னும் மூவாயிரம் ரூபாய் பெட்டிக்குள் இருக்கிறது. பாங்கியில் இருபதாயிரம் ரூபாய் போட்டிருக்கிறது. அதை உன் பேருக்கு மாற்றி விடும்படி பின்னல் பாங்கிக்கு எழுதுகிறேன். கடை விஷயமோ உனக்குத் தெரியும். நிலபுலன்கள் பற்றி தேவயானைக்குத் தெரியும். இதை யெல்லாம் வைத்துக் கொண்டு நீங்கள் சந்தோஷமாய் இருங்கள். நான் காசி ராமேஸ்வரத்துக்குப் போகிறேன்........ சண்முகம் நான் வரேனப்பா! தேவயானை போயிட்டு வரேன்!" என்று தழுதழுத்த குரலில் சொல்லி விட்டு பழனியாண்டி வாசலில் இறங்கினர்.



படம்: ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இதை
ஆதரிக்க வேணுமடி பாப்பா —பாரதியார்

படம்: பி. ரங்கநாதன், சென்னை

கோலம் மலர, உன்
கோல் வளைசேர் கைமலர,
காலம் மலர, இக்
காசினி உன்னால் மலர

தமிழர் பண்பாடு

○

கே. எம். கே. அப்துல் காதிர்

பாரத நாட்டின் பண்பாடு பயன் நிறைந்த பண்பாடு. பல கலாசாரங்கள் கலந்து மறைந்து உருவான, இனிமையும் புதுமையும் நிறைந்த பண்பாடு. இப்புண்ணிய பூமியில் இன்று நின்று நிலவும் கலைகளையும் காவியங்களையும் மொழிகளையும் மதங்களையும் ஆராய்ந்து பார்ப்போமானல் அவை உருவாவதற்கு உதவிய பல்வேறு ஜாதிய தேசிய சக்திகளின் நிழலை நாம் அவற்றில் காணலாம். இந்த நன்னுட்டின் எதிர்கால உயர்வை உள்ளத்தில் கொண்ட யாவரும் இந்தியப் பண்பாட்டின் பல்வேறு முகங்களைப் பாதுகாக்கப் பாடுபடவேண்டும். உண்மையில் உரம் தருவதும் உயிர் தருவதுமாகிய சக்திகளை யெல்லாம் ஆர்வத்துடன் இனிது வரவேற்று உபயோகமாய் இந்தியப் பண்பாட்டோடு இணையச் செய்து அதனை வளர்க்கவேண்டும். ஒரு பண்பாடு வாழவேண்டுமானல் அது வளர வேண்டும். வளர்ச்சி என்ருல் மாறுதல். மாறுதல் இல்லாத வளர்ச்சியில்லை. அவ்வப்போது தோன்றிய சமூக, அரசியல் தார்மீக மாறுதல்களை ஏற்றே பண்பாடு பரிமளிக்கிறது.

தொன்மையும் பழமையும், கனிவும் செறிவும் மிகுந்த தமிழர் பண்பாட்டிலும் பல கலாசாரங்கள் கலந்துள்ளன. பண்டைத் தமிழ் நாடு சுதந்திரத் தமிழ் நாடு. சீரும் சிறப்பும் செழிப்பும் விழிப்பும் பெற்ற நாடு. காயும் கனியும் பூவும் பொழிலும் நிறைந்த பூமி. முத்தும் பொன்னும் மணியும் பவளமும் நம் நாட்டில் விளைந்தன. எனவே வர்த்தகமும் வாணிகமும் பெருகின. வேற்றுநாட்டு மக்கள் பலர் விரைந்து இந்நாடு வந்தனர். விருந்தோம்பலில் சிறந்தோங்கிய தமிழர் அம்மக்களை யெல்லாம் அவ்வப்போது வரவேற்று அவர்களுக்கு இடைவிடாமல் உணவு கொடுத்து உடை கொடுத்து நிழல் கொடுத்து எழில் கொடுத்துக் காப்பாற்றினர். தமிழ் நாட்டின் கீர்த்தி உலகெல்லாம் பரவியது.

தமிழ் நாட்டு வணிகர் நேர்மையும் நாணயமும் நிரம்பியவர்கள். வியாபாரத் துறையிலோ அல்லது வேறு எத்துறையிலோ அவர்கள் பொய்யுரை புகலமாட்டார்கள். பொருட்களைக் கொள்ளை விலைக்கு விற்பதில்லை. ஊதியம் சிறிதே பெற்றுப் பெருகிய வாணிகம் நடத்திஞர்கள். பழைய தமிழ் இலக்கியமாகிய 'பத்துப் பாட்டு' என்ற தொகுதியிலுள்ள 'பட்டினப்பாலை' என்ற பாட்டில் அக்கால வணிகரின் நாணயத்திற்குத் தகுந்த சான்று கிடைக்கிறது. சோழர் பழம் பதியாகிய காவிரிப் பூம்பட்டினத்தின் வணிகரது உள்ளச்சிறப்பை அது வர்ணிப்பதைக் காணலாம்:

நடுவு நின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய் மொழிந்து,
தமவும் பிறவு(ம்) ஒப்ப நாடிக்
கொள்வதூஉ மிகை கொளாது
கொடுப்பதூஉக் குறை கொடாது
பல் பண்டம் பகர்ந்து வீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை
[வரிகள் 207-212]

நாணயமான வியாபாரமும் கண்ணியமான ஒழுக்கமும் அயலவரை அன்புடன் ஆதரிக்கும் பேருள்ளமும் கொண்ட தமிழரின் நிழலில் பல அன்னியர்கள் பெருவிருப்புடன் வந்து தங்கினர். கடல் கடந்தும் வந்தனர். ரோமர்களும் கிரேக்கர்களும் மிகப் பழங்காலத்திருந்தே வாணிகத்தின் பொருட்டு தமிழ் நாட்டில் வந்து குடியேறினார்கள். ரோம அரசாது நாணயங்கள் பழந் துறைமுகப் பகுதிகளிலும் தலைநகர ஸ்தலங்களிலும் ஏராளமாய்த் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. ரோமர், கிரேக்கர், அராபியர், சீனர்களின் பண்டக சாலைகள் தமிழ்நாட்டில் ஆங்காங்கே ஏற்பட்டன. காவிரிப்பூம் பட்டினத்தின் கடைவீதிகளில் இந்தியாவின் நாலாவிதப் பகுதிகளிலுள்ள பண்டங்களும், கடல்வழியாய்க் கலங்களில் அயல் நாட்டுப் பண்டங்களும் வந்து குவிந்தன. குதிரைகளும் அயல் நாட்டிலிருந்து கப்பல்களில் கொண்டுவரப்பட்டன.

நீரில் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலில் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப்பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்(து)
ஆக்கமும்
[பட்டினப்பாலை. 185-191]

அங்கு வந்து நிறைந்தன.

வியாபாரம் விரும்பி இங்கு வந்த பிறநாட்டு மக்கள் தமிழரின் உயர் பண்பாட்டாலும் உள்ள நிறைவாலும் ஆகர்ஷிக்கப்பட்டு தமிழ் நாட்டைத் தங்கள் தாயகமாகவே கருதி இங்கேயே தங்கிவிட்டனர். இவர்களில் பலர் கைதேர்ந்த சிற்பிகளாயும் கம்மாளராயும் அரசாது மெய் காவலராயும் தொழில்களில் அமர்ந்தனர். இவ்வாறு வந்து தங்கியவர்களையே 'யவனர்' என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவர்கள் நாளடைவில் தமிழரொடு தமிழராய்க் கலந்து இணைந்துவிட்டனர்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அராபியாவில் இஸ்லாம் என்ற புதிய மதம் தோன்றியது. உறங்கிக் கிடந்த அராபியர்கள் அதன் மூலம் புதியதோர் ஜீவ சக்தியைப் பெற்று உலகம் வியக்கும் வண்ணம் ஒரு பலம் பொருந்திய பேரரசை நிர்மாணித்தார்கள். வாணிகத்துறையில் அவர்கள் அளவற்ற ஆர்வம் காட்டினார்கள். கீழ் நாடுகளுடனும் மேல் நாடுகளுடனும் தொடர்பு வைத்துக்கொண்டு பெரு வாணிகம் செய்தார்கள். தமிழ்நாட்டின் வளமான பண்டங்களை வாங்கி பிறநாடுகளில் விற்றார்கள். தமிழரின் இனிய பண்பாட்டைப்பற்றி வெகுவாய் அறிந்து வியந்தார்கள்.

கி. பி. 9-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எகிப்தில் வாழ்ந்த அராபிய வணிகக் குடும்பங்களுக்குப் போராபத்து வந்தது. நாடு, நெறி திறம்பிய மன்னன் ஆட்சியால் சீர்குலைந்து, நன் மக்கள் நாட்டை விட்டுக் குடும்பத்துடன் வெளியேறினர். அவர்களில் சிலர் தமிழ்

நாட்டில் தஞ்சம் அடையத் துணிவு கொண்டு கலங்களில் ஏறிச் சொல்லொணுத துன்பம் அடைந்து ஒருவாறு தென் குமரியைக் கடந்து பாண்டி நாட்டின் துறைமுகமாகிய காயலில் வந்து இறங்கினுர்கள். பாண்டிய மன்னனைக் கண்டு தங்கள் பரிபவத்தைக் கூறித் தமிழ்நாட்டில் குடியேற அனுமதி கேட்டார்கள். அரசர் அந்த அகதிகளுக்கு 'அஞ்சேல்' என அபயம் கொடுத்தார். சீர்குலைவுற்ற அவர்கள் வாழ்க்கை சீர்பெற வேண்டிய சாதனங்களும் தந்தார். அவர்களது உரிமைகளையும் கடமைகளையும் வகுத்துத் தாமிரப் பட்டயமும் கொடுத்தார். அப்பட்டயம் தமிழரின் மாண்பை உலகிற்குப் பறைசாற்றும் ஒரு அழியாத சின்னம். தமிழரின் பண்பாட்டின் பிரதி பிம்பம். அதிலுள்ள சில பகுதிகளைக் கீழே தருகிறேன்:—

"........அறபி நாட்டு மிஸறு (எகிப்து) தேசாதிபதியின் கொடுங்கோலுக் கஞ்சி, மரக்கல யாத்திரையாய்க் கர்த்தர்களின் தேசச் செம்பி நாட்டில் பாசறை வகுத்து கர்த்தர்களின் சமூகம் கொடுத்து அங்நாட்டில் குடியேறியிருக்கத் தாமிரப் பட்டயம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டவர்களின் வம்சமும் எண்ணிக்கையும்:

ஆசீம் வம்சத்தார் (23)
பக்கிரி வம்சத்தார் (39)
பாறூக்கு வசம்சத்தார் (43)
உமையா வம்சத்தார் (14)
ராணுவ யுத்தர்....... (16)
க்ஷவரகன்...... (3)
நாச்சியார் பெண்டு (9)
நாச்சியார் பெண்டு (16)
நாச்சியார் பெண்டு (24)
நாச்சியார் பெண்டு (5)
பெண்...... (6)
பெண்...... (1)
அடிமை (4)
அடிமை (7)
அடிமை (12)
அடிமை (2)

இவர்கள் ஒரு மனப்பட்டு, முஹம்மது கல்ஜிக்குத் தாமிரப் பட்டயங் கொடுக்கக் கேட்டுக் கொண்டபடியால், இந்தக் குடியானவர்கள் மிஸறு தேசத்து காயிறான் (கெய்ரோ) ஊரில் வசித்தவர்களானபடியால் தாமிரப் பட்டயங் கொடுக்கு மூருக்கு **காயிறான் பட்டணமென்று** நாமமும், **மரக்கல யாத்திரையாக வந்ததற்காக இவர்களுக்கு மரக்கலராயர் என்ற நாமமும் நாம் சூட்டித்** தாமிரப்பட்டயங் கொடுக்க உத்தரமருளி அரண்மனையார் கற்பித்தது.

"தூதுகுடி மாரியம்மன் கோவிலுக்கு மேற்கு, சிவந்தார் குளம், முத்தையர் புரம், முள்ளக்காடு, கோபுரங்காடு, மஞ்சனக் காயல், கொற்கை, குலைநெல் கரிசை, முக்காணி, கொலுவுத்துரை, ஆற்றூர், அதைச் சேர்ந்த மங்கலம், சொர்க்கப் பிள்ளை கரை, பின்னைக் காயல், ஆவாங்காடு, தண்ணீர்ப் பந்தல், கீரனூர், நல்லூர், அம்மன் புரம், பள்ளிப் பத்து, மணற்காடு, ராஜமன்னியபுரம், வீரபாண்டியன், மங்களபாடி இவைகளடங்கிய குடிகளுக்கு முகம்மது கல்ஜி மரக்கலராயன் கற்பனையும், அவனுக்கு இறைவரி செலுத்தக் கடமையும் பளமும், பள்ளிப்பத்து அம்மன் புரங்கண்டு முதல் லாபத்தில் ஜெப

ஆலயங்கள் கட்டபாதியும், தண்ணீர்ப்பந்தல் கண்டு முதலில் மரக்கலராயனுக்குப் பாதியும்பளமும், கன்னிமுதல் மன்னார் மணல் மேடு இராமேஸ்வரம் வரை, இந்தக் குடியானவர்கள் சலாபமுத்துக் குளிக்க அம்பள வும்பளமும், தூதுகுடி மாரியம்மன் கோவிலுக்கு தோணி 1-க்கு 20 முத்துச் சிப்பியும் மரக்கலராயனுக்கு தோணி 1-க்கு 30 முத்துச்சிப்பியும் சித்தன் லாசருக்கு 20 முத்துச் சிப்பியும், அம்பள வும்பள நிந்தமும்.

"அந்தந்த வருஷம் மகர மாசத்தையில், அரண்மனைக்கு மாரக்கலராயன் 90 பொன்னும் உப்பு லாபத்தில் 100 பொன்னுக்கு 25 பொன்னும் செலுத்தி விடக் கடமையும், ஒரு பொன் எடையும் அதற்கு மேம்பட்ட ஆணிமுத்தும், வலம் புரிச் சங்கும் அகப்பட்டால், அவைகளை மரக்கலராயன் அரண்மனைக்குச் சகல மேளவாத்தியத்துடன் செலுத்தி விட அரண்மனைக் கற்பனையும்.

"அரண்மனையார் உத்தரவிற்கு நாஞ்சி நாட்டு அதிபன் கொடுத்த வண்ணான் (5) ரெட்டியாபட்டி பாளைய கிருஷ்ண நாயக்கன் கொடுத்த புதிய முத்தூர் மேளவாத்தியக்காரன் (5)க்கும் குடியானவர்கள் செலவு கொடுத்துக் கொள்ளவும். பக்கிரி வம்சத் தலைவன் முகம்மது கல்ஜி மரக்கலராயன் தேசாதிபதி: பாறாக்கு வமிசத் தலைவன் உமறு மஸ்கூறு நியாயாதிபன்: ஆசீம் வம்சத் தலைவன் கமாலுதீன் கடலதிபதி: உமையா வமிசத் தலைவன் சுபைறு அடையல், முடையல், ஊர் மணியம்; ராணுவ யுத்தர்கள், ஊர்க்காவல், நாட்டுக் காவல், கன்னி முதல் சேல மகரம் வரையுள்ள அரண்மனை குதிரைப் பாடிகளில் இந்தக் குடியானவர்கள் குதிரை விற்பனை செய்து கொள்வதை, அரண்மனைக் காவலர், பாளையக் காவலர் தடை செய்யக் கூடாது. சந்திராதிக்கம், சந்திர சூரியப் பிரவேச முள்ள வரைக்கும், அம்பள வும்பள சுதந்தரராக"

"சகாப்தம் எ௱கூயஅ (798) ஆண்டு கீலக வருஷம், மீன மாசம் சுக்கிரவாரம் உத்திர வேளையில்... ... இந்தத் தாமிரப் பட்டயம் வெட்டி வரைந்து எழுதினேன் வீரவ நல்லூர் ஈகன மூர்த்தி யாசாரி."

இந்த அபூர்வமான சாசனத்தைப் படிக்கப் படிக்க நாம் வியப்பும் மகிழ்ச்சியும் ஒருங்கே அடைகிறோம். பிறந்த நாட்டை விட்டு ஓடித் தப்பி அகதிகளாய் வந்தடைந்த அன்னியர்க்குத் தமிழ் நாட்டில் இத்தனை வரவேற்பா? அதிலும் எவ்வளவு உரிமையும் சலுகையும்! கடற்கரைப் பகுதிகளில் குடியேற உரிமையும் முத்துக் குளிக்கவும் உப்பு விளைவிக்கவும் குதிரை வியாபாரம் செய்யவும் சலுகைகளும் எவ்வளவு தாராளமாய் வழங்கப்படுகின்றன. பெரிய அரசுக்குள் அடங்கிய சிற்றரசு எனவே அவர்களைக் கூற வேண்டும். அவர்களது நிர்வாகம் தான் எவ்வளவு திறமையுடன் வகுத்துத் தரப்பட்டுள்ளது! ஒருவர் தேசாதிபதி; மற்றொருவர் நியாயாதிபதி; பின்னொருவர் கடலாதிபதி; மணியம் ஒருவர். இன்னும் அவர்களது ஊழியத்திற்கு வேண்டியவண்ணார், மேளக்காரர், அம்பட்டர் முதலி

பாலிசிதார்களுக்கும், பங்குதார்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் மற்றும் சொசைட்டியை ஆதரிக்கும் அனைவருக்கும்

பொங்கல் வாழ்த்துக்கள்

உழைப்பின் பயனாய் தானியம் சேமித்து
பொங்கல் நன்னாளில் சந்தோஷிப்பது போல,
குடும்ப பாதுகாப்பிற்கு வருவாய் காலத்தில்
லைப் இன்ஷ்யூரன்ஸ் செய்து முதுமைக்காலத்தில்
கவலையின்றிருக்கவும்.

தலைமை ஆபிஸ்: **கோயமுத்தூர்**

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொசைட்டி லிமிடெட்

பிராஞ்சு, சப் ஏஜன்சி ஆபீஸ்கள்: **தமிழ்நாடு முழுவதும்**

ஸ்ரீ T. A. ராமலிங்கம் செட்டியார், B.A., B.L.,
(அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்) தலைவர்.

M. S. பழனியப்ப முதலியார், B.A.,
மானேஜிங் டைரெக்டர்.

★

C. R. சிவசுப்பிரமணியம், B.A.,
செக்ரெடரி.

"ஜெ" மார்க்

மிஸ்கி பெருங்காயம், குங்குமப்பூ பச்சகர்பூரம், சூடம்

கிடைக்குமிடம்:

கோபால்ஜி அண்ட் கம்பெனி

203, கோவிந்தப்ப நாயக்கன் தெரு

ஜி. டி. சென்னை

டெலிபோன்: **3425**

காந்திஜி நூல்கள்

சத்திய சோதனை	ரூ.	6	0
மாணவருக்கு	ரூ.	5	0
பெண்களுக்கு	ரூ,	3	12
ஹிந்து முஸ்லிம் பிரசினை	ரூ.	6	0
சமஸ்தானப் பிரசினை	ரூ.	6	0
ஆரோக்கிய வழி	ரூ.	1	4
இந்திய சுயராஜ்யம்	ரூ.	1	0
சுயராஜ்யம் வேண்டாமா?	ரூ.	1	0
நான் மந்திரியானால்	ரூ.	1	0
அணுகுண்டும் அஹிம்சையும்	ரூ.	1	4
காந்தி வழி 2	ரூ.	1	0
அணுசக்தி யோகம் (கீதை)	ரூ.	1	4
இல்லறமும் பிரமசரியமும்	ரூ.	1	0
உத்தம வாழ்க்கை	ரூ.	0	8
நமது மொழிப் பிரசினை	ரூ.	2	8
ஹிந்து தர்மம்	ரூ.	0	8
மஹா தியாகம்	ரூ.	0	12
காந்திமஹான் கதை கொத்தமங்கலம் சுப்பு பாடியது	ரூ.	5	0
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் திரு வி.க.	ரூ.	5	0

(தபால் செலவு தனி)

சக்தி காரியாலயம்—சென்னை 14.

யோரையும் பாண்டி மன்னன் திட்டம் செய்து உதவுகின்ருன்.

மரக்கலராயர் என்ற பெயர்தான் எவ்வளவு அன்புடனும் அழகுடனும் சூட்டப்படுகின்றது. அத்தமிழ் மன்னனின் வண்மைக்கும் ஒண்மைக்கும் சான்ருக இன்று தமிழ் நாட்டில் அம் மரக்கலராயரின் வகுப்பினர் மரக்காயர் என்ற பெயருடன் கடற்கரைப் பகுதிகளிலெல்லாம் பல்கிப் பெருகிச் சிறந்த வணிக மன்னர்களாய் வாழ்கின்றனர். தமிழர்களாகவே மாறிவிட்டனர். தமிழ் வளர்க்கின்றனர். தமிழ் வளர்த்த தந்தையாகிய சீதக்காதி மரக்காயரும் இவ்வகுப்பில் தோன்றியவரே.

மரக்காயர் பரம்பரையில் வந்த ஒருவரது பெயர் சரித்திரத்தில் தனிச் சிறப்பும் பெற்றது. ஸையத் ஜமாலுத்தீன் என்ற அரபி நாட்டு முஸ்லிம் தமிழ் நாட்டில் 13-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருந்தவர். அரேபியாவிலிருந்து நல்ல உயர் சாதிக் குதிரைகளைத் தென்ஞட்டில் இறக்குமதி செய்யும் ஏகபோக உரிமையைப் பாண்டிய அரசரிடம் பெற்ருர். காயல் பட்டினமே அவரது தலைமைக் காரியாலயஸ்தலம். அரசர்க்கு அடுத்த பெருஞ் செல்வராய் அவர் விளங்கிஞர். எத்தனையோ மரக்கலங்கள் அவரது ஏவலில் இருந்தன. அவரது கப்பல்கள் செங்கடலில் இருந்து சீனம் வரைச் சென்று பொன்னெடும் பொருளோடும் திரும்பும். உலகியலறிவும் நூலறிவும் மிகுந்த அவர் பிறரை வயமாக்கத் தக்க பேச்சுத் திறமையும் உடையவர். அரசர் சுந்தர பாண்டியத் தேவரின் பேரன்பையும் பெருநட்பையும் பெற்றவர். கி. பி. 1286-ல் பாண்டிய மன்னர் சீன அரசர் குப்ளைகானிடம் ஒரு தமிழர் தூது கோஷ்டியை அனுப்பிய பொழுது அதன் தலைவராக ஸையத் ஜமாலுத்தீனே தெரிந்தெடுக்கப்பட்டார். சீனச் சரித்திரம் இதற்குச் சாட்சி பகர்கிறது. இலங்கையில் பராக்ரமபாகு ஆண்ட நாளில் (1288-1293) பாண்டியர் இலங்கை மீது படையெடுத்தனர். அப்படைகளுக்குச் சேஞதிபதியாக ஜமாலுத்தீனே நியமிக்கப்பட்டனர். பாண்டி மன்னர் சபையில் இவருக்கு எவ்வளவு மதிப்பும் எத்துணை நம்பிக்கையும் உள்ளம் கலந்த நல்லெண்ணமும் இருந்தது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ஹிந்து, முஸ்லிம் என்ற பேதம் எள்ளளவும் இன்றி தமிழ் நாட்டில் சௌஜன்யமும் சந்துஷ்டியும் அன்று முதல் இன்றும் நிலவுகிறது.

தமிழர் தமக்குச் செய்த தலையாய நன்றியை தமிழ் நாட்டு முஸ்லிம்கள் என்றும் மறந்ததில்லை. வடக்கேயிருந்து முஸ்லிம் அரசர்களும் தளபதிகளும் போர் கொண்டு தென்னடு வந்தபொழுது தமிழ் நாட்டு முஸ்லிம்கள் தமிழரோடு தோள் தட்டி நின்று அவர்களை எதிர்த்து வீரப்போர் செய்தனர். மாலிக்காபூர் என்ற சேஞதிபதியை எதிர்த்த வீரபாண்டியரின் சேனையில் 5000 முஸ்லிம் குதிரை வீரர்கள் இருந்தனர் என்று அக்காலச் சரித்திரக்காரரான குஸ்ரூ குறிப்பிடுகின்ருர். ஹிந்து மன்னரின் கீழ் முஸ்லிம் படைகளை எதிர்த்துப் போராடிய அத் தமிழ் முஸ்லிம்களின் உள்ளப்பாங்கை உணர்

ந்து கொள்ள அச் சரித்திரக் கார ருக்குப் போதிய திருஷ்டி இல்லை. ஆகையால் அவர்களை ஏளனமாகவே அவர் குறிப்பிடுகின்றார். "இவர்கள் பாதி ஹிந்துக்களே. மத வைராக்கியமோ ஒழுக்கமோ இல்லாதவர்கள். மரணம் தான் இவர்களுக்குச் சரியான தண்டனை. எனினும் இவர்கள் கலிமாச் சொல்ல அறிந்திருந்த படியால் பிழைத்துப் போனார்கள்'' என்று அவர் எழுதுகிறார்.

வடநாட்டு முஸ்லிம் அரசர்களின் தென்னாட்டுப் படையெடுப்பால் இங்குள்ள ஹிந்துக்களைப் போலவே முஸ்லிம்களும் பெருந் துன்பமும் துயரமும் அடைந்தனர். டெல்லி மன்னன் குத்புதீன் முபாரக்ஷா காலத்தில் (கி. பி. 1317) அவனது தளபதி குஸ்ருகான் தமிழ்நாட்டின் மீது தண்டெடுத்து வந்தான். மதுரையைத் தாக்கிப் பிடித்தான். பாண்டியர் பிரதானிகளில் ஒருவராய் ஸிராஜுத்தீன் தாகீ என்பவர் மதுரையில் இருந்தார். முஸ்லிம் என்பதற்காக அவரை குஸ்ருகான் விட்டுவைக்கவில்லை. அவர் மாளிகையைச் சூறையிட்டது மல்லாமல் அவரது குடும்பத்தினரையும் கைது செய்தான். அவரது அழகிய மகளையும் மண முடித்துத் தரவேண்டுமென வம்பு பேசினான். மானமழிந்தபின் உயிர் வாழாமை முன்னினிதே என்ற தமிழனது தன்மானக் கொள்கையைக் கொண்டே ஸிராஜுத்தீன் விஷமருந்தி உயிர் துறந்தார்.

சமீப காலத்தில் இந்திய நாட்டின் பிறபகுதிகளில் வகுப்பு மாச்சரியம் மிகுந்து கொலைகளும் கொள்ளைகளும் நடந்த பொழுது தமிழ் நாட்டில் அமைதியும் சந்துஷ்டியும் நிலவி வந்ததைக் கண்ட பிறர் ஆச்சரிய மடைந்தனர். தமிழர் வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்ட விநோதம் அவர்களுக்குப் புரியவில்லை. தமிழரின் தனிப் பண்பாடு அது.

ஐந்தொகை

○

" துறைவன் "

விட்டத் துக்கரை முனையிலே—நூலை
வீசிச் சிலந்தி முடிந்தது
வட்டப் பெருவழி பின்னிட—கெடு
வஞ்ச வலையொன்றிழைத்தது
நட்டநடுவில் அமர்ந்தது—புது
நாகரிகத் தவம் செய்தது
எட்டியிருந்திது நோக்கினேன்—என்
எண்ணம் வலையிடைப்பட்டதால்.

எண்ணமெனும் வலை வீசியே—சுற்றி
ஏதேது பற்ற நினைத்துளேன்
நண்ணும் சிறுபலி பற்றிட—அது
நாகமெனச் சினந்தாடியே
கண்ணிற் புழுதியை வீசியே—எங்கோ
காற்றில் விழுந்து மறைந்ததால்.
பண்ணும் வலைதரும் ஊதியம்—இந்தப்
பாங்கில் விளைந்தது, தோழரீர்!

ஏடுகள் கோடி புரட்டினேன்—எனில்
எட்டுணை நெஞ்சம் தெளிந்திலேன்
காடுகள் சுற்றி அலைந்தபின்—என்
கால்வலி மீந்தது வேறிலை.
கூடுதிரும்புதல் என்றடா—பொய்மைக்
கோள்கள் இரங்கிடல் என்றடா?
வீடும் அமைதியை ஈனுமோ?—அன்றி
வேறெது செய்திடக் காண்பமோ?

தொண்டை வறண்டது, நாவெலாம்
தோன்றின கெட்ட தழும்புகள்!
பண்டைக் கதைகளைப் பேசினேன்—புதுப்
பாதைகள் நன்றெனக் காட்டினேன்
அண்டையிற் சென்று தெருட்டினேன்—என்
ஆசையா வித்தனை செய்குவேன்
கண்டவர் வேகட்க மறந்தனர்—முற்றும்
கேட்டவர் செய்கை துறந்தனர்.

கற்களை வீசி யெறிந்தனர்—படு
காயங்களேதும் நான் பட்டிலேன்
சொற்களை வீசி யெறிந்திடும்—ஒரு
சூனியக்காரனென் றேசினர்
பற்கள் நறநறென்றுார்த்தன—வசை
பாணங்கள் வந்தெனைத் தைத்தன
விற்க நினைத்தங்கு போனநான்—பெரும்
வேதனை யொன்றையே வாங்கினேன்

வீட்டினை எண்ணிடு நெஞ்சிலே—பழ
வேதனை மூண்டு கனிந்தது
கேட்டு முடிந்த தோர் பாட்டென—அது
கிண்டும் நினைவுகள் சூழ்ந்தெனை
வாட்டி வருத்திடும் நாளெலாம்—இந்த
வாதை தவிர்த்திடு மூலிகை
காட்டிடை எங்கெனத் தேடுவேன்—பாசக்
கட்டவிழ்த்தெங்கு நான் ஓடுவேன் ?

பெற்று வளர்த்த தொரு மகள்—தந்தை
பிள்ளை பிராயத்திற் காத்தனன்
உற்ற துணைவரும் தூற்றுவர்—உளம்
ஒட்டிய காதற் பிணிப்பிலே
பற்று வளர்த்தது சுற்றிலும்—செழும்
பந்தர் அடர்ந்தெனைத் தின்றது
ஏற்றி தெளிவினில் ஏகிட—வழி
ஏதும் புலப்படலின்றியே

சுற்றிச் சுற்றி பல திங்களாய்—எங்கும்
சோதனை, சோதனை, சோதனை,
கற்றது கேட்டதுணர்ந்தது—யாவும்
கைதரச் சற்றும் வலியில
வெற்றியை வேண்டி யலைந்ததும்—தோல்வி
வெற்புகள் தோன்றித் தடுத்ததும்
முற்றுகை செய்திடர் மாய்த்ததும்—வழி
மூண்டிங்கு பின்னும் அழைக்குமால்!

கன்னியொரு மகள் கண்ணிலே—தெய்வக்
காதலைக் கண்டுத் திகைத்தனன்!
பின்னிடையுற்றது முன்னைநாள்—மனம்
பேதைமைக் கண்ணியில் வீழ்ந்திட
தின்னும் இளமைத் தழலினில்—ஓடித்
தேடிய ஞானம் கரிந்துகப்
பின்னும் அழைத்தது ஓர் குரல்—சிறு
பேச்சினை விட்டுத் தொடருவேன்

பட்டினியிலிருந்து
நம்மை டீ எப்படிக்
காப்பாற்றுகிறது?

அயல்நாட்டு நாணயச் செலாவணி நம் நாட்டுக்கு இன்று மிகவும் அவசியமாக இருக்கையில், நாம் ஏற்றுமதி செய்யும் 40 கோடி பவுண்டு தேயிலை, அவசியமான உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஏராளமான தொகையை அளிக்கிறது. டீ நம் நாட்டு கலாசாரத் தூதர் மட்டுமல்ல, பட்டினியைத் தடுக்க உத்திரவாதமும் அளிக்கிறது. ஏற்றுமதித் தொழிலில் இரண்டாவதாக நிற்கும் டீத்தொழில் நாட்டின் பொருளாதாரத் துறையில் பிரதான ஸ்தானம் வகிக்கிறது.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்

* ஏழு லக்ஷம் ஏக்ரா நிலத்தில் வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு டீ உற்பத்தி செய்கிறோம்.
* இத் தொழிலில் 10 லக்ஷம் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.
* உள் நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணா வரியும், ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணா வரியும் சர்க்காருக்குக் கிடைக்கிறது. நாட்டு கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
* மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ

ஒரு மகத்தான இந்தியக் கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

லிப்டன்ஸ்

என்றால்

முதல்தரமானதே

LTX-151-TM

பாட்டினில் நெஞ்சை உருக்கியே—சுற்றிப்
பாய்ச்சி யமைதியைத் தேடினேன்
ஏட்டினில் முந்தையர் சொல்வலி—தேக்கும்
எண்ணக் குகையி னுழைகுவேன்
காட்டிய காணத்திறனிலேன்—வெறும்
கட்டி யிருட்டெனைச் சூழ்ந்ததால்
தேட்டம் அடங்கிடும் நாழிகை—தனை
தேடி யலைந்திட எண்ணினேன்

திண்ணை நரைத்துத் திரங்கிடும்—சாவைத்
தேடியலுக்கும் வயோ திகம்
மண்ணிற் புரண்டு சுழன்றிடும்—புது
மாயக் குழந்தையின் பம்பரம்
கண்ணைக் கடலெனப் பேசுவான்—தெய்வக்
காதல் எனப்படும் போதையில்
திண்ணம் இவையொரு மூன்றுமே—இங்கு
தீர்ந்திடும் நாடகக் காட்சிகள்

கேட்கும் செவிகளை நம்பியே—அவை
கேட்டிட நாளெல்லாம் பாடினேன்
நாட்கள் குவிந்தன, ஆண்டுகள்
நாடி எனைவந்து கேட்டன
"ஆட்கள் நிரம்பிய வையகம்—அதில்
ஆருனைக் கேட்டவன் சொல்லடா?
வேட்கையும் தீர்ந்திடவில்லையோ?—காலம்
வீண்படவில்லையோ?" என்னுமால்

பாடியலுத்தது வாயெனில்—கவிப்
பாட்டை நிறுத்திடல் இல்லைகாண்
தேடமறந்தது வண்டெனில்—மலர்
தேனிதழ் மூடித்தருக்குமோ?
ஊடல் இழைத்தனள் காதலி—எனில்
உள்ளமும் கண்ணும் உறங்குமோ?
நாடிய நண்ணும்வரையிலும்—சென்ற
நாட்களை நம்புதல் இல்லைகாண்!

வதந்திகளை நம்பாதீர்கள்!

வி. கே. சி. நடராஜன்

"வதந்திகளை நம்பாதீர்கள்" என யுத்த காலத்தில் விளம்பரம் செய்து வேண்டிக் கொண்டார்கள். ஆனால் வதந்திகளை நம்பாமல் இருந்தோமா என்றால் இல்லை. சமீப காலத்தில் நம்மிடையே ஒரு வதந்தி பரவி வருகிறது. யுத்த காலத்தில் விலைவாசிகள் விறு விறு என ஏறியதும், அதனால் ஆயிரக் கணக்கில் வைத்திருந்தவர்கள் லக்ஷக் கணக்கிலும், லக்ஷக் கணக்கில் வைத்திருந்தவர்கள் கோடிக் கணக்கிலுமாகச் சம்பாதித்ததை நாமறிவோம். ஆலைகளிலும் ஆபீஸ்களிலும் நாளெல்லாம் பாடுபட்டு உழைத்துப் பெற்ற போதாத ஊதியத்தை வைத்துக் கொண்டு வாழ்க்கை வசதிகளில் பலவற்றை இழந்து மனம் புழுங்கி மயங்கி நின்ற நாம், கள்ள மார்க்கெட்டுகளில் கொள்ளை லாபம் அடித்த இந்தப் பேர்வழிகளைப் பார்த்து "நாமும் இவர்களுடைய தொழிலை மேற்கொண் டிருந்தோ மில்லையே" என எண்ணிப் பெருமூச் செறிந்ததும் உண்டு. ஆனால் இவர்களோ எனில், விவசாயிகள் தான் யுத்தத்தில் பெரும் பயன் அடைந்தவர்கள் எனக் கதைக்கிறார்கள். சூழ்நிலையும் இவர்களுக்குத் துணை செய்கிறது. நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை விலை கொடுத்து வாங்கப் போனால், ஒரு படி அரிசி ஒன்றரை ரூபாயாக விற்பதைக் கண்டவுடன், இவர்கள் கூற்றை முழுக்க முழுக்க நம்பி விடுகிறோம்.

எப்போதுமே சொல்கின்ற விஷயத்தை ஏனென்று கூடக் கேட்காது அப்படியே நம்பிவிடுவது என்பது மிகவும் எளிது. சொன்னதில் உள்ள உண்மையை ஆராய்ந்து உண்மைக்கு மதிப்பு கொடுப்பது தான் அறிவுடைமை. ஆகவே "யுத்தத்தால் பெரும் பயன் அடைந்தவர்கள் விவசாயிகள் தான்" என்ற வதந்தியும் ஆராய்ச்சிக்குரிய விஷயமே.

"யுத்த காலத்தில் பெரும் பயன் அடைந்தவர்கள் விவசாயிகள்." என்று சொல்வதில் உள்ள உண்மையை அறிய இந்திய விவசாயத் தொழிலையும் அதன் அமைப்பையும் பற்றி ஒரு சில விபரங்களைத் தெரிந்து கொள்வது நல்லது. இந்தியாவில் உள்ள தொழில் துறைகளிலேயே மிகப் பெரியது விவசாயம். இந்திய ஜனத்தொகையில் பெரும்பான்மையினர் தங்கள் ஜீவனத்திற்கு நிலத்தை நம்பித்தானிருக்கிறார்கள். 1931-ம் வருஷ ஜனசங்கியைப் பிரகாரம் விவசாயச் சாகுபடி செய்பவர்கள் சுமார் *1031 லக்ஷம் பேர்கள். இவர்

* 1031 லக்ஷம் பேர்கள் என்பது நேரடியாகச் சாகுபடி செய்பவர்களை மாத்திரம் குறிக்கும் புள்ளி விவரமாகும். இதிலே பெண்களையும் விவசாயிகளைச் சார்ந்தவர்களையும் சேர்க்கவில்லை. சேர்க்கப்படாதவர்கள் தொகை இதைப் போல் ஒரு மடங்குக்கு மேலேயே இருக்கும். அவர்களையும் சேர்த்தால் தொகை ஏராளமாகப் பெருகிவிடும்.

ருஷ்ய நாட்டின் தந்தை லெனின்
(1870 — 1924)

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மை யுறக் குடிமை நீதி
கடி ஒன்றில் எழுந்தது பார்; குடியர(சு) என்று
உலகறியக் கூறிவிட்டார்

—பாரதியார்

களில் ஏறக்குறைய மூன்றிலொரு பிரிவினருக்குத் தான் சொந்த நில முண்டு; மற்றவர்கள் சொந்த நில மில்லாதவர்களே. சொந்த நில முடையவர்களிலும் 20 அல்லது 30 லக்ஷம் பேர்கள் தான் நிறைய நிலம் படைத்த பெரும் பண்ணை யாளர்கள். மொத்தத்தில் இந்தியாவில் சாகுபடியாகிய நிலப்பரப்பு ஏறக்குறைய 2441 லக்ஷம் ஏக்கர்களாகும். இதில் பாதி இந்தப் பெரும் பண்ணையாளர்கள் கையிலிருக்கிறது. தலைக்கு ஐந்திலிருந்து இருபத்தியைந்து ஏக்கர் வரை நிலமுள்ள நடுத்தர விவசாயிகளின் தொகை சுமார் 90 அல்லது 100 லக்ஷங்களிருக்கும். மிகுதியுள்ள 200 அல்லது 220 லக்ஷம் பேர்கள், ஐந்து ஏக்கர்களுக்குக் குறைந்ததும், சொந்த ஜீவனத்திற்குக் கூடக் கட்டிவராததுமான நிலப்பரப்பையுடைய ஏழை விவசாயிகளாவர். இந்தப் பின்னிரண்டு பிரிவினருக்குமிடையே தான்சாகுபடியாகிற மொத்த நிலப்பரப்பின் பிறிதொரு பாதி இருக்கிறது. ஏழை விவசாயிகளைத் தவிர, நடுத்தர விவசாயிகளில் சிலரும், பண்ணையார்களில் பலரும் நேரடியாகத் தாமே முன் நின்று உழுது பயிரிடும் விவசாயிகள் அல்ல. ஆனால் பிறர் உழைப்பால் பிழைப்பு நடத்துகிறவர்கள். இவர்கள் தங்கள் நிலங்களை வாரத்திற்கோ குத்தகைக்கோ விட்டு விடுகிறார்கள். நிலமில்லாதவர்களில் சுமார் 360 லக்ஷம் பேர்கள் இப்படி வாரத்திற்கோ அல்லது குத்தகைக்கோ விடப்படுகிற நிலங்களைப் பெற்று பயிர் செய்யும் விவசாயிகள். இவர்களையெல்லாம் தவிர நிலமென்பது அறவே இல்லாத விவசாயக் கூலித் தொழிலாளர்களும் இருக்கின்றனர். இவர்கள் மற்றப் பிரிவினர்களை நம்பித்தான் வாழ்கிறார்கள். இவர்களுடைய தொகை சுமார் 335 லக்ஷங்களாகும். இந்தப் புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு நமது நாட்டு விவசாயத் தொழிலைப் பார்த்தால், மிகச் சொற்பமானவர்களே போதிய அளவும், அதற்கு மேலும் நிலம் படைத்தவர்கள், எஞ்சியுள்ளவர்கள் எல்லாம் பற்றாக்குறை ஜீவனம் செய்பவர்களே என்ற உண்மை புலனாகும்.

மேல் நாட்டிலே விவசாயம் வியாபாரத்திற்கு வித்து. அங்கு நடக்கும் விவசாய உற்பத்தியில் பெரும்பகுதி விற்பனை பண்ணுவதற்காகவே. ஆனால் இந்திய விவசாயமோ எனில் ஜீவிக்க ஒருவழி. தங்களுக்குத் தேவையான உணவு உற்பத்தி பண்ணும் சாதனமாகத் தான் விவசாயத்தைக் கருதுகிறார்கள். சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ள நிலப்பரப்பில் பாதிதான் உணவு உற்பத்திக்கு உதவுகிறது. அடுத்த பாதி ஆக்கும் தொழில்களுக்குத் (Manufacturing Industries) தேவையான மூலப்பொருள்களையும் (Raw Materials) மற்றும் விற்பனைக்கெனவே பயிரிடப் பெறும் சில விவசாயப் பொருள்களையும் (Commercial Crops) உற்பத்தி பண்ண உதவுகிறது. விற்பனைக்கெனவே விவசாயப்பொருள் உற்பத்தியைக் கையாளும் ஏழை விவசாயிகள் கிடையவே கிடையாது. தங்கள் சுய தேவைகளுக்காகவே பயிர்த்தொழில் பண்ணுபவர்கள்தான் பெரும்பான்மை

யோர். இவர்களுடைய தேவைக்குப்போக மிச்ச முள்ள பொருள்களைமட்டுமே விற்கிறார்கள். அதுவும் மிக மிகக் குறைந்த அளவில்தான். இதிலிருந்து என்ன வருமானம் வந்துவிடும்? நிலம் நிறைய உடைய பண்ணையார்களோ எனில் நிலத்தைக் குத்தகைக்கு விட்டு, வருகின்ற மகசூலில் 70 சத விகிதத்தை குத்தகையாகப் பெற்று, உழவனைச் சுரண்டிப் பிழைக்கும் பேர்வழிகள். மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள இந்த நிலப் பிரபுக்களும் நடுத்தர விவசாயிகளில் சிலரும் தங்களுக்கு வாரமாகவோ அல்லது குத்தகையாகவோ அடுத்தவர் உழைப்பால் அருளப்படுகின்ற பொருள்களில் உபரியாக உள்ளதை விற்பனை செய்கிறார்கள். நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு, நிலத்தைப் பண்படுத்தி பயிர் செய்யும் உழவர்களில் யாருமே உபரியாக உற்பத்தி பண்ணி விற்பனை செய்து போதிய அளவு லாபம் சம்பாதிக்கக் கூடிய நிலையிலில்லை. இங்கேயும் சுரண்டல் பேர்வழிகளுக்குத்தான் வசதிகள் யாவுமிருக்கிறது. அதனால்தான் விவசாயம் நாளுக்கு நாள் நசித்துக் கொண்டு வரும் தொழிலாகி விட்டிருக்கிறது.

பொருளாதார முடக்கம் (Economic Depression) எதுவும் ஏற்பட்டால், விலைவாசிகள் விழுந்துவிடும். வியாபாரமும் உற்பத்தியும் ஸ்தம்பித்து விடும். இதனால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய தொழில் விவசாயம்தான். பொருளாதார மீட்சியும் (Economic Recovery) இந்தத் துறையில் மிகச் சாவதானமாகவே ஏற்படுகிறது. 1930—'32-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெரும் பொருளாதார முடக்கத்தால் (Great Depression) விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது. ஏழை விவசாயிகளில் பலர் தங்கள் உடைமைகளை மிகக் கேவலமான விலைக்கு விற்றுவிட்டு விவசாயத் தொழிலாளர்கள் ஆனார்கள். பொருளாதார மீட்சி கொஞ்சம் கொஞ்சமாகவே ஏற்பட்டுக் கொண்டு வந்தது. யுத்த ஆரம்பத்தில் விவசாயத்தைத் தவிர மற்ற தொழில்கள் ஏறக்குறைய முழுப் பொருளாதார மீட்சி அடைந்திருந்தன என்றே சொல்லலாம். யுத்த காலத்தில் தேவைகள் அதிகரித்தன. ஆனால் தேவைக்கு உகந்த அளவு பொருள்கள் இல்லாமையால் விலைவாசிகள் உயர்ந்தன. ஸ்டர்லிங் நிலுவையை நம்பி புதுப் புதுக் கரன்ஸிகளை அச்சிட்டு வெளியேற்றிப் பண வீக்கத்தை உண்டு பண்ணியது சர்க்கார். விலைவாசிகள் இன்னும் உயர்ந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பணம் சம்பாதிக்கும் பந்தயப் போட்டியில் முதலாளிகளும், வியாபாரிகளும், விவசாயிகளும் கலந்து கொண்டார்கள். இம் மூன்று வர்க்கத்தாரிலும் விவசாயிதான் வெற்றி பெற்றவன் என்ற கூற்று உண்மையா எனப் பார்க்க இதுவரைக்கும் கண்டவற்றைப் பகைப்புலமாக வைத்துக் கொண்டு யுத்த காலத்தில் ஏற்பட்ட விலைவாசி ஏற்றத்தையும் அதனால் உண்டான வருமான உயர்வையும் கவனித்தால் ஓரளவுக்கு உண்மை தெரியும்.

யுத்த காலத்தில் எல்லாப் பொருள்களின் விலைவாசிகளும்

ஒரே மாதிரியாக உயர்ந்துவிடவில்லை. சில பொருள்களின் விலைகள் மிகவும் உயர்ந்தன. இன்னும் சில பொருள்களின் விலைகளோ அவ்வளவு அதிகம் உயர்ந்துவிடவில்லை. விவசாயப் பொருள்களின் விலைகள் ஆமையைப்போல் ஊர்ந்து அசைந்து உயர்ந்தன. ஆக்கப்பட்ட பொருள்களின் (Manufactured Commodities) விலைவாசிகள் முயலைப்போல் வெகு விரைவாகத் தாவித் தாவி உயர்ந்தன. மூலப் பொருள்களின் விலையேற்றத்தையும் ஆக்கப் பொருள்களின் விலையேற்றத்தையும் கவனித்தால் எந்தத் துறையில் வருமானம் அதிகமிருந்தது, எந்தத் துறையில் லாபம் அதிகம் எனக் காண முடியும். இந்திய சர்க்காரின் பொருளாதார ஆலோசகரால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்களிலிருந்து, பருத்தி, சணல் போன்ற சில குறிப்பிட்ட மூலப்பொருள்களின் விலைவாசிகளையும் அவைகளால் ஆக்கப்பட்ட பொருள்களின் விலைவாசிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். மொத்தத்தில் மூலப் பொருள்களின் சராசரி விலையேற்றத்தையும் ஆக்கப்பட்ட பொருள்களின் சராசரி விலையேற்றத்தையும் கூடக் கவனித்துவிடலாம். இப்படியெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்க மிகவும் ஒத்தாசைசெய்வது *குறியீட்டெண்களே. (Index Numbers) இனி கீழேகொடுக்கப்படும் புள்ளி விவரங்களைக் கவனியுங்கள்.

அடிப்படை ஆண்டு (Base year) (1939) = 100

	1940 1941	1941 1942	1942 1943	1943 1944	1944 1945	1945 1946
சணல் (மூலப் பொருள்)	113	137	153	209	207	198
சணலால ஆக்கப்பட்ட பொருள்கள்	132	182	187	249	252	253
பருத்தி (மூலப்பொருள்)	125	144	161	223	188	182
„ ஆக்கப்பட்ட பொருள்கள்	118	178	310	424	293	271
மூலப்பொருள் (பொதுவாக)	121	146	166	...	206	210
ஆக்கப்பட்ட பொருள்கள்	120	154	189	...	258	240

குறியீட்டு எண்கள்:—பொருளின் மதிப்பை அதன் விலையைக் கொண்டு நிர்ணயிக்கிறோம். பணத்தின் மதிப்பை அதன் வாங்கும் சக்தியைக் (Purchasing power) கொண்டு மதிக்கிறோம். பணத்தின் மதிப்பையும் அதன் சக்தியையும் அளவிட என்ன செய்வது? இந்தக் கேள்விக்குப் பதிலாகத்தான் பொருளாதார நிபுணர்கள் குறியீட்டு எண்களைக் கணிக்கிறார்கள். குறியீட்டு எண்களைக் கணிப்பதற்கு முன்னர் விலைவாசிகள் மிகுந்த ஏற்றத் தாழ்வு இல்லாத ஒரு வருஷத்தை அடிப்படை ஆண்டாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த ஆண்டிலே பல பொருள்களின் விலைவாசிகள் எவ்வளவு எவ்வளவு இருந்தன எனக்

மேலே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து ஒரு உண்மை புலனாகிறது. விவசாயப் பொருள்களின் விலையேற்றம் ஆக்கப் பொருள்களின் விலையேற்றத்திற்குச் சமமாக உயரவில்லை. சமமாகவே உயராதபோது மேலாக உயர்ந்து விட்டது என்று எண்ண இடமே கிடையாது. ஓரளவுக்கு உயர்ந்தது என்பது உண்மை. விவசாயப் பொருள்களின் விலைகள் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து கொண்டு வந்தபோது ஆக்கப் பொருள்களின் விலைகள் மிகமிக உயர்ந்து விட்டன என்பதும் புலனாகிறது. 1943-ம் ஆண்டிலே ஆக்கப் பொருள்களின் விலைவாசிகள் என்றும் அடைந்திராத உச்ச நிலையையே அடைந்து விட்டன. கிடைத்த சந்தர்ப்பத்தை ஆக்கப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முதலாளிகள் பயன் படுத்திய அளவு விவசாயிகள் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தவில்லை.

நாம் இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். நாம் அரிசி ஒரு படிக்கு ஒன்றரை ரூபாய் கொடுத்தோமென்றால், கண்ணை மூடிக்கொண்டு இவ்வளவு பணமும் விவசாயிக்குத்தான் போய்ச் சேருகிறது என்று எண்ணிவிடக் கூடாது. நமக்கும் விவசாயிகளுக்குமிடையே எத்தனை எத்தனை தரகர்கள் இருக்கிறார்கள் தெரியுமா? அவர்கள்தானே விவசாயப் பொருள்களை பல விவசாயிகளிடமிருந்தும் சேகரித்துப் பண்படுத்தி நமக்கு வேண்டியதை வேண்டிய உருவிலும் வேண்டிய அளவிலும் கொடுப்பவர்கள். அவர்கள் செய்கின்ற இந்தச் சேவைகளால் விவசாயப் பொருள்களின் விலைகள் மிகவும் உயர்கின்றன. நாம் கொடுக்கிற விலையில் பாதிகூட விவசாய உற்பத்தியாளருக்குப் போய்ச் சேருவதில்லை என்பது அறிஞர்கள் கண்ட முடிவு. மேலும் மிகச் சிறிய அளவில் விற்பனை செய்கின்ற விவசாயிகளுக்குப் பேரம் பண்ணும் சக்தி அதிகம் கிடையாது. விவசாயிகளின் இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, அவர்களுடைய பொருள்களைக்

குறித்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக 1939-ம் ஆண்டில் அரிசி விலை 4 அணா என வைத்துக் கொள்வோம். அரிசி விலை நாலணா என்பதை நாம் 100 என வைத்துக் கொள்ள வேண்டும். அதேமாதிரி பல பொருள்களின் விலைவாசிகளைக் குறித்து, அவைகளையும் தனித்தனியே நூறு நூறு என வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் இவைகளையெல்லாம் கூட்டிச் சராசரி பார்க்க வேண்டும். சராசரியும் 100 ஆகத்தானே இருக்கும். இது அடிப்படை ஆண்டின் குறியீட்டு எண். இனி வேறொரு வருஷத்தை எடுத்துக் கொள்வோம். சரி 1944-ம் ஆண்டைத்தான் எடுத்துக் கொள்வோம். அரிசி விலை ஒரு படி ரூ 1-8-0 என வைத்துக் கொள்வோம். அப்படியானால் அது 1939-ம் ஆண்டைக் காட்டிலும் 6 படங்கு அதிகம். அதைக் குறிக்கும் குறியீட்டு எண்

$$\left(\frac{1\frac{1}{2}}{\frac{1}{4}} \text{ or } \frac{3\times4}{2}\times100\right)$$

600 ஆகும். இப்படியே பிரஸ்தாப ஆண்டில் பல பொருள்களை எடுத்துக்கொண்டு அடிப்படை ஆண்டில் அந்தந்தப் பொருள்களின் விலைவாசியோடு ஒப்பிட்டுச் சதவிகிதம் கணித்தால் தனித் தனி பொருள்களின் விலைவாசிக் குறியீட்டு எண்கள் கிடைக்கும். அவைகளையெல்லாம் கூட்டிச் சராசரி கண்டு பிடித்தால் பிரஸ்தாப ஆண்டின் விலைவாசிக் குறியீட்டு எண் கிடைக்கும். அடிப்படை ஆண்டைக் காட்டிலும் குறியீட்டு எண் குறைந்திருந்தால் எத்தனை எண்கள் குறைந்திருக்கிறதோ அந்த அளவு விலைவாசியும் குறைந்திருக்கிறது என அர்த்தம். கூடியிருந்தால் எத்தனை எண்கள் கூடியிருக்கிறதோ அந்த அளவு விலைவாசியும் கூடியிருக்கிறது என்றுதான் அர்த்தம். இனிப் புள்ளி விவரங்களைப் பாருங்கள்.

குறைந்த விலைக்கு வாங்கிவிடுகிருர்கள். இப்படி வாங்கப்பட்ட பொருள்களை ஒன்றுக்கிரண்டு விலை வைத்து விற்ருல் அதற்கு விவசாயியா குற்றவாளி? சர்க்காருடைய பொருளாதார இலாகாப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது ஏற்றுமதிக்கென பயிர் பண்ணப்பட்ட பொருள்களின் விலைகள் மற்ற விவசாயப் பொருள்களின் விலையைக் காட்டிலும் உயர்ந்திருந்தது. ஏற்றுமதியால் விளைகின்ற லாபம் பூராவும் வியாபாரிகளுக்கே! ஏற்றுமதிப் பொருள்களின் விலைவாசிகளையும் மற்றைய விவசாயப் பொருள்களின் விலைவாசிகளையும் கவனித்தால் வியாபாரிகள் எப்படியெல்லாம் பணவிருத்தி பண்ணிக் கொண்டுள்ளார்கள் என்பது தெரியும். இதோ புள்ளி விவரங்களையும் பருங்கள். ஏற்றுமதிப் பொருள்களுக்கும் மற்ற பொருள்களுக்கு முள்ள ஏற்றத் தாழ்வு எளிதில் புரியும்.

அடிப்படை ஆண்டு 1939 = 100.

	1940—41	1941—42	1942—43	1943—44
ஏற்றுமதி பொருள்கள்	114	137	161	237
மற்ற விவசாயப் பொருளகள்	113	130	159	216

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து வியாபாரிகள் தான் மிகுந்த இலாபம் அடைந்தவர்கள் என்பது தெளிவாகிறது.

இது வரைக்கும் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து நாம் தெரிந்து கொண்டுள்ள இன்ஞெரு உண்மை என்னவெனில், விவசாயிகள் ஆரம்பத்தில் அசட்டுத்தனமாக இருந்த போதிலும், நாளாக நாளாக நிலைமையை உணர்ந்து விலைவாசிகளை ஏற்ற ஆரம்பித்தார்கள். இந்தச் சமயம் பார்த்து சர்க்காருடைய பொருளாதாரக் கட்டுப்பாடுகள் (Economic Controls) வந்தன. விவசாயியால் எதுவும் செய்ய முடியவில்லை. கட்டுப்பாடுகளால் முதலாளி வியாபாரி ஆகியவர்களுடைய நிலைமையும்தானே பாதிக்கப் பட்டிருக்கும் எனக் கேட்கலாம். உண்மையில் கட்டுப்பாடுகளால் இவர்களுக்கு மிகுந்த இலாபம்தான் ஏற்பட்டது. ஏராளமாக சம்பாத்தியம் ஏற்பட்ட போதிலும் அதோடு எப்போதுமே ஆபத்து தொடர்ந்து கொண்டிருந்தது. ஏனெனில் கட்டுப்பாடுகளால் பொருள்கள் எல்லாம் பதுக்கப்பட்டு விட்டன. வெளியில் பொருள்கள் கிடைப்பதே இல்லை. ஏதாவது ஒரு பொருள் வாங்கவேண்டியிருந்தால் கள்ள மார்க்கட்டுக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை யேற்பட்டது. கள்ள மார்க்கட் செய்வதைக் கண்டுபிடித்தால்தானே தண்டனை. கண்டாலும் காணுதவர்களைப்போல இருந்

தார்கள் அதிகாரவர்க்கத்தார் என்பதெல்லாம் நாம் கண்டு அனுபவித்து அறிந்த உண்மை. முதலாளி, வியாபாரி, பெரிய பணக்கார விவசாயிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து பலமாகக் கள்ள மார்க்கட் அச்சு (Axis) ஒன்றைச் சிருஷ்டித்துக் கொண்டு கொள்ளை லாபம் அடிக்க முனைந்தார்கள். இதன் விளைவுதான் வங்கத்திலும் ராயலசீமாவிலும் கேரளாவிலும் ஏற்பட்ட கொடும் பஞ்சங்கள்! இந்தச் சமயம் பார்த்து இயற்கையும் ஏழை விவசாயிகளுக்குத் துரோகமிழைத்தது. பருவமழை பெய்யவில்லை. விவசாயப் பொருள்களை அரிக்கின்ற விட்டில் போன்ற பூச்சிகள் ஏராளமாகத் தோன்றி பயிர்பச்சைகளை அழித்துவிட்டன. பாவம்! ஏழை விவசாயிகளின் கஷ்டங்கள் இவ்வளவு அவ்வளவு எனச் சொல்ல முடியாது. கள்ள மார்க்கட்டின் உதவியால் முதலாளிகளும், வியாபாரிகளும் பெரும் பணக்கார விவசாயிகளுமே பயன் அடைந்தார்கள். ஏன் ஏழை விவசாயியும் கள்ள மார்க்கட்டுக்குப் போகக் கூடாதா என்றால், பாவம், அவனுக்குக் கள்ள மார்க்கட்டுக் கலை கைவரவில்லை. தப்பித் தவறி எப்போதாவது கள்ள மார்க்கட் தொழிலில் இறங்கினால் அகப்பட்டுக்கொண்டு தண்டனை அனுபவித்தான். ஆகவே கிடைத்தது கிடைக்கட்டும் எனப் பேசாதிருந்தார்கள் ஏழை விவசாயிகள். இதன் பயனாகக் கள்ள மார்க்கட் கோட்டைகளைக் கட்டி எந்த விதமான தட்டுமின்றி மட்டில்லாப் பொருளைச் சம்பாதித்து குவித்தவர்கள் கள்ள மார்க்கட்டுகளின் நெளிவு சுழிவு எல்லாம் அறிந்த முதலாளிகளும், வியாபாரிகளும் அவர்களுடன் ஒட்டி வந்த பணக்கார விவசாயிகளுமே ஆவர். இப்படி யெல்லாம் சொல்லிக் கொண்டு போவதைப் பார்த்தவுடன், "அப்படியானால் விவசாயிகள் இலாபமே அடைய வில்லையா" எனக் கேட்பீர்கள். விவசாயிகளிலும் ஒரு சிலர் லாபமடைந்தார்கள். ஆனால் அவர்கள் மிகச் சொற்பமான தொகையுள்ள பெரும் பண்ணையார்களும் நடுத்தர விவசாயிகளுமே ஆவர். பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் தொகையில் சுமார் பத்தில் ஒரு பங்குப் பேர்கள் மட்டும் லாபமடைந்தால், மற்றபடி பாக்கியுள்ள ஒன்பது பங்குப் பேர்களையும் சேர்த்துக் கொண்டு, விவசாயிகள் எல்லாம் இலாபமடைந்தார்கள் எனச் சொல்ல முடியுமா? முடியாது. சொல்லவும் கூடாது. ஆனால் அப்படிச் சொல்கிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் கூட்டுறவு சங்கங்களுடைய வரவு செலவு கணக்கை ஆதாரமாகக் காட்டுகிறார்கள். அதாவது கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய பழைய கடன்களில் பல அடைக்கப்பட்டு விட்டன என்பதே ஆகும். இதற்கும் மறுப்புக் கூற முடியும். கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வளவு தூரம் இந்த நாட்டில் வளர்ச்சி அடைந் திருக்கின்றன? இவைகளின் அங்கத்தினர் தொகையென்ன? அப்படி அங்கத்தினர்களாக இருப்பவர்களில் எத்தனை பேர்கள் ஏழை விவசாயிகள்? இப்படிக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டு அவைகளுக்குப் பதிலைத் தேடுவோமானால் இந்த மறுப்பு எவ்வளவு தூரம் அபத்தமானது

என்பது புலனாகும். மொத்தம் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற 1030 லக்ஷம் பேர்களில் சுமார் 40 லக்ஷம் பேர்கள்தான் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள். இதிலிருந்தே இவைகளின் வளர்ச்சியின் லக்ஷணம் தெரிய வில்லையா? இந்தக் கூட்டுறவு நில அடமான பாங்கிகளிலும் (Co-operative Land Mortgage Banks) கூட்டுறவு சொசைட்டிகளிலும் மிகவும் பரவியுள்ள 'சிவப்பு நாடா' வழக்கத்தால் ஏழை விவசாயிகள் இதை அண்டுவதே இல்லை என்பதையும் நாம் உணர வேண்டும். இதனால் எண்ணிறந்த ஏழை விவசாயிகளின் நிலைமை எள்ளளவும் உயர்ந்துவிட வில்லை என்பது தெரிகிறதல்லவா?

விவசாயிகளுடைய தேவை உணவுடன் மட்டும் அடங்கிவிடுகிறது என எண்ண முடியாது. அவர்களுக்கு மற்ற தேவைகளும் உண்டு. விவசாயப் பொருள்களின் விலை யேற்றத்தோடு இவைகளின் விலைகளும் ஏறின. இவைகளுடைய விலை விவசாயப் பொருள்களைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்தன. அதனால் ஏழை விவசாயியினுடைய வாழ்க்கைச் செலவும் யுத்தத்திற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்தது. இத்துடன் விவசாய உற்பத்திச் செலவும் உயர்ந்தன. வேலையில்லாத விவசாயத் தொழிலாளர்களில் பலர் பட்டாளத்தில் சேர்ந்தமையால் கூலி வேலைக்கு ஆள் கிடைப்பது அருமையாயிற்று. இதனால் வேலைக்காரர்களுடைய கூலி மிக உயர்ந்தது. மாடுகளின் விலை யுத்தத்திற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் ஆறு மடங்கு உயர்ந்தது. பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு, தவிடு, தீவனம் முதலியவைகளுக்கு ஏராளமாகக் கொட்டிக் கொடுக்க வேண்டியிருந்தது. இதற்கிடையில் யுத்த காலத்தில் கால்நடை நோய்கள் பல கால்நடைகளுக்கு காலனாகியது. இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம். கொழு, வண்டிப்பட்டா முதலிய அவசியப் பொருள்கள் கள்ளமார்க்கட்டிலும் கண் காது தெரியாத விலைக்குத் தான் அகப்பட்டனவே ஒழிய வேறு இடங்களில் அகப்படவே இல்லை. இப்படி வாழ்க்கைச் செலவும் விவசாய உற்பத்திச் செலவும் உயர்ந்து விட்டபோது இவர்கள் லாபம் சம்பாதித்தார்கள் என்று எப்படித்தான் சொல்ல மனந் துணியும்?

பெரிய பண்ணையார்களும் நடுத்தர விவசாயிகளும் ஓரளவுக்கு நன்மை யடைந்தார்கள். ஏழை விவசாயிகளும், குத்தகைக்கு உழுதவர்களும், விவசாயத் தொழிலாளர்களும் மொத்தத்தில் நஷ்டம் தான் அடைந்தார்கள். அவர்களுடைய வரவு செலவு பட்டியலைப் பார்த்தால் அவர்களுடைய உண்மை நிலைமையைத் தெரிந்து கொள்ளலாம். இதோ அதையும் தான் பாருங்கள். அடுத்த பக்கப் பட்டியலை நன்றாகக் கவனியுங்கள். யுத்தத்திற்கு முன்பும் பின்பும் உள்ள மொத்த வருமான நிலை, வாழ்க்கைச் செலவும் உற்பத்திச் செலவும், இன்னும் நிகர லாபமும் நஷ்டமும் மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து பண்ணையார்களும் நடுத்தர விவசாயிகளும் மாத்திரம்

யுத்தத்திற்கு முன்பும் யுத்த காலத்திலும் தனிப்பட்ட விவசாயிகளின் சராசரிச் செலவும் வரவும்

வர்க்கம்	மொத்த வருமானம்		மொத்தச் செலவு		லாபமா ?(+) நஷ்டமா?(—)	
	1939	1945	1939	1945	1939	1945
1. பெரிய பண்ணையார்கள்	1925	4066	1272	2948	+122	+117
2. நடுத்தர விவசாயிகள்	639	1251	514	1134	+653	+118
3. ஏழை விவசாயிகள்	399	750	391	751	+8	—1
4. குத்தகைக்கும் வாரத்திற்கும் பயிரிடுவோர்	34[illegible]	676	345	720	+2	—44
5. விவசாயத் தொழிலாளர்	182	359	174	[illegible]40	+8	—11

தான் ஓரளவுக்கு நன்மையடைந்தவர்கள். மற்றவர்கள் யுத்தத்தினால் பயனடைவதற்குப் பதிலாகப் பாதிக்கப் பட்டுள்ளார். இதைப் பார்த்தால் ஏன் வத்திராயிருப்பு, சோழவந்தான், மன்னார்குடி, மலபார், ஆந்திர தேசம் முதலிய சென்னை மாகாணத்திலுள்ள இடங்களிலும் இன்னும் பம்பாய் மாகாணத்திலும் ஏன் கிஸான்கள் கொதித்தெழுந்தார்கள் என்பதின் மர்மம் விளங்கும்.

ஆகவே யுத்தத்திற்கு முன்பிருந்ததைக்காட்டிலும் விவசாயிகளின் நிலைமை இன்று மிகவும் மோசமாகி விட்டிருக்கிறது. இந்த நிலையில் அவர்களைப் பார்த்து அதிகமாகச் சம்பாதித்துவிட்டார்கள் என்று சொன்னால் அவர்களுடைய கும்பிகொதிக்குமா, கொதிக்காதா? எரிகிற நெருப்பில் எண்ணெய்யை விடுவது நமக்கு அழகாகுமா? "உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது" என உலகத்திற்கு உண்டி கொடுத்து விட்டு, தான் உய்யும் வழியறியாது வாடும் உழவர்களில் யாரோ ஒருவர் பிரலாபிப்பது காதில் விழுகிறது. சரி, இப்போது சொல்லுங்கள், வதந்திகளை நம்பலாமா?

கலா ரஸனை

○

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் நான் **கும்பகோணம்** போயிருந்தேன். என்னுடன் சில இலக்கிய நண்பர்களும் வந்திருந்தார்கள். நாங்கள் போனது மகாமகத்தில் அல்ல. ஆதலால் கூட்டம் ஒன்றும் இல்லை. மகாமகக் குளத்திலும் தண்ணீர் அதிகம் இல்லை. அந்தக் குளத்தைப் பார்த்துவிட்டு (அதில் குளிக்கக்கூடிய துணிவு எங்களுக்கு வரவில்லை) பக்கத்தில் உள்ள **நாகேஸ்வரசாமி** கோவிலுக்குள் போனோம். அங்கே கோயில் கொண்டிருக்கும் நாகேஸ்வரனை வணங்கினோம். அந்த சுவாமியைத்தான், இந்திரனும் சூரியனும் வழிபட்டதாக கர்ண பரம்பரைக் கதை. இந்தக் கதைக்குச் சப்பைக்கட்டு கட்டியதுபோல கோபுர அமைப்பு ஒவ்வொரு வருஷமும் சித்திரை மாதம் பத்தாம் தேதி முதல் மூன்று நாட்கள் காலை ஒன்பது மணிக்கு கோபுரத்தின் வழியாய் சூரியனின் கிரணங்கள் கோபுரத்திலிருந்து சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் இருக்கும் கர்ப்பக் கிருஹத்தில் உள்ள மூல லிங்கத்தின் மீது விழுகிறது. இந்த விதமாக சூரிய வழிபாடு நடக்கிறது. கோயிலுக்குள் போனதும் இதைப் பற்றியே பிரமாதமாகச் சொன்னார்கள், கோயில் நிர்வாகிகள். இதொன்றும் எங்களுக்குப் பிரமாதமாகப் படவில்லை. கொஞ்சம் 'ஜாமட்ரி' படித்திருந்தால் 'ஹைப்பாட்டினியூஸ்' லயனில் கோபுரத்தின்மேல் உள்ள முன் பின் கதவுகளை அமைத்து விட்டால் இதைச் சாதித்துவிடலாம் தானே. அதிசயம் எல்லாம் இப்படி ஒரு கோபுரம் கட்டவும் அதற்சென்று ஒரு கதையைக் கட்டவும் தெரிந்து வைத்திருக்கிறார்களே நமது முன்னோர்கள் என்பதுதான்.

கோயில் வெளிப் பிரகாரத்தைச் சுற்றிவரப் புறப்பட்டோம். தென் பக்கம் இருக்கும் மாடக்குழிகளில் (Niches) ஒரு பௌத்த பிக்ஷுவும் ஒரு அரசிளங்குமரியும் நின்று கொண்டிருந்தார்கள். ஆம். கல் லுருவிலேதான் நல்ல நயமான வேலை என்று கண்டோம். இன்னும் கொஞ்சம் மேற்கே போய், மேலப் பிரகாரத்திற்கே வந்து விட்டோம். கர்ப்பக் கிருஹத்திற்கு வெளியில் உள்ள மேலச் சுவரில் ஒரு சிலை—**அர்த்த நாரியின் சிலை**—ஒன்றின் முன்வந்து சேர்ந்தோம். அதைப் பார்த்த உடனே அசைவற்று நின்றுவிட்டேன் நான். எவ்வளவு நேரம் அப்படியே நின்றேனோ தெரியாது. 'சரி. போவோமா' என்று பக்கத்தில் உள்ள நண்பர் என்னை உசுப்பிய போது தான் எனக்கு உணர்ச்சி வந்தது. உணர்வு வந்தும் என்னால் அந்த இடத்தைவிட்டு நகரவே முடியவில்லை. சிற்பி செதுக்கிக் காட்டியுள்ள ஒரு அற்புத நயத்திலேயே

உள்ளத்தைப் பரவ விட்டுவிட்டு அங்கேயே நின்றேன். இன்னும் கொஞ்ச நேரம் உடன் வந்த நண்பர்களுக்கோ ஆத்திரம் தாங்கவில்லே. "என்ன அதிசயத்தை ஐயா கண்டு விட்டாய், நகரமாட்டேன் என்கிருயே, சாப்பிடக் கிப்பிடப்போகவேண்டாமா?" என்றெல்லாம் துரிதப் படுத்தினர்கள். அப்போது சொன்னேன் அவர்களைப் பார்த்து:

"அடே! நீங்கள் எல்லாம் அர்த்த நாரியின் சிலேயைப் பல இடங்களில் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? மதுரைப் புது மண்டபத்திலும் மற்றும் எல்லாச் சிவன் கோயிலிலுமே, அர்த்த நாரியின் சிலா உருவம் இருக்கத்தானே செய்கிறது. அர்த்த நாரி என்ருல் பாதி ஆண், பாதி பெண்ணுருவில் நிற்கும் இறைவன் உருவம் தானே. ஆதலால் எல்லாச் சிலேகளிலும் பாதியை ஆண் வடிவத்திலும் பாதியைப் பெண் வடிவத்திலுமே செதுக்கியிருக்கும். வலப்பாகத்தில் ஆண் வடிவம், அதற்கேற்ப சடாமகுடம், குழைக்காது, அரையில் புலித் தோலாடை, காலில் வீரக்கழல் முதலியன காட்சி கொடுக்கும். இடப்பாகத்தில் பெண் வடிவம், அழகான மணிமகுடம், காதுகளில்தோடு, கழுத்து நிறைய ஆபரணம், விம்மிப் புடைத்த மார்பகம், அதை இறுக்கிக்கட்டும் கச்சு, இடுப்பில் மேகலே மணிகள், காலில் சதங்கைகள் முதலியன கச்சிதமாய்க் காட்சி கொடுக்கும். இருபாகத்திலும் தோளுக்குத் தோள் ஒரே உயரம்; இடைக்கு இடை ஒரே உயரம், காத்திரம், முழங்காலுக்கு முழங்கால் ஒரே உயரம் என்றுதான் இருக்கும். இப்படி சிலேகளே வடித்த சிற்பிகள் எல்லாம் ஒரே யொரு விஷயத்தை மட்டும் அடியோடே மறந்துவிட்டார்கள் ஆணேயும் பெண்ணேயும் எலும்புருவில் வேறுபடுத்திக் காட்டுவது அவர்கள் இடுப்புத்தான். பெண்ணின் இடைக்குக் கீழே உள்ள பாகம் இருக்கிறதே, 'பிட்டி' (அதாவது Pelvic Girdle) அது ஆணின் பிட்டியைவிட உருவில் பெரியது. பத்து மாதம் குழந்தையை வயிற்றில் ஏந்த வேண்டிய பொறுப்பு உடையவள் அல்லவா அவள். அதற்கேற்ப, விரிந்து பரந்து கிடக்கும்படி அந்தப் பாகத்தைப் படைத்திருக்கிருர் கடவுள். இது காரணமாகவேதான், இதற்கு மேல் உள்ள இடை சிறுத்து விடுகிறது. காலின் நீளமும் (இடையிலிருந்து உள்ளங்கால் வரை உள்ள பாகமும்) கொஞ்சம் அதிகப்படுகிறது. இதை 'அனடமி' தெரிந்த ஒவ்வொருவரும் தெரிந்திருப்பார்கள். இப்படி இருக்கும்போது ஆணேயும் பெண்ணேயும் ஒரு நிலேயில், சம உருவில் உருவாக்கும் போது கொஞ்சம் சிரமந்தானே. இந்த நுணுக்கத்தை யெல்லாம் தெரிந்தே இந்தச் சிலேயைச் செதுக்கியிருக்கிருன் சிற்பி இங்கே. பெண்ணின் பிட்டி பாகத்தை பெரிதாக்கி இருக்கிருன். மேலும் பெண்ணின் நீண்ட காலே, ஆணின் குறுகிய காலுடன் சமப்படுத்துவதற்காக

பெண்ணின் கால்பாகத்தில் ஒரு வளைவைக் கொடுத்து நடனத்திற்குத் தயாராகும் நிலையில் அமைத்து சரிக்கட்டி இருக்கிருன். அடடே! அங்க நிர்மாண சாஸ்திரத்தைக்கூட இவ்வளவு நுணுக்கமாக அறிந்து இந்தச் சிலையை அதிக அற்புதமாக அமைத்து இங்கே நிறுத்தியிருக்கிருனே. இதை வியக்காவிட்டால், நீங்கள் எதைத்தான் கண்டு வியக்கப் போகிறீர்கள்'' என்றேன்.

உடனே சொன்ஞர்கள் நண்பர்கள்: "ஆமாண்டா! நீ சொன்னபின் தான் தெரிகிறது இதெல்லாம். இவ்வளவு விளக்கியபின் தான் இந்தச் சிலையின் பெருமையும் தெரிகிறது,'' என்று என்னையும் சிலையையும் பாராட்ட முனைந்து விட்டார்கள். அப்போது ஒரு நண்பர் மேலும் சொன்ஞர்: "சரி தாண்டா, அவனுக்கு கண் இருக்கிறது, நமக்கு அது இல்லை'' என்று. அடேயப்பா இது எவ்வளவு பெரிய உண்மை! **கலையை அனுபவிப்பதற்கு கண் வேண்டும்; கண்ணுடையவர்களே கலா ரஸிகர்கள்** என்று மேல் நாட்டார் பல முறை சொல்கிருர்களே அது உண்மை என்று அன்றுதான் விளங்கியது எனக்கு. "கலையை அனுபவிக்க கண்மட்டும் இருந்தால் போதாது. கண்ணைச் சரியாகப் பழக்கியும் இருக்கவேண்டும். காணுகின்ற காட்சியிலே உள்ள அதிசயங்களை ஊடுருவிச் செல்லும் உணர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்'' என்று **மிஸ் அன்ஞ பெர்ரி** என்ற அம்மையார் எவ்வளவு அழகாகச் சொல்லிவிடுகிருர். கால ரசனைக்கு முக்கியமாக வேண்டுவது கண், கண், கண்தான்.

இனி சிற்பக்கலை அனுபவத்தைப்பற்றிச் கலாரஸனையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள். இவைகளேயே உரையாணியாகக் கொண்டு மற்றக் கலைகளையும் அனுபவிக்க முயலலாம்.

ஒரு சிற்பம் சர்வ சாதாரணமானதா? அதி அற்புதமானதா? அது ஒரு கலைப் பொருளா? அல்லது வெறும் கல்லுருவம் தானு? என்றெல்லாம் அறிய, அந்த உருவத்தில் உள்ள **லளிதநயம் (Rythm)** தெரிய வேண்டும். கவிதையில் இந்த ரிதும், லளிதம், அல்லது தாளலயம் எளிதாகத் தெரிந்து விடும், இசை இருப்பது காரணமாக. ஆனுல் கல்லுருவில், அதன் அங்க வளைவுகளிலும், அதன் உருவ அமைப்பிலுமே தான் இந்த லளிதத்தைத் தேடவேண்டியிருக்கும். தண்ணீர் மட்டம் எப்போதும் சரியாகவே இருக்கும். **(Water finds level)** என்பது ஒரு சித்தாந்தம். எனினும் வெறும் கோடு கிழித்துக் காட்டி விட்டால் சித்திரத்தில் தண்ணீர் உருவாகி விடாது. ஒரு நேர்கோட்டை ——என்று மட்டும் வளைவுகளுடன் காட்டிவிட்டால் தண்ணீர் ஓடும் காட்சியே நம்முன் தோன்றி விடுகிறது. தாமரை மலரைச் சித்திரிக்கவும், அடுக்கடுக்காய் இருக்கும் இதழ்களையும் எடுத்துக் காட்டி உருவாக்கினுல்தான் தாமரை நம் கண் முன்னுல் வரும். **லளிதத்துக்கு அடிப்படை அசைவு.** கொடியில் 'காயப்போட்டிருக்கும் ஒரு சேலைத்துண்டு அப்படியே கிடந்தால், அதில் அழகில்லை. ஆனுல் காற்றில் அசைந்து

அதன் கீழ்ப்பாகம் நெளிந்து நெளிந்து, வளைந்து வளைந்து காட்சி கொடுக்கும் போது ஒரு அழகு தோன்றுகிறது. லளித முடையதாகின்றது. அசைவிலே ஆட்டத்திலே உருவாகும் லளிதம். அசைவற்றிருக்கும் எப்பொருளும் உயிர் அற்ற பொருள் என்பது நமக்குத் தெரிந்ததுதானே. நடனப் பெண்ணை, நடன ராஜனை எல்லாம் நல்ல சிலாஉருவங்கள் என்று நாம் கொண்டாடுவதின் பொருள் நமக்கு விளங்குகிற தல்லவா ?

இந்த லளிதம் எப்படி உருவாகும். உணர்ச்சியில் தான் உருவாகும் என்கிறார்கள் தெரிந்தவர்கள். உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளைச் சப்த சித்திரத்தில் அமைத்துக் காட்டுவதுதானே கவிதை. "துள்ளி ஓடுகின்ற உணர்ச்சியிலே தான் பெரிய உண்மைகள் பிறக்கின்றன; உயர்ந்த சங்கீதங்கள் வழிகின்றன; ஓவியங்கள் உயிர் பெற்று எழுகின்றன, காவியங்கள் விரிகின்றன'' என்று சொல்கிறார் ஒரு கலாரஸிகர். உணர்ச்சி தான் அசைவற்றிருக்கும் ஒரு பொருளுக்கு அசைவையும் ஆட்டத்தையும் கொடுக்கும், அசைவும் ஆட்டமுமே லளிதத்தை உருவாக்கும், லளிதம் உள்ள உருவமே கலா சிருஷ்டியாகும். சாந்த ஸ்வரூபியாகக் காட்சி கொடுக்கும் புத்த பிரான் உருவத்திலும் ஒரு உணர்ச்சி உண்டு. அது அமைதியிலே காணுகின்ற ஒரு லளிதம் (Rythm in Repose) நடனராஜனது ஆட்டமே ஒரே உணர்ச்சி மயந்தானே.

ஆனந்த ஆடரங்கு
ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம்,
ஆனந்தம் வாச்சியம்
ஆனந்த மாக
அகில சராசரம்
ஆனந்தம், ஆனந்தக்
கூத்து கந்தானுக்கே"

என்று ஒரே ஆனந்த வெறியில் நடன ராஜனது நடனம் உருவாவதைப் பார்த்த பின், கலைக்கு, கலையை உருவாக்கும் லளிதத்துக்கு அடிப்படை உணர்ச்சிதான் என்பதையும் லேசாகத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?

கலா ரஸிகர்களுக்கு கலைப் பொருளின் லளிதம் தெரிய வேண்டும். அதை உருவாக்கும் உணர்ச்சியும் தெரிய வேண்டும். இத்துடன் கலைப் பொருளின் முழுத் தோற்றத்தின் பொலிவும் (Form) தெரிய வேண்டும். கலைஞன் ஒரு பொருளை சிருஷ்டிக்க முற்படுவதற்கு முன், அதன் முழுத் தோற்றத்தையும், தன் உள்ளத்துக் குள்ளேயே சிருஷ்டித்துக் கொள்கிறான். சமீப காலத்தில் வெளி வந்த விகடத்துணுக்கு ஒன்று ரொம்ப ரஸமாயிருந்தது. ஒரு சிற்பி சிவ பிரானது உருவைக் கல்லில் செதுக்கிக் கொண்டிருக்கிறான். பாதி தான் செதுக்கி முடிந்திருக்கிறது. இதைப் பார்த்த ஒருவன் "அட அண்ணே! இந்தக் கல்லுக்குள் இவன் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்பதை எப்படி அண்ணே கண்டு பிடித்து விட்டாய்'' என்று கேட்டானாம். அது போலத்தான் கல்லுக்குள் கனியாக இருக்கும் கலைப் பொருள்களைக் கண்டு விடுகிறான் கலைஞன்.

கல்லோ, கட்டையோ, உலோகமோ எல்லாம் உயிரற்ற உணர்ச்சியற்ற சடப் பொருள்கள்தானே.

அவைகளில் மனிதன் தோலில் உள்ள மிருதுத் தன்மையைக் காட்டி விடுவது எளிதான காரியம் அல்ல. துடிதுடிக்கும் சரும உணர்ச்சியை, உள்ளத் துடிப்பைக் கல்லிலே காட்டி விடுவது எப்படி? இதழ் விரியாத ரோஜா மொட்டிற் குள் இருக்கும் ஜீவகளையைக் உணரும் திறன் எவனுக்கு இருக் கிறதோ அவனே கலை உருவைச் சித்திரிக்கவோ, செதுக்கவோ முடியும் என்கிருர் ஒருவர். இயற்கையில் எண்ணிறந்த உரு வங்கள்: கலைஞன் இங்கொரு மல ரைப் பார்க்கிருன், அங்கொரு இதழைப் பார்க்கிருன்; இங்கொரு கனியைப் பார்க்கிருன், அங்கொரு கன்னியைப் பார்க்கிருன்; வளர்ந் தோங்கிய மலையைப் பார்க்கிருன், ஆழ்ந்து அகன்ற கடலைப் பார்க் கிருன். இதை யெல்லாம் கண்களை அகலத் திறந்து கொண்டே பார்க் கிருன். அவைகளை, உருவங்களை உள்ளத்தில் நிலை நிறுத்துகிருன். பின்னுல் கல்லிலும் செம்பிலும் வடித் தெடுக்கிருன். இப்படித் தான் அற்புதமான கலா உருவம் (Splendrous form) உருவாக்கப் படுகிறது என்கிருர் **தாமஸ் அக்கு விஞஸ்.** உருவாக்கிய சிலா உருவத் தில் ஒரு இசை, ஒரு லளிதம் தோன்றுகிறது. இதை யெல்லாம் தெரிந்துதானே **கிளைவ் பெல்** என் பவன் சொன்னுள்: கலை என்பது அதி அற்புதமான தோற்றப் பொலிவு என்று. **(Art is significant form)**

இனி நீங்கள் எங்காவது ஒரு கோயிலுக்குச் சென்ருல் அல்லது ஒரு பொருட் காட்சிக்குச் சென் ருல், கலா சிருஷ்டியில் உள்ள லளி தத்தைக் காண முற்படுங்கள். உணர்ச்சியை ஊடுருவிப் பாருங்கள் முழுத் தோற்றத்தின் பொலிவை யுமே கணக்கெடுங்கள். இவைகளை யெல்லாம் தெரிந்து கொள்ள உங் கள் கண்களையே உபயோகியுங்கள். அதற்கும் அதைப் பழகப்படுத்திக் கொள்ளுங்கள். அதன் பின் கலா ரஸனை உங்களுக்கு கைவரா விட் டால் என்னைக் கேளுங்கள்.



அரிசி*

○

கே. ஏ. அப்பாஸ்

பாம்பு போல் வளைந்து, நத்தை போல் ஊர்ந்து, தேனீக்கள் போல் இரைச்சலிட்டுக் கொண்டு ஆண்களும், பெண்களும் கொண்ட இருபெரு வரிசைகளாக அரசாங்கத் தானியக் கடையை நோக்கிப் பலர் சென்றுகொண் டிருந்தனர். ஆண்கள் வரிசையைவிட பெண்கள் வரிசை நீளமாக இருந்தது—சுமார் ஒரு பர்லாங் நீளம் இருக்கும். அதன் கடைசி முனை தெருவின் முடிவிலுள்ள சந்தின் அருகே முடிந்திருந்தது. இவர்களால் தானியக் கடையைக் கண்ணுல் காண முடியவில்லை. ஒவ்வொரு பெண்ணும் தன் முன்னே நின்ற பெண்ணினுடைய தலையை மட்டுமே பார்க்க முடிந்தது.

நூற்றுக் கணக்கான பெண்கள் இந்துக்கள், முஸ்லிம்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் எனப் பலர் வந்திருந்தனர். முகத்திரை யிட்டும் இடாமலும் வந்த முஸ்லிம் மாதர்கள், கூந்தலிற் சூடிய மலரின் வாசனையுடன் கலந்த மீன் நாற்றத்துடன் தோன்றிய, கட்டுமஸ்தான, மின்னும் கறுத்த உடல் படைத்த பாவப் பெண்கள்; கவுன் உடுத்து வெறுங் காலுடன் வந்த கோவனீயப் பெண்கள்; செயற்கைப் பட்டு மேல்ஜோடு தரித்து, உயர்ந்த குதிகால் சப்பாத் தணிந்து மலிவான வாசனையையும் பவுடரையும் பூசிவந்த ஆங்கிலோ-இந்திய நாரீமணிகள்; தோள்களைச் சுற்றிப் பூப்போட்ட சால்வை அணிந்த கறுத்த கண்கள் கொண்ட கொழுத்த யூதப் பெண்கள்; சேலைக் கட்டின் இறுக்கத்தால் உடலின் வளைவுகள் தோன்ற நின்ற கொடிபோன்ற ஒற்றைநாடி மராத்திப் பெண்கள்; மெலிந்தும் கொழுத்தும் இருந்த பலரக வெளுத்த முகம்படைத்த குஜராத்திப் பெண்கள், குமாஸ்தாக்களின் மனைவியர், மில் தொழிலாளர் மனைவியர், மோட்டார் சாரதிகளின் மனைவியர், சிறு கடைக்காரர்களின் மனைவியர், மணமான பெண்கள், மணமாகாப் பெண்கள்—இங்ஙனம் பலவகையினர் காட்சி யளித்தனர். வாடிய மல்லிகை மணத்துடன் மீன் நாற்றமும், தேங்காயெண்ணெய், வாசனைச் செண்டுகளுடன் வியர்வை நாற்றமும் கலந்து விசித்திர வாசனை கிளம்பியது. இவை இடை வேளைச் சூரியனின் வெப்பத்தினுல் இழுக்கப்பட்டு கண்ணுக்குப் புலனுகாத ஆவியில் ஒன்றறக் கலந்தன. மராத்தி, குஜராத்தி, இந்துஸ்தானி, ஆகிய மொழிகளும் கலந்து லட்சக்கணக்கான தேனீக்களின் இரைச்சல் போல் கேட்டன. ஊர்ந்து செல்லும் காலத்தின் மீது, நின்று

---

*தமிழாக்கம்: கே. கணேஷ்

டால்டாவில் தயாரித்த
ஜிலேபிகளை குழந்தைகள்
மிகவும் விரும்புகிறார்கள்!
2 கப் மைதாமாவில் தண்ணீர்
ஊற்றி பிசைந்து நெகிழச்செய்து
கொள்ளவும். பிசைந்த மாவை
மூடி இரண்டு தினங்கள் வைத்தி
ருக்கவும். ¼ பவுண்டு சர்க்கரை
யில் நீர்க்க பாகுதயாரித்து அதில்
½ தேக்கரண்டி குங்குமப்பூவும் சில
சொட்டுகள் பன்னீரும் சேர்த்துக்
கொள்ளவும். பிசைந்த மாவில் 1
தேக்கரண்டி தயிர்விட்டு நன்ருக
கலந்துகொள்ளவும். கலவையை
¼ அங்குலம் குறுக்களவுள்ள துவா
ரம் வழியாக ஊற்றவும். தகரப்
போணியில் அல்லது உலர்ந்த
கொட்டாங்கைச்சியில் துவாரம்
செய்து இதற்காக உபயோகிக்க
லாம். டால்டாவை குழிவுகுறைந்த
வாணலியில் நன்ருக சூடாக்கி
மாவை வட்ட வட்டமாக பிழிந்
து வறுத்தெடுக்கவும். பிறகு சிறு
சூடான பாகில் போடவும். சில
மணிநேரம் ஊறின பிறகு ஜிலே
பிகளை அப்புறப்படுத்தி நல்ல காகி
தத்தில்பரப்பி உலரவைக்கவும்.
பேர்ஷாக்குகளை
இழக்காமல் காய்கறிகளை
சமைப்பது எப்படி?
இலவசமான ஆலோசனை
களுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானாலும்
—எழுதுங்கள்!
தி டால்டா
அட்வைஸரி
ஸர்வீஸ்
தபால் பெட்டி
நெ. 353,
பம்பாய் 1
HVM. 95-50 TM
DALDA
VANASPATI

பொங்கல்

புத்தாண்டு பொலிவுறுக

பிரதி தினமும் ஆயிரக்
கணக்கான ஜனங்கள்
இடமின்றி திரும்புகின்றனர்

13-1-49 முதல்

3-வது வாரம்

ஆசிரியர்:
சூலமங்கலம்
வைத்தியநாத பாகவதர்

ஞாயிறு, புதன், வெள்ளி, மாலை 6
செவ்வாய், வியாழன், சனி, இரவு 9-15

திங்கள் விடுமுறை

சென்னை
ஒற்றைவாடையில்

டிக்கட் விபரம்:—
3-12-0; 2-10-0; 1-10-0;
0-13-0; 0-6-6

பாம்பே
மியூசுவல் லைப் அஷ்யூரன்ஸ்
சொசைடி, லிட்.,

(ஸ்தாபிதம்: 1871)

தலைமை ஆபீஸ் பம்பாய்

★ இந்தியாவின் பழமையான ஆயுள் ஸ்தாபனம்

★ இந்தியாவின் மிகப்பெரிய மியூசுவல் லைப் ஆபீஸ்

★ பாலிஸிதார்களுக்குச் சொந்தமானது. அவர்களாலேயே நடத்தப் படுவது

★ தாராளமான பாலிஸி நிபந்தனைகள்

★

ஏஜண்டுகள் தேவை
தாராளமான கமிஷன்
கொடுக்கப்படும்.

★

விபரங்களுக்கு எழுதுங்கள்

எஸ். எ. ராமஸ்வாமி
அண்ட் பிரதர்ஸ்

(சென்னை மாகாணம்,
திருவாங்கூர் கொச்சின்
சமஸ்தானங்களுக்கு
பிரதான ஏஜண்டுகள்)

"பாம்பே மியூசுவல் பில்டிங்"
378, சைனா பஜார் ரோட்
சென்னை

கொண்டிருந்த கூட்டத்தாருக்குக் கோபம் தோன்றியது. நிமிஷத்திற்கு அறுபது செகண்டுகள். அறுபது நிமிஷம் கொண்டது ஒரு மணி. ஒரு மணி, இரண்டு மணி, மூன்று மணி...... பாம்பு போல் வளைந்து, நத்தை போல் ஊர்ந்து தேனீக்கள் போல் இரைச்சலிட்டுக் கொண்டு செல்லும் இப் பெண்கள் வரிசை ஒவ்வொரு நிமிஷமும் வளர்ந்து கொண்டே வந்தது. வரிசையின் முகப்பில் உள்ள பெண் தானியத்தை வாங்கி முடித்து வெளிக் கிளம்பியதும் கடைசியில் இரண்டு மூன்று பெண்கள் சேர்ந்து கொள்வார்கள். இரு நூறு பெண்கள், இருநூற்றைம்பது பெண்கள், முன்னூறு பெண்கள், முன்னூற்றைம்பது பெண்கள்—விடியற் காலை முதல் எவ்வளவு பொறுமையுடன் இவர்கள் காத்திருக்கின்றனர்! ஒரு காலில் நிற்பதால் சோர்வு ஏற்பட்டால் மறு காலில் தங்கள் உடல் கனத்தைச் சாய்த்து நின்றனர், திறக்கப்பட விருக்கும் கோவிலுக்குச் செல்வதற்காகக் காத்திருக்கும் பொறுமையும் பக்தியும் கொண்ட பக்தகோடிகள் போல. ஆம் இதுவும் ஒரு புதிய கோவிலே! இக் கோவிலுக்கு இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் அனைவரும் பக்தர்களாய் கையில் ஒரு பையுடனும், இதயத்தில் ஒரே சிந்தனையுடனும் வந்திருந்தனர். அனைவருக்கும் ஒரே நோக்கம், ஒரே எண்ணம், ஒரே பக்தி. எல்லாம் ஒரு படி அரிசிக்குத்தான்.

துர்க்கா, வரிசையின் கடைசியில் வந்து சேர்ந்தாள். வழக்கம் போலில்லாது இன்று தாமதித்தே வந்தாள். காலையில் எழுந்திருக்கும்பொழுது அவள் உடல் முற்றிலும் ஒரே வலி. தானியக் கடைக்குச் சென்று மணிக்கணக்காக அவளால் காத்திருக்க முடியாதென்பதை அவள் உணர்ந்துதான் இருந்தாள். எனினும் அவளுக்கு வேறு வழிதான் ஏது? வீட்டிலோ கைப்பிடி அரிசிகூட இல்லை. இரண்டு நாட்களாகக் கணவனும் மனைவியும் கடையிலிருந்து உணவை வரவழைத்துச் சாப்பிட்டார்கள். பல நாட்களுக்குப் பிறகு இன்றுதான் தானியக் கடை திறக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பங்கீட்டு அளவு அரிசி கிடைக்கா விட்டால் என்றைக்குக் கிடைக்குமோ? கடவுளுக்குத்தான் தெரியும். அதற்குள் இதுவும் ஏற்பட்டு விட்டால்—குழந்தை பிறந்துவிட்டால்........

துர்க்காவின் கணவன் ஒரு பஞ்சாலையில் வேலை செய்தான். காலையில் வீட்டை விட்டுக் கிளம்பி யந்திரங்களுடன் போராடி, பொழுது சாயுங்காலத்தில் சோர்வுடன் தள்ளாடி வீடு வருவான். துர்க்கா வீட்டுக்கு வேண்டிய சாமான்களைக் கடைகளுக்குப் போய் வாங்கிவருவாள். அவள் அதைப்பற்றிக் கவலைப் படவில்லை. ஒரு தொழிலாளிப் பெண்ணுக்கு அது சிரமமானதோ வெட்கப் படக்கூடிய செயலோ அல்லவே! கிராமத்தில் பெற்றோர்களுடன் அவள் வசித்த காலத்தில் தன் தகப்பனுக்கு வயல் வேலைகளில் ஒத்தாசை செய்திருக்கிறாள். கைராட்டையில் நூற்றிருக்கிறாள். திரிகையில் மாவரைத்திருக்கிறாள். மாட்டைக் குளிப்பாட்டி அதன்

சாணத்தை வராட்டிக்காகச் சேகரித்திருக்கிருள். கணவனுடன் பட்டணத்திற்கு வந்ததும் தன் நந்துவைப் போலவே ஆலேக்கு வேலே செய்யவும் சென்றிருக்கிருள். கடைச் சாப்பாடு தன் கணவனுக்குப் பிடிப்பதில்லேயாகையால் மாலே வீடு திரும்பியதும் தன் கைப்பட சாதம் சமைப்பாள். அப்படியிருந்தும், தான் அதிகமாக வேலே செய்வதாக அவள் கொஞ்சங்கூட எண்ணுவதில்லே. அவளுடைய நந்துவுக்காக எதுவும் செய்யத் தயாராக இருந்தாள். எத்தனே நல்லவன் அவன்! மிருகக்காட்சி சாலே, சௌபாத்தி, பெரிய பெரிய கப்பல்கள் போய் வந்துகொண்டிருக்கும் அப்போலோ பந்தர் ஆகிய இடங்களுக்கு அவன் அவளே அழைத்துச் சென்று காட்டியிருக்கிருன். தான் கேள்விப்பட்ட தெய்வங்களெல்லாம் உயிர்பெற்று நடமாடுங் காட்சியை ஒரு சின்ன வெள்ளித் திரையில் காண்பிக்கும் அற்புத இடமான சினிமாக்காட்சி சாலேக்கும் அழைத்துச் சென்றிருக்கிருன். இவற்றையெல்லாம் துர்க்கா கனவிற்கூட கண்டவளல்ல.

நந்து அவள்மீது அன்பும் பரிவும் காட்டி வந்தான். மற்ற ஆலேத் தொழிலாளிகள் போல் சம்பள நாட்களில் அவன் குடித்துவிட்டு வருவதுமில்லே; மனேவியை ஒரு நாளாவது அடித்ததுமில்லே. ஆருவது மாதமானதும் துர்க்கா ஆலேக்கு வேலேக்குப் போவதை நிறுத்தினுள். 'நீ இப்பொழுது வேலே செய்யக்கூடாது, வீட்டிலிருந்துகொண்டு ஓய்வு பெற வேண்டும், நீ என் மகனுக்குத் தாயாகப் போகிருய் அல்லவா? இந்தா பார் துர்க்கா, நீ எனக்கு ஒரு மகனேக் கொடுக்கவேண்டும். ஊளேயிடும் பெண் குழந்தை எனக்கு வேண்டாம்' என்று கண்ணில் மகிழ்ச்சி பொங்கக் கூறுவான்.

பாம்புபோல் வளேந்து, நத்தைபோல் ஊர்ந்து, தேனீக்கள் போல் இரைச்சலிட்டுக்கொண்டு பெண்கள் வரிசை தானியக் கடையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இப்பொழுது சுமார் ஒரு டஜன் பெண்கள் துர்க்காவுக்குப் பின்னல் வந்து சேர்ந்தனர். அவர்களிடையே பலவிதச் சர்ச்சைகள் நடைபெற்றன. ஏறிக்கொண்டிருக்கும் விலேவாசிகளேப் பற்றி ஒரு பார்சிப் பெண் சத்தமிட்டுப் பேசிக்கொண்டிருந்தாள். ஒரு கோஜா ஸ்திரீ தானியக் குறைவுக்காக காங்கிரஸ்மீது குறை கூறிக்கொண்டிருந்தாள். 'இதற்கெல்லாம் மகாத்மா காந்திதான் காரணம்; அரசாங்கத்தை அவர் எதிர்த்து நின்றதால் அவர்கள் வேண்டுமென்றே தானியக் கட்டுப்பாடுகள் வைத்து மக்களேப் பழி வாங்குகிருர்கள்' என்று கருதினுள் ஒரு கிறிஸ்துவப் பெண்மணி.

'காங்கிரசையும் மகாத்மாவையும் நீ ஏன் குறை கூறுகின்ருய்? அரசாங்கம் லட்சக்கணக்கான டன் கோதுமையை பாரசீகத்திற்கும், எகிப்திற்கும் ஏற்றுமதி செய்துகொண்டிருப்பது உனக்குத் தெரியாதா?' என்று தலே நரைத்த ஒரு பெரிய குஜராத்தி மாது இடைமறித்துக் கூறினுள்.

'ஆம், அரசாங்கம் நாட்டைவிட்டுத் தானியங்களே அனுப்பு

வது எங்களுக்குத் தெரிந்தது தான். ஆனால் நம் இந்தியர்கள் மட்டும் குற்றமற்றவர்களா என்ன? இந்த மார்வாடிகளைப் பார்! நிறைய இருப்பைக் குவித்து வைத்துப் பின்னால் கள்ளச் சந்தையில் விற்கிறான்கள்' என்று மாராத்திய மங்கை ஒருத்தி பதில் கூறினாள்.

'ஆமாம் உண்மைதான். நாம் ஐந்து ஆறு மணி நேரம் இந்த ஒரு படி அரிசிக்காக வரிசையில் காத்திருக்க இந்த மார்வாடிகள் ஆயிரக் கணக்கான மணங்கு தானியத்தை பழைய விலையிலும் பார்க்க மூன்று மடங்கு அதிக விலையில் விற்பதற்காகப் பூமிக்கடியில் பதுக்கி வைத்திருக்கிறார்கள்.'

'இந்தத் தேவடியாள் மகன்களைக் கழுவில் ஏற்ற வேண்டும்.'

'மற்ற நாடுகளிலெல்லாம் அப்படித்தான் செய்கிறார்கள். ஆனால் இங்கோ அரசாங்கம் அவர்களுக்கு ராவ்பகதூர், கான்பகதூர் பட்டங்களைக் கொடுக்கிறது. அவர்களும் யுத்தக் கண்டிராக்டினால் தினம் கொழுத்துக் கொண்டே வருகிறார்கள்.' மற்றொரு பக்கம் சிலர் அப்போதைய புதிய யுத்தச் செய்தியைப் பற்றி சர்ச்சை செய்து கொண்டிருந்தார்கள்.

'இந்தா பார் அக்கா, உனக்குத் தெரியாது, இந்த 'செருமனிக்காரன் சப்பான்காரன்' எல்லாம் ஒரே மாதிரிதான். வித்தியாசமே இல்லை. 'சப்பான்' காரனுக்கு மட்டும் வசதி கிடைத்தால் நிச்சயமாக 'ரசியா'வைத் தாக்குவான்.'

'நான் சொல்லுகிறேன் என்று பார், ஆயுள் காலம் முடிந்தால் காட்டுக் குள்ளநரி பட்டணத்திற்கு வருமாம், அதுமாதிரி 'சப்பான்' மட்டும் 'ரசியா'வைத் தாக்கினால் அதுதான் அதற்குக் கடைசிக் காலம், பர்மாவையும் பிலிப்பைனையும் விழுங்கிவிட்டு ஏப்பம்விட முடியாது தடுமாறுகிறதே, அந்தமாதிரி சின்ன விஷயம் அல்ல இது. ரசியா, சரியான ரசியா அல்லவா?'

'ரஷ்யா.' வெயிலில் நிற்கும் தூக்காவின் தலை சுற்றத் தொடங்கியது. அவள் தனக்குத் தானே இந்த 'ரஷ்யா' என்ற சொல்லை எங்கோ கேட்டமாதிரி இருக்கிறதே என்று யோசித்தாள். தனக்கும் இந்த ரஷ்யாவிற்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதுபோல் தோன்றியது. 'ஆம்' இப்பொழுது ஞாபகம் வந்தது. நந்து அவளை திறந்த வெளியில் நடந்த ஒரு தொழிலாளர் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றான். அந்த மைதானத்தில் ஆண்களும் பெண்களும் கூடிய சுமார் முப்பதினாயிரம் தொழிலாளர்கள் அமர்ந்திருந்தார்கள். ஒரே இடத்தில் இவ்வளவு தொகை ஜனங்கள் கூடியதை தூக்கா தன் ஆயுள் காலத்திலேயே கண்டதில்லை. ஒரு பெருங் கடலில் ஒரு துளி எனத் தன்னை நினைத்தாள். எல்லாப் பக்கத்திலும் செங்கொடிகள். அவற்றில் தன் தகப்பன் அறுவடைக் காலத்தில் உபயோகித்ததைப் போன்ற அரிவாளும், காய்ச்சிய இரும்பின் மீது கொல்லர் அடிக்கும் சம்மட்டியைப்போன்ற தோன்றும் வெள்ளை நிறத்தில் காட்சியளித்தன. கூட்டத்தின் மத்தியில் உயரமான ஒரு மேடை இருந்தது. அதிலிருந்து பலர் கூட்டத்தை நோக்கிப் பேசினார்கள். அந்த

மேடையில் பேசும் மனிதர் குரல் அவள் அருகில் உள்ள மரக்கம்பத்தோடு இணைக்கப்பட்டிருந்த பெரிய கறுப்பு நிறமுள்ள குழாய் வழியாகக் கேட்டது. அந்தக் குரலும் சாதாரண மனிதர் குரலாகவே இருந்தது. யாரோ கிணற்றை எட்டிப் பார்த்துப் பேசுவதுபோல் கேட்டது. அந்தக் குரல் கூறியதாவது: 'சகோதரர்களே சகோதரிகளே, ரத்தவெறி பிடித்த ஹிட்லரின் ஓநாய்கள் ரஷ்யாவை--உலகத் தொழிலாளர்களின் தாயகமாகிய ரஷ்யாவை—விவசாயிகளும் தொழிலாளிகளும் ஆட்சி செய்யும் ஒரே நாடான ரஷ்யாவைத் தாக்கியுள்ளன. உலகத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று திரண்டு ரஷ்யாவைக் காப்பாற்ற வேண்டும்;' அதைத் தொடர்ந்து 'சோவியத் ரஷ்யா ஜிந்தாபாத்' என்று முப்பதினாயிரம் குரல்கள் ஒலித்தன. துர்க்கா, வானமே இடிந்து விழுந்துவிடுமோ என்று பயந்துவிட்டாள்.

இந்தக் 'கியூ' வரிசையில் அவள் எவ்வளவு நேரம் காத்திருந்தாள்? திரும்பிப் பார்த்தபோது தனக்குப் பின்னால் இருபது பெண்கள் இருப்பதைக் கண்டாள். இப்பொழுது அவள் தெருவின் முனைக்கு வந்துவிட்டதால், தலையைச் சிறிது உயர்த்திப் பார்க்கவும் கடையிலுள்ள சிவப்பு போர்டு கண்ணுக்குத் தெரிந்தது. இருந்தும் அவளுக்கும் அவளுடைய ஒரு படி அரிசிக்கும் மத்தியில் ஏறக்குறைய நூறு பெண்கள் நின்றனர். 'அரிசியை அளக்க இந்த வியாபாரிக்கு ஏன் இவ்வளவு நேரமாகிறது?' என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு கால்மேல் ஊன்றியிருந்த பாரத்தை மறுகாலுக்கு மாற்றினாள். வெப்ப மிகுதியினால் மற்ற பெண்களும் பேசிச் சோர்ந்து போயினர். எதிர்த்தாற்போலிருந்த நடைபாதையிலிருந்த மரத்தின்மீது நீல நிறமுள்ள வேடிக்கையான உடையுடுத்திய போலீஸ்காரன் சாய்ந்து கொண்டே அரைத் தூக்கம் போட்டுக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் துர்க்காவிற்கு அவளது சோர்வு, கால்களில் தோன்றிய வலி, வயிற்றில் தோன்றிய கொடிய வேதனை அனைத்தும் கண்ணில் திரும்பியது போலாயிற்று. குளிர்ச்சியாகத் தோன்றிய நடைபாதையில் போய்ப் படுத்துத் தூங்கலாமா என்றுகூட எண்ணினாள். இலேசாகத் தலை சுற்றத் தொடங்கவும் தன் முன்னே இருந்த பெண்ணின் தோளைப் பிடித்துக் கீழே விழாது சமாளித்துக் கொண்டாள்.

'என் அம்மா, கால்களினால் நிற்க முடியவில்லையா?' இதை ஒரு சாந்தமான கிழவி கூறினாள். அவளது பேச்சில் ஆத்திரமோ கோபமோ இருக்கவில்லை. துர்க்காவிற்கு வெட்கம் அதிகமாகவும் நடுக்கந் தோன்றியது. பின் தாங்கிக் கால் வைத்ததுதான் தாமதம், 'உனக்குக் கண் பொட்டையா? காலை மிதித்து விட்டாயே!' என்று கத்தி துர்க்காவின் உடல் பாரத்திலிருந்து விலகி அந்தப் பெண் தன் காலை இழுத்துக் கொள்வதற்காக பின் செல்லவும், பின்னால் வரிசைக் கடைசிவரை பல மொழிகளிலும் வசைமாரிகள் கிளம்பின.

துர்க்காவிற்கு மிகவும் அவமானமாக இருந்தது. பல்லைக் கடித்துக்

கொண்டே தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு கண்களைத் தரைமீது செலுத்தினாள். ஒரு சமயம் வரிசையில் உள்ள தன் இடத்தை விட்டுத் தன்னுடைய ஒரு படி அரிசியையும் வேண்டாமென விட்டுச் செல்லலாமாவெனவும் எண்ணினாள். ஆனால் நந்துவையும் அவன் மாலையில் சாப்பிட வேண்டியதையும் எண்ணினாள். அவளின் அருமை நந்து அவளுக்காக இந்நாட்களில் 'ஓவர் டைம்' வேலை செய்து வருகிறான். இதற்குள் அவளும் கடைக்கு அருகே வந்து விட்டாள். இன்னும் ஒரு அரை மணி நேர மட்டும் காத்திருந்தால் தன் பையில் அரிசியுடன் வீடு போய்ச் சேரலாம்.

தன்னை அப்படியே பாதியில் ரம்பங் கொண்டு அறுப்பதுபோல் அவளுக்கு ஓர் கொடிய வலி தோன்றியது. உடையுடன் குளித்ததுபோல் அவ்வளவு வியர்வை அவள் உடலெல்லாம் கொட்டியது. தலை சுற்றி மயக்கம் வருவது போலிருந்தது. அவளினுள்ளே வலி தோன்றித் தோன்றி மறைந்தது. ஒரு கூரிய கட்டாரியால் மீண்டும் மீண்டும் குத்தப்படுவதுபோல் இருந்தது. இவ்வளவு காலமாகக் காத்திருந்த அந்த நேரமும் வந்துவிடுமோ? இருக்காது. குழந்தை பிறக்க இன்னும் இரண்டு வாரங்களாகும் என்று மூன்று நாட்களுக்கு முன்னர்தானே மருத்துவச்சி கூறினாள். இது ஏதாவது வேறு வலியாக இருக்குமோ?

யோசித்து, எதிர்பார்த்து சோர்வுற்று, தன்னை வருத்துகின்ற வலியையும் பொறுத்துக் கொண்டு வரிசையில் நகர்ந்து சமாளித்துக் கொண்டிருந்தாள். முடிவில் ஒரு வகையாக தானியக் கடைக்கு எதிரில் வந்துவிட்டாள். அவளுக்கு முன்னால் ஒரே ஒரு பெண்தான் நின்றாள். அப்பெண் தன் பங்கை வாங்க உள்ளே சென்ற போது இரண்டு படிகள் உள்ள ஏணிமேல் அவள் ஏறிச் சென்றதையும் கவனித்தாள் துர்க்கா. ஒவ்வொரு அடி உயரமுள்ள இந்த படிகள் அவளது கிராமத்தின் அருகில் மலைமீதுள்ள கோவிலுக்குச் செல்லும் நூற்றிருபது படிகள்போல் தோற்றமளித்தன. இந்தப் பழைய படிகளில் அவளால் ஏறிச் செல்ல முடியுமா?

முன் சென்ற பெண் வெற்றிப் புன்னகையுடன் தன் முகத்திலிருந்த வியர்வையைத் தன் சேலை முனையால் துடைத்துக் கொண்டே கடையிலிருந்து திரும்பினாள். துர்க்காவைப் பின்னாலிருந்தவள் இலேசாகத் தள்ளினாள். 'இந்தா அம்மா, நடந்துபோ. என்ன தூங்குகிறாயா?' மார்வாடி துர்க்காவைப் பார்த்த வண்ணம் 'சீக்கிரம் வா அம்மா, இன்னும் பல பேர் காத்திருக்கிறார்கள் அல்லவா?' என்றான். படிகளில் ஏறிச் செல்ல வேண்டியதை எண்ணி அவளது முகம் வெளுப்படைந்து கால்கள் நடுங்குவதை அவனால் காணமுடியவில்லை.

'என்...என்....என்னால் முடியவில்லை...இங்கேயே வந்து அந்த அரிசியைக் கொஞ்சம் கொடுத்து விடுங்களேன்.' அவளது உதடுகள் மாய்ந்தன. குரல் கம்மியது 'உனக்கு மட்டும் சலுகை காட்ட உன் தலையில் மட்டும் கிரீடம் வைத்திருக்கிறதா? மற்றவர்களைப்

போல் மேலே வந்து உன் அரிசியை வாங்கிக்கொண்டு போ!'

'போ, விரைவாய்ப் போ.'

'உனக்கு வேண்டா' மென்றால் உனக்கு அடுத்திருப்பவளை யாவது வாங்க விடு.'

ஒவ்வொரு எட்டிலும் தடுமாறி விழுவது போல் தோன்றியது. எப்படியோ சிரமப்பட்டு உடலைச் சுமந்து கடைக்குள் சென்றுவிட்டாள். நடுக்கத்துடன் அந்த மார்வாடியிடம் பையையும், கடந்த நான்கு மணி நேரமாகக் கையில் வைத்திருந்ததால் நனைந்து போயிருந்த சில்லரை நாணயங்களையும் கொடுத்தாள்: மார்வாடி படியை எடுத்து அதில் அரிசியை நிரப்பி துர்க்காவின் பையில் கொட்டினான். அப்பொழுது அவளுக்கு அந்த கொழுத்த மார்வாடி விசித்திரமான முறையில் சுழல்வது போல் தோன்றியது. படி, அரிசி மூட்டைகள் கடை முழுவதுமே சுற்றுவது போல் இருந்தன. சுழன்று சுழன்று கொண்டே வந்தது. கடை, மூட்டைகள், நெய் டின்கள் அனைத்தும் சுற்றின. அங்கிருந்த ஹனுமானின் வர்ணப் படம் அவள் முகத்தில் மோதியது. அவள் கூச்சலிட்டாள்.

தான் பெரிய அரிசிக் குவியலின் மத்தியில் புதை பட்டிருப்பது போல் அவளுக்குத் தோன்றியது. மூச்சுத் திணறியது. யாரோ சிலர் மேலிருந்த அரிசியை எடுத்துவிடவும் அவளால் மூச்சுவிட முடிந்தது. ஹனுமான் படியால் அரிசியை அளந்து காத்திருக்கும் பெண்களின் பையில் கொட்டி 'இந்தா உனக்கு ஒரு படி அரிசி, இந்தா உனக்கு ஒரு படி அரிசி' என்று கூறுவதுபோல் தோற்றமளித்தது. அதன் பிரபலமான நீண்ட வால் மகிழ்ச்சியால் துள்ளிக் கொண்டிருந்தது. இல்லை, அது ஹனுமானின் வால் அல்ல. துர்க்காவைத் திட்டிய பெண்ணின் முகத்தைக் கொண்ட பாம்பு. திடீரென அப் பாம்பு நீண்டு தெரு முனைவரை வளர்ந்திருந்தது. இப்பொழுது அது நகர்ந்து வளைந்து கொண்டு துர்க்காவை நோக்கி வந்து கொண்டிருந்தது. அப் பாம்பு பெருமூச்சு விடவும் துர்க்கா அந்த அரக்க உருவத்தின் வயிற்றினுள் இழுக்கப்படுவது போல் இருந்தது.

அது உண்மையில் பாம்பின் வயிறல்ல. அது ஓர் இருட்டறை. இருண்ட புழுக்கமான அறை. அதில் கொஞ்சங்கூட காற்று இல்லை. மீண்டும் அவளுக்கு மூச்சு திணறியது. அந்த ஆழ்ந்த இருளில் யாரோ 'இதுதான் இந்தியா! இதுதான் இந்தியா!' என்று கூறினார்கள். தூரத்தே இரண்டு சிவப்பு வெளிச்சங்கள் எரிந்து கொண்டிருந்தன. துர்க்கா அவற்றைப் பாம்பினது கண்களெனக் கருதினாள். ஆனால் அவை அருகில் நெருங்கவும் அரிவாளும் சம்மட்டியும் பொறித்த இரு செங்கொடிகளாகக் காட்சி யளித்தன. இப்பொழுது எங்கும் வெளிச்சம் பளிச்செனத் தெரிந்தது. ஆயிரக்கணக்கான தொழிலாளர் வரிசையாக நடந்து கொண்டே விசித்திர மொழியில் பாடிக்கொண்டு சென்றனர். கிணற்றுக் குள்ளிருந்து 'இந்த ரஷ்யாதான் ரஷ்யா' என்று யாரோ கத்தும் ஒலி கேட்பதுபோலிருந்தது. திடீரெனச் சூரியனைக்

கருமேகங்கள் மறைத்தன. மின்னல்கள் வீசின. இடி ஓசை கேட்டது. ஆனல் அவை வெறும் துப்பாக்கி ஓசைகளாக மாறின. சினிமாவில் அவள் ஒரு முறை கண்டது போல் வெடிகுண்டுகளும் ரவைகளும் எல்லா இடத்திலும் விழுந்தன. அவள் அருகேயும் ஒரு குண்டு விழுந்து அவளைச் சுக்கு நூருக்கியது.......

துர்க்காவிற்குத் தான் நிர்வாணமாக இருப்பது போல் தோன்றவும் வெட்கம் தோன்றியது. எழுந்திருக்க முயலும் முன்னர் ஒரு பயங்கர அரக்கன் தோன்றி அவள் உடலை இரு துண்டுகளாக ரம்பங் கொண்டு அறுப்பது போல் தோன்றியது. மீண்டும் பார்த்தபொழுது அவ் வுருவம் நந்துவாகத் தோன்றியது. அவளை அறுத்துக்கொண்டே வேடிக்கையாக 'இங்கே பார் துர்க்கா, நீ எனக்கு ஒரு மகன் கொடுக்க வேண்டும் தெரிகிறதா?' என்று அவன் கூறினன். ஆயிரக் கணக்கான மக்கள் சூழ்ந்து நின்று இவள் இருக்கும் நிலையைக் கண்டு வாய்விட்டுச் சிரித்தார்கள். அக் கூட்டத்திலிருந்த ஒருத்தி 'இது தான் இந்தியா' என்ருள். கொழுத்த குஜராத்திப் பெண்ணே 'காந்திஜியை ஏன் குறை கூறுகிருய்? அவரையும்தான் இந்த இங்கிலீஷ்காரன்கள் பட்டினி போடுகின்ருர்களே!' என்ருள்.

அனைவரும் மறைந்தனர். தான் அந்த மார்வாடியை விடக் கொழுத்திருப்பதையும் தன் வயிறு முன் தள்ளிக்கொண் டிருப்பதையும் துர்க்கா கண்டாள். பின்னர் யாரோ ஒரு ஆசாமி நீண்ட கூரிய ஊசியை அவள் வயிற்றில் பாய்ச்சுவதுபோ லிருந்தது. அதனல் ரத்தம் பீறிடவும் அவளது உடைகளெல்லாம் ரத்தத்தில் தோய்ந்தன. தொலைவிலே யாரோ அவளது மனக் கதவைத் தட்டுவதுபோ லிருந்தது. சிலர் பேசிக்கொண் டிருந்தனர். இன்னும் தலை சுற்றிக் கொண்டே இருக்கவும் கடையும் சுழன்று கொண்டே இருந்தது. மெதுவாக அதுவும் நின்றது. ஹனுமானின் படம் சுவரில் இன்னும் தொங்கிக் கொண் டிருந்தது. மிகவும் அசதியாக இருந்ததால் அவளால் தன்னைச் சுற்றி நிற்பவர்கள் போல் தோன்றியவர்களைப் பார்க்க முடியவில்லை. அவர்கள் ஏதோ பேசின தில் ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டும் காதில் விழுந்தன.

'......பாவம் மனுஷி......இது அவளுக்கு முதலாவதாக இருக்கும் போலிருக்கு......'

'...கடவுளின் திருச்சித்தந்தான் என்ன...'

'...போயும் போயும் இந்த இடத்திலா...'

'...யாரோ ஒரு தொழிலாளிப் பெண்...'

'...எல்லோரும் வெளியே போங்கள். இது எல்லாம் என்ன வேடிக்கையா?'

துர்க்காவிற்கு ஒரு வெறுப்பு உணர்ச்சி தோன்றியது. கையினல் துணிகளைத் தொட்டால் அவை நனைந்திருந்தன. தண்ணீரா? வியர்வையா? இல்லை, ரத்தம்! அவளது மனதில் ஒரு பயங்கரம் தோன்றியது.

'ஐயய்யோ... இங்கே எல்லோரும் பார்த்திருக்கும் நேரத்திலா?

இதைவிட வேறு என்ன கேவலம் வேண்டும்?' அந்த இடத்திலேயே பூமி பிளந்து தன்னையும் இந்த அவமானத்தையும் சேர்த்து விழுங்கிவிடக்கூடாதா என எண்ணினாள். இந்த அவமானத்தை விடச் சாவு எவ்வளவோ மேலானதே! சோர்வு தோன்றவும் இலேசாகக் கண்ணை மூடியவாறே சிந்திக்கலானாள். 'இந்த இடத்தை விட்டு எப்படிப் போவது? இனிமேல் நான் மனிதர் முகத்தில் எப்படி விழிப்பது? தெருவில் உள்ளவர்களெல்லாம் என்னைச் சுட்டிக் காண்பித்துப் பேசுவார்களே!'

பல நிமிஷ நேரம் இந்த அவமான எண்ணங்களில் சுழன்று கொண்டிருந்தாள். மீண்டும் ஒரு மயக்கம் தோன்றுவதுபோலிருந்த பொழுது...

ஒரு குழந்தை அழுதது.

ஒரு குழந்தை யாருடைய குழந்தை? அவளுடைய குழந்தை! தூர்க்காவின் குழந்தை! நந்துவின் குழந்தை!

இந்தச் சின்னஞ் சிறிய குரல் ஒரு கணத்தில் அவளது எல்லா அவமானத்தையும் சங்கடத்தையும் போக்கிவிட்டது. சோர்வும் மயக்கமும் அவளது உள்ளத்திலிருந்து அகன்றுவிட்டன. வலியைக் கவனியாது தலையைத் திருப்பிப் பார்த்தபொழுது கந்தைத் துணிகளால் சுற்றப்பட்டிருந்த சின்னஞ்சிவப்பு நிற மாமிசத் துண்டத்தைக் கண்ணுற்றாள். தாய் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் அதன் வாயிலிருந்து அழுகுரல் கேட்டது. 'அதற்கு பசிக்கிறது போலிருக்கிறது' என எண்ணி அவள் தனது ரவிக்கையை அவிழ்த்தாள்.

தாய்மையின் உயர்வு சில்லறை நாணத்தைப் போக்கியது. சுற்றியிருந்த அனைவரும் சிரித்துக் கொண்டே வெளியேறினர்.

சிறிது நேரங் கழித்து, தடுமாறி எழுந்து சுவரைப் பிடித்துக் கொண்டே தடுமாற்றத்துடன் வெளியே நடந்து சென்றாள். ஒரு கையால் மகனைப் பிடித்திருந்தாள். மற்றொரு கையில் அவளது பை. அந்தப் பையில் ஒருபடி அரிசி.



நடை

○

ஆ. முத்துசிவன்

தன்னைத் திருப்தி செய்வதன் மூலம் பிறரைத் திருப்தி செய்வதா அல்லது பிறரைத் திருப்தி செய்வதன் மூலம் தன்னைத் திருப்தி செய்வதா என்ற பிரசினையைத் தீர்த்துக் கொண்டோமானல் நடை பற்றிய மர்மம் வெளியாகி விடும். ஏன் இந்தவிதமான கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்ருல், காலப் போக்கானது அவ்வாறு கேட்டுக்கொள்ளும் அவசியத்தை வற்புறுத்துகிறது. தன்னைத் திருப்தி செய்வதன் மூலம் பிறரைத் திருப்தி செய்யும் நடை எதுவோ, அதுவே ஜீவனுடைய நடை. இன்னும் இதனை விளக்கிச் சொல்வதென்ருல் எவனொருவன் தன் அறிவில் உதித்ததை அகத்தால் எழுதுகின்ருனே அவனுடைய நடையில் தான் ஜீவன் இருக்கும் என்று சொல்லலாம்.

எழுத்துலகத்தில் இன்று இருவிதமான நடைகள் பயின்று வருகின்றன. ஒன்று பாவலர் நடை. மற்ருென்று பாமரர் நடை. இந்த இருவிதமான நடைகளை வேறு பெயர்கள் கொண்டும் அழைக்கலாம். ஒன்று இலக்கிய நடை. மற்ருென்று பத்திரிகை நடை.

உணர்ந்ததை உணர்ந்த வெறியுடன் எழுதுவது இலக்கிய நடை. உணர்ந்ததை உணர்த்தும் குறியுடன் எழுதுவது பத்திரிகை நடை. ஆர்வத்தால் எழுகின்றது இலக்கிய நடை. அவசியத்தால் எழுகின்றது பத்திரிகை நடை. இன்னும், இலக்கிய நடை அகத்தால் உருவாகின்றது. பத்திரிகை நடை அறிவால் உருவாகின்றது. இலக்கிய நடையில் அகத்தின் முத்திரை துலங்கும். பத்திரிகை நடையில் அறிவின் முத்திரை துலங்கும். இலக்கிய நடை தரிசன ஜோதியுடன் மின்னும். பத்திரிகை நடை தர்க்கப்பகட்டுடன் மினுங்கும். இலக்கிய நடையானது உள்ளத்தைத் தாக்கும். பத்திரிகை நடையோ உள்ளத்தைத் தடவும்.

இவை அனைத்தும் பெரும் பகுதியாகக் காணப்படும் வேறுபாடுகளே தவிர கண்டிப்பாக இருக்கவேண்டிய வேறுபாடுகள் இல்லை. ஏனென்ருல் சிற்சில வேளைகளில் ஒன்ருேடொன்று மருவியும் வரக்கூடும்.

நடைபற்றி இரு வகையான கருத்துக்கள் இருந்து வருகின்றன. ஒன்று நடையே பொருள், பொருளே நடை என்ற கருத்து. மற்ருென்று நடைவேறு, பொருள் வேறு என்ற கருத்து.

இப்பொழுது முதல் கருத்தை எடுத்துக்கொள்வோம். நடையும் பொருளும் ஒன்றே என்று வாதாடுகின்றவர்கள், ஏன் அவ்வாறு வாதாடுகின்ருர்கள், என்பதைப்

பார்க்கவேண்டும். கருத்து என்பது எப்பொழுதும் வார்த்தைகளின் இணைப்பினலேயே உதயமாகின்றது. வார்த்தைகளை அகற்றிவிட்டு வெறும் கருத்தை மட்டிலும் வடிக்க முடியுமா என்ருல், முடியவே முடியாது. கருத்து என்பது வார்த்தை மயமாக அமைவதுதான். அது கவர்ச்சிகரமான முறையில் அமையுமானல், கவர்ச்சிகரமான நடையில் அமைந்ததாகவே பொருள்படும். கவர்ச்சி தளர்ந்த முறையில் அமையுமானல் கவர்ச்சி தளர்ந்த நடையில் அமைந்ததாகப் பொருள்படும். நடை அழகாக இருக்கிறதென்ருல், கருத்தும் அழகாக இருக்கிறது என்பதுதான் பொருள். நடை அழகு குன்றியிருக்கிறதென்ருல், அந்த மட்டிலும் கருத்தின் அழகும் குன்றியிருக்கிறது என்றே கொள்ளவேண்டும். இன்னும், கவர்ச்சி காரணமாக வார்த்தைகள் திருத்தப்படுமானல் அந்த அளவில் கருத்தும் திருத்தப்பட்டதாகவே பொருள்படும். ஓர் உதாரணத்தின் மூலம் இதைத் தெரிந்து கொள்வோம்.

> **மன்னுயிர்க்குத் தீங்கிழைத்தல்**
> **பாவம்—இதை**
> **மனத்திலே கொள்ள வேணும்**
> **மாந்தீர்.**

இப்படிச் சொல்வது ஓர் முறை. இன்னெரு முறையிலும் இதைச் சொல்லலாம்.

> **வளர்ப்பவன் வாசலிலே—ஒரு நாய்**
> **வாடி வதங்குமெனில்**
> **அளப்பருங்கேடு வரும்—அந்தோ**
> **அரசு பட்டழியும்.**

(A dog, starved at his master's gate, predicts the ruin of a state) —Blake.

இரண்டு உதாரணங்களிலும் பயின்றுவரும் கருத்து ஒன்றே தான்; அதைச் சொல்லுகின்ற முறைதான் வேறு என்பதாக இந்த இடத்தில் சொல்லத் தோன்றும். ஆனல் உண்மை அப்படித் தானு என்பதை ஆராய்வோம்.

உயிர்களுக்குத் தீங்கு செய்தல் பாவம் என்பது முதல் உதாரணத்தினல் வற்புறுத்தப்படுகின்றது.

வளர்க்கிறவன் வாசலில் அவனுடைய நாய் வாடி வதங்கினல், அதனுடைய வருத்தத்தைப் புறக்கணிக்கக் கூடிய சுபாவம் அவனிடத்தில் புகுந்துவிட்டது என்பதுதான் பொருள். நாயை எப்படிப் புறக்கணிக்கத் துணிந்துவிட்டானே அம்மாதிரி மனிதனையும் புறக்கணிக்கத் துணியலாம். இவ்வாறு புறக்கணிக்குந் தன்மை வளருமானல், இறுதியில் நாட்டிற்கே கேடுவந்து சூழும் என்ற உண்மையானது இரண்டாவது உதாரணத்தினல் வற்புறுத்தப்படுகின்றது. முன்னையதில் நடையழகு இல்லை, பின்னையதில் நடையழகு மிளிர்கிறது என்ருல், முன்னையதில் கருத்து நன்ருக அமையவில்லை, பின்னையதில் கருத்து நன்ருக அமைந்திருக்கிறது என்பதுதான் பொருள்.

இன்னெரு உதாரணம்.

ஓர் கல்லை எடுத்துக்கொள்வோம். ஒருவன் அதனை வெறும் உருட்டுக் கல்லாக அடித்து உருட்டுகிருன். இன்னெருவன் அதனிடத்திலிருந்து எழிலுடைய ஓர் பெண்ணை விடுவிக்கிருன். அவ்வாறு செய்வதெல்லாம் அவனவனுடைய திறமையைப் பொறுத்

தது. அம்மாதிரியே உயிர்களுக்குத் தீங்கு செய்யாமையை ஒன்று வெறும் நீதியாக உணர்த்துகிறது. மற்ருென்று தீமை செய்வதாலாகிய பயனை மிகுந்த பாவச் செறிவுடன் உணர்த்துகிறது. ஒவ்வொன்றும் ஏன் வெவ்வேருன முறையில் அமைந்திருக்கிறதென்ருல், அதனதன் போக்கே வெவ்வேருக அமைந்திருப்பதால்.

இன்னெரு உதாரணம்.

மரத்தினுல் ஓர் யானை செய்யப்பட்டிருக்கிறது. இது என்ன உருவம் என்று எண்ணும்போது மரம் மறைந்து யானை தோன்றுகிறது. இது எதனுல் செய்யப்பட்டது என்று பார்க்கும்போது யானை மறைந்து மரம் தோன்றுகிறது.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்துள் மறைந்தது மாமதயானை
(திருமூலர்)

அதே போன்று இது என்ன விஷயம் என்று பார்க்கும்போது நடை மறைந்து விடுகிறது. இது எப்படி உணர்த்தப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது பொருள் மறைந்து விடுகிறது. ஆகவே நடை, பொருள் என்ற பாகுபாடுகளெல்லாம் இட்டுக் கட்டிப் பிரிவினை செய்யும்போது தோன்றுகின்றனவே அல்லாது, இயல்பான பிரிவினைகளாக அமையவில்லை. சூத்திர வடிவாக இக் கருத்தைச் சொல்வதென்ருல் பின் வருமாறு சொல்லலாம்.

நடையும் பொருளும் வெவ்வே
றென்பர்
நடை பொருள் உண்மை நன்கறி
யாதார்;
நடையும் பொருளும் நாடி
உணரின்
நடைபொருள் ஒன்ருய் நடப்பது
காண்பர்

இனி அடுத்த கட்சியை ஆராய்வோம். "நடை என்பது பொருளை வனையும் முறை. ஆகவே நடை வேறு, பொருள்வேறு" என்பதாகவும் அறிஞர்கள் கொள்ளுகிருர்கள். இதன் பொருள் என்னவென்ருல், பொருள் என்பது வேறு, அதனை வெளியிடும் முறை என்பதும் வேறு என்பதாம். ஒரே பொருளை ஒருவன் ஒரு மாதிரி வெளியிடுவான், இன்னெருவன் இன்னெரு மாதிரி வெளியிடுவான்; மற்ருெருவன் வேருெரு மாதிரி வெளியிடுவான்; அவன் எந்த முறையில் வெளியிடுகின்ருனே அதுதான் நடை. அவன் எதை வெளியிடுகின்ருனே அதுதான் பொருள் என்று கருதவேண்டியதிருக்கிறது. இதனை இம்மட்டோடு நிறுத்திவிட்டு பொதுவாக நடையில் காணப்படும் பல்வேறு அம்சங்களைப் பார்ப்போம்.

ஒருவன் எழுதியது குறைந்த பட்சம் ஐம்பது வருஷங்களாவது அறிஞர்களால் பாராட்டப்படுமாயின் கண்டிப்பாக அதன்பால் இலக்கிய மணம் படிந்திருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

இனி இவ்வாறு நிலை பெற்று விளங்குவதற்குரிய அடிப்படை யாது என்பதைப் பார்ப்போம்.

1. எழுதுபவனிடம் முதலாவதாக விளங்கவேண்டிய பண்பு **தெளிவு** என்பதாகும். தெளிவு என்பதன்மூலம் நாம் கொள்ளக் கூடிய பொருள் என்னவென்ருல்

வாசிக்கின்றவனுக்குப் பொருள் மயக்கம் ஏற்படக்கூடாது. எழுது கின்றவனுடைய மனத்தில் எது படிகின்றதோ, அது வாசிக்கின்ற வனுடைய மனத்திலும் பட வேண்டும்.

2. அடுத்தபடியாக அதன்பால் இசை அமைதி இருக்கவேண்டும். இதனை எப்படித் தெரிந்துகொள்ள லாம் என்றால், எழுதியதைச் சிறிது சப்தமிட்டுப் படிக்கும் போது காதே சொல்லிவிடும். சில வேளைகளில் வாக்கியங்கள் பல் வேறு கிளைகளுடன் பிரிந்து செல்லும்போது, ஏதாவது ஓர் சொல்லின் மிகுதியினாலோ, தொட ரின் மிகுதியினாலோ, இன்னும் சில வேளைகளில் இரண்டொரு எழுத்துக்களின் குறைவினாலோ சற்று விகாரமாகத் தோன்றும். அத்தகைய விகாரத்தன்மை தென் படாதபடி எழுதவேண்டும். இது மிகவும் முக்கியமானது.

எழுதுகின்றவர்களில் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலோர் எத் தனை எத்தனையோ முறைகளில் எழுதுகின்றார்கள். ஆத்ம பலமும் அறிவுவளமும் கொண்டு எழுது கின்றவர்களாக அவர்களை மதித்து விட முடியாது. ஏதோ எழுது கின்றார்கள். அவ்வளவுதான். அவர்களுடைய கைவரிசையில் எத்தனையோ விதமான நடை வேறுபாடுகளையே கண்டுவிட லாம். அவை பின்வருமாறு:

சேறுநடை, தெண்ணீர் நடை, தந்தி நடை, தடபுடல் நடை, கதம்ப நடை, முருடு நடை முதலி யன. இன்னும் சிலரிடை, அத் தனையும் கலந்த கலவை நடையும் உண்டு.

சேறு நடை என்பது தெளிவு பெற முடியாதபடி மயங்க வைக் கும் நடை. தெண்ணீர் நடை என் பது தெளிந்த நீருக்குள்ளே எப்பொருளையும் பார்ப்பதுபோல் அதனுள் பொருளைப் பார்த்துவிட லாம். இதனை ஏன் சிறந்த அம்சங் களுடன் சேர்க்காது இங்கே சேர்க்க வேண்டுமென்றால், பொரு ளைக் காட்டி விட்டால் மட்டிலும் போதாது. பொருளைத் தெரிய விரும்புகிறவனின் நெஞ்ச வீட் டிலே நிலை பெறக்கூடிய கவர்ச்சி அதன் பால் இருக்க வேண்டும். தந்தி நடை என்பது குறுகிய அள வுள்ள துண்டு துணுக்கான வாக் கியங்களை மிகுதியாக அடுக்கிப் போதல் என்பதாகும். ரயில்வே பாலத்தின் மீது நடந்து செல்லும் போது நமக்கு ஓர் அனுபவம் ஏற் படும். பாலத்தின் மீது குறுக்குக் கட்டைகள் அடுத்தடுத்து வைக்கப் பட்டிருப்பதால், அவற்றின் மேல் கொஞ்ச தூரம் நடந்ததும் மயக்கம் வந்துவிடும். அம்மாதிரியாகவே மித மிஞ்சிய அளவில் துண்டு துணுக்கான வாக்கியங்களை அமைத்து எழுதினால், வாசித்துக் கொண்டு வரும்பொழுது சலிப்பு ஏற்பட்டுவிடும்.

இனி நாம் கவனிக்க வேண்டி யது தடபுடல் நடையாகும். அந் நடையில் ஓசை தான் மிகுதியாக இருக்குமே தவிர பொருள் என் பது அரிதாகவே தென்படும். அடுத்தது கதம்ப நடை. கதம்ப நடை என்பது பிச்சைக்காரன் வாந்தியெடுப்பது போன்றது. இனி உள்ளது முருடு நடை. சில ஜாதி மரங்கள் உண்டு. ஆயிரம் ஆயிரமான முண்டு முடிச்சுகளை

அவற்றின் மீது காணலாம். அம்மா திரியே பலபடியான கடின பதங்களும் சந்திச் செறிவுகளும் மேவ ஒரு சிலர் எழுதுவார்கள்.

மேலே கூறிய இத்தனை நடைகளிலும் இசை அமைதியைக் காண முடியாது.

3. இனி நாம் நடை பற்றிக் கவனிக்க வேண்டிய பண்பு **வடிவ அமைதி** என்பதாகும்.

ஆங்கில மொழியிலுள்ள வசன நூல்களை எடுத்துக் கொள்வோம். சில மேதாவிகள் எழுதிய கட்டுரைகளிலிருந்து வாக்கியங்களை, அப்படியே, பிட்டுப்பிட்டு விழுங்கலாம். தனிமையாக இருக்கும் பொழுதெல்லாம் அவைகள் நமது ஞாபகத்தில் படும். அவைகளை மேற்கோள்களாக உபயோகிக்கும் போது நமக்கு ஓர் வகையான திருப்தி ஏற்படும். இன்றுள்ள தமிழ் நடையைப் பார்த்தால், எத்தனை பேருடைய கட்டுரைகளிலிருந்து ஆங்கில வாக்கியங்களை மேற்கோள்களாகக் கையாள்வது போல் தமிழ் வாக்கியங்களையும் கையாளலாம்? கொஞ்சம் யோசனை செய்யத் தான் வேண்டும்.

4. அடுத்த படியாக அமைய வேண்டிய பண்பு **தொடர்ச்சி** என்பதாகும். சில கார்களில் சவாரி செய்யும்போது நமக்கு ஓர் அனுபவம் ஏற்படும். டிரைவர் அடிக்கடி கியரை மாற்றுவான். அவ்வாறு மாற்றும் போது வெட்டி இழுப்பது போன்றிருக்கும். கியர் மாற்றுகிற ஜோலி டிரைவருக்குத்தான் என்பதில்லை. எழுத்தாளனுக்கும் உண்டு. உணர்ச்சி நிலைக் கேற்றபடியும் விஷய நீர்மைக் கேற்றபடியும் அவ்வப்போது வாய்ப்பான கதி மாற்றங்களைப் புகுத்த வேண்டும். அவ்வாறு புகுத்தும்போது வெட்டி இழுக்கிற தோரணையில் கதி மாற்றம் அமையக்கூடாது. சில டிரைவர்கள் கியர் மாற்றம் செய்யும் போது அதிசமத்காரமாக அதைச் செய்வார்கள். அம்மாதிரியாக எழுத்தாளன் கதிமாற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போது சிறிதும் தொடர்பு தளரக் கூடாது.

5. அடுத்த அம்சம் என்னவென்றால் **விகற்பம்** என்பதாகும். இதனை விரிந்த முறையில் பொருள் செய்ய வேண்டும். நீண்டும், சுருண்டும், நெளிந்தும், குழைந்தும், எடுத்தும் படுத்தும், விரித்தும், செறித்தும், வினாக்கள் தோன்றவும், விடைகள் மிளிரவும் எழுதுந் தன்மையே விகற்பம் எனப்படும். ஏன் அப்படியென்றால் வாசிக்கின்றவனுடைய உத்சாகம் வறண்டு விடக்கூடாது.

இதுகாறும் பார்த்து வந்த ஐந்து பண்புகளும் கண்டிப்பாக இருக்க வேணடும். அப்பொழுது தான் அறிஞர்கள் மெச்சும் நடை உருவாகக்கூடும். இவை தவிர இன்னும் இரண்டு அம்சங்கள் உண்டு. அவை இரண்டும் தனிச் சிறப்பு வாய்ந்த அம்சங்கள். முன்னைய ஐந்தும் பலர்க்கும் வாய்க்கும் பரிசு. பின்னைய இரண்டும் சிலர்க்கே வாய்க்கும் சீலம். முன்னைய ஐந்தும் சென்று பெறுபவை. பின்னைய இரண்டும் வந்து வாய்ப்பவை. இன்னும், முன்னைய ஐந்தும் அறிவால் ஆக்கப்படுபவை. பின்னைய இரண்டும் அருளால் அடையப் பெறுபவை. அவைகளைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

6. அவற்றுள் ஒன்று **ஆத்ம சொரூபம்** எனப்படும். ஒரு கவியைச் சொன்னதும் இது கம்பன் பாட்டாகத்தான் இருக்கும் என்று நமது காதே சொல்லிவிடும். காதினால் எப்படிச் சொல்ல முடிகிறதென்றால் கம்பனுடைய ஆத்ம சொரூப முத்திரையானது துலங்குகின்றது. இந்த இடத்தில் கம்பனுடைய பெயரை மட்டிலும் தனித்துக் குறிப்பிடுவானேன் என்றால், தமது ஆத்மசொரூபம் துலங்க எழுதுகின்ற எழுத்தாளர்கள் ஒரு சிலரே. உலகத்திலுள்ள பல எழுத்தாளர்களையும் எடுத்துக் கொண்டாலும் சிலரிடந்தான் அதனைக் காணமுடியும். அத்தனை அபூர்வமானது. எத்தனையோ சிவச்செல்வர்கள் பக்திப் பாடல்களைப் பாடியிருக்கின்றனர். ஆனாலும் திருவாசக ஆசிரியரின் ஆத்மசொரூபம் துலங்குவதுபோன்று எத்தனை பேருடைய ஆத்ம சொரூபம் துலங்குகின்றது? அற்ப சொற்பந்தான்.

7. இனி அடுத்த அம்சம் **வியாபகம்** என்பதாகும். இதுவும் மிக அபூர்வமான ஒன்றே. ஒருவனுக்கு வீணையை மட்டிலும் மீட்டத் தெரியும். மீதமுள்ள இசைக் கருவிகளை இயக்கத் தெரியாதென்றால், அவனை வியாபகம் வாய்க்கப் பெற்றவனாகக் கருதமுடியாது. இன்னொருவன் இருக்கிறான். அவனால் எந்த வாத்தியத்தையும் மிகத் திறமையாக இயக்க முடியும். அவனை வியாபகம் வாய்க்கப் பெற்றவனாகக் கருதலாம். இம்மாதிரியே நூலாசிரியர்களுக்குள் ஒரு சிலர் இருக்கின்றனர். அவர்களுடைய இயற் பெயரை மாற்றி 'ஞானக்கடல்' என்று அவர்களை அழைப்பதே பொருத்தமானதாகும். ஏனென்றால் அவர்களுடைய மேதை **அமுத சுரபி மேதை** கொள்ளும் அளவெல்லாம் கொடுக்கும்.

இதுகாறும் பார்த்து வந்த ஏழு அம்சங்களாலேயே சிறந்த நடையானது உருவாகின்றது. மகா இலக்கியங்களில் தான் இந்த ஏழு அம்சங்களையும் பரக்கக் காணலாம். ஏனென்றால் மகா இலக்கியங்களைத் தருபவர்கள் எல்லோரும் **அதிமனிதர்கள்**. அவர்கள் ஓர் தனி இனம். அறிவைத் தேய்த்து அகத்தைப் பெருக்கியவர்களுமில்லை. அகத்தைத் தேய்த்து அறிவைப் பெருக்கியவர்களும் இல்லை. அறிவும் அகமும் சமநிலையில் வாய்க்கப் பெற்றவர்கள். அவர்களுடைய மேதையின் வார்ப்பே தனி. அள்ளுவதும் கொள்ளை. அருளுவதும் கொள்ளை. உணர்வதும் கோடி. உணர்த்துவதும் கோடி.

நடை ஓர் பாக்கியம். பலரும் தவங் கிடக்கலாம். ஆயினும் சிலர்க்கே வாய்ப்பது. அது இலக்கியச் செல்வர்களின் **தனி உடைமை;** அவர்களின் **தவப் பயன்**. நடைச் செல்வர்கள் அனைவரும் இலக்கிய வானில் மின்னிடும் **துருவ நட்சத்திரங்களே.**

ஒரு நாள் புரட்சி

○

எம். வி. வெங்கட்ராம்

ஆறு வருஷ காலம் பம்பாய் சர்வ கலாசாலையில் படித்து, டாக்டர் பட்டம் பெற்றுத் திரும்பும் பால சுந்தரம் புதுமையின் சின்னமாய்த் தொப்பியும் கால்சட்டையும் அணிந்து தடபுடலாக வருவான் என்றுதான், அவனுடைய தகப்பனார் ரிடயர்ட் ஜட்ஜ் சோமநாதரும் அவருடைய தர்மபத்தினி சிவகாமி அம்மையாரும் எதிர் பார்த்தார்கள். வாயில் பற்ற வைத்த சிகரெட் செருகிக்கொண்டு அவன் வந்திருந்தாலும் அவர்கள் திடுக்கிட்டிருக்க மாட்டார்கள். ஆனால் வண்டியிலிருந்து இறங்கிய பாலசுந்தரத்தைப் பார்த்து அவர்கள் திடுக்கிட்டுத்தான் போனார்கள்.

தொப்பி, கால்சட்டைக்குப் பதிலாக துவைத்த சட்டையும் துவைத்த வேஷ்டியும் (அதுவும் நாலு முழம்தான்) அணிந்து, வாரி விட வேண்டிய தேவை யில்லாத படி கட்டையாக வெட்டி விட்ட தலை மயிருடன், மிகவும் சாதாரணத் தோற்றத்துடன் விளங்கினான் அவன். ஊரைவிட்டுப் புறப்படும்போது இருந்ததைவிட அதிகமாய் நாட்டுப்புறத்தானாகவே தென்பட்டான் என்று கூட சொல்லலாம்.

மகன் வண்டியில் வந்து இறங்கும் ஒய்யாரத்தை அண்டை அயலில் உள்ளவர்கள் பார்த்துப் பிரமிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த சிவகாமி அம்மையார் ஏமாற்றம் அடைந்தாள்.

'ஒரு வேளை சென்னையில் இறங்கியபின் இந்தக் கோலம் பூண்டிருக்கலாம்,' என்று சமாதானம் செய்து கொண்டார் மாஜி ஜட்ஜ்.

ஆனாலும் இந்த ஏமாற்றம் வெகு காலமாய்ப் பிரிந்திருந்த ஒரே மைந்தனைக் காணும் அன்பைக் குறைத்துவிடவில்லை. இருவரும் கண்களில் நீருடன் அவனை வரவேற்றார்கள். சந்திப்பினால் ஏற்பட்ட உணர்ச்சித் ததளிப்பு அடங்கி, அவன் காப்பி சாப்பிட்டு உட்கார்ந்ததும் தாயும் தந்தையும் தனயனின் பம்பாய் வாழ்க்கையைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.

ஹாலுக்கு வெளிப்புறமாய் இருந்த கதவருகில் மறைவாய் நின்று கொண்டு கள்ளவிழிகளால் பாலசுந்தரத்தைப் பார்ப்பதும், அவர்களுடைய பேச்சைக் கவனமாய்க் கேட்க முயலுவதுமாய்த் தவித்துக் கொண்டிருந்தது ஒரு ஜீவன்; அது கமலாம்பிகை; பாலசுந்தரத்தின் அத்தை மகள்.

"தம்பி இது என்ன வேஷம்?" என்றார் சோமநாதர்.

"என்ன வேஷம்?"

"பைஜாமாஸ்கூட இல்லாமல், பட்டிக்காட்டான்போல வந்திருக்கிறாயே..."

"ஓ அதுவா!" என்று ஒரு மாதிரியாகச் சிரித்தான் அவன். "இதுதானே நமது உண்மை உருவம்? பைஜாமாக்கள் அணிவது தானே வேஷம் அப்பா?... இங்கே எல்லோரும் சௌக்கியம்தானே?"

"எல்லோருடைய சௌக்யத்தைப் பற்றியும் இவருக்கு ரொம்பக் கவலைதான்" என்று கதவின் பின்னிருந்த ஜீவன் முணுமுணுத்தது.

"எல்லோரும் சௌக்கியந்தான். நீதானே எப்போதாவது, ஞாபகம் வந்த சமயம் கடிதம் போட்டுக் கொண்டிருந்தாய். நாளைக்கு ஒரு தபால் எழுதக்கூடவா உனக்கு நேரம் இல்லை?" என்று குறைப் பட்டாள் தாய்.

"அப்படியே எழுதினாலும், சௌக்கியம், சௌக்கியத்துக்கு எழுதவும் என்று இரண்டு வரி கார்டில் எழுதுவதா? விவரமாய் எழுதினால் என்ன?"

"என்ன விவரம் இருக்கிறது அப்பா? நான் ஒழுங்காய்ப் படிப்பேன் என்பதில் உங்களுக்கு சந்தேகம் கிடையாது. வேறு என்ன இருக்கிறது, எழுத?...ராத்திரி முழுவதும் எனக்குத் தூக்கம் இல்லை, வெந்நீர் இருக்கிறதா, அம்மா? முதலில் குளிக்க வேண்டும்."

"செகண்ட் கிளாஸிலுமா தூங்க முடியாதபடி கூட்டம் இருக்கிறது?"

"நான் செகண்ட் கிளாஸில் வரவில்லை."

"பம்பாயிலிருந்து சென்னைக்குக் கூட மூன்றும் வகுப்பில் வந்தாயா?"

"ஆம்."

"இரண்டாம் வகுப்பில் வந்தால் சௌக்கியமாய்ப் படுத்திருக்கலாமே..."

"இரண்டாம் வகுப்புப் பிரயாணமே எனக்குப் பிடிக்கவில்லை. பக்கத்திலிருப்பவர்கள்கூட வாய் திறந்து பேசமாட்டார்கள். வழி முழுவதும் ஏதாவது வாசித்துக் கொண்டே வரவேண்டும். அல்லது படுத்துத் தூங்க வேண்டும். மூனும் வகுப்பில் தாராளமாய் அரட்டை அடித்துக் கொண்டு வரலாம்... அதையும் தவிர, நூற்றுக் கணக்கான ஜனங்கள் மூணும் வகுப்பில் பிரயாணம் செய்யும்போது, நமக்கு மாத்திரம் தனி சௌகரியம் எதற்கு?"

மாஜி ஜட்ஜுக்குத் தம் மகனின் மனப்போக்கு ஒருவாறு 'அத்துப்படி' ஆயிற்று.

"அது சரி தம்பி, பணக்காரன் இப்படி சிக்கனம் பிடிப்பது சரியான பொருளாதாரம் இல்லையே!" என்றூர் அவர், கொஞ்சம் கேலியாக.

"பணக்காரன் எளிய வாழ்க்கைகடைப் பிடிக்கக்கூடாதா?"—மகனும் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை.

"பணக்காரன் எளிய வாழ்க்கை ஏற்பதற்கு முன்னால் எளியவன் ஆக வேண்டும், லட்சக் கணக்கில் சொத்துள்ளவன் சிக்கனம் செய்து மிச்சம் பிடிப்பது கருமித்தனம். கருமித்தனம் பொருளாதாரப்படி மட்டும் அல்ல, மதத்தின்படியும் தவறு."

"நீங்கள் சொல்லுவது ரொம்ப சரி."

"நான் மிச்சம் பிடிக்கவில்லையே! இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்வதால் ஏற்படக்கூடிய அதிகப் படி ரூபாயை, என் ஏழை நண்பன் ஒருவனுக்கு சம்பளமாய்க் கட்டி விட்டேன்."

தாயும் தந்தையும் மனதிற்குள் பூரித்தனர், தங்கள் குமாரனின் பரந்த சிந்தையை எண்ணி. ஆனால் அதை அவர்கள் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

"அது போகட்டும். பம்பாயிலிருந்து எனக்காக என்ன கொண்டு வந்தாய்? அங்கு பீங்கான் சாமான்கள் சல்லிசாய்க் கிடைக்கும் என்கிறார்களே?"

"அதை யெல்லாம் யாரம்மா தூக்கி வருவது? அதில்லாமல் பம்பாய் கொள்ளைக்காரப் பட்டினம். ஒவ்வொரு சாமானும் யானை விலை, குதிரை விலை. ஆள் ஏமாந்தால்—அதோகதிதான்."

"கமலாம்பிகைக்காகவாவது ஏதாவது கொண்டு வந்தாயா?" என்றாள் சிவகாமி சற்றே அதிருப்தியுடன்.

"உனக்காகவே ஒன்றும் கொண்டு வரவில்லையாம், அவளுக்காக என்ன கொண்டு வருகிறது?... நானே உருப்படியாக வந்து விட்டேனே, உனக்கு வேறே என்ன வேண்டும்?"

சிவகாமி அம்மையாரின் அதிருப்தி என்னவோ ஆறுதல் பெறவில்லை.

* * *

ஸ்நானம், மத்தியானச் சாப்பாடு எல்லாம் முடிந்தும் பம்பாய்ப் பேச்சு முடிவு பெறவில்லை. தாயின் கைப்பாகத்தைச் சுவைத்த பால சுந்தரத்திற்கும் உற்சாகமாகவே இருந்தது.

"தம்பி, எதிர்காலத்திற்கு உன் 'பிளான்' என்ன?" என்று கேட்டார் சோமனாதர். "எங்கே பிராக்டீஸ் செய்வதாக உத்தேசம்? இந்தக் கிராமத்தில் தொழில் செய்தால் சுவாரசியப்படாது. கும்பகோணத்தில் செய்யலாம்..."

"வேறே வேலை இல்லை. மறுபடியும் வெளியூருக்கு இவன் ஏன் போக வேண்டும்? இவன் சம்பாதித்து என்ன செய்யப் போகிறான்? இங்கேயே இருந்து, கிடைத்தவரை சம்பாதித்தால் போதும். இங்கேயும் என்ன, ஒவ்வொருவருக்கும் ஏதாவது வியாதி இருந்து கொண்டே இருக்கிறது. வேறு டாக்டரும் இல்லை..." தன்னுடைய ஒரே புதல்வனை நீண்ட காலம் பிரிந்திருந்துவிட்ட சிவகாமி, மீண்டும் அவனைப் பிரிந்திருக்க மனம் ஒப்பவில்லை.

"சிவகாமு, நாமும் அவனோடே கும்பகோணம் போனால் போகிறது.....தம்பி, உன் எண்ணம் என்ன?"

"நான் இந்தக் கிராமத்தில்தான் இருக்க விரும்புகிறேன்."

"அதுதான் சரி" என்றாள் தாய்.

"இவ்வளவு படித்து இந்தப் பட்டிக்காட்டில்தான் இருக்க வேண்டுமா?"

"அப்பா, நீங்கள்கூட பட்டிக்காடு என்று அலட்சியமாய்ப் பேசுகிறீர்களே! நம் தேசமே ஒரு பட்டிக்காடு தானே? பட்டிக்காடு தானே பட்டணத்துக்கு உணவும் உடையும் தருகிறது? பட்டிக்காடு வாழ்ந்தால்தான் பட்டணம் வாழ

முடியும். கிராமவாசிகள் அப்பாவி கள்; ஏழைகள்; அவர்கள் உயர வேண்டும். இப்போது பட்டணங் களுக்கு டாக்டர்கள் தேவையில்லை. கிராமங்களுக்குத்தான் தேவை. அறியாமையாலும் மூட நம்பிக்கை யாலும் கிராம ஜனங்கள் பல நோய் களுக்குப் பலி ஆகிறார்கள். அவர் களுக்கு என்னாலான சேவை செய்ய வேண்டும் என்பதுதான் என் திட்டம். இந்தக் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் போய், அவர்களிடையில் உள்ள நோய்களைக் கவனிக்கப் போகி றேன். இலவச ஆஸ்பத்திரி வைத்து, ஏழைகளுக்கு மருந்தும் இலவசமாய்த் தரப்போகிறேன்.''

"நல்ல யோசனை!'' என்று சொன்ன தந்தை தன்னை ஆதரிக் கிறாரா இல்லையா என்பதை அவ னால் அறிய இயலவில்லை.

அவன் ஊரில் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்ட தாயாருக்கு, அவனுடைய 'பிளா'னைக் கேட்டு கொஞ்சம் பயமாகவே இருந்தது.

"பாலு, நீ சம்பாதிக்கா விட்டா லும் போகிறது. உன் யோசனை யைப் பார்த்தால், இருப்பதையும் தொலைத்து விடுவாய் போல் இருக் கிறதே!'' என்றாள் அவள்.

"அம்மா, இந்த விஷயம் எல் லாம் உனக்குப் புரியாது. அப்பா வுக்குத் தெரியும்.''

"எனக்கு நன்றாய்ப் புரிகிறது'' என்றார் மாஜி ஜட்ஜ், நகைப்புடன்.

"கமலாம்பிகையைக் கட்டிக் கொண்டால் எல்லாம் சரியாகிவிடும் ...'' என்றாள் அன்னை.

"எப்படி சரியாகாமல்போகும்?'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டது கமலாம்பிகை என்ற ஜீவன். அது அப்போதும் கத வருகில் உட்கார்ந்து கொண்டு அவர்களுடைய பேச்சைக் கவனித் துக் கொண்டிருந்த விஷயம் அவர் களுக்குத் தெரியாது. எதிரில் உள்ளவர்களின் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து இருக்கும் வித்தை இம்மாதிரி ஜீவன்களுக்கு இயற்கையாக வந்துவிடும் போலும்!

"நான் யாரையும் கலியாணம் செய்துகொள்ளப் போவதில்லை'' என்றான் பாலசுந்தரம்.

"கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லையா?'' என்று திடுக் கிட்டுக் கேட்டாள் தாயார். "உனக் காக ஆறு வருஷமாய் அந்தப் பெண் காத்திருக்கிறாள். நீ டாக்ட ராய் வரப்போகிறாயே என்று அவ ளும் பெரிய பரீட்சைக்குப் படிப்ப வள்போல இரவும் பகலும் விழுந்து விழுந்து படிக்கிறாள். நீ என்னடா என்றால் கலியாணம் வேண்டாம் என்கிறாயே!''

"தம்பி கமலாம்பிகையை உனக் குப் பிடிக்க வில்லையா? அல்லது அதற்கும் ஒரு பொருளாதாரக் காரணம் இருக்கிறதா?''

"கலியாணம் என் லட்சியம் பூர்த்தியாவதற்குத் தடையாக இருக்கும்.''

சோமனாதர் ஆச்சரியப் பட வில்லை. ஆனால் சிவகாமி அம்மை யாரின் மனம் உடைந்துவிடும் போலிருந்தது. பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் ஒருவிதக் கஷ்ட மும் காணாமல் வாழ்ந்தவள் அவள்; கணவரும் அவளுடைய மனதைப் புண்படுத்தும்படி ஒன்றையும்செய் வதில்லை. மகன் மணம் புரிந்து

சந்தோஷமாய் வாழவேண்டும் என்பதைத் தவிர அவளுக்கு வாழ்க்கையில் வேறோர் ஆசையும் இல்லை. அவன் மறுதளித்துப் பேசவே நீர் காணாத அவள் கண்களில் நீர் துளித்துவிட்டது.

"அம்மா, நீ இப்படிச் செய்தால் எனக்கு மிகவும் சங்கடமாயிருக்கிறது; அப்பா, நீங்கள்தான் அம்மாவை சமாதானம் செய்யவேண்டும். கலியாணம் செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் சந்தோஷமாக இருக்கிறார்கள்? நானும் அவர்களைப் போல் அவதிப்பட வேண்டுமா?"

"ஆனாலும் தம்பி, உன்னால் ஒரு பெண் கலியாணம் ஆகாமல் இருக்கிறாள். அவள் கதி..."

"என்ன ஆகிவிடும்?"

"என்ன ஆகிவிடுமா? அவளை இனி யார் கலியாணம் செய்து கொள்வார்கள்?"

"நான் அவளுக்கு நல்ல வரனைத் தேடித் தருகிறேன்."

"பேஷ்! நீ விரும்பாத ஒரு காரியத்தை இன்னொருவர் செய்யும்படி தூண்டலாமா?"

"அவளும் கலியாணம் செய்து கொள்ளாவிட்டால் என்ன?"

"இந்த நாட்டில் கலியாணம் ஆகாத பெண்ணை ஒரு மாதிரியாகத்தான் நினைப்பார்கள்."

"நினைக்கிறவர்கள் நினைக்கட்டும்...அப்பா, நான் மனம் விட்டுச் சொல்கிறேனே. இந்த நாட்டில் ஜனத்தொகை தேவைக்கு அதிகமாகவே இருக்கிறது. உணவும் உடையும் இல்லாமல் எவ்வளவு பேர் கஷ்டப் படுகிறார்கள்! இந்நிலையில் கலியாணம் செய்துகொள்ளாமலே இருப்பதின் மூலம் ஒவ்வொரு யுவனும் யுவதியும் நாட்டுக்கு சேவை செய்யலாம். விஷயம் தெரிந்த வாலிபர்களும் மணம் புரிந்து ஜன விருத்தி செய்வதால் நாட்டின் சிரமம் எப்படி குறையும்? அதனால்தான் கமலாவும் மணம் புரியவேண்டாம் என்கிறேன்."

"தம்பி, காலேஜ் பேச்சுப் போட்டியில் பரிசு ஏதாவது வாங்கினாயா? அழகாய்ப் பேசுகிறாயே. இந்த விஷயம் முன்பே தெரிந்திருந்தால் டாக்டருக்குப் படிப்பதற்குப் பதிலாய் வக்கீலுக்குப் படித்திருக்கலாமே...."

"அப்பா, நீங்கள் பரிகாசம் செய்கிறீர்கள். என் மனோநிலையை உங்களாலும் புரிந்து கொள்ள முடியவில்லையே என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. இங்கு தஞ்சாவூர் ஜில்லாவில் இருந்து கொண்டு, நிம்மதியாய் உண்டு உடுத்துவிடுவதால் உலகமே சுகமாயிருக்கிறது என்று எண்ணிவிடக் கூடாது. நீங்கள் ஒரு முறை இந்த சமயத்தில் வட இந்தியாவுக்குப் போய்ப் பார்க்கவேண்டும். வங்காளம், பஞ்சாப், ஸிந்து முதலிய இடங்களிலிருந்து வருகிற அகதிகளைப் பார்க்க வேண்டும். அகதிகள் இருக்கட்டும். இந்நாட்டின் ஏழைக் குடியானவனும், தொழிலாளியும் எவ்வளவு துயரப்படுகின்றனர்? அவர்களுடைய கஷ்டங்களை ஓரளவாவது நிவர்த்தி செய்ய வேண்டியது படித்தவர்களின் பொறுப்பு இல்லையா?...."

மூச்சு விடாமல் அரை மணி நேரம் பேசி முடித்தான் பால சுந்தரம்.

"தம்பி, கலியாணம் செய்து கொள் என்றால் கதை சொல்லுகிறாயே! கலியாணம் செய்து கொண்டு தேச சேவை செய்ய முடியாதா?"

"இன்றைய சமூகத்தில் கலியாணம் பந்தங்களைத்தான் உண்டாக்குகிறது."

"அப்படியானால் நீ கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லையா?" என்றாள் தாய் கவலையுடன்.

"அம்மா, சந்தோஷப் படவேண்டிய விஷயத்திற்கு வருத்தப் படுகிறாயே!"

"தம்பி, ராத்திரி எல்லாம் தூங்காமல் உன் புத்தி குழம்பி இருக்கிறது. போ, போய்க் கொஞ்ச நேரம் உறங்கு."

"புத்தி குழம்பி நான் ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள் என்னதான் கேலி செய்தாலும் தீர்க்கமாய் யோசித்துச் செய்த முடிவை நான் மாற்றப் போவதில்லை."

"இப்போது மாற்றவேண்டாம், போய்த் தூங்கு."

பாலசுந்தரம் தன் அறைக்குச் சென்றதும் சோமனாதர் மனைவியின் பக்கம் திரும்பினார்.

"பைத்தியமாக இருக்கிறாயே, சிவகாமு. பையன் இவ்வளவு யோக்கியனாக இருக்கிறானே என்று சந்தோஷப் படாமல், அழ ஆரம்பித்து விட்டாயே."

"சன்யாசி போல அவன் பேசுகிறான். நீங்கள் யோக்கியன் என்கிறீர்களே?"

"அப்படிப் பேசுவதால் தான் யோக்கியன் என்கிறேன். அங்கே இருக்கும்போதே கலியாணப் பித்து பிடித்து, தறுதலையாகத் திரியவில்லை என்று அவன் பேச்சிலிருந்தே தெரியவில்லையா? வெளியூர் போகிற பையன்கள் இப்படி இருப்பது அபூர்வம்."

"அது சரி. ஆனால் இப்போது கூட இப்படி பிடிவாதமாய்ப் பேசுகிறானே?"

"ஒரு சொப்பனத்திலே பொழுது விடிந்து விடுமா, சிவகாமு? இப்போது தான் பிள்ளையாண்டான் படித்துவிட்டு வெளியில் வந்திருக்கிறான். அதற்குள்ளே படித்த புத்தகங்களை மறந்துவிட முடியுமா?"

"பின்னே கலியாணம் செய்து கொள்வான் என்கிறீர்களா?"

"செய்து கொள்ளாமல் எங்கே போகிறான்? அவன் செய்து கொள்ளவில்லை என்றால், கமலாம்பிகைக்கு சாமர்த்தியம் போதாது என்றுதான் நாம் நினைக்க வேண்டும்."

அவர் பேசிய விதத்தைக் கேட்டால் கதவுக்குப் பின்னால் ஒண்டிக் கொண்டு ஒரு உயிர் சங்கடப்படுகிறது என்பதை அவர் அறிந்திருப்பாரோ என்று கொஞ்சம் சந்தேகப்பட இடம் இருந்தது.

*   *   *

மத்தியானம் படுக்கையை விரித்த பாலு வெகுநேரம் தூங்கி விட்டான். மாலை ஐந்து மணிக்குத் தாயார் அவனைத் தட்டி எழுப்பினாள். முகத்தை அலம்பிக் கொண்டு, சூடாகக் காப்பி சாப்பிட்ட பின்னரும் சோம்பலாகவே இருந்தது. அவன் நாற்காலியில் உட்கார்ந்ததும் தாயார் சொன்னாள்: "பாலு, நீ சௌக்கியமாய்

ஊர் வந்து சேர்ந்ததும் சுப்பிரமணிய சுவாமிக்கு ஓர் அபிஷேகம் செய்வதாய் வேண்டிக் கொண்டு இருந்தேன். ஐயரிடம் சொல்லி ஏற்பாடு செய்திருக்கிறேன். கோயிலுக்குப் போய் வரலாம். டிரஸ் செய்துகொண்டு புறப்படு......கமலாம்பிகையும் வருகிறாள்."

"கோயிலுக்கா?" என்றான் அவன் அசிரத்தையால்.

"ஏன்?"

"நான் வரவில்லை. நீங்கள் போய் வாருங்கள்."

அப்போது அங்கு வந்த சோமனாதரும் அவனை அழைத்தார்: "நீயும் வாயேன் தம்பி......"

"நான் எதுக்கு? நீங்கள்..."

"உனக்காகச் செய்யும் அபிஷேகம்; நீ இருந்தால் நல்லது. கொஞ்ச நேரத்தில் திரும்பிவிடலாம்" என்றாள் தாயார், கெஞ்சலாக.

"நான் வரவில்லை."

சோமனாதர் கொஞ்சம் பொறுமையற்றுக் கேட்டார்: "இங்கே உட்கார்ந்திருப்பதற்குப் பதிலாய்க் கோயிலுக்கு வந்தால் என்னவாம்?"

"கோயில், விக்கிரகம்—இதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை, அப்பா. என்னை வீணாய்த் தொந்தரவு செய்யாதீர்கள்."

சிவகாமி அம்மாளின் ரத்த ஓட்டம் அப்படியே நின்றுவிட்டது போலிருந்தது. "சாமி இல்லை என்றா சொல்கிறாய்?" என்றாள் அவள் தீனக் குரலில்.

"அம்மா, நீ ரொம்ப மோசம்; சாமி இல்லை என்று நான் சொன்னேனா? அப்பா, நீங்கள் செய்யும் கெடுபிடியில் அம்மா பயந்து போகிறாள், பார்த்தீர்களா?"

சோமனாதர் சிவகாமியைப் போல பயந்துவிடவில்லை. வக்கீலாகவும் ஜட்ஜாகவும் இருந்து மனிதனின் பல மனக் கோணங்களைப் பார்த்த அவர், பயப்படுவதற்கான காரணத்தையும் காணவில்லை. புத்திரனருகிலேயே ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

"சிவகாமி, போய் கோவிலுக்குப் போகத் தயார் செய்துகொள். இன்றைக்கு இல்லாவிட்டால் தம்பி நாளைக்குக் கோயிலுக்குப் போகிறான். இவன் மனப்பான்மை உனக்குப் புரியாது. இவனே கடவுளுக்குச் சமானனாய் ஆகிவிட்டான். கோயிலும் குளமும் இவனுக்கு எதுக்கு? இதை எல்லாம் புரிந்து கொள்ள உனக்குப் புத்தி இல்லை. உன் மகன் ரொம்ப பெரியவன், நான் சொல்லுகிறேன், நம்பு! நீ போ."

அவருடைய குரலில் இருந்த அதட்டலைக் கேட்ட சிவகாமி மறுமொழி சொல்லாமல் வெளியில் சென்று விட்டாள். அவருடைய குரலில் ஒலித்த ஏளனம் பாலுவைத் தைத்தது; தலை குனிந்து கொண்டு மௌனமாய் இருந்தான். அவனும் கிண்டலாகப் பதில் சொல்ல முடியும். ஆனால் பெரியவர் தந்தை என்கிற நிர்ப்பந்தத்தால் பேசாதிருந்தான். சோமனாதர் மிகவும் அமரிக்கையாக வெற்றிலையின் முதுகு நரம்பைக் கிள்ளி சுண்ணாம்பு தடவத் தொடங்கினார்.

பாலசுந்தரம் தான் பேச்சை ஆரம்பிக்க வேண்டி இருந்தது.

"அப்பா, நீங்கள் என்னை அடிக்கடி கிண்டல் செய்கிறீர்கள். நீங்கள் இப்படியே செய்துகொண்டு இருந்தால் நான் அதிக நாள் இங்கு தங்கி இருக்க முடியாது."

"நான் கிண்டலாக ஒன்றும் சொல்லவில்லையே,......நீ படித்த புஸ்தகங்களின் புது மெருகு உன் மனதிலிருந்து இன்னும் கலையவில்லை. நீ எவ்விதமான கொள்கைக்கும் வரவில்லை என்பதுதான் என் அபிப்பிராயம்."

"அது எனக்கும் புரிகிறது... நான் என்ன செய்ய வேண்டும் என்பதை இன்னும் ஆழ்ந்து யோசித்துத்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் ஒன்று. பழமைப் பித்துதான் இந்த நாட்டுக்கு சாபக்கேடு. நான் பழமையை வெறுக்கிறேன்."

"நான் சிரித்தால் கிண்டல் என்று நினைப்பாய். ஆகையால் சிரிக்காமல் இருக்கிறேன். பழமை இல்லாமல் புதுமை ஏது தம்பி? இன்றைய புதுமை நாளைக்குப் பழமைதானே? நான் என் தகப்பனார், என் பாட்டனார், அவருடைய பாட்டனார் எல்லோரும் பழமைதான்; நீ புதுமை. ஆனால் நாங்கள் எல்லோரும் இல்லாமல் எப்படி வந்தாய்?"

"நீங்கள் அவ்வளவு பேரும் இல்லாமல் நான் இல்லை என்பதால், நீங்கள் எல்லோரும் சிறந்தவர்கள் ஆகிவிட முடியுமா?"

"நீ சொல்லுவது சரி. அதைப் போலே, நாங்கள் சிறந்தவர்கள் இல்லை என்று நீ சொல்லிவிடுவதால் நீ சிறந்தவன் ஆகிவிட முடியுமா?"

"முடியாது தான். ஆனால் பழமைக் குட்டையில் ஊறி நம் நாடு அழுகுகிறது என்பதை நம் கண் முன்னால் காணவில்லையா?"

"ஏன், புதுமைச் சேற்றில் விழுந்து கொண்டிருப்பதால் தான் நாடு நாறுகிறது என்று நான் சொல்லுகிறேன்......"

பாலசுந்தரம் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. அவன் சொன்னது மறுக்கொணாத உண்மை, அதை அவர் ஏற்றே தீரவேண்டும் என்று அவன் எதிர்பார்த்தான். ஆனால் அதையும் அவர் அனாயாசமாக மறுதளித்துவிடவே மேலே விவாதத்தை எப்படி கொண்டு போவது என்று அவனுக்கு யோசனை ஆகிவிட்டது. இதுவரை இம்மாதிரியான ஒரு கேள்வி அவனிடம் கேட்கப் பட்டதில்லை; ஆகையால் அவன் பதில் அளிக்க ஆயத்தமாகவும் இல்லை. தோல்வி அடைந்து விட்டோம் என்ற உணர்ச்சி அவனைக் கவ்விக்கொண்டது. அவன் முகம் சுண்டிவிட்டது.

சோமனாதர் விடவில்லை. மேலும் ஒரு கல்லைத் தூக்கிப் போட்டார்: "தெய்வம் என்பது ரொம்ப ரொம்பப் பழமையான விஷயம். அதைப் புரட்சி செய்தாயா இல்லையா?"

பாலசுந்தரம், ஆபரேஷன் கத்தியால் கையைக் கீறிக் கொண்ட டாக்டர்போல சீறினான்: "பழமையில் நம்பிக்கை இல்லை."

நல்ல வேளையாக இந்த நெருக்கடியான தருணத்தில் வெளியிலிருந்து சிவகாமியின் குரல் கேட்டது! "நீங்களாவது கோயிலுக்கு வரப் போகிறீர்களா, இல்லையா?"

"வருகிறேன்," என்று கொண்டே எழுந்த சோமநாதர் மகனைப் பார்த்து கூறினார்: "உன் நம்பிக்கை இன்மையில் எனக்கு நம்பிக்கை இல்லை... தம்பி, நான் என்னைக் கிண்டல் செய்வதற்காகப் பேசவில்லை. நீ பழமையை வெறுப்பதுபோல நான் புதுமையை வெறுக்கவில்லை. பழமையிலும் கெடுதல் உண்டு, புதுமையிலும் கெடுதல் உண்டு. இரண்டிலும் உள்ள நல்லதைத் தேர்ந்து ஏற்பது தான் புத்திசாலிகளுக்கு அழகு."

வாசலைக் கடக்கும்போது, அவருக்கே சுபாவமான சிரிப்புடன் மீண்டும் கூறினார்: "நான் பழைய ஆசாமி. எனக்குக் கோயில்தான் கதி."

உபதேசம் செய்வதுபோல அவர் பேசினாலும், தர்க்கத்தில் வெற்றி பெற்றவர் குரலாகவே அவனுக்கு அவர் குரல் கேட்டது. மனதுக்குள் தவித்துக் கொண்டே அவனும் வெளியில் கிளம்பினான். தெருவில் வந்ததும் தாய் தந்தையருடன் ஒரு பெண்ணுருவம் செல்வதைக் கண்ணுற்றான். அவள் கமலாம்பிகைதான்.

கமலாம்பிகை நல்ல பெண் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். "என்னைத்தான் கலியாணம் செய்து கொள்வேன் என்று ஆறு வருஷமாய் உறுதியாய் இருக்கிறாள். நான் சம்மதிக்கவில்லை என்று தெரிந்ததும் அவள் மிகவும் வருத்தப்படுவாள். ஆனால் அவளையும் என் பக்கம் இழுத்துவிட வேண்டும்..."

அவர்கள் சென்றதற்கு எதிர்த் திசையில் அவனும் புறப்பட்டான், மாலை நேரம்; நாள் முழுவதும் வேலை செய்த அழுக்குடன் குடியானவர்களும் தொழிலாளர்களும் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களில் அவனுக்குத் தெரிந்தவர்கள், அவன் கொஞ்ச தூரத்தில் வரும்போதே, இடுப்பில் துணி சுற்றி கைகட்டி விலகி நின்றனர். வண்டிகள் தூசி எழுப்பியவாறு ஊர்ந்து கொண்டிருந்தன. வீதி முழுவதுமே சாணமும் மலமும் சிதறி கக்கூஸைப்போன்ற தோற்றமே அளித்தது.

அவனுக்கு எரிச்சலாயிருந்தது. எதிரில் வரும் ஒவ்வோர் ஆணும் பெண்ணும் நோயின் நடமாடும் உருவங்களாக அவனுக்குத் தோன்றினர். உடலில் மட்டும் அல்ல, மனதிலும் அவர்கள் நோயாளிகள் தான். அவர்களுடைய நோய்க்கு மருந்து என்ன? மருந்து தருவது யார்? நோயாளியை சிகிச்சை செய்யும் பொறுப்பை மற்றொரு நோயாளியிடம் ஒப்படைக்கலாமா?

பாலசுந்தரம் நோயாளி இல்லை என்று யார் சொல்வது? அவனுடைய தந்தையே அவனை அப்படிச் சொல்லவில்லையே, பின், அவன் இந்த வாயில்லாத மக்களுக்கு எப்படி உதவ முடியும்? நிதானமாகவும் பொறுமையாகவும் வேலை செய்ய வேண்டும், அப்போது தான் அவர்களை உயர்த்த முடியும் என்றால் குறைந்த பட்சம் நாலைந்து தலைமுறைகள் வீணாக வேண்டும். மனித உயிர் இப்படி வீணாகித் தான் தீர வேண்டுமா? கூடாது, சேதம் அதிகம் இல்லாமல், மக்கள் உயர வேண்டும் என்றால் புரட்சி தான் அதற்குச் சரியான வழி...

சிந்தனையின் வேகம் அவனுக்கு களைப்பு உண்டாக்கியது; அங்கி

ருந்த குளக்கரையில் ஆல மரத்தடியில் உட்கார்ந்தான். தன் சிந்தனையே தனக்கு நோயோ என்று அவனுக்குத் தோன்றியது. மூளை குழம்பியது, ஆனாலும் புரட்சி ஞாபகம் அவனை விடவில்லை.

"என் தாய் தந்தையருக்காகவும் நான் என் போக்கை மாற்றிக் கொள்ளமாட்டேன்," என்று அவன் தன்னிடம் சொல்லும் போது, எதிரில் உள்ள தடைகளை அகற்றுபவன்போல் கண்களின் முன்னால் கைகளை விசிறினான். அவன் கண்கள் ஒளியுண்டன.

ஒளியுண்டபின்தான் அவைகளுக்குப் பார்வையும் வந்தது. அப்போதுதான் குளத்துப் படிக்கட்டின்மீது நின்று கொண்டு கமலாம்பிகை தன்னையே பார்ப்பதை அவன் உணர்ந்தான். அவன் உணர்ந்தான் என்பதைவிட, அவனுடைய உடலின் ஒவ்வொரு அணுவும் உணர்ந்தது என்று சொல்லுவதுதான் சரி.

"அட, கமலாம்பிகையா? நான் கவனிக்கவே இல்லையே!"

"நீங்கள்தான் இனிமேல் என்னைக் கவனிக்கமாட்டீர்களே!"

"நீ வந்து ரொம்ப நேரமாச்சா?"

"நான் வந்து பத்தொன்பது வருஷம் ஆகிறது..."

"நீ எப்படி மாறி இருக்கிறாய்?"

"நீங்கள் மாறாமல் அன்றைக்கு இருந்ததுபோலவே இருக்கிறீர்கள்; இல்லையா?"

அவன் பதில் அளிக்கவில்லை. ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த ஜீவன் பதின்மூன்று வயதுச் சிறுமியாய் இருந்தது; இந்த இடைக்காலத்தில் அவள் அர்த்தம் விளங்காத, புதிரைப்போன்ற ஒரு வளர்ச்சி அடைந்திருந்தாள். அர்த்தம் புரியாததாலேயே அவ்வளர்ச்சியில் கவர்ச்சி மிகுதியாய் இருந்தது. முதலிலேயே அவள் அழகு; பருவ வளர்ச்சியின் காரணமாக, அது இப்போது அனலாகத் தெறித்தது: அவளைக் காணும் இளைஞர்கள் அவளை அடைவதற்காகத் தலை பிய்ந்து விழும்வரை தலை மயிரைப் பிய்த்துக் கொள்வார்கள். ஆனால் அவளுடைய அழகு, காற்றில்லாத துருத்தி அல்ல; மனோ பலமும் அவளுக்கு அதிகம்: இல்லாவிட்டால் ஆறு வருஷங்கள் அவனுக்காகக் காத்திருப்பாளா? அவள் உடல் ஓர் ஆச்சரியம்; அவளுடைய உள்ளமும் ஓர் ஆச்சரியம்; ஆகையால் அவன் ஆச்சரியப்பட்டான். ஆச்சரியப்படுகிறவனின் மற்ற உணர்ச்சிகள் அடங்கிவிடுவது இயற்கைதானே?

"என்ன யோசிக்கிறீர்கள்? நான் இவ்வளவு தாராளமாய் உங்களுடன் எப்படி பேசுகிறேன் என்றா? நீங்கள் என்னை மணப்பதில்லை என்று முடிவு செய்துவிட்டாலும், உங்களை மணப்பதில்லை என்று நான் முடிவு செய்யவில்லை! அதனால்தான் இவ்வளவு தாராளமாய் உங்களுடன் பேசுகிறேன்!"

அவளுடைய பேச்சு அவனுக்கு ஹாஸ்யமாகப்படவில்லை. ஏதோ ஒரு துயரம் அவனைப் பீடித்தது. "உனக்கு எப்படி இந்த விஷயம் தெரியும்? அம்மா சொன்னாளா?"

"நான் நாள் முழுவதும் அங்கேதான் இருந்தேன். என் காதால்

நீங்கள் பேசியதை எல்லாம் கேட்டேன்."

"நீ அங்கேயே இருந்தாயா? எனக்குத் தெரியவில்லையே!"

"உங்களுக்குத்தான் இப்போது ஒன்றும் தெரிவதில்லையே!"

"நீ இருந்தது தெரிந்திருந்தால் நான் அப்படி பேசியிருக்க மாட்டேன்."

"வேறு எப்படி பேசியிருப்பீர்கள்? கமலாம்பிகையை நான் இப்போதே கட்டிக் கொண்டாக வேண்டும் என்று பேசியிருப்பீர்களா?"

பாலசுந்தரம் விழித்தான், பதில் சொல்லும் வகை புரியாமல். அவன் மனத்தில் வாஸ்தவமாகவே ஒரு மாபெரும் புரட்சி, கத்தியின்றி ரத்தமின்றி நடக்கும் புரட்சி, நிகழ்ந்துகொண்டிருந்தது.

"என்னைத்தான் மணப்பதாய் இங்கு நின்றுதானே உறுதி கூறினீர்கள்?"

"ஆம்" என்று சின்னஞ் சிறு குழந்தைபோல் தலையாட்டினான் அவன்.

"பம்பாய் போனபின் நாலு வருஷங்கள் வரை எனக்கு எழுதிய கடிதங்களில் எல்லாம் அப்படித்தானே எழுதினீர்கள்?"

"ஆம்."

"அப்புறம் எனக்கு நீங்கள் கடிதம் எழுதவில்லை. போகட்டும். என்னை வெறுக்கும்படியாய் அப்புறம் என்ன நடந்துவிட்டது?"

"நான் உன்னை வெறுப்பதாய் எப்போதாவது யாரிடமாவது சொன்னது உண்டா?"

"பின், கலியாணம் வேண்டாம் என்பதன் காரணம்?"

"கலியாணம் செய்து கொண்டால்தான் எனக்கு உன் மேல் அன்பு இருப்பதாக அர்த்தமா?"

"கலியாணம் செய்து கொள்ளாது எவ்வளவு நாள்தான் என் மேல் அன்பாக இருந்து விடுவீர்கள்? ஆறு வருஷத்திலேயே உங்கள் அன்பின் பெருமை தெரிகிறதே!"

"ஆத்திரப்படாமல் நான் சொல்வதைக் கவனமாய்க் கேள் கமலா. அப்பாவிடம் நான் சொன்னதை எல்லாம் நீ கேட்டுக் கொண்டு தானே இருந்தாய். நான் மேற்கொள்ள விரும்பும் வாழ்க்கைக்குக் கலியாணம்......"

"தடை செய்யாது; நான் தடை செய்ய மாட்டேன். கலியாணம் செய்து கொண்டால்—செய்து கொண்டதும் நீங்கள் ஒன்றுமே செய்ய முடியாமல் போய்விடும் என்றால் அதற்கு அர்த்தம் என்ன? உங்களுக்கே உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதுதானே? உங்களுக்கு வேறு எதிலும் நம்பிக்கையில்லை என்றால் உங்கள் மீதாவது நம்பிக்கை வேண்டாமா?"

இருளில் தடவுகிறவன் போல் பாலுவின் வாய்மொழி தடுமாறியது. "அது மட்டும் அல்ல; ஜனத்தொகை..."

"நல்ல ஜனத்தொகை...! நாட்டின் ஜனத்தொகை அதிகரிக்கக் கூடாது. ஆகையால் படித்த யுவனும் யுவதியும் மணம்புரிய கூடாது என்கிறீர்கள்; அது தானே?... படித்தவனும் படித்தவளும் மணம் புரிந்து தேவைக்குமேல் குழந்தை பெறாமல் இருப்பதே படிப்புக்கு லக்ஷணம் ஆகாதா? படித்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்குத்தான்

கல்வி வசதி அதிகமாக இருக்கும்; அவர்கள்தான் தம் குழந்தைகளுக்குக் கல்வி தரவேண்டும் என்று சிரத்தையா யிருப்பார்கள்; ஆகையால் அவர்களுடைய குழந்தைதான் நாட்டுக்குப் பயன்படும்... நாட்டின் ஜனத்தொகை விருத்தி ஆவதற்குக் காரணம் கல்வியறிவு பெறுவதற்கு வசதி இல்லாத ஏழை மக்கள்தான்; அவர்கள் அதிகமாகக் குழந்தைகளைப் பெறுகிறார்கள்; குழந்தைகளைச் சரியாக வளர்ப்பதும் இல்லை. அது அவர்கள் குற்றம் அல்ல. அவர்களுக்கு விமோசனம் பிறக்க வழி தேட வேண்டும். ஆனால் அந்த விமோசனம் நீங்களும் நானும்—அதாவது, படித்தவர்கள் மணம் புரியாத தன் மூலம் ஏற்பட்டுவிடாது!''

அவன் தந்தையிடம் பிரசங்கம் செய்ததைவிட நீளமாகவே அவள் அவனிடம் சொல்மாரி பொழிந்து விட்டாள். அவள் சொன்னது உண்மைபோலவும் பட்டது; இல்லை போலவும் தோன்றியது. அவள் சொன்னது உண்மை என்று அவன் மனம் புரட்சி செய்தது. புத்தி என்னவோ இன்னும் கொஞ்சம் தர்க்கம் செய்ய விழைந்தது.

"கலியாணம் செய்து கொண்டால் பொறுப்பு......''

"பொறுப்பு இல்லாமல் வாழ்க்கை நடத்தக் கூடியவர்கள்—ஒன்று மரவாசிகளாக இருக்க வேண்டும், அல்லது பைத்தியக்காரர்களாக இருக்க வேண்டும். பொறுப்பற்றவர்கள் உலகத்தில் நல்ல காரியம் செய்ய முடியுமா? உலகத்துக்குப் பொறுப்பாக இருக்க விரும்புகிறவர்கள் பொறுப்பை ஏற்கத் தயங்கலாமா?''

பாலசுந்தரம் பிரமித்துப் போனான்; இவ்வளவு சாதுரியமாய் அவளால் பேச முடியும் என்று அவன் கனவிலும் கருதவில்லை.

மேல்வானில் வர்ணக்குழப்பம். ஆல மரத்தின்மீது குருவிகள் ஏதேதோ பேசிக் கத்திக் கொண்டிருந்தன. குளத்தில் விழுந்த செங்கதிர்கள் நீரைப் பொன்னாக்கின. படிக்கட்டின்மீது, இடுப்பில் கரம் ஊன்றி நின்ற பெண்ணுருவம் அவனை ஆட்கொண்டது.

"இவ்வளவு வாய் உனக்கு எங்கிருந்து வந்தது, கமலா? நான் பம்பாய் போவதற்கு முன்னால் பரம சாதுவாக இருந்தாயே!''

"வேறொன்றும் இல்லை. இந்த ஊரில் எனக்கு ஏழெட்டு சிநேகிதிகள் இருக்கிறார்கள். எங்களுக்கு வேறு வேலை இல்லை; ஏராளமாய்ப் புத்தகங்கள் வரவழைத்துப் படிக்கிறோம். சோம்பலாயிருக்கும் போது நாங்கள் இப்படி எதையாவதுபற்றி தர்க்கம் செய்வோம்... அந்தப் பழக்கந்தான்.. ....''அவனுடைய தகப்பனார் இப்படிப் பேசியிருந்தால், 'கிண்டல்' என்று அவன் சீறியிருப்பான். ஆனால் அவளுடைய வாய்மொழி அவனுக்குச் சர்க்கரையாக இருந்தது.

"அப்படியானால், என் லட்சியத்திற்கு நீ துணை செய்வாயா?''

"நீங்களே எனக்கு லட்சியமாக இருக்கும்போது, நான் எப்படி துணை செய்யாமல் இருக்கமுடியும்? ...கொஞ்சம் பொறுங்கள். இது குளக்கரை. நாலுபேர் வருகிற போகிற இடம். யாராவது பார்த்தால்....''

* * *

புரட்சி முடிந்து ஆக்க வேலையும் ஆரம்பம் ஆகிவிட்டது. கலியாணம் ஆன இரண்டாவது மாதமே, டாக்டர்—பாலசுந்தரம் தகப்பனாரிடம், கும்பகோணத்தில் 'பிராக்டீஸ்' செய்ய அனுமதி கேட்டார்; அழகாய் வாரிவிட்ட கிராப்புடன், தொப்பியும் கால்சட்டையும் அணிந்து ஆசாமி ஜோராகத்தான் இருந்தார்.

" தம்பி, இந்த கிராமத்தில் இலவச ஆஸ்பத்திரி வைத்து ஏழைகளுக்கு உதவ வேண்டுமே! நீ கும்பகோணம் போய்விட்டால் இந்த வாய் இல்லாத மக்களைத் தட்டி எழுப்ப வேறு யார் இருக்கிறார்கள்?"

மாஜி ஜட்ஜ் சிரித்தார்; புரட்சிக் கனல் அணைந்து கரியாகி, இப்போது அந்தக் கரி சரீரக் கனலாக சுடர்விடுகிறது என்பதை அவர் அறிவார். டாக்டருக்கும் அவருடைய கிண்டல் உறைக்கவில்லை. ஏன் என்றால், அவர் பெற்றோரின் தொந்திரவே இல்லாமல் தம் புது மனைவியுடன் கும்பகோண வாசம் செய்யப் போகிறார்.

" கலியாணம் ஆகாதிருந்தால் நீங்கள் சொல்வதுபோலவே செய்திருப்பேன்! கலியாணம் ஆகிவிட்டதால் பட்டணத்து நோயாளிகளுக்கு மருந்து தரப் போகிறேன்! அவர்களுக்கும் மருந்து தேவை தானே?" என்றார் டாக்டர் பாலசுந்தரம், வேடிக்கையாக.

வழக்கம்போல் தகப்பனார் சிரித்தார்; தாய் சிரித்தாள்....., உள்ளே இருந்த கமலாம்பிகை சிரித்தாள்; டாக்டரும் சிரித்தார் என்றால் அதில் ஆச்சரியம் இல்லை.



கொங்கு நாட்டிலே பொங்கல்

○

சி. ந. வைத்தீஸ்வரன்

பொங்கலைப்போன்ற தலைசிறந்த பண்டிகை தமிழ் நாட்டுக்கு வேறு எதுவுமே இல்லை. அதிலும் கொங்குநாட்டாருக்கு (கோயமுத்தூராருக்கு) சொல்ல வேண்டியதே இல்லை.

விவசாயிகளுக்கு அநேகமாக பயிர்த் தொழில் எல்லாம் முடிந்திருக்கும். அறுவடையும் ஆகிவிட்டது; நெற்போர் குவிந்துவிட்டது; களஞ்சியம் நிறைந்துவிட்டது; துவரை, கடலை அடித்தாயிற்று; மொச்சை முதிர்ந்துவிட்டது. "கண்ட்ரோல்" எமன்கள் இல்லாத காலம்; மாரி பொய்யாத காலம்; மக்கள் மன மகிழ்ந்த காலம். எனினும் ஊரிலே கட்சிப் பிரதி கட்சி இருந்த காலம். குஞ்சப்ப முதலியார் கணக்கப்பிள்ளை. சென்னிமலைக் கவுண்டன் மணியகாரன். இரண்டு பேரும் தண்டா தகராறுகளுக்கு மறைமுகமாகத் தூபம் போட்டுக் கொண்டே இருப்பார்கள். ஆனல் பொங்கல் நெருங்கிவிட்டால் எப்படியோ இரு கட்சிகளும் ஒன்று சேர்ந்துவிடும். இதற்குக் காரணம் முத்து செட்டி. இவன் வள்ளி கும்மி உபாத்தியாயர். தொழில் நெசவுத் தொழில் ஆனலும் வள்ளி கும்மி ஆட்டத்திலே அந்த வட்டாரங்களிலே யாரும் இவனுக்கு இணை இல்லை. ஒவ்வொரு நாள் இரவிலும் வள்ளி கும்மி ஒத்திகை நடைபெறும். ஊரையே தூக்கும்படியாக எல்லோரும் சேர்ந்து "ஆமடி தங்கம், சொல்லடி மாதே" என்று சொல்லிக் கொண்டு கரதாளம் போட்டுக் கால் சதங்கை ஒலிக்க நடிப்பார்கள். இந்த கும்மியிலே மணியகாரர், கணக்கப்பிள்ளை இருவரும் ஒரோர் சமயத்தில் கலந்து கொள்வார்கள். ஆம், மெய் மறந்து கலந்து கொள்வார்கள். எழுதப்படிக்கத் தெரியாத காட்டாளெல்லாம் வள்ளியம்மை கும்மியை மனப்பாடம் பண்ணிவிடுவான், சொல்லிச் சொல்லி. "என்று பூப் பொங்கல்? என்று பூப் பொங்கல்?" என்றிருப்பார்கள்.

மார்கழித் திங்கள் முடிந்து தை பிறக்குமுன்பே வீடு வாசல் எல்லாம் செப்பனிடப்படுகிறது. மதில் சுவர்களுக்கு காவியும் வெள்ளையும் பட்டை தீட்டுகின்றனர். வீட்டுக்கு வெள்ளை அடிக்கின்றனர். மாட்டுத் தொழுவம் சீர்படுகிறது. வீட்டுக் கூரை இறப்புகளில் பூளைப் பூவும் வேப்பிலையும் கொத்துக் கொத்தாகச் செருகுகின்றனர்.

வீட்டிலே எங்கும் நடைபெறுவதுபோல் பொங்கல் நடைபெறுகின்றது. இந்தப் பொங்கலிலே சுமங்கல்ய ஸ்திரீகளுக்கு இருக்கும் உரிமையும், செல்வாக்கும் ஏற்றமும் ஒருதனி. இந்தப் பொங்கலன்று பால் காய்ச்சுவதற்கென்று

சக்தி பொங்கல் மலர் படம்: பி. ரங்கநாதன், சென்னை

உடல் உருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்கும் கரும்பு

—பட்டினத்தார்

படம்: பி. ரங்கநாதன், சென்னை

ஞாலமெலாம் பசியின்றிக்
காக்க வல்ல
நன்செய்யும் புன்செய்யும்
நலமிக்கோங்க

—பாரதியார்

மார்கழி யெல்லாம், கோலத்தில் பூச் செருகி வைத்த சாணத்தினுல் தட்டி வைத்த பூவறட்டி பயன் படும். வேறு எவ்வகையிலும் இவ் வறட்டியை எரிக்கக்கூடாது. அவரவர் குடும்ப வழக்கப்படி பல படைப்புகள் போட்டு வீட்டுத் தெய்வத்தைக் கொண்டாடி பல ருக்கு அன்னதானம் செய்வார்கள்.

அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கல். கிராமமே ஒரு தனி குதூகலத்தில் இருக்கும் அன்றைக்கு. மாடுக ளுக்கு யோகநாள். நல்ல குளிப்பு. கொம்புகளுக்கு பற்பல வர்ணம். நெற்றிக்கு வர்ணப் பாசி மாலே. கழுத்துக்குச் சதங்கை மாலே. வர்ணக் கம்பளக் கயிறு. தலேக் கயிறு புதிது. எல்லாம் காமதேனு வென்றே கொண்டாடுவார்கள். பண்ணேயத்து ஆட்களுக்கு எல் லாம் ஓர் தனிக் கொண்டாட்டம். எண்ணெய் முழுக்கு, புது வேஷ்டி எல்லாம் பண்ணேக்காரர் வாங்கித் தருவார். காட்டுப் பண்ணுடியும் பண்ணுடச்சியும் அன்றைக்கு பெரிய பொறுப்பாளிகள். பண் ணேப் பெண்களெல்லாம் புதுப் புதுப் புடவைகளே அணிந்து கொண்டை நிறையப் பூச்சூட்டி, வாய் நிறைய வெற்றிலே போட்டு, பெரு மகிழ்ச்சியில் மூழ்கியிருப் பார்கள். குச கோவிந்தன் புதுப் புதுப் பானேகளேக் கொண்டு வரு வான். அவற்றிற்குப் பல வர்ணக் கோலங்களேப் பெண்கள் இடுவார் கள். பொங்கலுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, புளி, காய்கறிகள் எல்லாம் இதற்குள் தயாராகிவிடும். சாடுகளிலும் கூடைகளிலும் சாமான்கள் நிறைந்துவிடும். வண் டிகள் அலங்காரமாகி வந்து நிற்கும். மாடுகளின் கொப்பிக் கொம்பு வீச்சு எல்லோருடைய மனதையும் கவரும். பொங்கல் பானேகளும், மற்ற சாமான்களும் சொகுசாக வண்டி ஏறும். வண்டிக்காரச் சுப்பனேப் பார்த்தால் அடையா ளமே தெரியாது. முண்டாசு கிண் டாசு—ஆளே மாறிவிட்டான். சவாரித் தப்பைமேல் ஏறி உட் கார்ந்து மூக்கணுங் கயிற்றைப் பிடிப்பதுதான் பாக்கி; காளேமாடு கள் துள்ளும். வண்டிக்கு முன் னுல் நாராயணன் கோஷ்டியினர் நாகசுர மேளம் ஆரம்பித்து விடு வார்கள். அதற்குமுன் கொம்பு தப்பட்டை முழங்கும். சக்கிலியர் கொம்மாளக் கூத்து. அடே அப்பா! என்ன ஆர்ப்பாட்டம்! வண்டி மெதுவாக ஊரும். ஊருக்கு மேற்கு எல்லே தொண்டுப் பட்டி. இது தாண்டுமட்டும் இந்த மேளதாளம், கூத்து கும்மி. இப் படி வழியனுப்பி விடுவார்கள். பிறகு வண்டி வேகமாகப் பொழுது விடிவதற்குள் பண்ணேக்குப் போய்ச் சேர்ந்துவிடும். இப்படியே இந்த மேளதாளங்கள் எல்லாம் ஒவ்வொரு பண்ணேக்காரர் வீட்டி லிருந்தும் பொங்கல் வண்டிகளுக்கு முன் சென்று ஊர் கடத்திவிட்டு வரும். பொங்கல் சாமான் வண்டி பண்ணேக்கு வந்துவிட்டது. சாமான்கள் எல்லாம் களத்துச் சாளேயில் இறங்கிவிட்டன. பண்ணே ஆட்கள் எல்லோரும் பொங்கல் வைக்கும் இடத்தைச் சுத்தம் செய்து கற்களேச் சேக ரித்து அடுப்புக் கூட்டுகின்றனர். பெண்கள் புதுக் குடங்களே எடுத் துக் கொண்டு போய் பக்கத்தி லுள்ள கிணற்றிலோ ஆற்றிலோ

இருந்து தண்ணீர் எடுத்து தலை யிலே வைத்து முதுகு வளையாமல் ஒய்யாரமாக நடந்து வருகிறார்கள். வந்ததும் புதுப் பானைகளுக்கு மஞ்சள் கிழங்கைத் தாலிபோல் கட்டி அடுப்பிலே ஏற்றி அரிசி களைந்த நீரை நிரப்புவார்கள். பிறகு அடுப்பு மூட்டுவார்கள். பானைகளில் உள்ள நீர் கொதித்துப் போகாமல் நுரைகட்டிப் பொங்கி வழிய வேண்டும். சிற்றாடைச் சிறுமி முதல் முதிய பாட்டிவரை யார் பொங்கல் முதலில் பொங்கு கிறதென்று அடுப்பை எரியவிடும் போட்டியில் கலந்து கொள்வார் கள். அப்பொழுது அவர்களுக் குள் எற்படும் கேலிப் பேச்சும் வக்கணையும் ஒரு அலாதி. பண் ணைக்குத் தகுந்தாற்போல் இரு பது முப்பது பொங்கல் பானைகள் தயாராகும். பானைகளில் நீர் பொங்கினவுடன் அரிசியை மும் முறை பானையைச் சுற்றி பானை களுக்குள் போடுவார்கள். பொங் கல் பொங்கின பிறகு இறக்கி வைப்பார்கள். வேறு அடுப்பு களில் பூசணிக்காய் குழம்பு, மொச்சைப் பருப்புக் கூட்டு— எல்லாம் தயாராகிவிடும்.

இதற்குள் மாடு கன்றுகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பட்டிக்குள் நடுவிலே சிறு குளம் போல் சிலர் தோண்டுவார்கள். குளத்துக்குள் தண்ணீர் ஊற்று வார்கள். இச் செய்குளத்தின் நாற்புறமும் எழேழு கன்னிமார் கள் என்று சிறு சிறு கூழாங் கற்களைப் பிடித்து வைப்பார்கள். நாற்புறமும் வாழை இலை போட்டு பொங்கல் காய்கறி எல்லாம் பரி மாறி மாவிளக்கு ஏற்றி தேங்காய் பழம் கரும்பு முதலியவைவும் படைப்பார்கள். பிறகு ஒவ்வொரு வரும் எழுமுறை சுற்றி வந்து கும்பிடுவார்கள்.

இனிமேல்தான் வேடிக்கை ஆரம்பமாகும். பட்டியின் ஒரு மூலையில் கட்டப்பட்டிருக்கும் மாடு கன்றுகள் திகைத்து விழித் துக் கொண்டிருக்கும். பட்டியின் கதவு போன்ற படலின்முன் வாழை இலை போட்டு எல்லா உணவும் படைத்து ஒரு ஓரத்தில் ஒரு புது வேஷ்டியும் வைத்து விடுவார்கள். பிறகு பண்ணைக் காரர், பெண்கள், மற்றவர்கள் எல்லோரும் வெளியே வந்து விடு வார்கள். மாடுகன்று மேய்க்கிற ரங்கன் மட்டும் பட்டிக்குள்ளே இருப்பான். காட்டுப் பண்ணைடி மாடுகளை அவிழ்த்து விட்டுப் படலையும் திறந்து விடுவான். போதாக்குறைக்கு பெண்கள் எட்ட நின்று கொண்டு வட்டில் களைத் தட்டி ஏக முழக்கம் செய் வார்கள். மாடு கன்றுகள் திக்குத் தெரியாமல் பட்டியை விட்டுத் துள்ளிக் குதித்தோடும். இந்தக் கலாட்டாவுக்குள் ரங்கன் வழியில் இருக்கிற இலையோடு படைப்பை யும் எடுத்துக்கொள்ள வேண்டும். புது வேஷ்டியையும் பணமுடிப் புடன் எடுத்துக்கொள்ள வேண் டும். ரங்கன் சூரப்பயல். எப்ப டியோ மாடுகளின் கொம்பு வீச் சுக்கு அஞ்சாது சொக்குப்பொடி போட்டு விடுவான். "ஜம்" என்று புது வேஷடியை உடனே முண் டாசு கட்டிக்கொள்வான். இதைக் கண்ட பெண்கள் ரங்கனுக்கு 'நான் கொடுக்கிறேன் பொண்ணு நீ கொடுக்கிறேன் பொண்ணு'

என்று வாய்ப்போட்டியில் இறங்கி விடுவார்கள். இதற்குள் ஒரு சிலர் இருட்டிலே பட்டியைச் சுற்றிலும் தொடர்ந்து சென்று "சோறுண்ணு பட்டியாரே, சோறுண்ணு" என்று சொல்ல ஒருவன் மாடுகளின் வாயில் சோறூட்டுவான். வேறு ஒருவன் "வாய்கழுவு பட்டியாரே, வாய் கழுவு" என்று அவற்றின் வாய் களைக் கழுவி விடுவான். வேறு ஒருவன் "ஆசனம் பட்டியாரே, ஆசனம்" என்று பட்டிக்குள் ஓட்டி அடைத்து இளைப்பாற விட்டு விடுவான். இப்படி மாடு கன்றுகளாகிய வாயில்லாப் பிராணி களுக்கு எல்லா விருந்தும் உபசார மும் நடைபெற்ற பிறகே ஆட்கள் அனைவருக்கும் விருந்து. அவரவ ருக்கு ஏற்றவாறு பொங்கல் பானை களும் காய்கறிகளும் பட்டு வாடா ஆகும். பொங்கல் பானை கொடுத்த குயவன், கலப்பை மூட்டுகின்ற கொல்லன், பரிவட்டம் சீர்படுத்தும் மாதேரி, துணி வெளுக்கும் வண்ணான், தலை வழிக்கும் நாவிதன், சங்கு ஊதும் தாசன், குறி சொல்லும் வள்ளு வன் இன்னும் பலருக்கும் பொங் கல் சோறு வழங்கப்படும். பட்டி யிலே இருந்து உண்பவரும் உண்டு; அவரவர் மனைகளுக்கு எடுத்துச் சென்று பிள்ளை குட்டி களுடன் உண்பவரும் உண்டு. வாயில்லாப் பிராணிகளின் திருப்தி யையும் வாயுள்ள பிராணிகளின் திருப்தியையும் கண்ணுற்ற பண்ணைக்காரருக்கு மனம் பூரித் துப்போகும். பாடுபட்டு பயிர்த் தொழிலின் பயன் அன்றே கண் டோம் என்று இன்புறுவார். ஒவ் வொரு ஆண்டும் இப்படியே அனை வரும் இன்புற்று வாழ வேண்டும் என்று பட்டீஸ்வரனைத் தொழுது நள்ளிரவில் வீடு வந்து சேர்வார். இதைக் கண்டுதானோ வள்ளுவர்,

> **உழுதுண்டு வாழ்வாரே**
> **வாழ்வார்—மற்றெல்லாம்**
> **தொழுதுண்டு பின் செல்பவர்**

என்று மொழிந்தாரோ என்று சிந்திப்போர் மனதில் ஐயம் பிறக்கும்.

மூன்றும் நாள் பூப் பொங்கல்.

முத்து செட்டியார் சீடர்கள் அலங்காரத்துடன் புறப்பட்டு விடு வார்கள். சாயவேஷ்டி என்ன! மல் வேஷ்டி என்ன! ஆபாரம் என்ன! தலையிலே, சொங்கு வைத்த முண் டாசு என்ன! கையிலே சாயச் சவுக்கம் என்ன! காலிலே சதங்கை என்ன! வாய் நிறைய வெற்றிலை பாக்கென்ன! அடே அப்பா! மாடு மேய்க்கிற ரங்கன்! வண்டிக் கார கருப்பன்! கொடிக் கால்காரச் சுப்பையன்! கங்காணி நாச்சி முத்தன்! கவலை ஓட்டுகிற கந்தன்! குச கோவிந்தன்! எல்லோரும் அடையாளம் தெரியாமல் மாறி விட்டார்களே என்று பார்த்த வர்கள் மூக்கின்மேல் விரல் வைப் பார்கள். ஊர்ப் பொது மன்றத் திலே கும்மி. வள்ளியம்மை கும்மி அடிப்பார்கள். பிறகு பெரிய மிராஸ்தார் வீடுகளுக்கு முன்னும் அடிப்பார்கள். இதைப் பார்க்க ஊரே கூடிவிடும் "வாங்க மாமா" என்று முத்து செட்டி மணியகார சென்னிமலைக் கவுண் டர் கையைப் பிடித்து வெகு சரச மாக இழுத்து விடுவான். மணிய காரரும் "வாங்க மாப்பிள்ளை" என்று குஞ்சப்ப முதலியாரையும் இழுத்து விடுவார். கணக்கப்

…யும மணியகாசரும் கும்மி …ல சேர்ந்து கொண்டு வள்ளி திருமணத்தை முடித்து வைப்பார் கள். ஊரார் முகத்திலே அன்று ஆனந்த தாண்டவம் ஆடும். ஆடின கும்மியாட்டக்காருக்கு நீர் மோர் பானகம். வேடிக்கை பார்த்த சிறுவர் சிறுமிகளுக்கு கடலை பொரி தேங்காய். வந்த பெரிய மனிதர்களுக்கு தாம்பூலம் முத்து செட்டியாருக்கு ஒரு கொத்து வேஷ்டி, தாம்பூலத்துடன் பத்திரு பது ரூபாய் சன்மானம். கும்மி யடித்த ஒவ்வொருவருக்கும் தனி சன்மானம். இப்படி வெகு அமர்க் களமாய் நடக்கும்.

இதற்குள் மேளதாளத்துடன் மேற்கு வளவிலிருந்து பெண் களின் கூட்டம் புறப்பட்டுவிடும். ஒவ்வொருத்தியின் பூச்சூட்டிய சாயக் கொண்டையும், கடைவாய் நிறைந்த தாம்பூலமும், அவர்களின் களிப்பின் எல்லையைக் குறிக்கும். ஓலைப் பேழைகளில் மார்கழி எல் லாம் பூச் செருகி கோலத்தில் வைத்தெடுத்த சாணத்தினால் செய்யப்பட்ட பூப் பிள்ளையார்களை நிறைத்துக் கொண்டு பாட்டுகள் பாடிக் கொண்டு புறப்படுவார்கள். கும்மியடித்த ஆண்களும் மற்ற எல்லோரும் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆற்றங்கரைக்குப் போய்ச் சேர்வார்கள். அங்கே பெண்கள் தாம் தாம் கொண்டு வந்த பிள்ளையார்களை எல்லாம் ஓடு நீரில் வெகு பணிவடன் விடுவார் கள். அவ்வாறு விடும்பொழுது,

வாடாதே வதங்காதே
வைத்திருந்தேன் பூவே நீ
வையை யாற்றுத் தண்ணிலே
போய்வா பூவே நீ
சிந்தாமல் சிதருமல்
வைத்திருந்தேன் பூவே நீ
சித்தாத்து தண்ணிலே
போய்வா பூவே நீ

என்று இனிமையாய்ப் பாடி விடு வார்கள்.

இவ்வாறு விட்டவுடன் கூட்டங் கூட்டமாகப் பெண்கள்,

ஓலை யக்கா கொண்டையிலே
ஒரு சாடு தாழம்பூ
தாழம்பூ சித்தாடை
தலை நிறைய முக்காடு
ஓலே, ஓலே.........

என்று பாடிக்கொண்டே அஸ்த மனம் ஆக ஆக அவரவர் மனை வந்து சேருவார்கள். இத்துணை குதூகலத்திலும் ஒரு போலீஸ் வாசனை உண்டா! குழப்பம் உண்டா! எல்லாம் கிராம ஐக்கியம். இந்த மூன்று நாட்களும் மறவாத, இன்புறும் நாட்கள். இத்தகைய நாட்கள் அடிமை இந்தியாவிலும் கண்கூடாகக் கண் டோம்; சுதந்திர இந்தியாவிலும் புதுமை நாகரிகத்தினால் இவை ஒழியா வண்ணம் காத்து வளர்க்க வேண்டுவது நம் கடன்.

Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.
Associate Editor: G. Alagiriswami.

உங்கள் வியாபாரம்

★

உங்கள் வியாபாரம் செழிக்க வேண்டுமானால் காகிதம், கவர், ரசீதுப் புத்தகம் விசிடிங் கார்டு எல்லாம் அழகாக இருக்க வேண்டும். அவைகளை அழகுடன் செய்து தருவதற்கு சென்னையில் பெயர் பெற்ற அச்சுக்கூடம் நடைபெறுகிறது. அதன் பெயர்:



சக்தி பிரஸ் லிமிட்டெட்

115 E, மோபரீஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை 14.

டெலிபோன்: *8135*



- பொங்கல் புதுநாள் புதுப்புது
  நலனை மிகமிகத் தருக

- அழகும் மணமும் பொருந்திய புஷ்பம் ரோஜா

- சுவையும் மணமும் பொருந்திய பாக்குத்தூள் அசே

Nº 1506 அசோகா MILD SCENTED ASOKA ஸ்ரீ நெ. 1506

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்

'அசோகா பாக்டரி' :: கோயமுத்